# சங்க இலக்கியப் பெண் கவிஞர்கள்
# - பாடுபொருளும் பாடுநெறியும்

முனைவர் பட்டத்திற்காகப் (Ph.D) பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

**சு.லலிதா,** எம்.ஏ., எம்.ஃபில்.,

நெறியாளர்

**முனைவர் சாமி. திருமாவளவன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., பிஜிடிஜேஎம்சி.,
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 1.

**தமிழாய்வுத் துறை**

**தேசியக் கல்லூரி**

(தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் 'A' தகுதி பெற்றது)
திருச்சிராப்பள்ளி - 620 001.

**நவம்பர் - 2009**

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் சாமி. திருமாவளவன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., பிஜிடிஜேஎம்சி.,

இணைப் பேராசிரியர்
தமிழாய்வுத் துறை
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 001.

---

**'சங்க இலக்கியப் பெண் கவிஞர்கள் – பாடுபொருளும் பாடுநெறியும்'** என்னும் தலைப்பில் **திருமதி. சு.லலிதா,எம்.ஏ.எம்பில்** அவர்கள் செய்துள்ள இவ்வாய்வு பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக, தேசியக் கல்லூரித் தமிழாய்வுத் துறையில் ஆய்வு செய்த காலத்தில் அவர் சொந்த முயற்சியில் உருவாக்கப்பட்டது என்றும், இவ் ஆய்விற்காக ஆய்வாளருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப்படவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

**துறைத்தலைவர்**

**முனைவர் கு. இராசரத்தினம்**
எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
தமிழ்த் துறைத் தலைவர்,
தேசியக் கல்லூரி, திருச்சி-620 001.

**நெறியாளர்** 4/11/09

**முனைவர் சாமி. திருமாவளவன்,**
எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., பிஜிடிஜேஎம்சி.,
இணைப்பேராசிரியர், நெறியாளர்
தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620 001.
9842250469

# ஆய்வாளர் உறுதிமொழி

**திருமதி. சு.லலிதா,** எம். ஏ., எம்.ஃபில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத் துறை
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 001.

---

**'சங்க இலக்கியப் பெண் கவிஞர்கள்–பாடுபொருளும் பாடுநெறியும்'** என்னும் தலைப்பில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்காகத் தேசியக் கல்லூரித் தமிழாய்வுத் துறையில் முனைவர் பட்டத்திற்காக நிகழ்த்தியுள்ள இவ் ஆய்வு என் சொந்த முயற்சியால் உருவானது என்றும் வேறு எந்தப் பட்டத்திற்காகவும் இதற்கு முன் இவ் ஆய்வேடு அளிக்கப்படவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

நெறியாளர் 4/11/09

**முனைவர் சாமி. திருமாவளவன்,**
எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., பிஜிடிஜேஎம்சி.,
இணைப்பேராசிரியர், நெறியாளர்
தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620 001.
9842250469

ஆய்வாளர்

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | – | அகநானூறு |
| ஆ.கோ. | – | ஆய்வுக்கோவை |
| ஆசா.கோ. | – | ஆசாரக்கோவை |
| இளம். | – | இளம்பூரணம் |
| உவம. | – | உவமவியல் |
| கு.எ. | – | குறள் எண் |
| குறுந். | – | குறுந்தொகை |
| செய். | – | செய்யுளியல் |
| தொல். | – | தொல்காப்பியம் |
| நற். | – | நற்றிணை |
| நூ.எண். | – | நூற்பா எண் |
| ப. | – | பக்கம் |
| ப.ஆ. | – | பதிப்பு ஆசிரியர் |
| பதிற். | – | பதிற்றுப்பத்து |
| பா.எ. | – | பாடல் எண் |
| புறப்பொருள். வெ.மா. | – | புறப்பொருள் வெண்பா மாலை |
| புறம். | – | புறநானூறு |
| பொருந. | – | பொருநராற்றுப்படை |
| பொருள். | – | பொருளதிகாரம் |

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| | முன்னுரை | 1 |
| 1. | பொருண்மை | 11 |
| 2. | வகைப்பாடு | 52 |
| 3. | சமுதாய நோக்கு | 91 |
| 4. | அறக்கருத்துகள் | 133 |
| 5. | பாடுநெறி | 175 |
| 6. | ஒப்பீடு | 223 |
| | முடிவுரை | 257 |
| | துணைநூற்பட்டியல் | 261 |
| | பின்னிணைப்பு | 275 |
| | 1. சங்கப் பெண் புலவர்கள் வரிசை | 275 |
| | 2. பெண் புலவர் பாடல்கள் வகைப்பாடு | 277 |
| | 3. புறப்பாடல் துறைப் பிரிவுகள் | 285 |
| | 4. கூற்று அடிப்படையில் சங்கப் பெண் புலவர்களின் அகப்பாடல்கள் | 286 |
| | 5. சங்கப் பெண் புலவர்களின் மொத்த அகத்திணைப் பாடல்கள் | 287 |



# நன்றியுரை

# நன்றியுரை

**'சங்க இலக்கியப் பெண் கவிஞர்கள்–பாடுபொருளும் பாடுநெறியும்'** என்னும் தலைப்பில் ஆய்வு செய்ய எனக்கு அனுமதியளித்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரம்பரியமிக்க தேசியக் கல்லூரித் தமிழாய்வுத் துறையில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்பளித்த மதிப்பிற்குரிய கல்லூரி முதல்வர் **முனைவர் கு.அன்பரசு** அவர்களுக்கு நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

தேசியக் கல்லூரித் தமிழாய்வுத் துறையில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிய மதிப்பிற்குரிய தமிழாய்வுத் துறைத் தலைவர் முனைவர் **கு.இராசரெத்தினம்** அவர்களுக்கு நன்றி கூறி மகிழ்கின்றேன்.

நான் முனைவர் பட்ட ஆய்வினைத் தொடங்கிய நாள் முதல் ஆய்வேடு வழங்கும் நாள் வரையிலும், என்னைச் சிறந்த முறையில் நெறிப்படுத்தி, என் ஆய்வினைச் செம்மையுறச் செய்த என் ஆய்வு நெறியாளர் மதிப்பிற்குரிய **முனைவர் சாமி. திருமாவளவன்** அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

என் ஆய்விற்குப் பல்லாற்றானும் உதவிகள் புரிந்த தேசியக் கல்லூரித் **தமிழாய்வுத் துறைப் பேராசிரியர்கள்** அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை முனைவர் பட்ட ஆய்வு செய்யத் தூண்டி, என் ஆய்விற்குத் துணை நின்ற என் அன்பிற்குரிய வாழ்க்கைத் **துணைவர் திரு.சு.பாலுசாமி** அவர்களுக்கும், மலர்ந்த முகத்தோடு என்னை மலர்ச்சியுறச் செய்த எங்கள் அன்பு **மழலை ஓவியாவிற்கும்** எனது பெற்றோருக்கும், குடும்பத்தாருக்கும் நன்றியுடையவள் ஆகின்றேன்.

நான் ஆய்வு செய்த காலங்களில் எனக்கு நல் ஆலோசனைகளை வழங்கி, உதவிகள் புரிந்த **முனைவர் தி.இராஜரெத்தினம்** அவர்களுக்கும், **முனைவர் கா.சந்திரசேகரன்** அவர்களுக்கும், தேசியக் கல்லூரி ஆங்கிலத்துறை **உதவிப்பேராசிரியர் திரு.இராமச்சந்திரன்** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் ஆய்வேட்டினைச் சிறந்த முறையில் தட்டச்சு செய்து கொடுத்த **திரு.அ.சக்திவேல், ஆர்த்தி கணிப்பொறி**, வேலூர், அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் என் முனைவர் பட்ட ஆய்வு சிறந்த முறையில் நிறைவுற உதவிகள் புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி! நன்றி!!

# இயல் 1

# பொருண்மை

## 1.1 பொருண்மை

பொருள் + மை = பொருண்மை என ஆகும். ஒரு சொல்லுக்கோ, ஒரு தொடருக்கோ, ஒரு கவிதைக்கோ உரித்தான பொருளைப்பற்றிக் கூறும்போது அதனைப் 'பொருண்மை' என்ற சொல்லால் குறிக்கலாம். சங்கப் பெண்புலவர் பாடல்களில் பொருண்மை என்னும் தலைப்பில் பெண் கவிஞர்களின் பாடல்களுக்குக் கருவாய் அமைந்த பொருளே இங்கு ஆராயப்படுகிறது.

### 1.1.1 பாடுபொருளும் பொருண்மையும்

தொல்காப்பியம் பொருளதிகாரம் என்னும் இயல் கவிதைக்கான முழுமையான இலக்கணத்தை இயம்பி உள்ளது. பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்னும் இயல்களில் ஓர் அகக்கவிதைக்கான பாடுபொருளும், புறத்திணையியலுள் புறக் கவிதைக்கான பாடுபொருளும் இலக்கணப்படுத்தப்பட்டுள்ளன. மெய்ப்பாட்டியல் என்பது ஒரு கவிதைக்கான 'உணர்ச்சி' பற்றிய கொள்கையினையும் செய்யுளியல் கவிதை ஒன்றுக்கான வடிவத்தினையும் உவமவியல், மரபியல் என்பன கவிதைக்கான உத்திகளையும் பற்றி விளக்குகின்றன.

எனவே, பொருளதிகாரம் என்பதே, கவிதைக்கான பொருண்மையை விளக்கும் இயல் என்பது அறிய வரும். அகத்திணையியலிலும் அகக் கவிதைக்கான திணைக் கோட்பாட்டை மிக விரிவாக விளக்கியுள்ளார் தொல்காப்பியர். முப்பொருளில் உரிப் பொருள் என்பது ஒரு கவிதைக்கு உரிய பொருளாகும். அதாவது பாடுபொருளாகும். புணர்தல், இருத்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்று பகுக்கப்பட்டுள்ளது. இவை மனித வாழ்வின் அடிப்படைப் பொருண்மைகளாகும்.

மனித வாழ்வை விளக்கும் சங்க இலக்கியமும் இவற்றையே பொருண்மையாக்கிக் கொண்டு விளங்குவது இயல்பு. மேற்காணும் உரிப் பொருளை விளக்கவும் அதனைக் கவிதையாக்கம் செய்யவும் பயன்படும் பொருட்களே முதல் பொருளும் கருப்பொருட்களும் ஆகும். நிலம், பொழுது என்னும் இரண்டும் எந்தவொரு நிகழ்வுக்கும் அடிப்படைக் காரணிகளாகும். கருப்பொருள்கள் ஒவ்வொரு நிலத்திலும் காணப்படும் பொருட்களாகும்.

ஒரு சங்ககாலக் கவிதை என்பது ஒரு குறிப்பிட்ட உரிப்பொருள் ஒன்றினைக் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட நிலப் பின்புலத்தில், அந்நிலத்திற்குரிய கருப்பொருட்களைக் கொண்டே 'கவிதையாக்கம்' செய்து வெளியிடுவதாக அமைகிறது.

உரிப்பொருள் என்பது எல்லோருக்கும் பொதுவான ஒரு பொருளாகும். ஆனால், ஒரு குறிப்பிட்ட உரிப்பொருளைப் பல்வேறு புலவர்களும் கவிதை உருவாக்கம் செய்யும்போது, அவர்கள் தமக்குள் மிகவும் வேறுபடுகின்றனர். உதாரணமாக, 'புணர்தல்' என்னும் உரிப்பொருள் குறிஞ்சித் திணைக்குரிய பொருளாகும். குறிஞ்சித் திணையில் புலவர் பலர் பாடல்களை எழுதி உள்ளனர். எனினும், கபிலர் என்னும் புலவர் மற்றவரில் வேறுபட்டு "குறிஞ்சிக்குக் கபிலர்" என்னும் சிறப்புப்பெற்று விளங்குகிறார். ஒரு குறிப்பிட்ட உரிப்பொருளைப் பாடும் எந்த இரு புலவரோ அல்லது இரண்டு பாடல்களோ ஒரே மாதிரியாக இல்லை என்பதும் சங்க இலக்கியத்தின் சிறப்புக்களுள் ஒன்றாகும்.

'பொருண்மை' எனும் சொற் பயன்பாடு, ஒரு கவிதைக்கான பல பொருளையும் குறித்து வந்தாலும், இங்கு ஆய்வுப் பகுதியில் பெண் புலவர்கள் தாம் தேர்ந்தெடுத்த உரிப்பொருளை விளக்குவதற்குத் தம் அனுபவத்திலிருந்து

எடுத்துக் கொண்ட செய்திகளே ஆராயப்படுகின்றன. அவைதான் ஒரு புலவரில் இருந்து மற்றொரு புலவரை ஒப்பிட்டு, வேறுபடுத்தி இனங்காண உதவும்.

### 1.1.2. பொருண்மை எனும் சொற்பயன்பாடு

'பொருண்மை' என்னும் சொல் தொல்காப்பியத்தில் ஆளப்பட்டுள்ளது. ஒரு பொருளைக் குறிக்கவும்[1], ஒரு சொல் உணர்த்தும் கருத்தைக் குறிக்கவும்[2] ஒரு செய்தி அதன் உட்கருத்தினைக் குறிக்கவும்[3] பொருண்மை என்னும் சொல் தொல்காப்பியரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் இச்சொல்லைப் பலமுறை பயன்படுத்தி உள்ளார். சான்றாக, பொருளியல் உரையில் இளம்பூரணர் பயன்படுத்தும் 'பொருண்மை' களைக் காணலாம்.

1. பொருளியல் என்னும் இயல் முன்னுரையில் '... இதனை 'ஒழிபியல்' எனினும் இழுக்காது. அகப்பொருள் புறப்பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றன கூறினமையின்'[4]
2. பொருளியல் 194 ஆம் நூற்பா உரையில் 'என்–எனின், ஒரு சார் காமப் பொருண்மை பற்றி நிகழ்வதோர் கிளவியுணர்த்திற்று'[5] மேலும், இதே நூற்பா உரையின் நடுப்பகுதியில் '..... தெரிய' என்னும் செயவெனெச்சம் ஏதுப் 'பொருண்மை' குறித்து நின்றது.[6]
3. 198.வது நூற்பா உரையில் 'என்–எனின், மேற்சொல்லப்பட்ட நால்வர்க்கும் உரியதோர் பொருண்மையுணர்த்திற்று.'[7]

இளம்பூரணர் பொருண்மை என்னும் சொல்லைப் பயன்படுத்தும் இடங்களில் இவை சிலவாகும். இச்சொல்லுக்கு மாற்றாக பொருள், இலக்கணம், மரபு, இயல்பு என்னும் சொற்களையும் மாற்றுச் சொல்லாகப் பயன்படுத்தி உள்ளார்[8].

### 1.2 சங்கப் பெண் புலவர்கள் பாடல்களின் பொருண்மை

சங்கப் பாடல்கள் முழுவதையுமே பொருண்மை நோக்கில் தொகுத்து, வகைப்படுத்தி பொருளடைவு (Subject Index) செய்வது அவசியமான ஒன்றாகும். அது புலவர் வாரியாக அமைவது நன்று. அங்ஙனம் அமைந்தால் ஏனைய புலவர்களோடு ஒப்பிடவும் அயல் நாட்டுப் புலவர்களோடு ஒப்பிடவும், பயன்படும். சங்க இலக்கியத்தில் முதல் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பற்றிய ஆய்வுகள் சில வந்துள்ளன. புலவர் பயன்படுத்தும் சமூக நடப்பியல் செய்திகளை முழுநிலையில் தொகுத்து விளக்கும் நிலையில் ஆய்வுகள் வெளிவரவில்லை. நம்பிக்கைகள், சடங்குகள், உளவியல், உரையாடல் என்பன போன்ற ஆய்வுகள் வந்துள்ளன. மொத்தமாக கவிதை வெளியிடும் பொருண்மைகளைத் தொகுத்து, வகுத்து, விளக்கும் நிலையில் பெண் புலவர் பாடல்களை உட்படுத்தி இவ் ஆய்வுப் பகுதி அமைகிறது.

#### 1.2.1 சமூகம் சார்ந்த பொருண்மை

'இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி' என்று ஒரு கூற்று ஆய்வுலகில் உண்டு. கற்பனை என்பது இலக்கியத்தின் இன்றியமையாத உறுப்பு எனினும் அந்தக் கற்பனையும் நாம் வாழும் வாழ்க்கையிலிருந்தே தான் உதிக்க முடியும். உலகியலுக்கு அப்பாற்பட்ட கற்பனை, படைப்பை வாசிப்போரிடமிருந்து அந்நியப் படுத்துவதாக அமைந்துவிடக்கூடும்.

சங்க இலக்கியம் ஒரு கால கட்டத்தின் வரலாற்றைப் பிரதிபலிப்பதாக அறிஞர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர். வரலாறு எழுதுவதற்கான வேறு சான்று ஆதாரங்கள் முழுமையாக இல்லாத நிலையில் இலக்கியங்களை மட்டுமே சான்றாக எடுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். சங்க இலக்கியம் காட்டும் சமூகம் ஒரு பெருமைப்படத்தக்க சமூகமாக உள்ளதால், அதனைத் தம் சமூக வரலாறாக ஏற்றுக் கொள்வதில் தமிழருக்குத் தயக்கம்

ஏதும் இல்லை. சங்க இலக்கியம் காட்டும் சமுதாய அமைப்பு ஒரு முன் மாதிரிச் சமூக அமைப்பாக உள்ளது.

குறிப்பிட்ட பொது நோக்கங்களை அடைவதற்காக ஒரு சில நிலையான உறவு முறைகளினால் விளைவிக்கப்பட்டுள்ள மனிதக் கூட்டுத் தொகுதியே 'சங்கம்' என்றும், ஒரே விதமான எண்ணங்களை உடைய மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணர்ந்து, அதன் காரணமாகப் பொதுவான நோக்கங்களை அடையச் சேர்ந்து முயல்கின்றபொழுது 'சங்கம் உருவாகிறது' என்றும் கிட்டிங்சு என்ற அறிஞர் கூறியுள்ளார். சமுதாயம் சமூகத்தின் ஒரு பிரிவாகும். சமூகத்திற்குள் இஃது அடங்கியிருக்கும் என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது.[9]

சங்க கால சமுதாயம் குறித்து ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, வானமாமலை, ராஜ்கௌதமன், கு.வெ. பாலசுப்பிரமணியன், க.திலகவதி முதலியவர்கள் சங்ககாலச் சமுதாயம் பற்றி ஆராய்ந்தோரில் குறிப்பிடத்தக்கோராவர்.

'சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்' எனும் பொருண்மையில் கு.வெ. பாலசுப்பிரமணியன் (1994) நூல் ஒன்று வெளியிட்டுள்ளார். 'சங்க கால மகளிர் வாழ்வியல்' எனும் தலைப்பில் க.திலகவதி (2001) நூல் எழுதியுள்ளார். இந்நூலில் சங்க கால இலக்கியத்தில் பிரதிபலிக்கும் சமூகத்தை இனஞ்சுட்டி உள்ளார்.

சங்க இலக்கியம் காட்டும் சமுதாயம் இயல்பு மீறிய ஒரு மிகைக் கற்பனை சமுதாயமாக இல்லாமல் இயல்பான சமுதாயமாக உள்ளமையால், அதில் வெளிப்படும் சமூகம் சார்ந்த பாடுபொருள்களை இனங்காண்பது வேண்டற்பாலது.

இங்கு, பெண் புலவர்கள் தம் கவிதை வெளியீட்டில் பயன்படுத்தும் சங்கம் சார்ந்த கூறுகள் ஆராயப்படுகின்றன.

### 1.2.1.1 பெண் புலவர்கள் காட்டும் 'வாழ்க்கை'

சங்க இலக்கியம் காதல் வாழ்வையும், கற்பு வாழ்வையும் காட்டுவது உண்டு. களவு, கற்பு என கைகோள் இருவகைப்படுமென்பர். இது இலக்கியத்திற்கான பகுப்பு எனினும் வாழ்க்கைக்கும் அதுவேயாகும்.

தனிமனித வாழ்வு வாழ்வாகாது. மனைவி மக்களுடன் இணைந்து வாழும் போது தான் மனித வாழ்வு குடும்ப வாழ்க்கை மலரவும் சமுதாய வாழ்வாக விரியவும் நேர்கிறது. சமுதாய வாழ்வின் அடிப்படையாகத் திகழ்வது திருமணமாகும். அதனைக் குறமகள் தொடங்கி அரச மகளிர் வரையான பெண் புலவர்கள் சில செய்திகளைப் பாடியுள்ளனர். அக்குறிப்புகளில் ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டு ஒத்த மனத்தினராய்த் தம்முள் விரும்பிக் கூடும் வாழ்வே திருமணமாகக் கருதப்பட்டது. தலைவன், தலைவியின் பின் இரந்து நிற்கும் செய்தி அஞ்சியார் என்னும் புலவர் பாடிய நற்றிணை(90) பாடலில் வெளிப்படுகிறது.

இப்பாடலில், பரத்தையிடம் ஊடல் கொண்ட தலைவன் தலைவியிடம் திரும்பி வரும் செய்தியும், வண்ணாத்தி இரவில் துணியைத் துவைத்துப் பகலில் சோற்றுக் கஞ்சியில் நனைத்து வெயிலில் காய வைக்கும் நிகழ்ச்சியும், பனை நாரால் ஊஞ்சல் கட்டிய பெண்கள் ஊஞ்சல் ஆடும் செய்தியும் சுட்டப்பட்டுள்ளன. காதல் வாழ்வில், தலைவன் திருமணத்தைத் தள்ளிப் போடுகிறான். அயலவர் மணம்பேச வருகின்றனர். இதனைத் தலைவனிடம் கூறி, உடனடியாகத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று கூறும் செய்தி குறுந்தொகைப் பாடலொன்றில் பதிவாகி உள்ளது.[10] களவு மணம் நிகழ்ந்ததை, அதன் சிறப்பைப் 'பன்மாண் நுண்ணிதின் காமம்' என்று ஔவையார் குறிப்பிடுகிறார்.[11]

கற்பு வாழ்வில் தடம் மாறி பின்முறைவதுவைப் பெருங்குலக் கிழத்தி, காதற்கிழத்தி, காமக்கிழத்தி, சேரிப்பரத்தை, இற்பரத்தை என்று பல நிலையில் தலைவன் உறவு நிலை பெயர்கிறது. இதனைப் பதிவு செய்யும் ஒரு பெண்புலவர் அவனைப் பெண் மனம் தெரியாத வன்மனம் உடையவர் தானே ஆடவர்[12] என்று பாடுகிறாள். இங்ஙனம் புறத்தொழுக்கம் நிகழ்த்திய தலைவனை தலைவி ஊடல் கொண்டு வாயில் மறுத்த செய்தியும் பதிவு செய்யப்பட்டுள்ளது.[13]

இப்பதிவுகளைக் கொண்டு ஆடவர் பெண்கள் பலரோடு தொடர்புடையவராக இருந்தமையையும், பலதார மணம், பரத்தமை முதலியவை சமுதாயத்தில் இருந்தன என்பதையும் அறிகிறோம்.

“ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே'' என்று தொடங்கும் பாடலில் தாய்மைப்பகுதி மிகவும் போற்றப்பட்டமை அறிகிறோம். “இம்மையில் புகழும் மறுமையிற் பேரின்பமும் தகுதியும் பயக்கும் தாயரை'', ‘இளமை துணையாகும் தன்மையுமுடைய மக்களாகிய நல்ல செல்வத்தைப் பெற்றளித்த வளமை பொருந்திய சிறப்பையும், அடக்கத்தால் உயர்ந்த ஒழுக்கத்தையும், நிறைந்த அறிவையும், குணஞ் செயல்களால் கெடாத புகழையும் உடைய ஒண்ணுதல் மகளிர்' என்று நச்செள்ளையார் என்னும் புலவர் பாராட்டியுள்ளார்.[14] கருவுற்ற பெண்கள் புளியை விரும்பும் செய்தியும்[15], பிறந்த குழந்தையின் மழலை இனிமையைக் கேட்டுத் தந்தை மகிழ்ந்ததையும்,

> யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
> பொருளறி வாரா ஆயினும் தந்தையர்க்கு
> அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை[16]

எனக் காட்டியுள்ளனர்.

பால்பருக மறுக்கும் குழந்தையை மருட்டி அதன் பசியறிந்து பாலூட்டும் தாயைப் பொன்முடியார் புகழ்கிறார்[17].

தலைவன் தலைவியரிடையேயான புறத்தொழுக்கத்தால் ஏற்பட்ட ஊடலைத் தணிக்கும் வாயிலாகக் குழந்தையும் பயன்படுவது பாடலில் வெளிப்பட்டுள்ளது. போருக்குச் செல்லும் தலைவன் வெற்றி வாகை சூட வேண்டும் என்று வீரவழிபாடு செய்து நடுகல்லைப் பரவும் செய்தி[18] ஒரு பாடலில் உள்ளது.

**இன்றுணைப் பயிருங் குன்ற நாடன்**
**குடிநன் குடையன் கூருநர்ப் பிரியலன்**
**கெடுநா மொழியலன் அன்பினன் என நீ**
**வல்ல கூறி வாய்வதிற் புணர்ந்தோய்**
**நல்லவை காண் இனி காதலந் தோழீஇ**[19]

இப்பாடலின் மூலம் இசை பற்றிய குறிப்பையும், பாணன் இசைப்பண்ணை அமைத்தான் என்ற குறிப்பையும் காணலாம். மூதூரில் விழாக்கள் நடைபெறுவதும், அவ்விழாவில் விறலி ஆடுவாள் என்பதும், ஆட்டத்துக்கு ஏற்பக் கலைஞர் முழவை அடிப்பர் என்பதும் பதிவாகி உள்ளமை அறியமுடிகிறது.

கணவனை இழந்த மனைவியின் துன்ப நிலையை[20] ஒரு பாடல் கூறுகிறது. புறநானூற்றுப் பாடல் ஒன்றும் [21] இதே கருத்தைப் பதிவு செய்துள்ளது.

**காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே**[22]

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்ப, வாழும் காலத்தில் ஏகபோகமாக வாழ்ந்தாலும் இறுதிக் காலத்தில் நிலையாமையை உணர்ந்து இருவகைப்பற்றும் நீங்கப் பெற்றுச் சிறந்தது பயிற்றும் செந்தண்மையுடையவராகவும் சிலர்

திகழ்ந்தனர். முன்னெல்லாம் அழகிய மாளிகையில் வடிவழகு வாய்ந்த மகளிருடன் வாழ்ந்து இன்ப நுகர்ச்சியில் ஒருவன் திளைத்திருந்தான். அவனே பின்னர் எல்லாப் பற்றும் துறந்து மலையருவிகளில் குளிர நீராடி, தீவேட்டுத் தன் முதுகின் மேல் புரளும் சடையைப் புலர்த்திக் கொண்டும், தவச்சிறப்புடன் ஞான வீறுடையவனாய்த் திகழ்வது கண்டு மாரிப்பித்தியார் வியந்து பாராட்டுகிறார் [23].

அகவாழ்வில் இன்புற்றுச் சிறந்தது போலவே, நாட்டு வாழ்விலும் நாட்டம் கொண்டவராயிருந்தனர். தம் ஊர்ப்பெயர், நாட்டின் அரசன் பெயர்களை மறவாது போற்றியுள்ளனர்[24]. நல்ல அரசன் ஒருவனால் நாடு சீர்ப்படும் என்று நம்பினர். அவ்வேந்தன் நாட்டு மக்களுக்கு நன்னடை நல்குவான் எனக் கருதினர்.[25] அவ்வேந்தன் நயனில்லா மக்களைத் துணைக் கொண்டால் பயனின்றி ஒழிவான்[26] அரசனுக்கு வெற்றியும் புகழும் விளைவதாகுக என்றும், அவ்வரசனுக்குரிய அருந்தொழிலை மக்கள் ஆர்வத்தோடு செய்தல் வேண்டும் என்றும் வற்புறுத்துவதாகப் பாடல் உள்ளது.[27] மக்களின் நலந்தீங்குகளைப் பொறுத்தே அவர் வாழும் நாடு மதிக்கப்பட்டது. “எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்று ஔவையார் உரைக்கக் காணலாம்.[28]

சேரமன்னன் ஆண்ட மேற்குக் கடற்கரைப்பகுதி சேர நாடு எனவும், அப்பகுதியை ஒட்டிய கடலுக்குக் குடகடல் எனவும் பெயர் வழங்கின.[29] சேர நாடு யானைக்குப் புகழ் பெற்றது. சேர நாட்டுக்குப் பொன் இறக்குமதி செய்யப்பட்டது.[30] அறநெறி நீங்காமல் இருக்க வேண்டுமானால் பொருளில் வளமாக இருத்தல் வேண்டும். உறவினர் தம் துன்பங்களைக் களைந்து அவர்களுக்கு உதவ வேண்டும்[31]. சோழர்களின் கப்பற்படைத்திறன் குறித்து ஒரு பாடல் பதிவு செய்துள்ளமையினை அறியமுடிகிறது.

சங்க காலத்துக் காதலியின் கூந்தல் முதன்மை கொடுத்துக் காட்டப்படுகின்றது. கைம்பெண்ணின் தலை மொட்டை அடித்தல் பற்றியும்,

வளையல்கள் நீக்கப்படுவதைப் பற்றியும் சுட்டிய புலவர் ஒருவர், பொட்டு நீக்கத்தைக் குறிப்பிடாததால், சங்க காலத்தில் பெண்கள் பொட்டு அணியவில்லை என்பதும் பொட்டு அணிவது மண அடையாளமாகவோ, பொட்டு நீக்குவது கைம்பெண் அடையாளமாகவோ கருதப்படவில்லை என்பதும் புலப்படுகின்றன.[32]

### 1.2.1.2 பெண் புலவர் பாடல்களில் மக்கள் பற்றிய செய்திகள்

சங்கக் கவிதைகளில் அக்கால மக்கள் பற்றிய புரிந்துணர்வும் வெளிப்படுத்தலும் இருந்துள்ளன. சமயம், வருணம், குலம், இனம், வர்க்கம், சாதி என்ற பல்வேறு பிரிவுகள் இன்றைய இந்தியச் சமூக அமைப்பில் நீக்க முடியாதவாறு பின்னிக் கிடக்கின்றன. சங்க காலத்தில் சமூகப் பிரிவுகள் இருந்துள்ளன.

**அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்**
**ஐவகைப் பட்ட அரசர் பக்கமும்**
**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்**[33]

என்று தொல்காப்பியம் நால் வருணப் பிரிவுகளைக் குறிக்கின்றது. இந்நூற்பா வருணாசிரமக் கருத்துடையதன்று என்று கூறும் வகையில் சோமசுந்தர பாரதியாரும், வெள்ளைவாரணரும், புலவர் குழந்தையும் உரை வரைகின்றனர்.

அகத்திணையியலிலும் களவியலிலும் இவ்வருணப் பாகுபாடு தெளிவாக உள்ளது.

**மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்**
**கீழோர்க் குரிதிய காலமு முண்டே**[34]

என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும் அறியலாம். புறநானூறு கீழ்ப்பால்(183) எனக் கூறுவதும் வருணப் பாகுபாட்டினுள் அடங்கும். சங்ககால வருணப் பாகுபாடு இன்றைய நிலை போன்று இறுக்கமானதாக இல்லை. கிழான் என்னும் பெயர் கிழவன் என்பதன் திரிபே. உரிமையுடையவன் என்பதே இச்சொல்லுக்குப் பொருளாகும். மையூர், உப்பூரிக்குடி ஆகிய ஊர்களின் உரிமை பெற்றவர் என்றே இவரைக் கொள்ளுதல் தக்கதாகும். இத்தகையோரைப் பார்ப்பாராக மாறிய வேளாளர் என்று கருதற்கு இடமில்லை. பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்னும் பாண்டியன் சொற்கணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாதே கொற்கை கிழான் நற்கொற்றவனுக்கு வேள்விக் குடி என்னும் ஊரை நீரோடு அட்டிக் கொடுத்த செய்தியை வேள்விக்குடி செப்பேடுகள் கூறுகின்றன.[35] அக இலக்கியத்தில் சுட்டி ஒருவர் பெயர் கொளாவிடினும் அந்தந்த நிலத்திற்குரிய மக்களைப் பொதுப்பெயரால் அழைக்கும் மரபு உள்ளது. தத்தம் தொழில் காரணமாக இவர்கள் இனக்குழுவாக வாழத் தலைப்பட்டனர். அப்படி வாழ அவர்க்கு இடங்களும் ஏற்றவாயின. அந்நிலையில் குன்றத்தில் குறவர், வயலில் உழவர், காட்டில் ஆயர், கடலில் உமணர், வறண்ட பாலையில் மறவர் என்றெல்லாம் மக்கள் தொழில் நலத்தால் வேறாகப் பிரிந்து, இனத்தால் இணைந்து வாழ்ந்தனர். பெண்பாற்புலவர் இப்பாகுபாடு பற்றிய புரிந்துணர்வை பெற்றிருந்தமை இங்கு ஆராயப்படும்.

ஔவையார் ‘அறவை நெஞ்சத்து ஆயர்’ என ஆயர்களைச் சிறப்பிக்கிறார். ஆயர் தூய வாழ்வு உடையவர், அறவாழ்வு உடையவர் என்பதை அறியலாம். அவருடைய தொழில் ஆடு, மாடு மேய்ப்பதும், மாலைக்காலம் வந்ததும் வேய்ங்குழல் ஊதி மாடுகளை ஒன்று சேர்த்துத் தம் ஊருக்குத் திரும்புதலும் ஆகும். இதனைக் ‘குழல் தொடங்கினர் கோவலரே’ என்று குறுந்தொகை சுட்டும்.[36]

நச்செள்ளையார் உழவர் பற்றிக் குறிக்கிறார். புன்செய் நிலமாக இருந்த வேலங்காடுகளை அழித்து, உழு தொழிலில் முன்னரே பயிற்சி நிறைந்த சிறப்புடைய பல பகடுகளை, அவற்றின் கழுத்து மணிகள் ஒலிக்கும்படியாகப் பூட்டிக் கை வண்ணம் சான்ற உழவர் உழுதனர். கலப்பையின் கொழுச் சென்ற வழியாகிய படைச்சாலின் கீழ் அவர் உழுத பயன் பெறுவது போல் ஒளி சிறந்த மணிகள் கிடைக்கப் பெற்றனர் என்று அவர் குறிப்பிடுகிறார்.[37]

**நிணம்படு குன் பெரும்பாட்டு ஈரத்து**
**அணங்குடை மரபின் இருங்களத் தோறும்**
**வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி**
**வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்**
**வைநல் உழவ வாழிய பெரிது[38]**

என்னும் பாடலில் அதியமானை ஒரு வில்லேருழவனாகக் காட்ட விரும்பும் ஔவையார் மழை பெய்த ஈர நிலத்திலே ஏர் பூட்டி உழுது வித்திடும் உழவனோடு ஒப்பிடுகிறார். இதில் உழுதொழில் நுணுக்கங்கள் இடம்பெறுதலை உணர முடியும். உழவரொடு எருதும் உடன் உழைத்ததால் விளையும் பயனாதலால், 'பகடு தரு செந்நெல்' என்றும் உழவியல் சிறப்பிக்கப்படுகிறது.[39]

புறநானூற்றுப் பாடலொன்றில் 'எறிபுனக் குறவன்' என்னும் சொற்றொடர் உள்ளது[40]. இது குறவர்களைக் குறிப்பதாகும்.

**மறம் கந்தாக நல்லமர் வீழ்ந்த**
**நீள்இழல் மறவர்[41]**

**பரந்து ஒருங்கு மலைந்த மறவர்[42]**

என்னும் பாடலடிகளில் மறவர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவர்கள் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்ததால், நல்லியல்பிழந்த ஈரமில்லா நிலத்தினர். வீரம் இவர்கள் குருதியில் கரைந்த மூலப்பொருள். போருடற்றும் இவ்வீரர் அனைவருக்கும் இவர் மற இயல்பு கருதி மறவர் என்ற பெயர் வழங்கப்பட்டது. இவர்களைச் 'செருப்புகல் மறவர்' என மாறோக்கத்து நப்பசலையாரும்[43] , ஓடாப் பூட்கை மறவர் எனக் காக்கைப் பாடினியாரும் குறிப்பிட்டுள்ளனர்[44].

நப்பசலையார் பாடிய பாடலொன்றில் நெய்தல் நில மக்களாகிய உமணர் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.[45] உமணர் கூட்டங் கூட்டமாகிய உப்பு வண்டிகளோடு செல்வர். உப்பு வண்டியில் பூட்டப்படும் காளைகளின் கழுத்தில் மணிகள் கட்டப்பட்டிருக்கும். அதன் ஒலி 'சிள்வீடு' எனும் வண்டினது ஒலியோடு ஒத்து இருக்கும் என்னும் செய்தி, 'வறல் மரம் பொருந்திய சிள் வீடு உமணர் கண நிரை மணியின் ஆர்க்கும்' என்னும் பாடலடியில் ஔவையாரால் பாடப்பட்டுள்ளது.[46]

### 1.2.1.3. பெண் கவிஞர்களின் பாடல்களில் உணவு பற்றிய செய்திகள்

பெண்களோடு பெரிதும் தொடர்புடைய சொல் உணவு ஆகும். உணவு சமைப்பவர் அவராதலின், சங்க காலப் பெண் கவிஞர்களின் பாடல்களில் உணவு பற்றிய செய்திகள் காணப்படுகின்றமையை இங்குக் காணலாம்.

அவலை உணவாக உண்டமையினை ஒரு புலவர் பதிவு செய்துள்ளார்.[47]

கள்ளுண்ணப் பெறுகிலேம் என்ன நெஞ்சிற்கிடந்த வருத்தம் போகும் அளவில் ஆடவர்கள் கள் உண்டனர். [48] இவை போன்று கள் அருந்தியது குறித்துப் பல செய்திகள் காணப்படுகின்றன.

கள்ளின் செருக்கால் மெய் நடுக்கம் உண்டானது பற்றியும் (பொருந.94,95), நெய் பற்றியும் (குறுந்.20), பொரிக்கறி பற்றியும் (பொருந.115), மான் தசை பற்றியும் (பொருந.217) குறிப்புகள் உள்ளன.

வேந்தன் தானைத் தலைவர்களுடன் உண்டாட்டு நிகழ்த்தும் போது அவன் கையாலேயே கள் வழங்குவான். ஒரு வீரன் பெருமையைக் கூறி கள்ளை முன்னர் இவனுக்குத் தந்து பின்னர் நீ உண்பாயாக என்றனர். சிறிய கள்ளாகிய அரிதூய கள்ளை எங்களுக்குத் தருதலும், பெரிய அளவிற்றாயதெனின், யாம் உண்டுபாடத் தானும் மகிழ்ந்துண்ணும் அதியமானின் இயல்பு என்றும் காட்டுகின்றனர். நாட்டின் பெருமையைக் குறிக்கும் போது, நறுங்கள்ளின் நாடு எனவும், அரசர் பெருமையை ஆர்கலி நறவின் அதியர் கோமான் இண்களி நறவின் இயல்தேர் நன்னன் எனவும் குறித்ததும் காணலாம். கள்ளுணவு பற்றிய இக்குறிப்புகளுள் நன்னனைக் குறித்த முள்ளியூர்ப் பூதியார் பாட்டுள் வரும் ஒரு குறிப்புத் தவிரப் பிற எல்லாமும் ஔவையாராலேயே சொல்லப்பட்டு உள்ளன.[49] பிறர் எவரும் இது பற்றிப் பேசவில்லை.

மகளிர் கள்ளருந்தும் வழக்கம் இருந்ததென்றாலும் ஔவையாரே அதனை விரிவாகக் காட்டினார். வீரரைப் பற்றியும் விறலியர், பாணர், கூத்தர் பற்றியும் கூறும்போது கள்ளுணவைக் குறிக்க வாய்ப்புண்டு. ஆனால், காக்கை பாடினியார், நச்செள்ளையார் எங்கும் கள்ளுணவைக் காட்டினாரில்லை.

தமிழர்களின் இன்றியமையாத உணவுப் பொருள்களில் ஒன்று மீனாகும். இது சங்க காலம் முதலே உணவாகப் பயன்பட்டு வந்துள்ளமையினை அறிய முடிகிறது. 'கொழுமீன் வல்சி'[50] என்று அகநானூற்றுப் பெண்பாற் புலவர் போந்தைப் பசலையார் குறிப்பிடுகிறார்.

நெல், அரிசி, திணை, செந்திணை, வரகு, கொள், வெள்ளை வரகு, வெண்ணெய், உழுந்து, கடுகு, மிளகு, தேன், கள் முதலியன குறிக்கப்பட்டுள்ளன.[51]

ஊனைத் தனியே உண்டலும், துவையலாக அரிசியோடு கலந்து உண்டலும் உண்டு. செம்மறியாட்டு ஊன் மிகுந்த பயன்பாட்டில் இருந்துள்ளது[52] என்பதனையும் அறியமுடிகிறது.

உணவைச் சோறு, சொன்றி, வெஞ்சோறு என்பர். மலர் ஒன்றின் வடிவமைப்பை ஈரலுக்கு இணையாக கழார்க்கீரன் எயிற்றியார் காட்டிள்ளார்[53].

ஈரல் உணவுப் பொருளாக இருந்தது போலும். தன்னொடு கலந்த சிவந்த ஊன் சோறாகத் தெரியாதபடி அரைத்த வெண் துவையலோடும் அவரை துவரை முதலிய பருப்பு வகைகளையும் நிணமிக்க வெள்ளிய ஊனையும் சோற்றோடு கலந்து வீரர் உண்டனர். தம் செல்வச் செருக்காலே சோறுண்பது பெரிதின்றி ஊனையே பெரிதும் விரும்பி உண்டனர் எனப் பதிற்றுப்பத்து உரை கூறுகிறது. அரிசியைத் துவரையின் பருப்பு என்றும் கூறுவர். துவரை அரிசி என்பது உலக வழக்கு. பறித்த கீரைக்கு அரிசி வேண்டியதாக ஔவையார் கூறுகிறார். அல்லி அரிசியைக் கொண்டு சமைத்தலும் உண்டு. இரவும் பகலும் ஊன் உண்டதனால் பல்முனை மழுங்கிப் போன செய்தியும் பதிவாகியுள்ளது.[54] சூடேறிப் போன ஊன் உணவை, வாயிடத்தே இடது பக்கமும் வலது பக்கமும் அசைத்துச் சூட்டை ஆற்றித் தின்னும் குறிப்பு ஒன்றும் உள்ளது.[55] இரும்புக் கம்பியாலே ஊனைக் குத்தி வேக வைத்த செய்தியும் உள்ளது.[56]

சோற்றை ஊன் துவையலோடும் நெய்யோடும் மண் பாத்திரத்தில் இட்டு அருந்தினர். நீர் வைப்பதற்கான சிறு கலங்களும் தேறலுக்கான பொற்கலங்களும், உணவுப் படையலின் துணைக் கறிகள் இடுவதற்காகப் பல பாத்திரங்களும் இருந்தன.[57] அணில் முதுகில் வரிகளைப் போன்ற கோடுகளையுடைய வெள்ளரிக்காய் விதை போல வெள்ளயிர் பாங்காய் காணப்படும் நறுநெய், வெண்ணெய், எள்துவையல், புளிக்கறி, இலைமீது கையாற் பிழிந்து வைக்கப்பட்ட

பழஞ் சோற்று திரள் முதலியவை பற்றியும் அறிகிறோம்.[58] தரமான உணவினைப் பலரோடு சேர்ந்து சுவையோடு உண்ணும் இயல்பு பதிவு பெற்றுள்ளது.[59]

உண்ணா உயக்கமொடு பிரிந்தோர் பிரிவுக்கு வருந்தலும், பொழுது மறுத்துண்ணும் அவல நிலையும் பாடலில் பதிவு பெற்றுள்ளது. நீர்ம உணவாகிய மது வகையும் தமிழ் நாட்டில் வழக்கில் இருந்துள்ளது. இம்மதுவகை மரஞ்செடி கொடிகளின் வேர் தண்டு, முளை, கிளை முற்றிய பகுதிகளைக் கொண்டும், இலை, மலர், காய், தேன் விதைகள் முதலியன கொண்டும் சில செய்முறைகளால் சாறாக்கிப் பல காலம் கெடாது வைத்திருந்தனர். நாரறிதேறல், நறவு, கள், பிழிமகிழ் வல்சி எனக் குறிக்கப்படுகின்றன. நாட்பட்ட தேறலே சிறப்பும் வீறும் உடையது. அயல் நாட்டிலிருந்தும் புதிய மது வகை வருதல் உண்டு. கடல் துறை முகத்தில் கள் கடைகள் திறக்கப்பட்டிருந்தன. அக்கள்ளின் சாடிகள் அழகிய வடிவாய் இருந்தன. இளம்பெண்ணின் மேனி நலத்தை ‘கள்ளின் சாடியன்ன எம் இன நலம்’ என்று ஔவையார் பாட்டு குறிக்கிறது. வேந்தர் அவைகளில் அணிகலன்களை அணிந்த அழகிய மகளிர் பொன் வள்ளங்களில் கள் தெளிவைப் பிறர்க்கு வழங்குவர். தேனினது கடுப்புப் போன்ற நாட்பட்ட புளிப்பேறிய கள்ளைக் கோள் மீன் போன்ற உருவுடைய பொன் வள்ளத்தில் பெய்து பொருநனுக்குப் பொகுட்டெழினி அளித்தாள். தேட்கடுப்பைப் போன்ற சுவையைச் சுட்டியதோடு நில்லாமல் தெளிந்த நறவு புலியின் கண்ணைப் போல் நிறமும் ஒளியுமுடையதென்பதையும் ஔவையார் புலிக்கண்ணப்பர் என்று குறித்துள்ளனர். இடுமுறை உண்பதெனவும், அவ்வாறு உண்ணுங்கால் ஒருவருக்கொருவர் வாழ்த்திக் கொள்ளுதல் உண்டெனவும் தெரிகிறது.[60]

உண்ணுகின்ற உணவுகளைத் தலை, இடை, கடை என முறையாக எடுத்து உண்ணுதல் உண் முறையாகும். கொள்வார் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருட்களைப் படைத்தலும் ஒருமுறை அது கொள்முறையாகும் [61].

அட்டிற்கலை வன்மையில் மகளிர் சிறந்தவர். அவர்கள் அட்டிக்கும் முறை பற்றிய குறிப்பு இல்லை. உணவின் முதன்மையைக் கருதி ஊர்களின் பெருமைகளை உரைக்கும் போதெல்லாம் "பிண்ட நெல்லின் அள்ளூர் பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர், வரம்பணைந்து இறங்கு கதிர் அலம் வரும் கழனிப் பெருப்புறை'' எனப் படப்பை வயல் வளங்களைக் குறித்த[62] செய்தியும் புலனாகிறது.

மரஞ்செடி கொடிகளிலிருந்து விளையும் காய், கனி, கீரை முதலியனவற்றையும் உணவுப் பொருளாய்ப் பயன்படுத்தினர். வழியில் செல்லும் மக்களுக்கு மரம்படு தீங்கனிகள் உணவாகப் பொருந்தி, அவர்கள் களைப்பைப் போக்கின. பலாவின் கனியும் மணங்கமழும் மாவின் வடுவும் நெல்லிக்கனியும் பாடலில் பதிவு பெற்றுள்ளமை அறியலாம்.[63]

### 1.2.1.4 பெண் கவிஞர் பாடல்களில் காணப்படும் உடை பற்றிய செய்திகள்

நற்றிணையில் உடை பற்றிய செய்திகள் அதிகம் காணப்படுகின்றன. நற்.390 ஆம் பாடலில் ஆம்பல் உடை பற்றிய குறிப்பும், நற். 90 ஆம் பாடலில் உடை என்ற சொல்லாட்சியும் உடைக்குக் கஞ்சி போடும் செய்தியும், பூத்தொழில் செய்யப்பட்ட ஆடையைக் குறிக்கும் பூங்கலிங்கம் பற்றிய செய்தியும் உள்ளன. இப்பாடல்கள் மருதத்திணையைச் சார்ந்தவை ஆகும். எனவே, மருதநில மக்கள், 'உடை' யை அதிகம் பயன்படுத்தி உள்ளமையும், கஞ்சி போடுதல் பூத்தொழில் செய்தல் முதலிய வேலைகளையும் செய்தவர் என அறியலாம். முறையே தோழி கூற்றாகவும் பரத்தை கூற்றாகவும் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

தூயவாகிய திரள முடிந்த முடிகளைக் கரையாகக் கொண்ட 'கொட்டைக் கரையப் பட்டுடை' யைப் பொருநராற்றுப் படை குறிப்பிடுகிறது.[64] 'வேறு இழை நுழைந்த துன்னல் சிறார்' என்னும் பாடல் வரியில்[65] தைத்த உடை பற்றிய குறிப்பும் உள்ளது. பொருநராற்றுப் படையிலும் 'பூத்தொழில்' பற்றிய குறிப்பு

கலிங்கம் என்பன கோடு, கரை, பூத்தொழில் இவற்றால் நெசவு அணி செய்யப்பட்டமையை அறிவிக்கும். இப்பகுதியில் ஆடையானது அறுவை, மடி, கலிங்கம் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

'அறுவை' என்பது தறியில் இருந்து அறுக்கப்படுவதால் வந்த பெயர். 'மடி' என்பது மடிக்கப்படுவதால் வந்த பெயர். 'கலிங்கம்' என்பதோ ஒரு வரலாற்றுப் பின்னணியை உடையது. நமது நாட்டிலேயே ஆடைகள் நெய்யப்பட்டிருந்தாலும் கலிங்க நாட்டு ஆடை, நெருக்கமும் அழகும் உடைமையால் பெரிதும் தமிழர்களால் போற்றப்பட்டது. இதனை மற்றொரு புலவர், 'நோக்கு நுழைகல்லா நுண்பூங்கலிங்கம்' என்பர். ஆகவே, கலிங்க நாட்டிலிருந்து ஆடை வந்ததனால் ஆடைக்கே 'கலிங்கம்' என்ற பெயர் அமைந்து விட்டது.[74]

### 1.2.1.4 பெண் கவிஞர் பாடல்களில் நம்பிக்கைகள்

மக்கள் இணைந்து வாழும் சமுதாயத்தில் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை. நம்பிக்கைகள் மரபு வழி வருபவை. மரபு வழி வரும் நம்பிக்கைகளைக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றும்போது அவை மூட நம்பிக்கைகளாகப் போய்விடும் அவலத்தை இன்றைய வாழ்க்கையில் நாம் காண்கிறோம். ஆனால் எல்லா நம்பிக்கைகளுமே தர்க்க நியாயத்திற்கு உட்பட்டே தோன்றியிருக்க முடியும்.

சங்கப் பெண் புலவர் பாடல்களில் காணப்படும் நம்பிக்கைகள் பற்றி இங்கு ஆராயப்படுகிறது.

#### 1.2.1.4.1 தெய்வ நம்பிக்கை

சங்ககாலப் பெண் வீட்டைக் காக்கும் பொறுப்பை அன்றே ஏற்றிருந்தாள். அவர்தம் நெஞ்சம் சமயக் கொள்கையிலும் தெய்வ நம்பிக்கையிலும் தோய்ந்திருந்ததை சங்க இலக்கியம் முழுவதும் காண முடியும்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அரசியற் சிறப்பைப் போற்றும் நச்செள்ளையார், தமிழகத்தின் வடவெல்லையாக இமயத்தைக் குறிப்பிடுகிறார். அவ்வெல்லையாகிய, இமயத்தைத் தெய்வமாகவே கருதி 'அரவழுங்கும் பெருந்தய்வத்து ஆயிடை மணந்த பந்தர்'[75] என்பார். இமயமலையை எண்ணுகிறபோது அவ்வம்மையார்க்கு இறையுணர்ச்சி எழுகிறது.

'இயலினள், ஒல்கினள், ஆருமடமகள், வெளியுறு நுடக்கம் போலத் தோன்றிடு பெருமலை வயின் விளங்கும் அருமணி அரவழுங்கும் பெருந்தெய்வத்து' என்ற தொடர், மடமகள் வெளியுறு நுடக்கம் போல அரவழுங்கும் பெருந் தெய்வத்துப் பெருமலை என்று கூட்டி, சாலினி தெய்வம் ஏறி ஆடுகின்ற ஆட்டம் போல அரவுகள் உடலின் இடந்தோறும் குறுக்காக இழைகின்ற பெருந்தெய்வமாகிய சிவனுக்கு உரிய பெருமலையாகிய இமயம் என்றும் நாம் புத்துரை காணலாம். அன்றியும் உமையவளை இமயக் கொடி எனச் சிலம்பும் பாடும். ஆகவே, இமயம் தெய்வ மலையாதலைக் கண்டு கூறியவர் நச்செள்ளையார் எனலாம்.[76]

'கொடுஞ் சுழிப்புகார்த் தெய்வம் நோக்கிக் கடுஞ்சூள் தருகுவேன் நினக்கே' என்று தோழி செவிலித்தாய்க்குத் தலைவியின் உடல் நிலை மாறுபாட்டை உணர்த்துவாள். தெய்வத்தினிடத்து அன்பு கலந்த அச்சம் இருந்தமையினாலே தான் உண்மை உறைக்கின்ற, அவள், 'காவிரிப்பூம் பட்டினத்தில் விளங்குகின்ற தெய்வத்தை நோக்கிச் சூளுரைக்கிறேன்' என்கிறாள். இதனால் மகளிர் நெறி தவறுதல் கூடாது. நெறி தவறி ஆணையிட்டால் தெய்வம் தண்டிக்கும் என்று மன உறுதி கொண்டிருந்ததைப் போந்தைப் பசலையார் உணர்த்துகிறார்.[77]

அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்தான். அதனைப் பெற்றுக் கொண்ட ஔவை அவனை வாழ்த்தும் போது, 'பால்புரை பிறை நுதல் பொலிந்த சென்னி, நீலமணி மிடற்றொருவன் போல மன்னுக பெருமநீ' என்று குறிப்பிட்டார்.

இதனால் சிவ வணக்கமும், சிவனது முழு முதற்றன்மையும் அழியாத் தன்மையும் அறிவிக்கப்படுகின்றன.[78]

அச்சம் தரும் தெய்வ மகளிர் மலைகளின் மீது வாழ்கின்றனர் என்பதும்[79] கொல்லிமலை உச்சியின் மேல் வருத்தும் பெண் தெய்வம் நின்று வாழ்கிறது[80] என்பதும், அக்கால மகளிர் உலகில் காடும் செடியும் அடர்ந்த மலையுச்சி, பெண் தெய்வம் வாழும் இடமாகப் பேசப்பட்டு வந்தமையைத் தெரிவிக்கும் இல்லற வாழ்வில் திணைத் தெய்வமாகப் பிணைக்கப்பட்டிருக்கும் கடவுளுள் முருகன் பெரிதும் போற்றப்படுகிறான். 'படியோர்த்தேய்ந்த பண்புகழ் தடக்கை நெடுவேள்' என முருகனைக் குறித்ததைக் காணலாம்.

தோழி, என் தலைவர் அயன்மையால் தூய்மை இழந்தார். தூய்மை பெற்ற முனிவர்களை அணுகவும் அஞ்சுவது போல என்னைக் கண்டு விலகிச் செல்கிறார் என்றும், கண்ணிற் காண நண்ணு வழியிருந்தும் கடவுள் நண்ணிய பாலோர் போல ஒரீஇ ஒழுகும் என்னை, என்றும் பேசுகிறார்.[81] கடவுள் நண்ணிய பாலோர் முனிவர்கள் அவர்களைக் கண்டு தூய்மையற்றவர்கள் விலகி வாழ்கிறார் என்பதால், கடவுளிடத்தும் அவன் அருளைப் பெற்ற முனிவரிடத்தும் மக்கள் கொண்டிருந்த நன் மதிப்பை அது காட்டுகிறது. கடவுள் கொள்கையின் உறுதி கருதி ஒரு தலைவி, 'தலைவன் சென்று வருவானாக. நான் விருந்து எதிர் கொள்வேனாக. அவனுக்கு மேன்மேலும் பகை விளைந்து வீர உணர்ச்சி குறையாதிருப்பதாக' என்று தன் பண்டையோர் நடுகல்லைப் பரவுகின்றார் என்று நன்முல்லையார் பாடுகிறார்.[82] 'ஐயவி புகைப்பவும் தாங்காது ஒய்யென ஊறுமுறை மரபின் புறம் நின்று உய்க்கும் கூற்றத்து அனையை' என்று ஔவையார் பாராட்டுவதும், 'திண்டேர் வளவற் கொண்ட கூற்றே நீ எங்கள் தலைவனை இரந்து தான் உயிரைப் பெற்றிருக்க வேண்டும்'[83] என்று மாறோக்கத்து நப்பசலையார் பாடுவதும், பிரிந்து வாழ்கின்ற நிலையில் தலைவி கூதிர்க்

காலத்தைக் கூற்றாகக் கண்டு அஞ்சுவதும், அக்கால மக்களுக்கு, ஊன் உயிர் வேறு செய்யும் கூற்றத்திடத்திருந்த தெய்வ நம்பிக்கையைப் புலனாக்கும்.

முருகன் கோட்டத்தில் தூய்மையற்ற மகளிர் செல்லாமல் விலகி நின்றது போலக் குதிரைகள் விலகி நின்றன என்று பாடுகிறார் பொன்முடியார்.[84] இதனால் முருகனுக்குக் கோயில் இருந்தமையும், அதனிடத்து மக்களுக்கு இருந்த மதிப்பையும் அறியலாம்.

### 1.2. 1.4.2 பேய்கள் குறித்த நம்பிக்கை

உலக நாடுகள் அனைத்திலுமே பேய் பற்றிய நம்பிக்கை உண்டு. இன்று அதனை மூட நம்பிக்கை என்கின்றனர். பேய்களைப் பற்றிய அச்சம் தமிழரிடையே இருந்தது. பேய் காண்போர்க்கு பயமூட்டும் வகையில் இயங்கியது என்பர்.

வேம்பின் தழையை மனையின் கண் செருகுவதும், காஞ்சிப்பண் பாடுவதும், ஐயவி புகைப்பதும், புண்பட்டு வந்த வீரர் பொருட்டு அவர் மனையோர் செய்வது வழக்கம். அதனால் புண்ணுற்றோரைப் பேய்கள் அணுகா என்பது பண்டையோர் கருத்து[85] தலைமகள் ஒருத்தி தான் கொண்ட காமத்தைப் பேய் கண்ட கனவு[86] என்றும், பேயின் பற்களைப் போன்ற பருத்த நகங்களைக் கொண்ட பெரிய அடிகளை உடைய யானை என்றும் குறித்துள்ளார்.[87] பேய் பற்றிய இவ்விரண்டு செய்திகளையும் ஔவையாரே பதிவு செய்துள்ளார். பேயின் பல் குறித்து 'பீழுஉப்பல்' என்று குறுந்தொகைப் பாடல் ஒன்று தெரிவிக்கிறது.[88] மேற்காணும் செய்திகள் மூலம் சங்க காலத்திலேயே பேய்கள் குறித்த நம்பிக்கைகள் இருந்தமையினை அறியமுடிகின்றது.

### 1.2.1.4.3 பெண் புலவர் பாடல்களில் காணலாகும் நிமித்தங்கள்

சங்க காலப் பெண்கள் காரண காரியம் கருதாமலும், கண்ணால் பார்க்காமலும், அறிவு ஆராய்ச்சி செய்யாமலும் பல நம்பிக்கைகளை

மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். சங்க கால மகளிர் பகுத்தறிவு அடிப்படையில்லாப் பல நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். விரிச்சி – எதிர் வரவு (சகுனம்), நிமித்தம் பார்த்தல், கண் துடித்தல், பல்லி ஒலித்தல், பேய் கனவு, மறு பிறப்பு முதலியன அவரிடம் இருந்தன.

விரிச்சி கேட்டல் என்பது நிமித்தம் பார்ப்பதில் ஒரு வகையாகும். தொல்காப்பிய புறத்திணையியலில் வெட்சித்திணைக்கண் போர் நிகழ்ச்சிக்குரிய துறைகளுள் ஒன்றாகப் ‘பாக்கத்து விரிச்சி’ சுட்டப்படுகின்றது.[89] வேண்டிய பொருளின் விளைவு நன்கறிதற்கு இருள்கவியும் மாலைப்பொழுதில் சொல் ஓர்த்து நிற்றல் விரிச்சியாகும் என்று புறப்பொருள்வெண்பாமாலை கூறும்.[90] வருவதை முன்னரே தெரிவிப்பது விரிச்சியாகும் என்பர் சு.வித்தியானந்தன்.[91]

ஒரு செயலை எண்ணும்பொழுதோ செய்யும்பொழுதோ அயலவர் உரைத்துச் சொல்லும் சொற்கள் நன்மையோ, தீமையோ உணர்த்துவனவாக அமையும் என்று நம்பினர். ஆடவர் போர், தூது, கல்வி பொருள் தேடல் முதலிய காரணங்களால் மகளிரை விட்டுப் பிரிந்து செல்வர். அவ்வாறு செல்லும் முன்னர்த் தாம் திரும்பி வரும் வரை தலைவி மேற்கொள்ளும் செயல்களுள் விரிச்சி கேட்டலும் ஒன்றாகும். விரிச்சி கேட்கும் போது தெய்வத்தை நெல்லும் நீரும் பூவும் தூவி வழிபடும் வழக்கம் உண்டு.

நிமித்தம் பார்த்தல் என்பது ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நன்னாளும் நற்பொழுதும் நன்னிமித்தமும் பார்த்துத் தொடங்கினால் அச்செயல் நன்மையாக முடியும் என்று பண்டைய தமிழ் மக்கள் நம்பினர். ‘நாளும் கோளும் செய்வதை நல்லோர் செய்யார்’ என்பது பழமொழி. தொல்காப்பியர், ‘நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்’ என்று நிமித்தம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[92] ‘நிமித்தம் என்பது பின்னர் நிகழும் நன்மை தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறி’ என்று இ. சுந்தரமூர்த்தி குறிப்பர்.[93]

நன்னிமித்தம், தீ நிமித்தம் என இருவகைப்படுத்தி அறியப்படும் இந் நிமித்தங்கள் நாள், பொழுது, கோள், விலங்கு, பறவை, மாந்தர், மரம் முதலியவற்றின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் காணும் நிமித்தங்களைப் பற்றி ஆராய்ந்த சுசீலா கோபால கிருட்டினன் அவற்றை நாள் நிமித்தம், புள் நிமித்தம் மாந்தர் நிமித்தம், தெய்வநிமித்தம், ஏனைய நிமித்தம் என வகைப்படுத்தி விளக்கிக் காட்டியுள்ளமை நோக்கத்தக்கது.[94]

நிமித்தம் 'புள்' எனவும் கூறப்படும். பறவைகளின் போக்கு வரவால் நிமித்தம் காணும் வழக்கம் இருந்ததால், அப்பெயர் நிமித்தத்தைக் குறித்தது போலும். வழிச் செல்லும் மக்கள் நிமித்தமாகக் கொள்ளும்படி முதிய ஆண் ஓணானனை பாலை நிலத்தில் அள்ளூர் நன்முல்லையார் குறித்தார்.[95] நடுப்பகலில் தும்பி பறப்பதும் இரவில் ஏற்றிய விளக்கு நில்லாது அணைதலும், கூகை தன் குழறு குரலால் ஒலித்தலும், பெருந்தூக்கம் வருதலும் தீ நிமித்தங்களாகும் என்பதை மாறோக்கத்து நப்பசலையாரின் பாடலால் அறிய முடிகிறது.[96]

### 1.2.1.4.4 பெண் புலவர் பாடல்களில் வெறியாடல்

அக இலக்கிய மரபில் தலைவன் பிரிவால் தலைவி மனமும் உடலும் சோர்ந்து இருத்தலைக் கண்ட வீட்டார் அதன் காரணம் அறியாது, நோயுற்றாள் எனக் கருதி வெறியாட்டு அயர முதுபெண்டிரை அழைத்து மெலிவுக்குக் காரணம் ஆராய்வர். அப்பெண்டிர் கட்டும் கழங்கும் கொண்டு, இது முருகனால் உண்டாயிற்று என்றும், வெறியெடுப்பதால் இவ்வேறுபாடு நீங்கும் என்றும் கூறுவர். தலைவி எய்திய வேறுபாட்டுக்குக் காரணம் செவ்வேள் எனத் துணிந்த பின் தாயார் வேலனை அழைத்து வெறியாட்டுக்கு வேண்டிய ஏற்பாட்டினைச் செய்வர். அது குறித்து முதற்கண் தக்க இடமொன்றைக் கண்டு அதனை நன்கு தூய்மை செய்து அழகு படுத்துவர். பின்பு அங்கே பந்தல் ஒன்றை அமைத்து அடம்பு மலர் மாலைகளால் ஒப்பனை செய்வர். தரையை மெழுகி அழகிய கோலமிட்டுச் சிறப்புச் செய்வர். முருகனுடைய வேட்படையாவது கோழி

எழுதியதனை நட்டு அவன் விரும்பும் காந்தட்பூ முதலியவற்றால் தொடுத்த கண்ணியைச் சூடுவர். தொண்டகம் முதலிய பல இசைக் கருவிகள் இயம்ப, மறியாடுகளைப் பலியிட்டு அவற்றின் குருதி கலந்த தினையரிசியைப் பிரம்புக் கூடைகளில் நிரப்பிப் படையல் இட்டு எதிரே தூவுவர். அங்கே கூடியிருக்கும் குறவர்களில் ஆண்களும் பெண்களுமாகிய இளையவர்கள் குரவைக் கூத்தாடுவர். வேலன் அவர்களை ஒரு பக்கத்தே நிறுத்தி, முருகன் புகழைப் பாடிப் பரவுவான். தாயார் தலைமகட்கு எய்தியிருக்கும் வேறுபாடு நீங்கி முன்மையிலும் மிக்க நலத்தை அவள் பெறுவாளாக என வழிபடுவர்.[97]

### 1.2.1.4.5 பெண்பாற் கவிஞர்களின் பாடல்களில் இசையும், இசைக் கருவிகளும்

தமிழை 'முத்தமிழ்' என்று அழைப்பர். அவை இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பனவாகும். இம் மூன்றுமே மிகப் பழமையானவை. சங்க இலக்கியத்தில் இசைக் கூறுகளும், நாடகக் கூறுகளும் கிடைக்கின்றன. பாணன், பாடினி இசைப் பாடகர்களாகவும், கூத்தன், கூத்தர் முதலியோர் நாடக நாட்டியக்காரராகவும் விளங்கியுள்ளனர். இவர்களை அடிப்படையாகக் கொண்டே பத்துப்பாட்டில் பாணாற்றுப்படை இரண்டும், கூத்தராற்றுப்படை ஒன்றும் பாடப்பட்டுள்ளன.

#### 1.2.1.4.5.1 இசை

இசை பற்றிய குறிப்புகளை அகநானூறு பதிவு செய்துள்ளது. அரசன் மீது பாடியமை குறித்தும், பாண் மகன் இசைப்பாடல் பற்றியும் அவன் பண் ஆராய்வதில் வல்லவனாக விளங்கியமை பற்றிய செய்தி,

**நல்லிசை நிறுத்த நயம்வரு பனுவல்**<br>**தொல்லிசை நிற்கிய உரைசால் பாண்மகன்**<br>**எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும்**<br>**புதுவது புனைந்த திறத்தினும்**[98]

என்னும் பாடலில் பதிவாகியுள்ளது.

பொருநராற்றுப்படையில் குறிஞ்சிப்பண், நெய்தல்பண், முல்லைப் பண், மருதப் பண் என்று பண்கள் சுட்டப்பட்டுள்ளன.[99] மேலும், அதே போல் எழுவகைப் பண்களான குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் நரம்பு ஏழின்கண்ணும் உரிமை உடைய பண் பற்றிக் குறிப்புகள் உள்ளன.[100] மேலும், குரல் (பண்ணின் பெயர்), யாழ், பணிலம் (சங்கு), பறை, பாலைப்பண், முரசு, முழவு, இயம்புவோன், முழவு அடித்தல் முதலிய செய்திகள் இசை தொடர்பானவையாகும்.

### 1.2.1.4.5.2 இசைக் கருவிகள்

பாணன் புதிது புதிதாகத் தன் கற்பனைகளையும் கலந்து பாடுவானாயின், மேலும் சிறந்து வெளிப்படும். ஆகவே, வழி வழி வந்த இசையோடு வளர்ந்த பாண்மகன் பாடும் பண்ணும் திறமும் ஆகிய பண் வகையிலும், புதுவது புனைந்த கற்பனையொடு கூட்டிப் பாடும் இனிமையினும் தன் வாழ்வு இனிமை பயப்பதாகத் தம் தலைமகளின் காதலினிமையினைக் கூறும் அஞ்சிஅத்தை மகள் நாகையாரின் இசைப் பேரறிவு வியத்தற்குரியது. இது மிடற்றிசையைப் பற்றிய அறிவுக் காட்சியாகும்.[101]

குரலென்னும் நரம்பொடு புணர்ந்த இசையில் தழிஞ்சிற் துறை பொருளாக அமைந்த பாடலைப் பாடலாம் என்பதும் இசையின் நுண்ணறிவிற்கு எடுத்துக் காட்டாகும். 'வயிரியர் இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே' என்ற அடிகளால் வெள்ளி வீதியார்க்கு இருந்த இசையார்வம் அறிய முடிகிறது[102].

இனி இசைக் கருவிகளுள் இருகண் தோற்கருவி, வகையில் அடங்குவன முரசம், முழவு, தண்ணுமை என்பனவாம். ஒரு கண் பறை வகையில் பறை, தடாரி, பதலை, நொட்டாறை என்பன அமையும். யாழ், நரம்பு என்பன நரம்புக்கருவி வகையின. குழல்வேய் முதலியன துளைக் கருவி வகையினவாம்.

'திண்பிணி முரசம் இழுமென முழங்க' என ஔவையார் முரசினைக் குறிப்பிடுகிறார்.[103]

'செருவேட்டு இமிழ் குரல் முரசின் எழுபரொடு முரணி' என்றும் ஔவையாரே கூறுகிறார்[104] பதிற்றுப் பத்தில் நச்செள்ளையார் 'படுகண் முரசம் நடுவண் சிறப்ப' எனப் போர்ப்பறை பாசறையுள் முழக்கப் படுதலைக் குறிக்கிறார். முழவு ஆண்களுடைய தோளுக்கு ஒப்பிடப்படுகின்றது. இதனை, 'முழவுத்தோள் என்னை'[105] என்பதால் அறிகிறோம்.

தண்ணுமை, முழவின் வேறா அன்றா என்பது அறியப்படவில்லை. ஊரிலே போர் மூண்டது என்பதை அறிவிக்க இத் தண்ணுமையை முழக்கி வந்தனர். மற்ற நேரங்களில் ஊர்ப் பொது மன்றங்களில் அதனை மரத்தில் பிணிப்பது வழக்கம். காற்றால் மரக்கிளைகளில் அசையும் போது அது ஒலித்தல் உண்டு. அதைக் கேட்ட போர் வீரர்கள், ' போர் மூண்டது', என்று மகிழ்ந்து எழுவர்[106]

போர்க்களத்தில் தண்ணுமைக்கருவி அம்பு பட்டு கிழிந்து கிடக்கிறது. அதனைக் கற்பனையோடு கூட்டிச் சொல்லும் காக்கைப் பாடினியார், ''தூக்கணை கிழித்த மாக்கண் தண்ணுமை கைவல் இளைஞர் கையலை அழுங்க'' என்பார்.[107]

வீரல் கவர்ந்து உழந்த கவர்வின் நல்யாழ்[108] என்று வெள்ளி வீதியார் யாழைக் குறிப்பிடுகிறார்.

'கூடு கொள் இன்னியம் கறங்க' (அகம், 45,98) ' பெருங்களிற்றடியின் தோன்றும் ஒரு கண் இடும்பறை' (புறம்,263,392), 'ஆடுகளப்பறையின் அரிப்பன ஒலிப்ப', 'பறைபட பணிலம் ஆர்ப்ப' (குறுந்.15) முதலியவை பறை பற்றிய பாடல்களாகும்.

குழல் தொடங்கினரே கோவலர்[109] என்ற நற்றிணைப் பாடற்பகுதியால் 'குழல்' இசைக் கருவி பற்றி அறிகிறோம். ஒரே வகையாய் இணைந்த பல இசைக் கருவிகள் ஒத்து ஒலிக்கப் பொருத்தமாக சீர் அமைந்த தாளத்தோடு, முருகனின் பெரும் புகழை வேலன் துதித்துப் பாடுவான் என்று தலைவி தனக்காக நடைபெறும் வெறியாடலை வெறுத்தாலும், அதன் கண் நிகழும் பண்ணிசையை வெறுக்காது கூறுகிறாள்.[110]

பாம்புப் படமெடுத்து அசைந்தாடுவது போலத் தாழ்ந்தும் நிமிர்ந்தும் உலவியும் அசைந்து சாலினி ஆடியதை நச்செள்ளையார் காட்டியுள்ளார்.[111] ஒலி, சும்மை, கண், கனை முதலிய பல சொற்கள் ஓசையின் இயல்புகளை வேறுபடுத்திக் காட்டியுள்ளன. வண்டிமிர் ஓசை, புணரியின் ஓவாப்பாடு, அன்றிலின் நரலுதல், பூங்கண் இடுங்குயில், நுவலுதல், வயிரியர் இன்னிசை, துடியர், பாணர், பாடுவல், விறலி, கோயிர், பாடினி, காற்றினால் ஒலியெழுப்பும் கொம்பு வாச்சியம் போலக் கிளிகள் ஒன்றினை ஒன்று அழைத்தெழுப்பும் ஓசை, தேர்மணி, ஆண் பூண் மணியோசை, உமணர் கணநிரைமணி, பணிலம், பறை, அருவி எழுப்பும் ஓசை, தண்ணென் முழவின் இமிழிசை எனக் காணும் பொருட்களிலும் கேட்கும்[112]. ஒலிகளிலும், இசை நயமுணரும் பெற்றியராய் இப்புலவர் இருந்தனர். நுணங்கைக் கூத்தும், குரவைப் பாடலும் ஓவியம் புனைதலும் பாடல்களில் உண்டு. விறலியார்க்குப் பொற்பூக்களும் அணிகலன்களும் பரிசளிப்பது வழக்கம்.[113] அஞ்சியத்தை மகள் நாகையாரை இசைத் திறமுடையவராகவும், ஆதிமந்தியாரை ஆடல் வல்ல அரசியராகவும், காமக்கண்ணியாரை ஓவிய விருப்பமும் இசைத்திறமும் உடையவராகவும் சிறப்பாகக் கருதும் அளவில் அவர் பாடல்கள் திகழ்கின்றன.

### 1.2.1.4.6 தொழிற்கருவிகள்

பழந்தமிழகத்துத் தொழில் பொருளாதாரத்தைப் பொறுத்தும், வாழ்வுத் தேவைகளைக் குறித்தும் வளர்ந்தன. 'அரசர்க்கும் வேடர்க்கும் உண்பவை நாழி உடுப்பவை இரண்டே' என்ற அடித்தளத்தில் தமிழகப் பொருளாதாரம் அமைந்தபோது, தொழில் வளமும் அதற்குரிய வகையில் உணவும் உடையுமாகிய இன்றியமையாத் தேவைகளைத் தேடவே தோன்றின. தத்தமக்கு வேண்டிய உணவு நலங்களைத் தாம் தாம் ஆற்றும் தொழிற்றிறத்தால் அடைய முடிந்ததால் அஞ்சாது வாழ்ந்த உணர்வும் ஊக்கமும் தமிழ் நாட்டு மக்களிடம் இருந்தன.

இது 'கிளி கடி கருவி' எனப்படும்.[114] கிளியை விரட்டப் பயன்படும் கருவியை மகளிர் பயன்படுத்தியுள்ள செய்தியினை அறிய முடிகிறது.

தீக்கடைக் கோல் அல்லது ஞெலிகோல் என ஒரு கருவி உள்ளது. மக்கள் உணவைச் சமைத்து உண்ணத் தொடங்கிய பழங்காலத்தில் காடுகளில் இரவு நேரங்களில் அச்சமின்றி வாழவும், ஒளிபெறவும் நெருப்பு தேவையாயிற்று. அதனை நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் பெறத் தீக்கடைக் கோலைப் பயன்படுத்தினர். அக்கோல் வீடுதோறும் இறவானத்தில் செருகப்பட்டிருந்தது. 'இல்லிறை வைத்த ஞெலிகோல் போல்'[115] என்பதனால் அறிகிறோம். இதனைக் கொண்டு உருவாக்கும் தீக்கு 'ஞெலித் தீ'[116] என்று பெயர்.

'உச்சிக் கொண்ட ஊசி வெண் தோடு'[117] எனப் பனங்குருத்தின் கூர்மைக்கு ஊசி உவமிக்கப்படுவதால், ஊசி அக்காலத்தில் பயன்பட்டு உள்ளமையினை அறியலாம்.

பொன்னை உரைக்கும் கட்டளைக் கல்லும் இருந்துள்ளது. 'பொன்னின் உரை திகழ் கட்டளை'[118] என்னும் அடியில் அது குறிப்பிடப்படுகிறது.

'உலைவாங்கு மிதிகோல்'[119] என்னும் அடியில் உலையும் துருத்தியும் குறிப்பிடப்பட்டுள்ளன. 'பலவான் குடம் மருள் பெரும்பழம்'[120] என்னும் அடியில் பலாப் பழத்திற்குக் குடம் உவமையாக்கப்பட்டுள்ளது. கள் சாடி பற்றி முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.2.1.4.7 பெண் புலவர் பாடல்களில் அணிகலன்கள்

பெண்ணும் அணிகலனும் பிரிக்க முடியாதவைகளாகிவிட்டன. ஆதிகாலப் பெண்கள் இலை, தழைகளையே ஆடையாகவும் அணிகலனாகவும் பயன்படுத்தினர். சங்ககாலத்தில் உலோக அணிகலன்கள் பழக்கத்தில் வந்து விட்டன என்பது அறிய முடிகிறது.

கடல் வழி இறக்குமதியான அணிகலன் பற்றிப்பாடல் ஒன்று[121] குறிப்பிடுகிறது. கழல் பற்றி[122] ஒரு பாடல் குறிப்பிடுகிறது. பகைவர் திரையாகக் கொடுத்த அணிகலன்கள் பற்றிய செய்தியும்[133] காணப்படுகிறது. திருந்திழை (அகம்.384), நன்கல வெறுக்கை (பதிற்.55), பொலங்கலம் (பொருந.87), இழையணி மகளிர் பற்றி 'இழைப்பணி வனப்பின் இன்னனாக மகளிர்' (பொருந.84) என்று குறிப்பிடுகிறது.

ஒளி வரும் பூண்[124] குறிப்பிடப்பட்டுள்ளது. வாடாமாலை – பொன்னரி மாலை[125], நூலால் கட்டப்படாத பொன்னரிமாலையை முத்தத்தோடு பாடினி ஆடுதல் (பொருந.161,162) நொடி (அகம்.46), பனம்மாலை[126], மணிபற்றியும் வளைபற்றியும்[127], சங்குவளை[128], கோடீர் இலங்குவளை நெகிழ[129] என்னும் பாடலடிகள் மூலம் பெண்கவிஞர் பாடல்களில் அணிகலன்கள் பதிவாகியுள்ளமையை அறிய முடிகிறது.

### 1.2.1.4.8 பெண் புலவர் பாடல்களில் கூத்து பற்றிய செய்திகள்

சங்க இலக்கியம் முதலே கூத்து தமிழகத்தில் பெரும் புகழோடு விளங்கி வந்துள்ளது. கூத்துக் கலைஞர்கள் சிறப்பான இடைத்தைப் பெற்றனர். ஆதிமந்தியை அரச புலவர் என்று அழைத்தாலும் அவர் தம் பாடலின் 'யானும் ஒரு ஆடுகள மகளே' என்று சுய விளக்கம் தருகிறார்

துணங்கைக் கூத்து என்பது கூத்தில் ஒரு வகை. இது பற்றிய செய்தி சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. [130]

கூத்தின் கண் ஆடும் பெண்ணின் நடத்தலுக்குப் பாம்பாட்டத்தை ஒப்பிட்டுள்ளது பதிற்றுப்பத்து.[131] ஆதிமந்தி தன்னை ஓர் 'ஆடுகள மகளே' என்று கூறுகிறாள்.[132] விழாவின் போதே கூத்து நடைபெறும். விழா பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. விழவின் அழுங்கல் மூதூர் (நற்.90), விழவின் பொருட்டு அணிகளைத் தொகுக்கின்ற மாலைக் காலம் (குறுந்.386), விழவு (குறுந்.31), விழவு கொள் மூதூர் (அகம்.352) விழாக்கள் மூதூரில் நடக்கும் பேய்க்குரலை – மன்னன் ஊரும் மறமிகு மணித்தேர்ப் பின்னும் முன்னும் பேயாடின்று – தும்பை மன்னன் செலுத்துகின்ற மணிகளை உடைய தேரின் முன்னும் பின்னும் பேய் ஆடியது[133], கூத்தில் கலந்து கொள்ளும் விறலியர் பற்றிப் பல பதிவுகள் உள்ளன.[134] விறலியைச் சில்வளை விறலி என்றும்[135] குறிப்பிடுகிறது. விறலியர் ஆடும் நிகழ்ச்சிகளைப் பொருநராற்றுப் படை பதிவு செய்துள்ளது. அதில் பண் குறைவற்ற சிறிய யாழை விரல்படப் பாடி ஆடுவோர் முழவின் தாளத்திற்கு ஏற்ப ஆடும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.[136] விறலி ஆட்டமும் கலைஞர் முழவு அடித்தலும் அகநானூற்றில் பதிவு பெற்றுள்ளது.[137] இச்செய்திகளின் மூலம் பெண்கள் நடனத்தில் சிறந்து விளங்கியமையும், அதனைத் தொழிலாகக் கொண்டிருந்தமையும் விளங்குகிறது.

### 1.2.1.4.9 பெண் புலவர் பாடல்களில் பாடினி பற்றிய வருணனைகள்

பாட்டுத் தொழிலையுடையவர்கள் பாணன், பாடினி ஆவர். சங்க இலக்கியத்தில் இவர்கள் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. பாணன் சிறப்பை உணர்த்தும் வகையில் பத்துப்பாட்டில் இரண்டு ஆற்றுப்படைகள் (பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை) இயற்றப்பட்டன. பெண் கவிஞர்கள் பாடல்களில் பாணன் பற்றிய செய்திகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை. பாடினி பற்றிய செய்திகள் ஏராளம் கிடைக்கின்றன.

பாடினியின் கூந்தல் அறல் போல் இருந்தது[138] என்றும், அவள் நுதல் பிறை போல் விளங்கியது[139] என்றும், அவள் புருவம் கொலைத் தொழிலுடைய வில் போல் காணப்பட்டது[140] என்றும், கண்கள் அழகிய கடையினையும் குளிர்ச்சியையும் உடையனவாக விளங்கின, வாயானது இலவினது இதழை ஒக்கும் இனிய சொல்லை உடையதாக இருந்தது[141], பற்கள் முத்துக்கள் பலவும் சேர்ந்தது போல குற்றந்தீர்ந்து வெள்ளியனவாய் காணப்பட்டன[142] எனவும்,

காதானது மயிர் குறை கருவி மான்கடை அன்ன பூங்குழை ஊசல் பொறை சான்றதாக[143] விளங்கின. கழுத்தானது, நாணம் வருத்தலால் பிறரை நோக்காது கவிழ்ந்த நன்மை விளங்குவதாக அமைந்திருந்தது[144]. தோள் மூங்கில் போன்று[145] தோன்றின. முன் கை ஐம்மை மயிரினை உடையனவாகவும்[146] நெடியமலையில் உச்சி இடத்தனவாகிய காந்தள் போலும் மெல்லிய விரல்[147], உகிர், கிளிவாயோடு ஒப்பினை உடைய ஒளி விடுகின்ற பெருமையை உடையது ஆகவும்[148], பாடினியின் முலையானது பிறர்க்கு வருத்தம் ஏற்படுத்துமாறு சுணங்கையுடையவாகி மார்பின்கண் அமைந்துள்ளது[149] என்றும், அவளின் இரு முலைகளுக்குமிடையே ஈர்க்கு கூட செல்ல முடியாத அளவிற்கு முலைகள் இரண்டும் நெருக்கமாகக் காணப்படுகின்றன[150] எனவும், நீர் நிலையில் சுழி தோன்றுவது போல அதற்குரிய உத்தம குணங்கள் நிறைந்த கொப்பூழ் அவளுடையதாகும்[151] எனவும், உண்டோ, இல்லையோ என்று ஐயத்தை

ஏற்படுத்துவது போன்ற அவளது இடைகளும்[152], அவளின் அல்குலானது, பல வண்டினங்களின் இருப்பை ஒத்த பல மணி கோத்த வடங்களை உடைய மேகலையால் அணியப்பட்டுக் காணப்படுகின்றது[153] என்றும், பெரிய பிடியினுடைய பெருமையை உடைய கைபோல ஒழுக வந்து மெல்லிதாகத் தம்மில் நெருங்கி ஒன்றித் திரண்ட குறங்கு[154], ஏற்றற்குப் பொருந்தின மயிர் ஒழுங்கு பட்ட ஏனை இலக்கணங்கள் திருந்தின கணைக்காலுக்குப் பொருந்த ஓடி இளைத்துப் போன நாயினது நாவினைப் போலச் சிறிய அடி [155] முதலியவை விளங்கின. மேற்கண்டவை பொருநராற்றுப்படை கூறும் பாடினி பற்றிய வருணனைகளாகும். ஆடல் தொழில் மட்டுமல்லாது பாடல் தொழிலிலும் பெண்கள் சிறந்து விளங்கியமையினையும், அதனைப் பெண் கவிஞர்கள் தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளமையினையும் இச் செய்திகளின் மூலம் அறியமுடியும். பொருநராற்றுப் படையின் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார் ஆவார். இவரைத் தாயம்மாள் அறவாணன் (2004), மட்டுமே பெண்பால் புலவராகக் குறிப்பிடுகிறார். வையாபுரிப்பிள்ளையோ (1940), ந. சஞ்சீவியோ (1973), ஔவை நடராசனோ (2003) முடத்தாமக் கண்ணியாரைப் பெண்பால் புலவராகக் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவையே பெண்பாற் புலவர்களின் பொருண்மையாகும். இப்பொருண்மைகள் வரும் 6ஆம் இயலில் ஆண்பாற் புலவர்களின் பொருண்மைகளோடு ஒப்பிடப்பட்டுப் பெண்பாற் புலவர்களின் தனித்தன்மைகள் ஆராயப்படும்.

## தொகுப்புரை

'பொருண்மை' என்னும் இவ் இயல் பெண் புலவர்கள் பாடியுள்ள பாடல்களின் கருப்பொருட்களை ஆராய்வதாக அமைகிறது.

- ❖ பொருண்மை எனும் சொல்லின் பொருளும் பயன்பாடும் விளக்கப்பட்டுள்ளன.

- பெண் புலவர்களின் சமூகம் சார்ந்த பொருண்மைகளான வாழ்க்கை, மக்கள் உணவு, உடை நம்பிக்கைகள், நிமித்தங்கள், இசை, இசைக்கருவிகள், தொழிற் கருவிகள், அணிகலன்கள், கூத்துகள், பாடினி பற்றிய வருணனைகள் முதலிவை பயின்றுவரும் முறைகள் ஆராயப்பட்டுள்ளன.

- வாழ்க்கை என்னும் பொருண்மையில் களவு, கற்பு எனும் இரு கைகோள் நிலைகள் ஆராயப்படுகின்றன. அக வாழ்வுசார் நிகழ்வுகள், புற வாழ்வுசார் நிகழ்வுகள் பெண்கள் பாடல்களில் பதிவாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
- ஔவையார் புறப்பாடல்களில் முன்னிலை வகிப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- மக்கள் எனும் பொருண்மையில் சமூகம் சார்ந்த நிலையில் சமூக படிநிலைகள் ஆராயப்பட்டுள்ளன.

- உணவு, உடை எனும் பொருண்மைகள் பெண்களுக்கே சிறப்பான உணவு பற்றியும் உடை பற்றியும் பெண் புலவர்கள் பாடல்களின் துணையோடு ஆராய்கிறது.

- நம்பிக்கைகள், நிமித்தங்கள் எனும் மக்கள் நம்பிக்கைகள் பெண்கள் பாடல்களில் வெளிப்படும் தன்மை ஆராயப்பட்டுள்ளது.

- இசை, இசைக்கருவிகள், தொழிற்கருவிகள் எனும் புறநிலையில் தொடர்புடைய பொருண்மைகள் எங்ஙனம் பெண்கள் பாடல்களில் வெளிப்பட்டுள்ளன என்பது ஆராயப்பட்டுள்ளது.

- அணிகலன் பெண்களோடு நெருங்கிய தொடர்புடையன. அவை அவர்தம் பாடல்களில் பயின்றுவரும் தன்மைகள் ஆராயப்பட்டுள்ளன.

- கூத்துகள் பற்றியும், பாடினி வருணனைகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன. பாடினி வருணனைகள் அதிகம் உள்ளமை அறிய முடிகிறது.

## மேற்கோள்கள்

1. தொல்காப்பியர், தொல்காப்பியம், நூ.எ– 551: 1
2. தொல்காப்பியர், தொல்காப்பியம், நூ.எ– 644.2
3. தொல்காப்பியர், தொல்காப்பியம், நூ.எ– 1425.4
4. இளம்பூரணர், தொல்காப்பியம் , பொருளியல் முன்னுரை
5. தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், இளம்பூரணம், நூ.எ– 194
6. தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், இளம்பூரணம், நூ.எ– 194
7. தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், இளம்பூரணம், நூ.எ– 198
8. தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், நூற்பாக்கள் – 226, 227, 228, 230, 231, 234
9. முனைவர் க. திலகவதி , சங்ககால மகளிர் வாழ்வியல், ப – 14
10. குறுந்தொகை பா.எ – 146
11. அகநானூறு, பா.எ – 303
12. அகநானூறு, பா.எ – 273
13. நற்றிணை, பா.எ – 90
14. புறநானூறு, பா.எ – 312
15. குறுந்தொகை, பா.எ – 2878
16. புறநானூறு, பா.எ – 92
17. புறநானூறு, பா.எ – 310
18. புறநானூறு, பா.எ – 306
19. அகநானூறு பா.எ – 352
20. அகநானூறு பா.எ – 147
21. புறநானூறு, பா.எ – 246
22. தொல்காப்பியர், தொல்காப்பியம், கற்பியல், நூ.எ– 51
23. புறநானூறு, பா.எ – 251
24. அகநானூறு பா.எ – 246

25. நற்றிணை, பா.எ –312

26. நற்றிணை, பா.எ – 90

27. அகநானூறு பா.எ – 384

28. புறநானூறு, பா.எ – 187

29. புறநானூறு, பா.எ – 126

30. அகநானூறு பா.எ – 173

31. புறநானூறு, பா.எ – 66

32. புறநானூறு, பா.எ – 20

33. தொல்காப்பியர், தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.எ– 20

34. தொல்காப்பியர், தொல்காப்பியம், கற்பியல், நூ.எ– 3

35. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு பிற்சேர்க்கை, ப.1

36. குறுந்தொகை, பா.எ – 371

37. பதிற்றுப்பத்து, பா.எ – 58 12–19

38. புறநானூறு, பா.எ – 392

39. புறநானூறு, பா.எ – 390

40. புறநானூறு, பா.எ – 231

41. புறநானூறு, பா.எ – 93

42. புறநானூறு, பா.எ – 97

43. புறநானூறு, பா.எ – 174

44. பதிற்றுப்பத்து, பா.எ –

45. அகநானூறு பா.எ – 160

46. அகநானூறு பா.எ – 303

47. பொருநாற்றுப்படை, பா.எ – .216, 217

48. பொருநாற்றுப்படை, பா.எ – 87, 88

49. ஔவை நடராசன், புலமைச்செல்வியர், ப – 428

50. அகநானூறு பா.எ – 110

51. புறநானூறு, பா.எ – 140, நற்றிணை, பா.எ – 104, புறநானூறு, பா.எ – 392, அகநானூறு பா.எ – 22, புறநானூறு, பா.எ – 392, குறுந்தொகை, பா.எ – 210, புறநானூறு, பா.எ – 367, அகநானூறு பா.எ – 163
52. புறநானூறு, பா.எ – 96, 103, 235, 390
53. அகநானூறு பா.எ – 294
54. பொருநாற்றுப்படை, பா.எ – 117
55. பொருநாற்றுப்படை, பா.எ – .105, 106
56. பொருநாற்றுப்படை, பா.எ – 105
57. புறநானூறு, பா.எ – 390, 392, குறுந்தொகை, பா.எ – 210
58. ஔவை நடராசன், புலமைச்செல்வியர், ப– 126
59. புறநானூறு, பா.எ –84
60. ஔவை நடராசன், புலமைச்செல்வியர், ப– 127
61. புறநானூறு, பா.எ –392
62. புறநானூறு, பா.எ – 392
63. அகநானூறு பா.எ – 352
64. பொருநாற்றுப்படை, பா.எ – 54– 155
65. பொருநாற்றுப்படை, பா.எ – 80–81
66. பொருநாற்றுப்படை, பா.எ – 82–83
67. நற்றிணை, பா.எ –390
68. புறநானூறு, பா.எ –383, 392
69. நற்றிணை, பா.எ –90, 70
70. புறநானூறு, பா.எ – 311
71. புறநானூறு, பா.எ – 311
72. அகநானூறு, பா.எ – 217
73. புறநானூறு, பா.எ – 390, 392
74. புறநானூறு, பா.எ –390, 392

75. பதிற்றுப்பத்து, பா.எ – 51

76. ஔவை நடராசன், புலமைச்செல்வியர் , ப –130

77. அகநானூறு பா.எ – 110

78. புறநானூறு, பா.எ – 91

79. அகநானூறு பா.எ – 32

80. அகநானூறு பா.எ – 303

81. குறுந்தொகை, பா.எ – 203

82. புறநானூறு, பா.எ –306, 210

83. அகநானூறு பா.எ – 226

84. புறநானூறு, பா.எ – 299

85. புறநானூறு, பா.எ –296

86. அகநானூறு பா.எ – 303

87. புறநானூறு, பா.எ – 180

88. குறுந்தொகை, பா.எ – 180

89. தொல்காப்பியர், தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.எ– 3

90. புறப்பொருள்வெண்பாமாலை, நூ. எ– 3

91. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப – 96

92. தொல்காப்பியர், தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.எ– 30, 17–18

93. இ. சுந்தர மூர்த்தி , இலக்கிய சுடர், ப –11

94. சுசீலா கோபால கிருட்டினன், சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள், ப –30

95. குறுந்தொகை, பா.எ – 98

96. புறநானூறு, பா.எ –280

97. அகநானூறு, பா.எ – 22, 98, நற்றிணை, பா.எ –90, 390

98. அகநானூறு, பா.எ – 352

99. பொருநாற்றுப்படை , பா.எ – 218 –221

100. பொருநாற்றுப்படை., பா.எ – 63, பதிற்றுப்பத்து, பா.எ – 57.9, பதிற்றுப்பத்து, பா.எ – 57:8, குறுந்தொகை, பா.எ –15, அகநானூறு பா.எ –354, குறுந்தொகை, பா.எ –15, பதிற்றுப்பத்து, பா.எ – 57:8 , குறுந்தொகை, பா.எ – 365, அகநானூறு பா.எ – 352, குறுந்தொகை, பா.எ – 365, அகநானூறு பா.எ – 352, பதிற்றுப்பத்து, பா.எ – 56, அகநானூறு பா.எ – 352

101. அகநானூறு பா.எ – 352

102. அகநானூறு பா.எ – 45

103. புறநானூறு, பா.எ – 93

104. புறநானூறு, பா.எ –99

105. புறநானூறு, பா.எ – 88

106. புறநானூறு, பா.எ –89

107. பதிற்றுப்பத்து, பா.எ – 51

108. நற்றிணை, பா.எ – 333

109. நற்றிணை, பா.எ – 371

110. குறுந்தொகை, பா.எ – 23

111. பதிற்றுப்பத்து, பா.எ – 51

112. நற்றிணை, பா.எ –19, 335, குறுந்தொகை, பா.எ – 275, நற்றிணை, பா.எ –187

113. புறநானூறு, பா.எ – 11

114. அகநானூறு பா.எ – 32

115. அகநானூறு பா.எ – 315

116. புறநானூறு, பா.எ – 247

117. புறநானூறு, பா.எ –100

118. குறுந்தொகை, பா.எ – 192

119. குறுந்தொகை, பா.எ – 172

120. அகநானூறு பா.எ – 352

121. பதிற்றுப்பத்து, பா.எ – (55:34)

122. குறுந்தொகை, பா.எ – 15

123. பதிற்றுப்பத்து, பா.எ – ( 53:1–2)

124. அகநானூறு பா.எ – 32

125. நற்றிணை, பா.எ –90

126. அகநானூறு பா.எ – 57,2

127. குறுந்தொகை, பா.எ – 31

128. குறுந்தொகை, பா.எ – 31

129. குறுந்தொகை, பா.எ – 31, 365

130. குறுந்தொகை, பா.எ – 31, பதிற்றுப்பத்து, பா.எ – 52:4, 14

131. பதிற்றுப்பத்து, பா.எ – 57, 10–13

132. குறுந்தொகை, பா.எ – 31

133. அகநானூறு, பா.எ – 20, 232

134. பதிற்றுப்பத்து, பா.எ – 51:22, 54:16. 57: 6. 58/1

135. பதிற்றுப்பத்து, பா.எ – 57

136. பொருநாற்றுப்படை , பா.எ – 109; 110

137. அகநானூறு பா.எ – 252

138. பொருநாற்றுப்படை, பா.எ – 25

139. பொருநாற்றுப்படை, பா.எ – 25

140. பொருநாற்றுப்படை, பா.எ – 26

141. பொருநாற்றுப்படை, பா.எ – 27

142. பொருநாற்றுப்படை, பா.எ – 28

143. பொருநாற்றுப்படை, பா.எ – 29 30

144. பொருநாற்றுப்படை, பா.எ – 31

145. பொருநாற்றுப்படை, பா.எ – 32

146. பொருநாற்றுப்படை, பா.எ – 32

# இயல் 2

# வகைப்பாடு

சங்க இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ள பொருள்கள் காதலும் போர் முதலிய புற நிகழ்ச்சிகளும் ஆகும். தொகை நூல்கள் எட்டில் ஐந்து நூல்கள் காதலைப் பற்றியனவே. இந்த ஐந்து நூல்களிலும் 1850 செய்யுட்கள் அடங்கியுள்ளன. பத்துப் பாட்டிலும் மூன்று நெடிய பாட்டுக்கள் காதல் பற்றியனவாம். போர் முதலிய புற நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட நூல்கள் பதிற்றுப் பத்து, புறநானூறு என்ற இரண்டேயாகும். இவற்றில் அடங்கிய செய்யுட்கள் ஐநூறு. பரிபாடல் என்ற நூல் தெய்வங்கள் , வையை, மதுரை இம் மூன்றையும் பற்றியதாகும். இந்நூலிலும் காதல் பற்றிய பகுதிகள் பல உள்ளன.

### 2.1 சங்கப் பாடல் வகைப்பாடு

காதலும் போரும் நமது பண்டைய தமிழ் இலக்கியங்களுக்கு மட்டும் தனித்து உரிய பொருள்கள் என்று நினைத்தல் தவறு. கிரீக், இலத்தீன் முதலிய பிற மொழிகளில் உள்ள பண்டைய செய்யுட்களும் இந்தப் பொருள்களைப் பற்றியே பெரும்பாலும் அமைந்துள்ளன. வீரமும் காதலும் தான் பண்டைக் காலத்தின் இலட்சியங்களாகும்.

காதல் செய்திகளை ‘அகம்’ என்பதும், போர் முதலிய புற நிகழ்ச்சிகளை ‘புறம்’ என்பதும் தமிழ் வழக்கு ஆகும்.

#### 2.1.1 அகப்பாடல்கள்

ஒருவனும் ஒருத்தியும் தம்முள்ளே காதல் கொண்டு மணம் புரிந்து இல்வாழ்வு நடத்துகின்ற செய்திகளைப் பலபடியாக வகுத்துக் கூறுவது ‘அகம்’ பற்றிய பிரிவாகும். இப்பகுதிக்குரிய செய்யுட்களை நாம் வாசித்தால், பண்டைய காலத்து தமிழ் மக்களது இல்வாழ்வும் உயர்ந்த நோக்கங்களும்

நன்கு புலனாகும். காதல் என்பது மிருக உணர்ச்சி அன்று; காதலுக்கு கங்கு கரை இல்லை. ஒரு நெறியில் நிற்பினும், எல்லையற்றுப் பரந்து பெருகித் தோன்றுவது. இக்கருத்து சங்கப் பாடல் ஒன்றில் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது.

**நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று ;**
**நீரினும் ஆரள வின்றே; சாரற்**
**கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே**[1]

என்பது அப்பாடலாகும்.

இவ்வகையான காதல் நிகழ்வதற்கு ஏதாவது குடும்பத் தொடர்பு அல்லது உறவு முறை இருத்தல் வேண்டும் என்ற வரையறை இல்லை.

**யாயும் ஞாயும் யார் ஆகியரோ ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே**[2]

தலைவன் ஒருவன் தன் காதலியிடம் கூறுவதாக அமையும் பாடல் இதுவாகும். ' எனது தாயும் உனது தாயும் ஒருவருக்கு ஒருவர் யாராவர் ? என் தந்தையும் உன் தந்தையும் ஒருவருக்கு ஒருவர் என்ன முறையினர் ? ஒரு முறையும் இருப்பதாகத் தெரிய வில்லையே . நானும் நீயும் எப்படி ஒருவரை ஒருவர் அறிந்தோம் ? நமது அன்புடை நெஞ்சங்கள் பயிரிடுவதற்குப் பக்குவமான செம்புலத்திற் பெய்த நீர் போல கலந்து விட்டனவே!

காதல் நிகழும் சந்தர்ப்பத்தைப் பிற்காலத்து நூல்கள் விரித்துச் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கலாம். தன்னிகரில்லாத தலைவன் ஒருவன் தனது துணைவர்கள் உடன் வர வேட்டைமேற் செல்வான் என்றும், தன்னிகரில்லாத் தலைவி ஒருத்தி தனது துணைவியர்கள் உடன் வரச் சோலையில் விளையாடுதற்குச் செல்வாள் என்றும், உடன் வந்தோர் தம்தம் தொழில்மேற் பிரிந்து செல்லத் தலைவனும் தலைவியும் தன்னந் தனியராய் ஒருவரை ஒருவர் எதிர்ப்படுவர் என்றும், அவ்வாறு கண்ட இடத்துக் காதல் நிகழும் என்றும் இந்நூல்கள் இசை நிரம்பிய சொற்களால் அலங்காரமாக விரித்துக் கூறும். இது முற்றும் நாடகக் காதலே ஆகும். இயற்கைக் காதல் தோன்றிய சூழலை ஒரு பாடல் மூலம் அறியலாம்.

சுடர்த் தொடீஇ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, ' இல்லீரே
உண்ணுநீர் வேட்டேன்! என வந்தாற்கு அன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள், என, யானும்
தன்னை அறியாது சென்றேன்: மற்றென்னை
வளை முன்கை பற்றி நலிய, தெரு மந்திட்டு
அன்னாய்! இவனொருவன் செய்தது காண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னை யான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம் பழித்து நீவ மற்றென்னைக்
கடைக் கணாற் கொல்வான் போல் நோக்கி நகைக் கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்[3]

காதலி தெருவில் விளையாடுவது, அங்கு வந்து குறும்பு செய்வது, அவன் காதலி வீட்டுக்கு வந்து உண்ணும் நீர் வேண்டுமென்று பொய் சொல்லி அவளைக் காண முயல்வது, காதலியின் அன்னை களங்கமின்றி அவளை நீர் கொடுத்து வரும்படி ஏவுவது, வந்திருப்பவன் இன்னானென்று அறியாது காதலி நீர் கொண்டு வருவது, அவன் அவளுடைய முன்கை பற்றி அழுத்துவது, எதிர்பாராத இச்செயலாலே அவள் திடீரென்று கூச்சலிடுவது, கூச்சல் கேட்டு அன்னை அலறிக் கொண்டு வருவது, நிகழ்ந்ததை மறைக்க எண்ணி அவன் நீர் விக்கினான் என்று மகள் கூறுவது, நீர் விக்காதபடி அன்னை அவன் முதுகைத் தடவிக் கொடுப்பது, தடவும் போது காதலியைக் கடைக்கண்ணால் நோக்கி இடையிடையே புன்னகை செய்து அப்புன்னகையால் அவள் உட்குறிப்பையும் உடன்பாட்டையும் தான் அறிந்ததாகப் புலப்படுத்துவது இப்பாடல் ஆகும். இம்முறையில் ஆராக் காதல் கொண்டவள் எப்பிறப்பிலும் அவனையே காதலனாக அடையவேண்டும் என்று கருதுவது மிகவும் இயல்பான ஒன்றாகும். அதனை விளக்கும் பாடல் ஒன்று குறுந்தொகையில் காணப்படுகிறது.

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீஆ கியர்எங் கணவனை**
**யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே**[4]

என்பது அப்பாடல் ஆகும்.

இருவருக்கும் மணம் நிகழ்கின்றது. இல்லறத்தில் அன்பு நிரம்பிய இன்ப உலகில் இவர்கள் வாழ்கின்றார்கள். அந்த இன்ப உலகின் அன்புக் காட்சிகளில் ஒன்று குறுந்தொகைப் பாடலாக உருப்பெற்றுள்ளது.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்**

**தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்**

**இனிதெனக் கணவன் உண்டலின்**

**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே[5]**

அகமுடையாள் ஒரு நாள் சமையல் செய்தாள், அவள் செல்வக் குடியிலே பிறந்தவள். அருமையாக, செல்லமாக வளர்ந்தவள், இதற்கு முன் வீட்டு வேலை செய்தறியாதவள். ஆதலால், தொட்ட இடமெல்லாம் இடர்ப்பாடாக இருந்தது. அதிகாலையில் எழுந்து நீராடித் தூய ஆடையுடுத்துச் சமையல் தொடங்கினாள். முற்றிய தயிரைத் தன் மெல்லிய விரலாற் பிசைந்து பக்குவப் படுத்தினாள். அதற்குள் அவளது ஆடை சிறிதே கட்டு நெகிழ்ந்தது, அவசரத்தில் அதனைக் கை கழுவாதே இறுக்க உடுத்துக் கொண்டாள், பின்பு தாளிக்கத் தொடங்கினாள், தாளித்ததில் எழும்பிய புகை அவள் கண்களிலே பட்டது. கண் கரித்தது. எனினும், பக்குவம் தவறி விடும் என்று அஞ்சிக் கண்ணைத் துடைத்துக் கொள்ளவில்லை. இங்ஙனம் பக்குவப்படுத்திய இனிய புளிப்பையுடைய குழம்பை உணவிலிட, 'என்ன ருசி! என்ன ருசி!' என்று சொல்லிக் கணவன் உண்டனன்; அதனைக் கண்டவுடன் அவள் நுண்ணிதாக மகிழ்ந்தாள்; உள்ளக் களிப்பு சிறு புன்னகையாக நடனமாடியது.

அன்பு இருக்குமிடம் எல்லாம் இன்பமே என்பது இப்பாடலால் அறிய முடியும். வருவாய் குறைந்து நிற்கும் தன் கணவனுக்காகச் செல்வக் குடியிற் பிறந்த ஒருத்தி தன் உணவையும் குறைத்துச் சிக்கனம் செய்யும் நிலை ஒரு பாடலில் பதிவு பெற்றுள்ளது.

**பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்**

**விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை யேந்தி**

**புடைப்புறத் தாற்றுப் பூந்தலைச் சிறுகோல்**

**உண்ணென் றோக்குபு பிழைப்பத் தெண்ணீர்**

முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்த ரோடி
ஏவல் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந் தனள் கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கு அறல் போலப்
பொழுது மறுத்து உண்ணும் சிறு மது கையளே[6]

'தேன் கலந்த தீம்பாலுணவை ஒரு பொற்கிண்ணத்திலேந்தி உண்ணு என்று சொல்லிச் செவிலித்தாய் வற்புறுத்தவும் உண்ணாது இல்லத்தின் முற்றத்தேயுள்ள பந்தரைச் சுற்றிச் சுற்றியோடித் தாயின் ஏவலை மறுத்துச் சிறு விளையாட்டுச் செய்த இச்சிறு பெண்ணுக்கு இந்த அறிவும், ஒழுக்கமும் எங்கிருந்து வந்தன? இவற்றை எப்பொழுது தெரிந்து கொண்டாள்? தனது கணவனது குடி வறுமையுற்றுவிட்டதென உணர்ந்ததும் உண்ண வேண்டும் நேரத்து உண்ணாது, பொழுது மறுத்து உண்டு இருக்கிறாளே!. தன் தந்தை தனது நிலையை உணர்ந்து அனுப்பிய பொருள்களை எல்லாம் சிறிதும் பொருட்படுத்த வில்லையே என்பது இதன் கருத்து.

வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்துதான் காணப்படுகின்றன. 'துன்ப முற்றவர்க்கலால் இன்பமில்லை' என்று கூட கவிஞர்கள் கூறுகின்றனர். எப்பொழுதும் இன்பக் கனவுலகத்திலே மகிழ்ந்து வாழ்தல் இயலாத ஒன்று. தன் ஆருயிர்த் துணைவியைப் பிரிந்து காதலன் செல்ல வேண்டியதாகிறது. இந்நிலையிலோ தலைவிக்குத் துன்பம் சகிக்க முடியவில்லை. அவள் வருந்துவதாக அமைந்த குறுந்தொகைப் பாடல் வருமாறு.

யாம் எம் காதலற் காணே மாயின்

செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்

கல்பொரு சிறுநுரை போல

மெல்ல மெல்ல இல்லா குதுமே[7]

'ஆற்று நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. குமிழிகளும் நுரைகளும் சுற்றி, ஓடி வட்டமிட்டு வருகின்றன. ஆற்றின் ஓரத்திலே ஒரு பாறை, இப்பாறையின் மீது ஒரு சிறு நுரை மெல்ல மெல்ல மோதுகிறது. மெல்ல மெல்ல இல்லையாய் அழிகிறது. இச்சிறு நுரையைப் போல வருத்தம் நிரம்பிய நெஞ்சோடு கூடிய நான் சிறிது சிறிதாக உயிர் தேய்ந்து அழிவு எய்துகிறேன்' என்பது பொருள். எத்தனை அழகிய உவமம். இதனைப் பாடிய புலவர்க்குக் 'கல்பொரு சிறுநுரையார்' என்றே பெயர் ஏற்பட்டுவிட்டது.

இங்ஙனமாக, இல்வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் இதைப் போன்று எத்தனையோ அழகிய சித்திரங்களைக் காணலாம். பண்டைக் காலத்துச் சமுதாய வாழ்வில் ஒரு பெரும் பகுதியான இல்வாழ்வு இன்றும் நம் உள்ளத்தை இனிவிக்கின்றது; இன்றும் நம்மால் போற்றத் தக்கதாயுள்ளது; இன்றும் நமக்கு லட்சிய வாழ்வாக விளங்குகின்றது.

மேற்கூறப்பட்ட செய்திகளில் சங்க இலக்கியப் பாடல்களின் ''அகம்' சார்ந்த பொருண்மை விளக்கப்பட்டுள்ளன. இனி, புறம் சார்ந்த பொருண்மை சுருக்கமாக விளக்கப்படுகிறது.

### 2.1.2 புறப் பாடல்கள்

சமுதாய வாழ்விலும் கல்வியிலும் கவித்துவத்திலும் சிறந்த லட்சியங்களை மேற்கொண்டு தமக்கும் தமிழ் நாட்டிற்கும் என்றும் இறவாப் பெரும்புகழ் படைத்துக் கொண்ட பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் இல்வாழ்க்கையில் இன்பந்

துய்த்தலோடு மட்டும் அமைந்துவிடவில்லை. அக்காலத்துச் சமுதாய நிலையும் அரசியல் நிலையும் அங்ஙனம் அமைந்து விடுதற்கு இடமும் கொடுக்கவில்லை. சமுதாயத்தையும் அரசியலையும் எப்பொழுதும் பாதுகாக்க வேண்டியதிருந்தது. நாட்டை எப்பொழுதும் போருக்குத் தயாராக வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. தமிழ் மக்கள் வீரத்திற் குன்றாதவர்களாக இருந்தார்கள். ஆகவே, வீர வாழ்க்கையிலும் அவர்கள் சிறந்த லட்சிய ஆண்களாக விளங்கினார்கள். பெண்டிருங்கூட இவ்வீர வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள். பெண் ஒருத்தியின் செயலைப் பின் வரும் பாடல் விளக்கும்.

**மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை**
**யானை எறிந்து களத்து ஒழிந் தனனே**
**நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்**
**பெருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே**
**இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப்**
**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே**[8]

முந்தின நாள் நிகழ்ந்த போரிலே இவளுடைய தமையன் யானையைக் கொன்று வீழ்த்தித் தானும் மடிந்தான்; நேற்றைப் போரிலே இவள் கணவன் பகைவர்களை மேல் முன்னேறி வரவிடாமல் தடுத்து ஓட்டுவித்துத் தானும் அழிந்தான். இன்றோ எனில் போர்ப்பறை கேட்டதும் தனது ஒரே மகனை இன்போடு உயிருறத் தழுவி, வேலைக் கையிற் கொடுத்து, வெண்மையான உடை உடுத்தி, குடுமிக்கு எண்ணெயிட்டு வாரி முடித்துப் போர்க்களத்துக்குச் செல்லவிடுகின்றாள். இவளன்றோ வீரத்தாய்!, இவளையொத்த வீரத்தாயன்றோ பண்டைத் தமிழகத்தின் புகழை வளர்த்தவர்கள். இவ் வீரத் தாயரிடம் பால் குடித்து வளர்ந்த

என்னும் பாடல் பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இருந்த நட்பினைக் கண்டு கண்ணகனார் என்ற புலவர் பாடியது. 'இனம் இனத்தோடு' என்ற பழமொழியின் கருத்து இச்செய்யுளோடு ஒப்பிடத்தக்கது. சான்றோர் வெவ்வேறு இடங்களில் தோன்றி வாழ்ந்த போதிலும் ஒருவரோடு ஒருவர் நெருங்கிய கேண்மை கொள்வர் என்பது செய்யுளின் கருத்து. இதற்கு ஓர் உவமை தரப்படுகிறது. பொன்னும் பவளமும் முத்தும் இரத்தினமும் ஒன்றினின்று ஒன்று வெகு தூரத்தில் தோன்றிய போதிலும், விலை மிகுந்த அணிகலன் செய்யும்போது அவை ஓரிடம் சேர்கின்றன என்பது அவ்வுவமை. இதன் ஆழமும் நயமும் அறிந்து இன்புறத் தகுவன. 'சாலார் சாலார் பாலராகுபவே' என்பது சொல்லியொழிக்க வேண்டியதனாலே, அவ்வடியை இலேசாக உச்சரித்து விட்டு விடலாம். உவமை சொல்லும் வரையும் எதுகை மோனை நயங்களால் செய்யுளின் அடிகள் சிறந்து விளங்குவதும், அது முடிந்தபின் கருத்தின் தனி ஆற்றலே துணையாக மோனை முதலிய நயமின்றியும் பேரழகுபடக் கடைசி இரண்டு அடிகள் அமைந்திருப்பதும் புலவரின் கவித்துவ சக்தியை அறிவுறுத்துகின்றன. கருத்துக்கு ஏற்ற சொற்கள், சுவைத்துத் தேர்ந்தெடுத்த சொற்கள், கட்டுரைச் சுவைபட அமைந்த சொற்செறிவு, எளிமையும் ஆற்றலும் படைத்த செய்யுள் நடை, கம்பீரமான ஓசை நயம், பொருள் செல்லும் கதியும், செய்யுளின் கதியும் ஒன்றை ஒன்றுத் தழுவி நிற்கும் அமைதி – இவை அனைத்தும் இச்செய்யுளில் விளங்குகின்றன. இவ் இயல்புகள் சங்கச் செய்யுள்களுள் பெரும்பாலனவற்றிற் காணப்படுகின்றன. இத்தகைய செய்யுட் செல்வம் நம்மவரால் என்றும் போற்றுதற்கு உரியது.

மேற்கூறப்பட்ட செய்திகள் சங்க இலக்கியப் பாகுபாடு ஆகும். அகம், புறம் என்னும் இரு பொருண்மைகளில் எல்லாப் பாடல்களும் அடங்குகின்றன. இந்தப் பாகுபாட்டிலேயே பெண் கவிஞர் பாடல்களையும் நாம் அடக்கலாம். அதனை இனி வரும் பகுதியில் காணலாம்.

## 2.2 சங்கப் பெண் புலவர் பாடல்களில் வகைப்பாடு

சங்கப் பெண் புலவர் பாடல்களையும் நாம் அகப் பாடல்கள், புறப் பாடல்கள் என்றே பிரித்துப் பார்க்க வேண்டும். எனினும், ஆசிரியர் அடிப்படையில் மூன்று பிரிவினுள் அடக்கலாம்.

அவை,

1. அகம் மட்டும் பாடியோர் பாடல்கள்
2. புறம் மட்டும் பாடியோர் பாடல்கள்
3. அகம் புறம் இரண்டும் பாடியோர் பாடல்கள்

### 2.2.1 அகம் மட்டும் பாடிய பெண் புலவர்கள்

'அகம்' என்னும் பொருண்மையை மட்டும் பாடிய புலவர்களையும் அவர்கள் பாடிய பாடல்களையும் நாம் இங்குக் காணலாம்.

அஞ்சியத்தை மகள் நாகையார்[11], அஞ்சில் அஞ்சியார்[12], ஆதி மந்தி[13], ஊண் பித்தை[14], கழார்க்கீரன் எயிற்றியார்[15], குமிழி ஞாழலார் நப்பசலையார்[16], குறமகள் குறியெயின்[17], நப்பசலையார்[18] , நன்னாகையார்[19] , நெடும் பல்லியத்தை[20], போந்தைப் பசலையார்[21] , வகு முலையாரித்தி[22] , வெண் பூதியார் [23] , வெண்மணிப் பூதி [24] , வெள்ளி வீதியார். [25]

இவர்கள் அகம் மட்டும் பாடிய புலவர்கள் ஆவர். பெண் புலவர் பாடிய அகப் பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை என்னும் மூன்று நூல்களில் மட்டுமே காணப்படுகின்றமை அறியத்தக்கது. குறுந்தொகையில் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளனர்.

### 2.2.1.1 பெண் புலவர் பாடல்களில் கூற்றுகள்

அகப்பாடல்களில் ஒரு முக்கியமான கூறாக விளங்குவது கூற்று ஆகும். ஒவ்வொரு அகப்பாடலும் 'கூற்று' ஒன்றினாலேயே அமைந்திருக்கும். சங்க இலக்கியத்தின் ஒரு சிறப்புக் கூறு என்று கூடச் சொல்லலாம். பிற்காலத்தில் கூற்று முறை மாறி துறை வாரியாகப் பாடல்களை அமைத்து கோவை நூல்களாக்கினர்.

#### 2.2.1.1.1 குறுந்தொகையில் அகம் மட்டும் பாடிய பெண் புலவர் பாடல்களில் இடம் பெற்றுள்ள கூற்றுகள்

1. தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுகளாக 18 பாடல்கள் காணப்படுகின்றன[26].

1. குறுந்தொகையில் மொத்தம் 27 பாடல்கள் பெண்கள் பாடியனவாக இனங்காணப் பட்டுள்ளன. இவற்றுள் 18 பாடல்கள் தலைவி கூற்றாகவும், கேட்போராகத் தோழியும் அமையும் விதத்தில் பாடப்பட்டுள்ளன.
2. தோழி தலைவியிடம் கூற்று நிகழ்த்துவதாக 5 பாடல்கள் காணப்படுகின்றன.[27]
3. தோழி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்று ஒரு பாடலில் மட்டும் காணப்படுகிறது.[28]
4. செவிலி கூற்றாக ஒரு பாடல் மட்டும் காணப்படுகிறது.[29]
5. தலைவன் பாங்கனிடம் கூறுவதாக ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது.[30]
6. தலைவி தலைவனிடம் கூற்று நிகழ்த்துவதாக ஒரு பாடல் உள்ளது.[31]

குறுந்தொகை 130, 169 பாடல்களுக்கு இரண்டு இரண்டு துறைகள் வகுக்கப்பட்டுள்ளன.[32] துறை மாறும்போது கூற்று நிகழ்த்துவோரும் மாறுபடுவர்.

### 2.2.1.1.2 நற்றிணையில் அகம் மட்டும் பாடிய பெண்புலவர் பாடல்களில் இடம் பெற்றுள்ள கூற்றுகள்

1. தோழி கூற்றில் ஒரு பாடலும் [33]
2. தலைவி கூற்றில் 6 ஆறு பாடல்களும் [34]
3. தலைவன் கூற்றாக ஒரு பாடலும்[35]

ஆக மொத்தம் எட்டுப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

### 2.2.1.1.3 அகநானூற்றில் அகம் மட்டும் பாடிய பெண்புலவர் பாடல்களில் இடம் பெற்றுள்ள கூற்றுகள்

1. தலைவி கூற்றாக ஆறு பாடல்களும்[36]
2. தோழி கூற்றாக மூன்று பாடல்களும்[37]

இடம்பெற்றுள்ளன. 'அகம் மட்டும்' பாடிய பெண்கள் பாடல்களில் பெண்கள் கூற்றுப் பாடல்களே அதிகமாகக் காணப்படுகின்றன. ஏனவே, பெண்கள் பெண்கள் கூற்றாலேயே தம் பாடல்களை உருவாக்கினர் அல்லது முக்கியத்துவம் அளித்தனர் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

### 2.2.1.2 பெண் புலவர் பாடல்களில் துறைகள்

துறைகள் என்பவை ஒவ்வொரு பாடலும் எந்தச் சூழ்நிலைகளில் பாடப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பனவாகும். பாடல் எழுந்த சூழல் தெரிந்தால் தான் நாம் பாடலை முழுமையாகப் புரிந்து கொள்ளமுடியும். துறைகளே ஒரு குறிப்பிட்ட சங்கப் பாடலின் கூற்று நிகழ்த்துவோரைத் தீர்மானிக்கின்றன.

### 2.2.1.2.1 குறுந்தொகைப் பெண்புலவர் பாடல்களில் இடம்பெறும் துறைகள்

1. நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.[38]
2. பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது. [39]
3. பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.[40]
4. இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. [41]
5. அவர் நின்னை வரைந்து கோடல் காரணத்தால் பிரியவும், நீ ஆற்றாய் ஆகி அலமரல் உறுவது என் ? என வினாவிய தோழிக்குத் தலைமகள், 'யான் ஆற்றியுள்ளேனாகவும் கனவு வந்து என்னை இங்ஙனம் நலிந்தது' எனக் கூறியது.[42]
6. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது.[43]
7. வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகன் கூறியது. [44]
8. பிரிவிடை வேறுபட்டவளைத் தோழி வற்புறுத்தியது.[45]
9. பிரிவிடை வற்புறுத்த வன்புறை எதிரழிந்து கிழத்தி உரைத்தது.[46]
10. பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.[47]
11. பிரிவிடை வேறுபட்ட கிழத்தி, நம்மைத் துறந்து சென்றார், வாரார் என்று கவன்றாட்குப் பருவங்காட்டித் தோழி 'வருவர்' எனச் சொல்லியது.[48]
12. பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி மெலிந்து உரைத்தது. [49]
13. கடிநகர் புக்க தோழி தலைமகன் புணர்ச்சி விதும்பல் கண்டு முன்னர் களவுக் காலத்து ஒழுகலாற்றை நினைத்து அழிந்து கூறியது.[50]
14. வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.[51]
15. தோழி கிழத்தியைக் குறை நயப்பக் கூறியது. [52]
16. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.[53]
17. பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. [54]

18. தலைவன் சிறைப்புறமாகத், தலைவி தோழிக்குச் சொல்லியது.[55]

19. தலைவன் சிறைப்புறமாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது. [56]

20. பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.[57]

21. இடைச் சுரத்துச் செவிலி கையற்றுச் சொல்லியது. [58]

22. தலைவன் பாங்கற்கு கழற்றெதிர்மறை. [59]

23. 1. பிரிவிடை அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது

 2.தோழி தூது விடுவாளாகத் தலைமகள் தனது ஆற்றாமையால் கூறியதுஉம் ஆம். [60]

24. தலைமகன் தமர்வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி 'வரைவு மறுப்பவோ' என்று கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது.[61]

25. உடன் போக்கு உணர்த்திய தோழிக்குத் தலைவி சொன்னது[62]

26. 1.தலைவன் தன்பால் பரத்தமை இல்லை என்று தலைவியிடம் கூறித் தெளிவிக்கும் காலம்.

 2. 'நீ இன்னும் வரைந்து கொள்ளாமல் இருக்கின்றாய். தலைவி நின்னால் நலன் உண்ணப் பட்டாள். நின்னையும் பெறாள் போலும் இனி உயிர்தரியாள் என்று தோழி கூறியது. [63]

27. பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்து கூறியது.[64]

**2.2.1.2.2 நற்றிணைப் பெண்புலவர் பாடல்களில் இடம் பெறும் துறைகள்**

1. தோழி தலைவிக்கு உரைப்பவள் போல வாயில் வேண்டி வந்த பாணன் கேட்பச் சொல்லி வாயில் மறுத்தது. [65]

2. தோழி பொறுத்திருக்குமாறு கூறினாள்– எதிரழிந்த தலைவி சொல்லியது.[66]

3. பொருள்வயின் பிரியும் தலைவன் நெஞ்சிற்குச் சொல்லியது.[67]

4. வரைவு நீடியது ' ஆற்றுவல்' என்பது படத் தலைவி சொல்லியது. [68]

5. பிரிவிடை மெலிந்த தலைவி சொல்லியது. [69]

6. காமம் மிக்க கழிபடர் கிளவி மீதூர்ந்து தலைவி சொல்லியது.[70]

7. காமமிக்க கழிபடர் கிளவி மீதூர்ந்து தலைவி சொல்லியது. [71]

8. வேட்கை பெருகத் தாங்காது ஆற்றாத தலைவி சொல்லியது. [72]

### 2.2.1.2.3 அகநானூற்றுப் பெண்புலவர் பாடல்களில் துறைகள்

1. வரைந்து எய்திய பின்றை மணமனைக்கட் சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. வரைவு மலிந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியதுமாம். [73]
2. பிரிவின்கண் வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை மீதூரச் சொல்லியது.[74]
3. பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை மீதூரச் சொல்லியது. [75]
4. தலைமகன் பிரிவின்கண் வேறுபட்டத் தலைமகள் ஆற்றாமை மீதூர தோழிக்குச் சொல்லியது. [76]
5. பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. [77]
6. தோழி வரைவு மலிந்து சொல்லியது. [78]
7. தோழி செவிலித் தாய்க்கு அறத்தொடு நின்றது. [79]
8. வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.[80]
9. இரவுக் குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. [81]

### 2.2.2 புறம் மட்டும் பாடிய பெண்புலவர்கள்

புறம் மட்டும் பாடிய புலவர்களாக எண்மர் உள்ளனர். அவர்கள் (1) காவற் பெண்டு[82], (2) குறமகள் இளவெயினி[83], (3) தாயங் கண்ணியார்[84], (4) பாரிமகளிர்[85] , (5) . பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு[86] , (6) பேய்மகள் இளவெயினி[87],(7) மாற்பித்தியார் [88] , (8) வெண்ணிக் குயத்தியார்[89] என்பவராவர். இவர்கள் புறத்தில் மட்டுமே பாடிய சிறப்புடையவர்கள். மாற்பித்தியார் தவிர (2) பிற அனைவரும் ஒரு பாடல் மட்டுமே பாடியுள்ளனர். புறம் பாடினாலும் பெண்ணின் மென்மை அப்பாடல்களிலும் காணப்படும் என்னும் கருதுகோளில் இப்பகுதி ஆராயப்படுகிறது.

### 2.2.2.1 புறப்பாடல் மட்டும் பாடிய பெண் புலவர் பாடல்களின் திணைகள்

1. புறநானூறு 86 ஆம் பாடலைக் காவற்பெண்டு எனும் பெண் புலவர் பாடியுள்ளார். இப்பாடல் 'வாகை' திணையைச் சேர்ந்தது ஆகும்.
   'வாகை தானே பாலையது புறனே' என்பார் தொல்காப்பியர் (தொல்.பொருள்.109)

2. வாகை என்பது அரசன் புகழைச் சொல்வதாயினும் வீரன் ஒருவனின் வெற்றிச் சிறப்பை அவனது தாயே கூறுவதாக , பெருமிதச் சுவைபட பாடல் அமைந்துள்ளது. தாயின் பெருமிதம் நம் கண் முன் விரிகிறது.

3. குறமகள் இளவெயினி என்னும் பெண் புலவர் புறநானூறு 157 ஆம் பாடலைப் பாடியுள்ளார். இப்பாடல் பாடாண் திணையைச் சேர்ந்தது ஆகும். புகழை விரும்புகின்ற தலைவன் ஒருவனை ஏதாவது ஒரு பயன் கருதிப் புலவர் ஒருவர் புகழ்ந்து பாடும் திணை பாடாண் திணை எனப்படும். 'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே'[90] இப்பாடல் அறிவுரை கூறும் ஒரு தாய்மை உள்ளத்தோடு. தன் அரசனைப் புகழ்ந்து பாடுவதாக அமைகிறது.

4. தாயங்கண்ணியார் எனும் புலவர் புறநானூறு 250 ஆம் பாடலைப் பாடியுள்ளார். இப்பாடல் பொதுவியல் எனும் திணையில் அமைந்ததாகும். கணவனை இழந்த மனைவி ஒருத்தியின் தாபத நிலையை விளக்குவதாக அமையும். இப்பாடல் ஒரு விதவைப் பெண்ணின் நிலையை அனுதாபத்தோடு விளக்குகிறது.

5. பாரி மகளிர் பாடியதாகப் புறநானூறு 112ஆம் பாடல் அமைகிறது. போரில் தந்தையை இழந்துவிட்ட மகளிர் இருவரின் துன்ப நிலையை விளக்குவதாக இப்பாடல் உள்ளது. பொதுவியல் திணையைச் சேர்ந்த பாடலாகும் இது.

6. பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு என்னும் பெண் புலவர் பாடியதாக ஒரு பாடல் ஒன்று[91] காணப்படுகிறது. இதுவும் 'பொதுவியல்' என்னும் துறை சார்ந்த பாடல் ஆகும். கணவன் இறந்ததும் உடன்கட்டை ஏறத் துடிக்கும் பெண்ணொருத்தியை அவ் ஊர்ச் சான்றோர் தடுத்தபோது அவள் கூறிய மறுமொழிகள் இவை. கணவன் மீது அளவில்லா அன்பு உடைய ஒரு பெண்ணின் மன நிலையை வெளிக்காட்டும் பாடலாக இது விளங்குகிறது.

7. பேய்மகள் இளவெயினி பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் காணப்படுகிறது.[92] இது பாடாண் திணையைச் சேர்ந்த பாடலாகும். இவர் ஒரு பாடினியாக இருக்க வேண்டும். பிறர் பரிசு பெற்றனர் தான் அதனைப் பெற வில்லை எனப் பாடுவதாக அமைகிறது.

8. மாற்பித்தியார் இரண்டு பாடல்களைப் புறநானூற்றில் பாடியுள்ளார்[93]. இரு பாடல்களும் வாகைத்திணையைச் சேர்ந்தவை ஆகும்.

9. வெண்ணிக் குயத்தியார் என்னும் புலவர் பாடியதாக ஒரு பாடல் புறநானூற்றில்[94] காணப்படுகிறது. சோழன் கரிகால் பெருவளத்தானை வாகைத்திணையில் பாடுவதாக அப்பாடல் அமைகிறது.

இவையே, புறம் மட்டும் பாடிய புலவர்களின் பாடல்களில் அமைந்த திணைகள் ஆகும். வாகைத்திணையில் நான்கு பாடல்களும் பாடாண் திணையில் இரண்டு பாடல்களும் பொதுவியல் திணையில் மூன்று பாடல்களும் அமைந்துள்ளன. பொதுவியல் திணையானது பெண்களின் மென்மையான உணர்ச்சிகளை வெளியிட இடந்தருகின்றமையை அறியமுடிகிறது. வாகைத் திணையில் அமையும் காவற்பெண்டுவின் பாடல், மகளிர் வெற்றிச் சிறப்பைப் பெருமிதச் சுவையோடு வெளிப்படுத்துகிறது. பாடாண் திணை, பாடுதலையே

தொழிலாகக் கொண்டோரின் பாடுபொருள் களமாகும். அதிலும் பெண்கள் பாடியுள்ளமை பெண்களுக்குச் சிறப்புத் தருவது ஆகும்.

### 2.2.2.2. புறப்பாடல் மட்டும் பாடிய பெண் புலவர் பாடல்களில் இடம்பெறும் துறைகள்

**1. ஏறாண் முல்லை**

காவற்பெண்டினால்[95] பாடப்பட்ட பாடல் இத்துறையில் அமைந்துள்ளது. எதிர் இல்லாதபடி ஆண்மைத் தன்மை மேன்மேல் மிகும் குடியின் ஒழுக்கத்தை உயர்த்திச் சொல்லுதல் ஏறாண் முல்லை ஆகும்.

**2. இயன்மொழி**

குறமகள் இளவெயினி[96] பாடிய பாடல் இத்துறையினுட்படும். அறிவுரை கூறலாக இத்துறை அமைகிறது.

**3. தாபத நிலை**

கணவனை இழந்த நிலையைப் பொருண்மையாக உடைய பாடல் ஒன்றும்[97] மாற்பித்தியாரால் இல்வாழ்வு நீங்கிக் காட்டில் தவம் இருக்கும் பொருண்மையைப் பாடும் பாடல் இரண்டும்[98] என மூன்று பாடல்கள் இத்துறையில் காணப்படுகின்றன.

**4. கையறு நிலை**

உதவியற்றுத் துன்பத்தில் வாழும் நிலை கையறு நிலை ஆகும். பாரி மன்னன் போரில் இறந்தபோது பாரி மகளிர் கையற்றுப் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில்[99]காணப்படுகின்றது.

**5. ஆனந்த பையுள்**

இறப்பினால் வரும் துன்பம் இத்துறை ஆகும். தன் கணவன் போரில் இறந்தபோது உடன் கட்டையேறத் துடிக்கும் ஓர் அரச மகளிர் பாடிய பாடல் இதுவாகும்[100]

**6. பரிசில் கடாநிலை**

அரசன் ஒருவனை வாழ்த்திப் பாடிப் பரிசில் வேண்டி நிற்கும் துறையாகும்.[101]

**7. அரச வாகை**

வெண்ணிக் குயத்தியார் பாடிய இப்பாடலில்[102] அரசனின் வெற்றிச் சிறப்பு 'அரச வாகை' எனும் துறை மூலம் வெளிப்படுகிறது.

மகன் பெருமை பேசும் தாய், கணவனை இழந்ததால் உடன் கட்டை யேறும் மனைவி, தந்தையை இழந்து கையற்று வாடும் மகளிர், பரிசிலுக்காக அரசன் புகழ் பாடும் பெண் என இவையே பெண்களின் பாடு பொருள்களாக உள்ளன. பாரி மகளிரும் பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டும் அரச மகளிராவர். இவர்கள் பாடல்களில் மென்மையான சோகமோ, மகன் பெருமை பேசும் பெருமிதமோ, பரிசில் வேண்டி நிற்கும் நிலையோதான் காணப்படுகின்றன. பெண்களின் வீரம், கொடை, வெற்றி எதுவும் பாடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**2.2.3 அகம் புறம் இரண்டும் பாடிய பெண்புலவர் பாடல்கள்**

அகம் புறம் எனும் இரண்டிலும் ஏழு புலவர்கள் பாடியுள்ளதாகக் குறிப்புக் கிடைக்கின்றது. இவ் எழுவர் பாடியனவாக 101 பாடல்கள் உள்ளன. இவருள் ஔவையார் பாடியன 59 பாடல்கள் ஆகும். புறநானூற்றிலும் குறுந்தொகையிலும் இவரது பாடல்கள் மிகுதியாக உள்ளன. இவரை அடுத்து காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் (12), ஒக்கூர் மாசாத்தியார் (8), மாறோக்கத்து நப்பசலையார்(8) நக்கண்ணையார் (6), வெறிபாடிய காமக்கண்ணியார் (5), பூங்கணுத்திரையார் (3) மிகக் ஆகியோர் குறைந்த எண்ணிக்கையிலேயே பாடல்கள் பாடியுள்ளனர்.

### 2.2.3.1 அகம் புறம் இரண்டும் பாடிய பெண்புலவர் பாடல்களில் திணைகள்

அக நூல்களான குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு எனும் மூன்று நூல்களில் மட்டுமே பெண் புலவர்கள் பாடியுள்ளனர். புற நூலான புறநானூற்றிலும் பதிற்றுப் பத்திலும் பாடல்கள் கிடைத்துள்ளன. அகம் புறம் இரண்டும் பாடிய பெண் புலவர் பாடல்களில் காணப்படும் திணைகளை அகத்திணைகள், புறத்திணைகள் என இரண்டாகப் பகுத்துக் காணலாம்.

#### 2.2.3.1.1. அகத்திணைகள்

##### 2.2.3.1.1.1 குறுந்தொகை

ஒக்கூர் மாசாத்தியார் எனும் பெண் புலவர் குறுந்தொகையில் முல்லைத் திணையில் தலைவி கூற்றாக மூன்று பாடல்களும்[103], தோழி கூற்றாக ஒரு பாடலும்[104], மருதத்திணையில் தோழி கூற்றாக ஒரு பாடலும்[105] பாடி உள்ளார்.

ஔவையார் 15 பாடல்களைப் பாடியுள்ளார். குறிஞ்சித் திணையில் மூன்று பாடல்களும்[106] , முல்லைத் திணையில் மூன்று பாடல்களும்[107] மருதத்திணையில் மூன்று பாடல்களும்[108], பாலைத்திணையில் ஐந்து பாடல்களும்[109], நெய்தல் திணையில் ஒரு பாடலும்[110] ஔவையார் பாடியுள்ளார்.

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ஒரு பாடல் மட்டும்[111] பாடி உள்ளதாகத் தெரிகிறது.

பூங்கணுத்திரையார் பாலைத் திணையில் ஒரு பாடலும்[112], மருதத் திணையில் ஒரு பாடலும்[113] ஆக இரண்டு பாடல்கள் பாடியுள்ளனர்.

ஔவையார் மட்டுமே அகத்திணைகள் ஐந்திலும் பாடியுள்ளார்.

### 2.2.2.1.1.2 நற்றிணை

ஔவையார் நற்றிணையிலும் ஏழு பாடல்களைப் பாடி முன்னிலை பெறுகிறார். குறிஞ்சியில் ஒரு பாடலும்[114], முல்லையில் மூன்று பாடல்களும்[115], மருதத்தில் ஒரு பாடலும்[116], நெய்தலில் இரண்டு பாடல்களும்[117] என ஏழு பாடல்கள் அவர் பெயரால் காணப்படுகின்றன.

நக்கண்ணையார் நற்றிணையில் நெய்தல் திணையில் மட்டும் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்[118]

மாறோக்கத்து நப்பசலையார் குறிஞ்சித் திணையில் மட்டும் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.[119]

வெறிபாடிய காமக்கண்ணியாரும் குறிஞ்சித் திணையில் மட்டும் ஒரு பாடல் பாடியுள்ளார்[120].

### 2.2.3.1.1.2 அகநானூறு

அகமும் புறமும் பாடிய புலவர்களில் ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார் நக்கண்ணையார், வெறி பாடிய காமக்கண்ணியார் என்னும் நான்கு பெண் புலவர்கள் அக நானூற்றில் உள்ளனர்.

ஒக்கூர் மாசாத்தியார் முல்லைத்திணையில் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.[121]

ஔவையார் பாலைத் திணையில் நான்கு பாடல்களைப் பாடியுள்ளார்.[122]

நக்கண்ணையார் குறிஞ்சியில் ஒரு பாடலை மட்டும் பாடியுள்ளார். [123]

வெறிபாடிய காமக்கண்ணியார் குறிஞ்சித் திணையில் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். [124]

### 2.2.3.2 அகப் பாடல்களில் இடம்பெறும் துறைகள்

அகம் புறம் இரண்டிலும் பாடிய பெண் புலவர்களின் அகப் பாடல்களில் இடம் பெறும் துறைகளைக் காணலாம். இவற்றைக் காண்பதன் மூலம் அவர்கள் அதிகமாகப் பயன்படுத்தும் துறைகளை இனங்காண முடியும். அதன் மூலம் அவர்களின் பாடல் பொருண்மைகளையும், அவர்களின் தனித்தன்மைகளையும் அறிய முடியும்.

**ஒக்கூர் மாசாத்தியார்**

1. பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.[125]
2. வாயில் வேண்டிப் புக்க தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.[126]
3. பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.[127]
4. பருவ வரவின்கண் கிழத்தி தோழிக்கு உரைத்தது.[128]
5. பருவ வரவின்கண் வரவு நிமித்தம் தோன்றத் தலைமகட்கு உரைத்தது.[129]

என்னும் ஐந்து துறைகள் குறுந்தொகையிலும்,

1. வினை முற்றிய தலைமகன் கருத்து உணர்ந்து உழையர் சொல்லியது[130]
2. வினை முற்றிய தலைமகன் வரவு கண்டு உழையர் சொல்லியது[131]

என்னும் இரண்டு துறைகள் அகநானூற்றிலும் பாடியுள்ளார்.

குறுந்தொகையில் தலைவியும் தோழியும் பேசும் இடங்கள் மட்டுமே துறைகளாக வந்துள்ளன. அதிலும் பொருள்வயிற் பிரிந்தோ, போர்வயிற் பிரிந்தோ சென்ற தலை மகனை, பருவம் வந்தும் வராத அவனை நினைத்து வருந்தும் பெண்ணின் மென்மைகள் இங்கு பாடுபொருளாகி உள்ளமையை அறியமுடிகிறது.

ஔவையார் பாடல்களில்,

1. செவிலி அறத்தொடு நிற்றல் [132]
2. கட்டுக் காணிய நின்ற இடத்துத் தோழி அறத்தொடு நிற்றல் [133]
3. வரைவிடை ஆற்றானாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது [134]
4. இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைவன் 'இவர் எம்மை மறுத்தார்' என்று வரைந்து கொள்ள நினையாது பின்னும் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் (தலைவன்) கூறியது.[135]
5. 'பிரிவிடை ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்கு 'யாங்ஙனம் ஆற்றுவேன்' எனத் தனது ஆற்றாமை மிகுதி தோன்றத் தலைமகள் கூறியது [136]
6. பிரிவிடை மெலிந்த கிழத்தி கூறியது (குறுந். 43)
7. தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது [137]
8. பரத்தையர் மாட்டுப் பிரிந்த தலைவன் வாயில் வேண்டிப் புக்க வழித் தன் வரைத்தன்றி 'அவன் வரைத்தாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழித் தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது.[138]
8. பரத்தையர்பிரிந்து வந்த வழி வேறுபட்ட கிழத்தியிடம் தோழி கூறியதூஉம் ஆம் [139]
9. பொருள் முற்றிப் புகுந்த தலைமகன் 'எம்மை நினைத்தும் அறிதிரோ ? ' என்ற தோழிக்குச் சொல்லியது.[140]
10. 'ஆற்றாள்' என வேண்டிய தோழிக்குக் கிழத்தி 'யான் யாங்ஙனம் ஆற்றுவேன்' என்றது.
11. தலைமகன் இரவுக்குறி வந்துழி, அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் (தலைவி) சொல்லியது [141]
12. பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.[142]
13. பருவ வரவின்கண் ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி 'பருவம்' அன்று; வம்பு' என்ற வழித் தலைமகள் சொல்லியது.[143]

14. வேறு ஒரு பரத்தை தன்னைப் புறங்கூறினாள் எனக் கேட்ட இற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பக் கூறியது[144]

15. தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை உணர்ந்து தலைமகன், சுரத்து வெம்மையும் தலைமகள் மென்மையும் குறித்துச் செலவு அழுங்கலுறுவானைத் தோழி அழுங்காமற் கூறியது.

இவை 152இம் ஔவையார் குறுந்தொகையில் பாடிய துறைகள் ஆகும். அவரே அகநானூற்றிலும் நான்கு துறைகளில் பாடியுள்ளார். அவை

1. தலைமகன் பொருள்வயிற் பிரிந்த இடத்து ஆற்றாளாய தலைமகள் வேறுபாடு கண்டு ஆற்றாளாய தோழிக்குத் தலைமகன் 'ஆற்றுவல்' என்பது படச் சொல்லியது[145]
2. செலவு உணர்த்திய தோழிக்குத் தலைமகன் செல்லியது[146]
3. பிரிவின் கண் தலைமகன் அறிவு மயங்கிச் சொல்லியது[147]
4. தலைமகன் பிரிவின்கண் வேட்கை மீதூர்ந்த தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது[148]

இவை போக ஔவையார் நற்றிணையில் ஏழு துறைகளில் பாடியுள்ளார். அவை,

1. பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைவியை முகம் புக்கது[149]
2. தலைவன் பகற்குறி வந்து மீளும் செலவு நோக்கித் தலைவி தன்னுள்ளே சொல்லியது[150]
3. தோழி இற்செறிப்பை அறிவுறுத்தி வரைவு கடாயது[151]
4. வினைமுற்றித் திரும்பும் தலைவன் பாகனுக்குச் சொல்லியது[152]
5. வினைவயின் பிரிந்த போது ஆற்றாத தலைவி பருவ வரவின் கண் சொல்லியது[153]

6. பாங்காயின வாயில் கேட்பத் தலைவனைப் பிரிந்த பரத்தை நெருங்கிச் சொல்லியது[154]

7. வினை முற்றித் திரும்பிய தலைவனை இடைச்சுரத்துக் கண்ட ஒருவர் சொல்லியது[155]

ஔவையார் பாடிய துறைப் பொருண்மைகளை நோக்கும் போதும் பிரிவு என்னும் சூழலில் தலைவியும் தோழியும் பேசிக் கொள்ளும் இடங்களே மிகுதி. கூற்றுகள் மிகுதியும் பெண்கள் கூற்றுகளாக அமைவது காணத்தக்கது. தலைவன் கூற்று நிகழ்த்துமிடம் கூடப் பிரிவு பொருண்மையில் தலைவியின் – பெண்ணின் மென்மையை உணர்த்துவதாக உள்ளது.[156]

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடிய அகப்பாடல் ஒன்று மட்டுமே கிடைத்துள்ளது. அது 'பிரிந்து வந்த தலைமகன் நன்கு ஆற்றுவித்தாய்' என்றாற்குத் தோழி உரைத்தது[157] எனும் துறையில் அமைகிறது.

பூங்கணுத்திரையார் எனும் புலவர் பாடிய அகப்பாடல்கள் குறுந்தொகையில் மட்டும் இரண்டு கிடைத்துள்ளன. அவை,

1. பகற் குறிக்கண், காணும் பொழுதினும் காணாப் பொழுது பெரிதாகலின் வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது.[158]

2. வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது [159] என்பனவாகும்.

நக்கண்ணையார் எனும் புலவர் பாடிய அகப்பாடல்கள் நற்றிணையில் இரண்டும், அக நானூற்றில் ஒன்றும் கிடைத்துள்ளன. அவற்றின் துறைகள் பின்வருமாறு.

1. தலைவனைப் பார்த்துத் தோழி வரைவு கடாயது [160]

2. வரைவு இடையே வைத்துத் தலைவன் பிரிந்தான் ஆற்றாத தலைவி கனாக்கண்டு தோழிக்கு உரைத்தது[161]

3. தலைமகன் சிறைப்புறத்தானாக தோழிக்குச் சொல்லுவாளாய் தலைமகன் சொல்லியது[162]

என்பன நக்கண்ணையார் பாடிய பாடல்களாகும்.

மாறோக்கத்து நப்பசலையார் பாடிய அகப்பாடல் ஒன்று நற்றிணையில் காணப்படுகிறது. அது 'வரையாது நெடுங்காலம் வந்தொழுகினான் தலைவன் ஆற்றாதவளானாள் தலைவி என்றாள் தோழி. அதற்கு எதிர் மொழிந்தது' என்னும் முறையில் அப்பாடல் அமைந்துள்ளது[163]

வெறிபாடிய காமக்கண்ணியார் பாடிய அகப்பாடல்களாக நற்றிணையில் ஒன்றும், அகநானூற்றில் இரண்டும் காணப்படுகின்றன. அவற்றின் துறைகள் வருமாறு,

1. தோழி தலைவிக்குச் சொல்லியது[164]

2. 1. வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிந்த காலத்துத் தலைமகள் ஆற்றாளாக தோழி தலை மகளை இயற்பழிப்ப, தலைமகன் இயற்பட மொழிந்தது

   2. தலைமகன் இரவுக் குறி வந்து சிறைத் புறத்தானாக தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகன் சொல்லியதூஉம் ஆம் [165]

2. தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉம் ஆம்[166]

**2.2.3.1.2 அகம் புறம் இரண்டிலும் பாடிய பெண் புலவர்கள் பாடிய புறப்பாடல்களின் திணைகளும் துறைகளும்**

ஒக்கூர் மாசாத்தியார் பாடியதாகப் புறநானூற்றில் ஒரு பாடல் காணப்படுகிறது. பெண்டிற்கும் வீரமுண்டு என்பதை விளக்கும், மூதின் முல்லைத் துறையில் அமைந்த இப்பாடல் இடம் பெற்றுள்ள திணை வாகை ஆகும்[167].

ஔவையார் புறநானூற்றில் 33 பாடல்கள் பாடியுள்ளார். தும்பைத் திணையில் ஆறு பாடல்கள் உள்ளன. 'தானை மறம்' எனும் துறையில் நான்கும்,[168] பாண்பாட்டு எனும் துறையில் ஒன்றும்[169] உவகைக் கலுழ்ச்சி எனும் துறையில் ஒன்றும்[170] காணப்படுகின்றன. பாடாண் திணையில் 13 பாடல்கள் பாடியுள்ளார். வாழ்த்தியல் [171] வாள் மங்கலம்.[172] இயன்மொழி[173] , பரிசில் கடாநிலை[174] , பரிசில் துறை [175] , பரிசில் விடை[176] கடை நிலை[177] , விறலியாற்றுப்படை[178] எனும் துறைகளில் பாடாண் திணைப் பாடல்கள் அமைந்துள்ளன. வாகை என்னும் திணையில் ஏழு பாடல்கள் ஔவையார் பாடியுள்ளார். அரச வாகை[179] வல்லாண் முல்லை[180] எனும் இரண்டு துறைகளில் வாகைத் திணைப் பாடல்கள் உள்ளன.

பொதுவியல் என்னும் திணையில் நான்கு பாடல்கள் உள்ளன. அவை பொருண் மொழிக்காஞ்சி[181] கையறு நிலை [182] எனும் துறைகளில் அமைந்துள்ளன.

கரந்தை எனும் திணையில் ஔவையார் மூன்று பாடல்கள் இயற்றியுள்ளார். அவை கையறுநிலை[183] வேத்தியல் [184] குடிநிலை யுரைத்தல்[185] எனும் புறத் துறைகளில் அமைந்துள்ளன.

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் தும்பைத் திணையில் உவகைக் கலுழ்ச்சி எனும் துறையிலமைந்த பாடல் ஒன்றை எழுதியுள்ளார்.[186]

நக்கண்ணையார் எனும் புலவர் கைக்கிளை எனும் திணையில் 'பழிச்சுதல்' எனும் துறையில் மூன்று பாடல்களை எழுதியுள்ளார்[187]

பூங்கணுத்திரையார் தும்பைத் திணையில் உவகைக் கலுழ்ச்சி எனும் துறையில் ஒரு பாடல் பாடியுள்ளார்.[188]

மாறோக்கத்து நப்பசலையார் என்பவர் ஆறு பாடல்கள் பாடியுள்ளார். அரச வாகை எனும் துறையிலமைந்த வாகைத் திணைப் பாடல் இரண்டும்[189], இயன்மொழி[190], பரிசில் துறை[191], கடைநிலை[192] எனும் துறைகளில் அமைந்த பாடாண் திணைப் பாடல்களும், ஆனந்த பையுள்[193] எனும் துறையிலமைந்த பொதுவியல் திணைப் பாடல் ஒன்றும் அவரால் பாடப்பட்டவை ஆகும்.

வெறிபாடிய காமக்கண்ணியார் எனும் புலவர் செருவிடை வீழ்தல்[194] மறம்[195] என்னும் துறைகளில் முறையே நொச்சி, தும்பைத் திணைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

பதிற்றுப்பத்தில் 51– 60 பாடல்களைக் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் எனும் பெண்பாற் புலவர் பாடியுள்ளார். பதிற்றுப்பத்தில் இவர் மட்டுமே பெண்பாற் புலவராவார். இப்பத்துப் பாடல்களில் அமைந்துள்ள துறைகள் வருமாறு,

**வஞ்சித் துறை பாடாண் பாட்டு**[196]
**குரவை நிலை**[197]
**செந்துறைப் பாடாண் பாட்டு**[198]
**காட்சி வாழ்த்து**[199]
**ஒள்வாள் அமலை**[200]
**விறலியாற்றுப்படை**[201]

இவையே பதிற்றுப் பத்தில் அமைந்துள்ள துறைகள் ஆகும்.

## தொகுப்புரை

- சங்கப் பெண் புலவர் பாடல் 'வகைப்பாடு' என்னும் இவ்வியலில் பெண் புலவர் பாடிய சங்கப் பாடல்கள் மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆராயப்பட்டுள்ளது. ஆவை 1. அகம் மட்டும் பாடியோர் பாடல்கள், 2. புறம் மட்டும் பாடியோர் பாடல்கள், 3. அகம் புறம் இரண்டும் பாடியோர் பாடல்கள் என்பன ஆகும். பெண் புலவர்களை அவர் தம்முள் பிரித்து வேறுபாடு அறிய இவ்வகைப்பாடு உதவும்.

- பெண் புலவர் பாடிய திணைகள் கூற்றுகள் துறைகள் வாரியாக ஆராயப்பட்டுள்ளது. திணைப் பயன்பாட்டிலும், கூற்றுப் பயன்பாட்டிலும் துறைகள் பயன்பாட்டிலும் பெண்களின் தனித்தன்மைகளை இனங்காண இம்முறை உதவும்.

- அகப்பாடல்களில் பெரும்பாலும் பெண்கள் கூற்றுப் பாடல்களே மிகுதி. தலைவன் கூற்றாக ஓரிரண்டு பாடல்களே வருகின்றன. அவையும் தலைவனின் வன்மையைக் குறிப்பிடாமல் தலைவி, அவன் மேல்கொண்ட காதலின் மென்மையை உணர்த்துவனவாகவே உள்ளன.

- பெண்கள் பாடல்களாகக் கிடைப்பவை குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை என்னும் தொகுப்புகளில் மட்டுமே காணப்படுகின்றன.

- பிரிவு என்னும் உரிப்பொருளுடன் தொடர்புடைய பாடல்களே, பெண்கள் பாடல்களில் மிகுதியாக உள்ளன. அவை பெண்மையின் மென்மையையும் தலைவன் மேல் கொண்ட ஆழ்ந்த காதலுணர்ச்சியையும் வெளியிடுவனவாக உள்ளன.

❖ புறப் பாடல்களில் பாடாண், பொதுவியல் என்னும் திணைகளில் அதிகமான பாடல்கள் உள்ளன. இவை பொதுவில் பெண்மையின் மென்மைகளை உணர்த்தும் பாடல்களாகும். புறத்துறைகளில் வாழ்த்தியல், இயன்மொழி, உவகைக் கலுழ்ச்சி, பழிச்சுதல் , ஆனந்த பையுள் என்னும் துறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவையும் பெண்களுக்கான தனித்தன்மைகளை உள்ளடக்கியவை ஆகும்.

# மேற்கோள்கள்

1. குறுந்தொகை, பா. எ– 3
2. குறுந்தொகை, பா. எ– 40
3. கலித்தொகை, பா.எ – 51
4. குறுந்தொகை, பா. எ– 49
5. குறுந்தொகை, பா. எ– 167
6. நற்றிணை, பா.எ– 110
7. குறுந்தொகை, பா. எ– 290
8. புறநானூறு, பா.எ– 279
9. புறநானூறு, பா.எ– 330
10. புறநானூறு, பா.எ– 218
11. அகநானூறு, பா.எ– 352
12. நற்றிணை, பா.எ– 90
13. குறுந்தொகை, பா. எ– 21
14. குறுந்தொகை, பா. எ– 232
15. அகநானூறு, பா.எ– 162, 217, 235, 294, குறுந்தொகை, பா. எ– 35, 261, 330, நற்றிணை, பா.எ– 281, 312
16. அகநானூறு, பா.எ– 160
17. நற்றிணை, பா.எ– 357
18. நற்றிணை, பா.எ– 242
19. குறுந்தொகை, பா. எ– 30, 118, 172, 180, 192, 197, 237, 325
20. குறுந்தொகை, பா. எ– 178, 208
21. அகநானூறு, பா.எ– 110
22. குறுந்தொகை, பா. எ– 176
23. குறுந்தொகை, பா. எ– 97, 174, 219

24. குறுந்தொகை, பா. எ– 299

25. அகநானூறு, பா.எ– 45 , 362

26. குறுந்தொகை, பா. எ– 31, 35, 261, 30, 118, 172, 192, 325, 203

27. குறுந்தொகை, பா. எ– 232, 180, 287, 176, 146

28. குறுந்தொகை, பா. எ– 178

29. குறுந்தொகை, பா. எ– 58

30. குறுந்தொகை, பா. எ– 58

31. குறுந்தொகை, பா. எ– 169

32. குறுந்தொகை, பா. எ– 130, 169

33. நற்றிணை, பா.எ– 90

34. நற்றிணை, பா.எ– 281, 357, 243, 70, 335, 348

35. நற்றிணை, பா.எ– 312

36. அகநானூறு, பா.எ– 160, 110, 362

37. அகநானூறு, பா.எ– 160, 110, 362

38. குறுந்தொகை, பா. எ– 31

39. குறுந்தொகை, பா. எ– 232

40. குறுந்தொகை, பா. எ– 35

41. குறுந்தொகை, பா. எ– 30

42. குறுந்தொகை, பா. எ– 20

43. குறுந்தொகை, பா. எ– 118

44. குறுந்தொகை, பா. எ– 172

45. குறுந்தொகை, பா. எ– 180

46. குறுந்தொகை, பா. எ– 192

47. குறுந்தொகை, பா. எ– 197

48. குறுந்தொகை, பா. எ– 287

49. குறுந்தொகை, பா. எ– 325

50. குறுந்தொகை, பா. எ– 198

51. குறுந்தொகை, பா. எ– 202

52. குறுந்தொகை, பா. எ– 176

53. குறுந்தொகை, பா. எ– 97

54. குறுந்தொகை, பா. எ– 174

55. குறுந்தொகை, பா. எ– 219

56. குறுந்தொகை, பா. எ– 299

57. குறுந்தொகை, பா. எ– 27

58. குறுந்தொகை, பா. எ– 44

59. குறுந்தொகை, பா. எ– 58

60. குறுந்தொகை, பா. எ– 130

61. குறுந்தொகை, பா. எ– 146

62. குறுந்தொகை, பா. எ– 149

63. குறுந்தொகை, பா. எ– 169

64. குறுந்தொகை, பா. எ– 386

65. நற்றிணை, பா.எ– 90

66. நற்றிணை, பா.எ– 281

67. நற்றிணை, பா.எ– 281

68. நற்றிணை, பா.எ– 357

69. நற்றிணை, பா.எ– 243

70. நற்றிணை, பா.எ– 70

71. நற்றிணை, பா.எ– 335

72. நற்றிணை, பா.எ– 348

73. அகநானூறு, பா.எ– 352

74. அகநானூறு, பா.எ– 163

75. அகநானூறு, பா.எ– 217

76. அகநானூறு, பா.எ– 235

77. அகநானூறு, பா.எ– 294

78. அகநானூறு, பா.எ– 160

79. அகநானூறு, பா.எ– 10

80. அகநானூறு, பா.எ– 45

81. அகநானூறு, பா.எ– 362

82. புறநானூறு, பா.எ– 86

83. புறநானூறு, பா.எ– 157

84. புறநானூறு, பா.எ– 250

85. புறநானூறு, பா.எ– 42

86. புறநானூறு, பா.எ– 246

87. புறநானூறு, பா.எ– 11

88. புறநானூறு, பா.எ– 251, 252

89. புறநானூறு, பா.எ– 66

90. தொல்காப்பியர், தொல்காப்பியம்,பொருளதிகாரம், புறத்திணையியல், நூ.எ. – 25

91. புறநானூறு, பா.எ– 246

92. புறநானூறு, பா.எ– 11

93. புறநானூறு, பா.எ– 251, 252

94. புறநானூறு, பா.எ– 66

95. புறநானூறு, பா.எ– 86

96. புறநானூறு, பா.எ– 157

97. புறநானூறு, பா.எ– 250

98. புறநானூறு, பா.எ– 251, 252

99. புறநானூறு, பா.எ– 42

100. புறநானூறு, பா.எ– 246

101. புறநானூறு, பா.எ– 11

102. புறநானூறு, பா.எ– 66

103. குறுந்தொகை, பா. எ– 126, 186, 220

104. குறுந்தொகை, பா. எ– 275

105. குறுந்தொகை, பா. எ– 139

106. குறுந்தொகை, பா. எ– 22, 29, 158

107. குறுந்தொகை, பா. எ– 99, 183, 200

108. குறுந்தொகை, பா. எ– 80, 91, 364

109. குறுந்தொகை, பா. எ– 15, 28, 39, 43, 388

110. குறுந்தொகை, பா. எ– 102

111. குறுந்தொகை, பா. எ– 210

112. குறுந்தொகை, பா. எ– 48

113. குறுந்தொகை, பா. எ– 171

114. நற்றிணை, பா.எ– 129

115. நற்றிணை, பா.எ– 371, 381, 394

116. நற்றிணை, பா.எ– 390

117. நற்றிணை, பா.எ– 187, 295

118. நற்றிணை, பா.எ– 19, 887

119. நற்றிணை, பா.எ– 304

120. நற்றிணை, பா.எ– 268

121. அகநானூறு, பா.எ– 324, 384

122. அகநானூறு, பா.எ– 11, 147 273, 303

123. அகநானூறு, பா.எ– 252

124. அகநானூறு, பா.எ– 22, 98

125. குறுந்தொகை, பா. எ– 126

126. குறுந்தொகை, பா. எ– 139

127. குறுந்தொகை, பா. எ– 186

128. குறுந்தொகை, பா. எ– 220

129. அகநானூறு, பா.எ– 324

130. அகநானூறு, பா.எ– 384

131. குறுந்தொகை, பா. எ– 15

132. குறுந்தொகை, பா. எ– 22

133. குறுந்தொகை, பா. எ– 28

134. குறுந்தொகை, பா. எ– 39

135. குறுந்தொகை, பா. எ– 39

136. குறுந்தொகை, பா. எ– 80

137. குறுந்தொகை, பா. எ– 91

138. குறுந்தொகை, பா. எ– 99

139. குறுந்தொகை, பா. எ– 102

140. குறுந்தொகை, பா. எ– 158

141. குறுந்தொகை, பா. எ– 182

142. குறுந்தொகை, பா. எ– 800

143. குறுந்தொகை, பா. எ– 364

144. குறுந்தொகை, பா. எ– 388

145. அகநானூறு, பா.எ– 11

146. அகநானூறு, பா.எ– 147

147. அகநானூறு, பா.எ– 273

148. அகநானூறு, பா.எ– 303

149. நற்றிணை, பா.எ– 187

150. நற்றிணை, பா.எ– 187

151. நற்றிணை, பா.எ– 295

152. நற்றிணை, பா.எ– 371

153. நற்றிணை, பா.எ- 381

154. நற்றிணை, பா.எ- 390

155. நற்றிணை, பா.எ- 394

156. நற்றிணை, பா.எ- 371

157. குறுந்தொகை, பா. எ- 210

158. குறுந்தொகை, பா. எ- 48

159. குறுந்தொகை, பா. எ- 171

160. நற்றிணை, பா.எ- 19

161. நற்றிணை, பா.எ- 87

162. அகநானூறு, பா.எ- 252

163. நற்றிணை, பா.எ- 304

164. நற்றிணை, பா.எ- 268

165. அகநானூறு, பா.எ- 22

166. அகநானூறு, பா.எ- 98

167. புறநானூறு, பா.எ- 279

168. புறநானூறு, பா.எ- 878, 88, 89, 90

169. புறநானூறு, பா.எ- 311

170. புறநானூறு, பா.எ- 295

171. புறநானூறு, பா.எ- 91, 367

172. புறநானூறு, பா.எ- 95

173. புறநானூறு, பா.எ- 92, 96, 97, 102, 390

174. புறநானூறு, பா.எ- 101

175. புறநானூறு, பா.எ- 206

176. புறநானூறு, பா.எ- 140

177. புறநானூறு, பா.எ- 392

178. புறநானூறு, பா.எ- 103

179. புறநானூறு, பா.எ– 92, 93, 94, 98, 100, 104

180. புறநானூறு, பா.எ– 315

181. புறநானூறு, பா.எ– 187

182. புறநானூறு, பா.எ– 231, 232, 235

183. புறநானூறு, பா.எ– 269

184. புறநானூறு, பா.எ– 268

185. புறநானூறு, பா.எ– 290

186. புறநானூறு, பா.எ– 278

187. புறநானூறு, பா.எ– 83, 84, 85

188. புறநானூறு, பா.எ– 277

189. புறநானூறு, பா.எ– 37, 174

190. புறநானூறு, பா.எ– 39

191. புறநானூறு, பா.எ– 126

192. புறநானூறு, பா.எ– 383

193. புறநானூறு, பா.எ– 280

194. புறநானூறு, பா.எ– 271

195. புறநானூறு, பா.எ– 302

196. பதிற்றுப்பத்து, பா.எ – 51

197. பதிற்றுப்பத்து, பா.எ – 52

198. பதிற்றுப்பத்து, பா.எ – 53, 55, 58, 59

199. பதிற்றுப்பத்து, பா.எ – 54

200. பதிற்றுப்பத்து, பா.எ – 56

201 . பதிற்றுப்பத்து, பா.எ – 57, 60

# இயல் 3

# சமுதாய நோக்கு

'மனித வரலாற்றின் தொடக்க காலச் சூழலில் காட்டுமிராண்டி நிலையும், அநாகரீக நிலையும், அதன் வளர்ச்சிப் பாங்காக நாகரீக நிலையும் அமைந்திருந்தது' என்பது சமூகவியல் அறிஞர்களின் பொதுவான கருத்தாகும். இந்த மூன்று கட்ட நிலைகளில் வளர்ச்சியடைந்த கட்டமான நாகரீக நிலையில் சங்க இலக்கிய அக வாழ்க்கை அமைந்தது எனக் கொள்ளலாம். சங்க அக இலக்கியம் பண்டைக்கால மனிதச் சமூகக் காதலை இயம்புவதின் அடிப்படையில்தான் வாழ்வின் திறங்களைச் செறிவுடன் கொண்டிருப்பதாக அறிஞர்கள் போற்றுகின்றனர். சங்க இலக்கியத்தில் களவு முகிழ்ப்பில் வெளிப்படும் உறவுகளும் கற்பில் அரும்பும் குடும்ப உறவுகளும் இன்றல்ல என்றைக்கும் சமூகக் கட்டமைப்பிற்கு தனிக் குடும்ப உறவுக்கு இலக்கியமாகி நிற்கும் முறைமை வெளிப்படுத்தப்படுகின்றன.

### 3.1 சமுதாயம்

சமூகவியல் என்பது மக்களுறவையும் அதன் விளைவுகளையும் பற்றிய அறிவியலாகும். சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, செயல்கள் ஆகியவற்றிற்குத் தக்க விளக்கம் காண முற்படுகிறது. சமூகவியலை தனி அறிவியலாகத் தோற்றுவித்தவர் ஆகஸ்ட் காம்ட் என்பவர். உயிரியல் சமூகவியல் மரபினரில் முன்னணியில் நின்றவர் வெர்பர்ட் ஸ்பென்சர். இவர் சமூகவியல் ஆராய்ச்சி (Study of Sociology) சமூக நிலையியல், மனிதனும் அரசும், சமூகவியலின் கொள்கைகள் (Principles of Sociology) என்னும் நூல்களை வெளியிட்டுச் சமூகப் பரிணாம உயிரியல் தத்துவத்தை விளக்கியுள்ளார்.[1] இவை கலைக்களஞ்சியம் தரும் சமூகவியல் குறித்த செய்திகளாகும். சமூகம் பற்றிய செய்திகளை விளக்குவது சமூகவியல் ஆகும். சமூகம் என்பது "தங்களைப் பராமரித்துக் கொள்வதற்காகவும் இடையறவின்றி நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும், தம் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டையும் பகிர்ந்து

**தென்கடல் வளாகம் பொதுமை யின்றி**
**வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்**
**நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லா வொரு வற்கும்**
**உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே**
**பிறவு மெல்லா மோரொக் கும்மே**
**செல்வத்துப் பயனே வீதல்**
**துய்ப்பே மெனினே தப்புந பலவே**[4]

என்னும் புறநானூற்றுப் பாடல் தனிநிலை வாழ்வாகத் தனிச் சமூகத்தைப் பிரதிபலிப்பதாகும்.

### 3.1.1.2 பொதுச் சமூகம்

சங்க இலக்கியத்தில் வேந்தர் மரபு உருவாகிய பிறகு அவர்களுக்கென்று தனி உரிமைகளும் செல்வத் துய்ப்புகளும் தோன்றின. பெருமரபு உருவாகிய பிறகு சமூகம் என்பது முழு உருவம் பெறுகிறது. தனி மனிதர்க்குச் சமூக அமைப்புகளான ஊர், நாடு ஆகியவற்றின் தலைமை கேடு செய்தால் அதனைப் பொதுச் சமூகம் கேட்க உரைக்கும் நிலை சங்க காலத்தில் உண்டாகியிருந்தது. சங்க இலக்கியத்தில் அன்னி ஞிமிலி தந்தையைக் கொன்ற மன்னனைப் பழிவாங்கும் வகையில் நோன்பு கொள்கிறாள்.[5] அதாவது தனக்கு ஒரு துன்பம் வரும்போது தான் சார்ந்துள்ள சமூக அமைப்பிடம் முறையிட்டு நீதி பெறும் நிலை உருவாகி விட்டமையை இச்செய்தி விளக்கும். மன்னன், மக்கள் வேறுபாடு நிலவியது. மக்களைக் காப்பது மன்னன் கடமையாகக் கருதப்பட்டது. ஊரவை, மன்றம், பொதியில் என்றும் வழங்கப்பட்ட அவைகள் மக்களுக்கு நீதி வழங்கின.

**நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்**

**அதனால் யானுயி ரென்ப தறிகை**

**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே[6]**

என்னும் பாடல் பொது நிலைச் சமூகத்திற்குச் சான்றாக விளங்குகிறது.

### 3.1.1.2 சமூகப் பிரிவுகள்

சங்க இலக்கியத்தின் வழி சமூகப் பிரிவுகள் இருந்தமையை அறியமுடிகிறது. அவை,

1. நிலம் சார்ந்த பிரிவுகள்
2. தொழில் சார்ந்த பிரிவுகள்
3. சாதி சார்ந்த பிரிவுகள்

என்ற மூன்றும் ஆகும்.

### 3.1.2.1 நிலம் சார்ந்த பிரிவுகள்

சங்க இலக்கியத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நிலம் சார்ந்த பிரிவுகள் அவ்வந் நிலத்தில் காணப்படும் மலர்களின் பெயரால் பெயரிடப்பட்டிருந்தன. இந்நான்கு நிலங்களில் வாழ்வோரும் தெழிலால் வேறுபட்டிருந்தனர். தாம் சார்ந்த நிலத்தை ஒட்டியும் தொழிலை ஒட்டியும் இவர்களுக்குப் பெயர்கள் வழங்கப்பட்டிருந்தன.

**பெயரும் வினையுமென் றாயிரு வகைய**

**திணைதொறு மரீஇய திணைநிலைப் பெயரே[7]**

என்று தொல்காப்பியம் இவ்விருவகைப் பெயர்களைக் குறிக்கும்.

### 3.1.2.2 தொழில் சார்ந்த பிரிவுகள்

நிலத்தால் பெயர் பெற்றமை போலவே தொழிலால் பெயர் பெற்றமையும் உண்டு. தொழிலை வேறுபடுத்துவதில் நிலத்திற்குப் பெரும் பங்கு உண்டு. நானிலத்

காணப்படும் ஒன்றைக் குறித்து மனிதனின் அகத்தே உண்டாகும் எண்ண அடிப்படையில் உருவாகும் மதிப்பீடு ஒரு சமூக முழுமையிலும் ஏற்கப்படும்போது அது சமூக மதிப்பு எனப்படும்.[10]

சங்ககாலச் சமூக மதிப்புகளில் உயர்ந்த வாழ்க்கைக் கோட்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, மானம், பெருமை, குடிமை, ஈகை, விருந்தோம்பல் ஆகிய எல்லாவற்றையும் குறிக்கலாம். இம் மதிப்புகளைப் புலப்படுத்தும் அமைப்புகளாகக் குடும்பம், அரசு, சான்றோர், கூட்டம் ஆகியன இருந்தன.

**நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்**
**என்றும் என்றோள் பிரிபறி யலரே**
**தாமரைத் தண்டா தூதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**[11]

என்னும் பாடலில் தலைவனின் சான்றாண்மைப் பண்பு போற்றப்பட்டுள்ளது. பொது நிலைச் சமூகத்தில் மதிப்புகள் மிக இன்றியமையாதவை ஆகும்.

### 3.1.4 சமயம்

சமயம் என்பது கடவுள் நம்பிக்கை சார்ந்த ஓர் அமைப்பாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. “எங்கெல்லாம் எம்பொழுதெல்லாம் தன்னைவிட உயர்ந்த புரியாத தெய்வீகமான சக்தியை உணர்ந்து அச்சக்தியைச் சார்ந்து மனிதன் செயற்பட முற்படுகின்றானோ அங்கெல்லாம் மதம் காணப்படுகிறது.’’[12] சங்க காலத்தில் நிறுவன சமயங்களின் தாக்கம் குறைவாகும். சமணம், பௌத்தம், என்னும் இரண்டுமே நிறுவன சமயங்கள். ஆனால், சங்க இலக்கியத்திலோ அல்லது தொல்காப்பியத்திலே இந்நிறுவன சமயங்கள் வெளிப்படையாக வெளிப்படவில்லை. நிலப்பாகுபாட்டோடு இணைத்து தெய்வங்கள் பேசப்பட்டுள்ளன. அவற்றிற்கும்

முறையான வழிபாட்டு முறை இல்லை. பரி பாடலும் கலித்தொகையும் சைவ சமய நிறுவனமாக நிலைபாட்டை வெளிப்படுத்துகின்றன.

## 3.2 சங்க காலச் சமுதாயம்

பெண் புலவர்கள் பாடும் பாடல்களிலிருந்து சங்க காலச் சமுதாயத்தைக் கட்டமைக்க இக்கட்டுரை முயல்கிறது. சங்க காலச் சமுதாயத்தை இரு பிரிவாகப் பிரித்து ஆராயலாம். அவை,

1. அகநிலைச் சமுதாயம்
2. புறநிலைச் சமுதாயம்

என்பனவாகும்.

### 3.2.1 அகநிலைச் சமுதாயம்

தலைவன் தலைவியரின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என்னும் இரு கைகோள்களிலும் அமைந்துள்ளதைத் தொல்காப்பியம் தெளிவுபடுத்தி உள்ளது. களவின் தொடக்கமாக அமைவது இயற்கைப் புணர்ச்சி, அதன் முடிவாக அமைவது வரைவு எனப்படும் திருமணமாகும். ஆனால் சிற்சில சமயங்களில் திருமண நிகழ்ச்சி இடம் பெறாமல் தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொள்வதும் உண்டு. அந்நிலையில் உடன்போக்கு களவின் முடிவாக அமைவதும் உண்டு. தலைவன் தலைவியரின் களவு வாழ்க்கை வெளிப்பட்டு விடுமானால் அது கற்பொடு ஒத்ததாகும்.[13] எனினும் கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது, தலைவனும் தலைவியும் திருமணச் சடங்குகளால் இணைவதையே குறிக்கிறது என்பதால் கற்பின் தொடக்கமாகத் திருமணம் அமைகிறது எனலாம். தலைவனும் தலைவியும் தம் மக்களோடும் உறவினரோடும் இல்லற வாழ்க்கையை

நிறைவாக வாழ்ந்து முடித்த பின்னர் வீடுபேற்றின் பொருட்டு மனத்துறவை மேற்கொண்டு வாழ்வது கற்பின் முடிவாக அமைகிறது.

களவு வாழ்க்கையில் தலைவியோடு பெறும் இன்பமும், தலைவனைக் காணாமையால் தலைவி உறும் துன்பமும், தலைவன் தலைவி சந்திப்பால் ஊரில் தோன்றும் அலரும், தலைவியின் நோய்க்குக் காரணம் அறியச் செய்யப்படும் வெறியாட்டும், தலைவன் தலைவியர், காதல் உறவை வெளிப்படுத்தும் அறத்தொடு நிற்றலும், பெற்றோரையும் ஊர் அலரையும் எதிர்கொள்ளும் துணிவின்றித் தலைவி தலைவனுடன் மேற்கொள்ளும் உடன்போக்கும் தலைவன் தலைவி இடையே நிகழும் சிறு பிரிவுக்கும் குறிப்பிடத்தக்கவையாம்.

கற்பொழுக்கத்தில் தலைவன் அறப்புறங்காவல் காரணமாகவும், பொருள் ஈட்டுதற் காரணமாகவும், வேந்தனுக்குப் போரில் உதவுவதற்கு காரணமாகவும், பரத்தையர் காரணமாகவும் மேற்கொள்ளும் பிரிவுகள் சிறப்பிடம் வகிக்கின்றன. கற்பு தலைவனின் கடமை உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. களவு, கற்பு ஆகிய இவ்விரண்டு பாடுபொருள்களையும் ஆழ்ந்து பார்க்கையில் களவில் தலைவன் தலைவியோடு நுகரும் இன்பமும் கற்பில் அவன் பரத்தையோடு நுகரும் இன்பமும் அக இலக்கியத்தின் உள்ளடக்கமாக இருப்பதை அறியலாம்.

### 3.2.1.1 இயற்கைப் புணர்ச்சி

தலைவன் தலைவி கூட்டம் காமப்புணர்ச்சி இடந்தலைப்பாடு, பாங்கொடு தழால், தோழியற் புணர்வு என்று நான்கு வகைப்படும். இவற்றுள் முதலிலுள்ள காமப்புணர்ச்சி இயற்கைப் புணர்ச்சி என்றும் முன்னுறு புணர்ச்சி என்றும் தெய்வப் புணர்ச்சி என்றும் வேறு பெயர்களாலும் வழங்கப்படும் என்றும் இவையெல்லாம் காரணப் பெயர்கள் என்றும் இளம்பூரணர் குறிப்பார்[14]

தலைவனும் தலைவியும் தோழியின் உதவியோ பாங்கனின் உதவியோ இல்லாமல், தாமே கூடும் கூட்டம் என்பதால், காமப்புணர்ச்சி, இயற்கைப் புணர்ச்சி,

முன்னுறு புணர்ச்சி என்று இவ்வாறெல்லாம் கூறப்படினும் இயற்கைப்புணர்ச்சி என்பது மிகவும் பொறுத்தமானதாகும். ஏனெனில், தலைவனும் தலைவியும் முன்னேற்பாடான திட்டம் ஏதுமின்றிச் சற்றும் எதிர்பாராமல் சந்தித்துக் கொண்டு காதல் உணர்வைப் பரிமாறிக் கொண்ட நிகழ்ச்சி இயல்பானதாக அமைவது இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணமாகிறது. பெரும்பாலும் மலையும் மலைசார்ந்த இடங்களும் அவ்விடங்களிலுள்ள மரஞ்செடி கொடிகளும் அமைந்த குறிஞ்சிச் சூழலில் தலைவன் தலைவியரின் முதல் சந்திப்பு இடம் பெறுவதால் இதனை இயற்கைப் புணர்ச்சி எனக் கொள்வதும் பொருத்தமாக உள்ளது. அகப்பொருள் இலக்கணங்களும் அக இலக்கியங்களும் இருவகைப் புணர்ச்சிகளைக் குறிப்பிடுகின்றன. அவை, உள்ளப் புணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சி என்பன. இவற்றுள் உள்ளப்புணர்ச்சி இயற்கைப் புணர்ச்சி வாயிலாக உள்ளதை பெண்புலவர் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

தலைவி தன் தோழியரோடு விளையாடிக் கொண்டு இருக்கும்போதோ (அகம்.152: 8–12 250: 5–9) , வேங்கை மலர்களைக் கொய்யும் போதோ (அகம். 48 : 4–14, 52:1–8), திணைப் புணத்தைக் காக்கும் போதோ (அகம். 388:1.19) , தலைவன் வேட்டையாட வரும்போதோ (அகம். 82 : 10–18) அவனைச் சந்தித்து அவனது ஆளுமையால் கவரப்பட்டு அவன் நினைவில் ஆழ்ந்து விடுகிறாள். புன்னை மரத்தடியில் சிற்றில் இழைத்தும், சிறு சோறு சமைத்தும் தலைவி தன் தோழியருடன் விளையாடிக் கொண்டிருக்கும் போதும் (அகம்.230:5– 10) , தலைவி உப்பு விற்கும்போதும் (குறுந்.140:5-15) தலைவன் எதிர்ப்பட்டுத் தன் காதலுணர்வைப் புலப்படுத்துகிறான். தலைவியும் தலைவன்பால் காதல் கொண்டுள்ளமையை வெளிப்படுத்தும் பாங்கில் தன் உவகைக் கண்ணீரைத் தலைவன் காணாதவாறு மறைக்கிறாள்; தன் இளநகையால் புலப்படுத்துகிறாள். இவ்வாறு தலைவியிடம் வெளிப்படும் மெய்ப்பாடுகள் உள்ளப் புணர்ச்சியை உணர்த்தி நிற்பதை அறிய முடிகிறது. பெரும்பாலும் காதலர்களின் முதற்

சந்திப்பின்போது தலைவியின் தோழியரும் உடனிருப்பதால் முதற் சந்திப்பில் மெய்யுறு புணர்ச்சிக்கு வாய்ப்பில்லை.

### 3.2.1.2 இடந்தலைப்பாடு

களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சி முதலிய நான்கும் இம்முறை நிகழாது இடையீடுபட்டு வரும்[15] என்று தொல்காப்பியர் கூறும் பெண்புலவர் பாடல்களில் இடந்தலைப்பாடு பற்றிய நிகழ்ச்சிகள் இல்லை. அதாவது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைவன் அதன் பின்னரும் முன்னர்த் தலைவியைச் சந்தித்த இடத்திற்குச் சென்று அவளைச் சந்தித்ததாகப் பெண்புலவர்கள் பாடவில்லை.

### 4.2.1.3 குறியிடம்

களவு, கற்பு என்னும் இரு அக ஒழுக்கங்களுள் களவில் தலைவன் தலைவியர் சந்திப்பு அடிக்கடி நிகழும். அவர்கள் சந்திப்பிற்குரிய இடம் குறியிடம் எனப்படும். குறியிடம் சுட்டிக் கூறும் பொறுப்பு தலைவிக்குரியதாகும்.[16] தலைவி கூற்றாலும், குறிப்பாலும் குறியிடத்தைப் புலப்படுத்துவாள் என்பர்.

### 4.2.1.3.1 பகற்குறி

பகற்பொழுதில் தலைவனும் தலைவியும் எயிற்புரம் சந்திப்பர். எயிற்புரம் என்பது இல்லத்தைச் சார்ந்தும் அடுத்தும் அமைந்த பொழிலும் சோலையும் புனலும் கானலும் ஆகிய இளமகளிர் சென்று விளையாடி வருவதற்குரிய இடங்களாம்[17] என உரைவழி அறியப்படுகிறது. இயற்கைச் சூழல் அமைந்த இடங்கள் தலைவன் தலைவியர் பகற்பொழுதில் சந்தித்துக்கொள்ள வாய்ப்பாக இருந்தன அவ்விடங்கள் குறிஞ்சிக்குரியனவாகவும் நெய்தற்குரியனவாகவும் இருந்தமை அறிய முடிகிறது.

தினைப்புனத்திலும் தினைப் புனக்காவலுக்காக மலைக்குகையின் மீது அமைக்கப்பட்ட பரணிலும் வெறியாடும் களம்போல மண மலர்கள் சிதறிக் கிடக்கும்

மலைச்சாரலிலும், குரங்குகள் ஏறி அறியாத நீண்ட மரங்கள் செறிந்த காட்டிலும் கனிகள் செறிந்த மரச் செறிவிலும் கனிமுதிர் அடுக்கத்திலும் காந்தள் புதரிலும் செங்காந்தள் மரச் செறிவிலும் காதலர்களின் சந்திப்பு நிகழ்ந்தது. புன்னையங்கானலும் செருந்தியும் புன்னையும் திகழும் சோலையும், கடற்கானலும் கானலம் பெருந்துறையும் கழியும் கானலும் அமைந்த சூழலும் காதலர் சந்திக்க வாய்ப்பளித்தன.

### 3.2.1.3.2 இரவுக்குறி

'இல்லகத்துள் மனையகம்புகா இடத்துக்கண் மனையோர் கிளவி கேட்கும் அணிமைத்தாம்' என்று இரவுக்குறி நிகழும் இடத்தைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.[18] இதனை 'மனைக்கும் எயிற்கும் நடுவணதோரிடம்' எனத் தெளிவுபடுத்துகிறார் இளம்பூரணர்.[19] அவ்வாறு அகமனைக்கும் புறமதிற்கும் நடுவே இரவுக்குறியில் புணர்ச்சி நிகழ்வதற்கு அச்சத்தைக் காரணம் காட்டுவர்.[20] எனவே இரவுக்குறி வீட்டினது எல்லைக்குள் மலையிலுள்ளார் பேசும் பேச்சுக் கேட்கும் அளவுள்ள தூரத்தில் நிகழ்ந்தது எனலாம். மனையும்[21], மாளிகையன் ஒருபுறமும்[22], தோட்டமும்[23] , மனை மரத்தின் அயலும் புன்னைப்பூங்கானலும்[24] இரவுக்குறி இடங்களாக இருந்ததை அகநானூறு தெளிவு படுத்துகிறது.

### 3.2.1.4 பிரிவு

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் நிகழ்வு களவு, கற்பு ஆகிய இரு கைகோள்களிலும் நிகழ்கின்றது.

### 3.2.1.4.1 களவுப் பிரிவுகள்

களவில் நிகழும் பிரிவு ஒரு வழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் என இருவகைப்படும். மேலும், வேந்தர்க்குற்றுழிப் பிரிவு, அறத்தொடு நிற்றல், களவில் தலைவியின் நிலை, வரைவு கடாதல், வரைவுடம்படுதல், வரைவு மலிதல் முதலிய நிகழ்வுகளும் களவில் பதிவாகியுள்ளன.

#### 3.2.1.4.2 கற்புப் பிரிவுகள்

கற்பில் நிகழும் பிரிவுகளுள் அறப்புறங்காவல், பொருள் வயிற்பிரிவு, வேந்தர்க்குற்றுழிப் பிரிவு பரத்தையிற் பிரிவு, ஆகிய நான்கையும் அக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அறப் புறங்காவலும், பொருள்வயிற்பிரிவும் பாலைத்திணைக் குரியனவாகவும், வேந்தர்க்குற்றுழிப் பிரிவு முல்லைக் குரியதாகவும், பரத்தையிற் பிரிவு மருதத்திணைக்குரியதாகவும் உள்ளன.

### 3.3 சங்கப் பெண்புலவர் பாடல்கள் காட்டும் அகவாழ்க்கை

அஞ்சில் அஞ்சியார் என்னும் புலவர் பாடிய நற்றிணைப் பாடல் ஒன்றில் பரத்தையிடம் ஊடல் கொண்ட தலைவன் தலைவியை நோக்கி வரும் செய்தி பதிவுபெற்றுள்ளது.

**ஆடு இயல் விழவின் அழுங்கல் மூதூர்**
**உடையோர் பன்மையிற் பெருங்கை தூவா**[25]

என்பது அப்பாடல் ஆகும்.

கனவு பற்றிய செய்தி குறுந்தொகைப் பாடல் ஒன்றில் பதிவாகியுள்ளது. கனவில் தலைவன் வந்ததாகவும், அவன் மெய்யுறத் தழுவிக் கொண்டதாகவும், அந்த மகிழ்வில் தலைவி திளைத்து இருந்ததாகவும், விழித்துப் பார்த்தபோது படுக்கையைத் தடவிப் பார்த்துத் தலைவன் இல்லாததாகவும் சுட்டும் செய்தி உள்ளது.[26]

அள்ளூர் நன்முல்லையார் கிளி மஞ்சள் நிற வேப்பம் பழத்தை வாயில் பற்றிக் கொண்டிருக்கும் காட்சியைத், தங்கக் காசைப் புது நூலில் மாற்றும் பெண்ணின் கைக்கு உவமித்துப் பாடியுள்ளார்.

.......... கிள்ளை

வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்

புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப்

பொலங்கல ஒருகாசு ஏய்க்கும்[27]

என்பது அப்பாடலாகும்.

பூப்பிடைப் பிரிவு, பூப்பு நாட்களில் புணர்ச்சி நிகழாமை, தலைவி நெஞ்சம் துணுக்குறுதல் ஆகியன பற்றியும் குறுந்தொகை(57) சுட்டியுள்ளது.

வேந்தன் கடமையை முடித்துத் தன் தலைவியைப் பார்க்கும் பெரு விருப்புடன் தேரில் ஏறி அமர்கிறான். தலைவன், தேர் பறக்கிறது. வீடு வந்தவுடன் வீடு வந்து விட்டது இறங்குங்கள் எனும் கருத்தில் 'இழிமின்' என்று தேர்ப்பாகன் உரைத்த உரை கேட்டுத் தலைவன் வியந்து போனான் என்று நயம்பட உரைக்கப்பட்டுள்ளது[28] வரும் வழி தோறும் தலைவன் தலைவி பற்றிப் புலம்பியபடியே 'விரைந்து செல்க' என்று பாகனை ஏவியதன் தொல்லையைத் தாங்கமாட்டாத அவன் 'இழிமின்' என்று கூறியதாகப் பாடல் உள்ளது. இப்பாடல் மூலம் தலைவி மீது தலைவன் கொண்ட அன்பு புலனாகிறது.

போர் காரணமாகத் தலைவன் பிரிந்தபோது, வருந்தாமல் விடைகொடுத்த தலைவி, இப்பொழுது அவன் விரைவில் திரும்பி வரவேண்டும் என்பதற்காகக் கண் கலங்குகிறாள். 'நாணில மன்ற எம் கண்ணே' (குறுந். 35) என்னும் பாடல் இச்செய்தியினை விளக்குகிறது.

இரவுக்குறியே தலைவன் தலைவி சந்திக்கும் சிறந்த இடமாக உள்ளதை அறிய முடிகிறது. இதனையும் குறுந்தொகைப் (261) பாடலே காட்டுகிறது.

வாயில் மறுத்தல் என்பது அக இலக்கியத்தில் ஒரு துறையாகும். வாயில் மறுக்கும் தோழி ஒருத்தி 'தலைவியிடம் கொள்ளையடித்த பெண்மையைத்

திருப்பிக் கொடுத்து விட்டுப் போ' என்று மறுக்கிறாள். இச்செய்தியும் குறுந்தொகையில் பதிவு பெற்றுள்ளது(238).

தாயங்கண்ணியார் என்னும் புலவர் (புறம் 250) அக்கால விதவைப் பெண்ணின் அவலக் கோலத்தைச் சோகம் ததும்ப உணர்ந்து படம்பிடித்துக் காட்டி உள்ளார். கணவனோடு வாழ்ந்த காலத்து மகிழ்ந்திருந்த மனைவியையும் மகனையும் பார்த்த இப் பெண் புலவர், கணவன் இறந்த நிலையில் அவன் இறப்பால் வாடிக்கிடந்த கைம்பெண்ணை நேரில் கண்டு பாடியதாக இப்பாடல் அமைந்துள்ளது. எனவே தான் கணவன் இழந்ததைப் படம் பிடிக்கும் தாபத நிலை எனும் துறையில் இப்பாடல் வகுக்கப்பட்டுள்ளது.

தாயங்கண்ணியார் குறிக்கும் கைம்பெண்ணின் நிலை வருமாறு,

1. தலை மொட்டை அடித்தல்
2. கைவளை நீக்குதல்
3. அல்லி அரிசியையே உணவாகக் கொள்ளல்

இக்காட்சியைக்,

**கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி**
**அல்லி உணவின் மனைவி** **(புறம் : 250 : 4–5)**

என்னும் அடிகளில் குறிப்பிடுகிறார். 'புதல்வர் தந்தை தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே' (புறம்:250:8–9) என்னும் அடியில் இந்நிலை அப்பெண்ணுக்கு எவ்வாறு வந்தது என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

"சங்க இலக்கியத்தில் காதலியின் கூந்தலே முதன்மை கொடுத்துக் காட்டப் பெறுகின்றது. மொட்டையான தலை உருவம் பளிச்செனப் பார்ப்போர்க்கு முதலில் தெரிவதால் போலும். கைம்பெண் கோலத்தில் வளையல்கள் நீக்கப் படுவதைச்

சொல்லும் புலவர்கள் நெற்றிப் பொட்டு நீக்கத்தைக் குறிப்பிடாததிலிருந்து சங்க காலத்தில் பொட்டு திருமண அடையாளமாகவோ பொட்டு நீக்கம் கைம்பெண் அடையாளமாகவோ கருதப்படவில்லை என்று தோற்றுகிறது''[29]

மதுரை ஓலைக்கடைத்தார் நல்வெள்ளையார் எழுதிய பாடல்களில் சில வாழ்வியல் செய்திகள் உள்ளன.

நமுகம் வாராய் பாண....... (நற் –250)

என்னும் பாடலில் குழந்தை கிண்கிணி அணிந்திருப்பதும், நடைபயிலச் சிறுதேர் உருட்டுவதும், தேனை நிகர்த்த மழலை மொழி பேசுவதும் காணப்படுகின்றன.

**"சுடர்சினம் தணிந்து குன்றம் சேர**
**நிறைபறைக் குருகினம் விசும்பு உகந்துஒழுக**
**எல்லை பையயக் கழிப்பு, முல்லை.... ( நற் –369)**

இப்பாடலில் ஞெமை மரம் ஓங்கி வளர்ந்துள்ள இமய மலையும், வெள்ளம் பொங்கி வரும் கங்கைப் பேராறும் இப்பாடலில் குறிக்கப் பெறுகின்றன. மேலும் இப்பாடலில் 'தலைவியை வதைக்கும் மாலைப் பொழுது வருகின்றது. தலைவிக்குப் பிரிந்து சென்ற தலைவன் நினைவு வந்து வாட்டுகிறது. அவனை நினைந்து காமம் வெள்ளமாகப் பெருக்கெடுக்கின்றது' என்னும் பெண்களின் நிலை குறிக்கப்பட்டுள்ளது.

பொதுக்கயத்து கீரந்தை என்னும் புலவர் குறுந்தொகைப் பாடல்(337) ஒன்றினைக் குறிஞ்சித் திணைத் தலைவன் கூற்றாக அமைத்துள்ளார். தலைவியின் தோழி, தன்னிடம் தலைவியின் காதலுக்காகக் கெஞ்சி நின்ற தலைவனிடம் 'தலைவி மெத்த இளமையள் பருவம் அடையாப் பேதைப்பெண்' என்று கூறினாள். அதற்குத் தலைவன் பேதைப் பருவம் கடந்து பருவம் எய்தி

விட்டாள் என்று கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவிக்கு முலைகள் அரும்பி விட்டன, நீளமாகத் தலைமுடி தளைத்து விட்டது, பருவம் காட்டும் பற்கள் வரிசையாக அமைந்து விட்டன, பருவம் எய்தியதைக் காட்டும் தேமலும் தோன்றி விட்டது, மிகப் பெரிய செல்வரின் மகளாக இருக்கும் அவள் தான் மணப்பருவம் எய்திவிட்டதை அறியாதவளாக இருக்கிறாள் என்று தெரிவிக்கிறான்.

பெண் பருவமடைதல் குறித்த செய்தி இப் பெண்பாற் புலவர் பாடலில் பதிவாகி உள்ளது.

அகநானூற்றுப் பாடல் ஒன்றிலும் (அகம். 7:1–7) இச்செய்தி உள்ளது. பருவம் எய்துவதற்கு முன்பே இளமைக் காதல் உண்டு என்பதையும், பருவம் எய்தும் வரை தலைவன் காத்திருப்பான் என்பதையும் இப்பாடல் உணர்த்துகிறது.

**முலைமுகம் செய்தன முள்ளெயிறு இலங்கின**
**தலைமுடி சான்ற தண்தழை உடையை**
**———————————**
**பேதையல்லை மேதையம் குறுமகள்**
**பெதும்பைப் பருவத்து ஒதுங்கினைப் புறத்தென (அகம் 7: 1–7)**

என்பது அப்பாடல் ஆகும்.

வெறிபாடிய காமக்கண்ணியார் தம் பெயருக்கு ஏற்ப வெறியாடல் குறித்தும் பாடுவதில் வல்லவர்.

'வெறியாட்டம்' என்னும் பழந்தமிழரிடையே இருந்த ஒரு பழக்கத்தை இவர் சிறப்பாகப் பாடியமையால் வெறிபாடிய காமக்கண்ணியார் என அடைமொழி சேர்த்து அழைக்கப்பெற்றார். தெய்வம் ஏறி ஆடும் ஆட்டத்துக்கு 'வெறி' என்பது பெயராகும்.[30]

அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்
கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியல்மார்பு அணங்கிய செல்லல்
இது என அறியா மறுவரல் பொழுதிற்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த்தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவள் இவள்என
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்
களம்நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகுஆற்றுப் படுத்த உருகெழு நடுநாள்
ஆரம்நாற அருவிடர்த்த தைந்த
சாரல் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றுஇரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்து இயங்கும் மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப
இன்உயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லனோ யானே எய்த்த
நோய்தணி காதலர் வர ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே ? (அகம்.22)

என்பது வெறியாடல் செய்தி வெளிப்படும் அகநானூற்றுப் பாடல் ஆகும்.

பெய்ம்மணல் முற்றங் கடிகொண்டு
மெய்ம்மலி கழங்கின் வேலற் தந்தே

என்னும் நற்றிணைப் (268) பாடலிலும் வெறியாட்டு பற்றிய செய்தியைப் பதிந்துள்ளார்.

அடுத்து ஔவையார் என்னும் பெண்பாற் புலவர் காட்டும் அகவாழ்க்கை குறித்துக் காணலாம்.

காதல் வாழ்க்கை குறித்த ஔவையார் அக இலக்கியங்களில் பல இடங்களில் மிகவும் அருமையாக விளக்கிச் செல்கிறார்.

பிரிவின்கண் தலைமகள் அறிவு மயங்கிச் சொல்லியது என்னும் துறையிலமைந்த அகநானூற்றுப் பாடலில் காமநோயால் பிரிவாற்றாமைத் துன்பத்தால் தலைவிக்குப் பசலை படர்ந்தது. தலைவியின் நாணம் இல்லாத காதலைப் பிறர் பழி தூற்றின செய்தி கீழ்வரும் பாடலில் உள்ளது.

**விசும்பு விசைத்து எழுந்த கூதளங் கோதையின்**
**பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ**
**ஆர்கலி வளவயிற் போதொடு பரப்பப்**
**புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம்**
**நலம்கவர் பசலை நலியவும் நம் துயர்**
**.... ...... .......**
**முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை**
**அசைவுடை நெஞ்சத்து உயவுத்திறள் நீடி**
**ஊரோர் எடுத்த அம்பல் அஞ்சினை**
**ஆராக்காதல் அவிர்தளிர் பரப்பிப்**
**புலவர் புகழ்ந்த நாண்இல் பெருமரம்**
**நிலவரை எல்லாம் நிழற்றி**
**அலர்அரும்பு ஊழ்ப்பவும் வாராதோரே (அகம். 273)**

என்பது அப்பாடலாகும்.

வரைவிடை ஆற்றாளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தியுரைத்தது என்னும் துறையில் அமைந்த தலைவி கூற்றுப் பாடல் ஒரு பெண்ணின் விரகத்தை வன்மையுடன் வெளிப்படுத்துகிறது.

**முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்!**
**ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒள் எனக் கூவு வேன்கொல்**
**அலமரல் அசைவளி அலைப்ப என்**
**உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே ? (குறுந். 28)**

என்பது அப்பாடல் ஆகும்.

தலைவி கூற்றில் அமைந்த தலைமகன் பிரிவின் கண் வேட்கை மீதூர்ந்த தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாக அமையும் பாடலில் காமத்தால் அலர் எழுகிறது. அலருக்கு அருமையான உவமை சுட்டப்படுகிறது. 'கொல்லிமலையில் வழிந்தோடும் அருவியின் ஆரவாரம் போல' அலர் எழுவதாகப் பாடல் அமைகிறது.

**இடைபிறர் அறிதல் அஞ்சி மறைகரந்து**
**பேஎய் கண்ட கனவிற் பன்மாண்**
**……  ……  ……**
**ஐயம் தெளியரோ நீயே பலவுடன்**
**வறல்மரம் பொருந்திய சிள்வீடு உமணர்**
**கணநிரை மணியின் ஆர்க்கும் சுரன்இறந்து**
**அழிநீர் மீன்பெயர்ந் தாங்கு அவர்**
**வழிநடைச் சேரல் வலித்திசின் யானே (அகம். 303)**

என்பது அப்பாடல் ஆகும்.

தேரில் தலைவன் சென்ற பின்னரும் அவனை நினைத்தே தொழுது இருக்கும் தலைவியின் நிலையை ஔவையார் நற்றிணைப் பாடல் ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளார்.

**நெய்தல் கூம்ப நிழல் குணக்கு ஒழுகக்**
**கல்சேர் மண்டிலம் சிவந்து நிலம் தணியப்**
**பல்பூங் கானலும் அல்கின் றன்றே**
**இனமணி ஒலிப்பப் பொழுதுபடப் பூட்டி**
**மெய்ம்மலி காமத்து யாம்தொழுது ஒழியத்**
**தேரும் செல்புறம் மறையும் ஊரொடு**
**யாங்கு ஆவதுகொல் தானே தேம்பட**
**ஊதுவண்டு இமிரும் கோதை மார்பின்**
**மின்இவர் கொடும்பூண் கொண்கனொடு**
**இன்நகை மேவிநாம் ஆடிய பொழிலே (நற். :187)**

என்னும் பாடல் மூலம் தலைவியின் நிலையை அறியலாம்.

வடிகின்ற நீரில் மீன்கள் ஏறிப்போனது போலத் தலைவியும் தலைவனுடன் செல்லுதற்குத் துணிந்த செய்தி அகநானூற்றுப் பாடலிலும் (அகம். 303), இற்செறிப்பில் ஆற்றாத தலைவியைக் கண்டு தோழி வருந்தி வரைவுக்கு முயல்கின்ற செய்தி நற்றிணைப் பாடல் ஒன்றிலும் (நற்:295) பெண்கள் தொடர்பான அகவாழ்வியல் செய்திகள் ஔவையாராயல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 3.4 புறநிலைச் சமுதாயம்

புறநிலைச் சமுதாயம் எனப்படுவது குடும்ப வாழ்க்கையை விடுத்து, புறநிலையில் கட்புலனுக்குப் புலப்படுமாறு நிகழும் செயற்பாடுகளை விளக்குவது சங்க இலக்கியம் காட்டும் வாழ்க்கைக் கூறுகளைக் கொண்டு 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழக வரலாற்றைக் கட்டமைக்க முயன்ற

முயற்சிகளும் தமிழக வரலாற்றில் உண்டு. இன்றுவரை எட்டுத் தொகையையும் பத்துப்பாட்டையும் தமிழகத்தின் பொற்கால வரலாற்றைப் பிரதிபலிக்கும் மூலமாகவே காணும் நிலையே உள்ளது.

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதில் விந்தை ஏதும் இல்லை. வகையில் இலக்கியத்தைக் கொண்டு வரலாற்றைக் கட்டமைக்க முயல்வதிலும் குற்றமில்லை. அந்த வகையில் பெண்புலவர் பாடல்களில் காணப்படும் புறநிலைச் சமுதாயச் செய்திகளை இங்குக் காணலாம்.

### 3.4.1 பெண்கள் – பெண் புலவர் – சமூக மதிப்பு

சங்க இலக்கியம் பிரதிபலிக்கும் பெண் மாந்தர்களுக்கு ஒத்த உரிமை இருந்ததை அறிய முடிகிறது. இக்கருத்தினைப் பெண் புலவர்களுக்கும் பொருத்திக் காணமுடியும். இதனை ஔவை நடராசன் அவர்கள் நன்கு விளக்கியுள்ளார்.

ஆர் எனுஞ் சிறப்பு ஈறு, ஆடவர் பெயரீற்றில் மாமூலனார், கல்லாடனார், மருதனிள நாகனார் என வருதல் போன்றே, மகளிர் பெயரீற்றிலும் வெள்ளி வீதியார், ஔவையார், நக்கண்ணையார், பொன்முடியார் என அச்சிறப்பு விகுதி ஆளப்பெறும் மரபுண்மை ஆண்பெண் இரண்டற்கும் ஒத்தவியல்பினை நாட்டும் என்க. சங்க காலத்தில் ஆடவரும் மகளிரும் ஒத்த மதிப்போடு எண்ணப் பெற்றமை இயற்கை நெறியாகவேயிருந்தது. மக்கள் என்பது அறிவுடைய ஆண் மக்களையும் மகளிரையும் குறிக்கும் பொதுச் சொல். ‘மக்கள் தாமே ஆறறிவுயிரே’ என்ற நூற்பாவிற்கு உரை கூறும் பேராசிரியர், “முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடூஉ, மகடூஉ மக்களெனப்படும்’ எனக் கூறுதலானும் அறியலாம். ஆணுக்குயர்பும் பெண்ணுக்கிழிபும் காட்டும் பிற்றை நிலை அற்றை நாள் இல்லை. ஒல்காப் புலமைத் தொல்காப்பியர், ‘பிறப்பே குடிமை’ என்னும் நூற்பாவால் தலை மக்களுக்கு வேண்டிய பத்து இயல்புகளையும் கூறி, அன்னார்பால் அமையலாகாத பண்புகளையும், ‘நிம்பிரிகொடுமை’ என்னும்

நூற்பாவால் இருபாலர்க்கும் பொதுவாகவே விளக்கியுள்ளார். மனமில்லாத ஆணின் தனிமையும் அன்ன பெண்ணின் தனிமையும் வாழ்வாகாது. காதலியை இழந்த தபுதாரநிலையும், காதலனை இழந்த தாபத நிலையும் என்றுரைக்கும் இலக்கணத்தால், இல்லறத்தில் ஒருவரையொருவர் இழந்து நிற்றல் கைம்மை நிலையாகவே கருதப்பட்டது.[31]

'ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும் வருவகைதானே வழக்கென மொழிப' என்னும் நூற்பாவின்படி ஆண்பாற்காகும் அறவுரைகள் பெண்பாற்கும் பொருந்துமாற்றைக் காட்டுவர் (தொல்.பொருள். 222). வீரமிக்க ஆண்மக்களைப் பெற விரும்பியது போலப் பெண் மக்களையும் பெற விரும்பினர். 'குன்றக் குறவன் கடவுட்பேணி இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்' என ஒரு புலவரும் (ஐங்குறுநூறு 257). 'அவரும் பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து நன்றி சான்ற கற்பொடு எம்பாடாதல்(நற்றிணை 330) என ஆலங்குடி வங்கனாரும் குறித்தனர்.

எனவே, சங்க காலத்தில் ஆணும் பெண்ணும் சமம் என வாழ்ந்தமை புலனாகிறது. சமூக மதிப்பு என்பது பெண்ணுக்கும் ஆணைப் போலவே இருந்தது. பெண்ணடிமைத் தனம் அங்கு இல்லை.

### 3.4.2 கல்வி

மனிதனை மனிதனாக்குவது கல்வியே ஆகும். ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதும் கல்வியே ஆகும். தொல்காப்பியர் ஓதற்கல்வி பற்றியும் அக்கல்வி அந்தணர், அரசர், வணிகர்க்கு உரித்தாமாறு பற்றியும் அதற்குரிய காலம் பற்றியும் இலக்கணம் கூறியுள்ளார்.

**ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன**

**உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தினான**

**வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது**[32]

தொல்காப்பியர் காலத்திலேயே 'கல்வி' என்னும் சமூக நிறுவனம் சிறந்த நிலை பெற்றிருந்தமை அரிய முடிகிறது.

புலவர்களும் பாணர் முதலியோரும் சங்க காலச் சமுதாய அமைப்பில் கல்விக்குப் பொறுப்பேற்றிருந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவராவர். சங்கப் புலவர்கள், அவர்களின் கல்வி அறிவு, அவர்களை ஆதரித்த வள்ளல்கள் முதலிய செய்திகளை நாம் சங்க இலக்கியத்தின் வழி அறிய முடியும். தனது கல்வியின் பெருமை அறிந்து, மதித்துக் கொடுக்கும் பரிசிலையே புலவர்கள் விரும்பினர். பரிசில் நீட்டித்த அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் வெகுண்டு

**எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே**[33]

என்று பாடுகிறார். அரசர்களைக் காட்டிலும் புலவர்கள் புகழ் பெற்று விளங்கியமையினை இச்செய்தியால் அறிகிறோம். கல்வி கற்பதில் ஆடவர் பெண்டிர் இருவரும் சிறந்து விளங்கினர். ஆடவர் முதலிய துறைகளிலும், பெண்டிர் இல்லறம் பேணல், நுண்கலை முதலிய துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டனர். சமுதாயத்தின் பல பிரிவினரும், அரசன் முதல் எளிய குடிமகன் ஈறாக அனைவரும் கல்வி கற்பதில் பெருமிதம் கொண்டனர். வாணிகன், கொல்லன், மருத்துவன், தச்சன், கணியன், பாணன், பொருநன் முதலிய பல்துறைத் தொழில் வல்லாரும், அரசி, குறமகள், காவற்பெண்டு, குயத்தி, பாடினி, முதலிய பல்வேறு இனத்தைச் சேர்ந்த பெண்களும் புலமையில் சிறந்து விளங்கினர். சங்ககாலச் சமூகத்தில் கல்வி கற்றார்க்கு மிகுந்த மதிப்பு இருந்தது. கல்வியிற் சிறந்தோர் எங்கு சென்றாலும் அவருக்கு அனைவரும் சிறப்புச் செய்வர். கல்வி கற்ற ஒருவன் கீழ்க் குலத்தவனாயினும் உயர்வு பெறுவான்.

கற்க வேண்டியவற்றை ஐயம் திரிபறக் கற்று, அவற்றின் வழி ஒழுகும் ஆற்றலுடையவராய், எத்தகைய இன்னல் வந்தாலும் அஞ்சாமல் நல்வினை தீவினைப் பயன்களைத் துய்த்தே தீரவேண்டும் என்பதை உணர்ந்து, இன்பம்

பெறும்போது மகிழ்ந்தும் துன்பம் உறும்போது துயர்ந்தும், தம் நூலறிவின் தகுதியாலேயே ஒருமை மனமுடையவராக மகளிர் விளங்க முடிந்தது. தலைவனைப் பிரிகிறபோது மனம் வருந்தினாலும், அவன் கடமையாற்றுவது கருதி ஆற்றியிருத்தலை மேற்கொள்ளும் மகளிரின் அறிவாற்றலைச் சங்கப் பாட்டுகளில் யாண்டும் காணலாம். தாம் ஆய்ந்து அறிவதைக் 'கல்வி' என்றும், அறிந்தோர் சொற்களை நலம்பெறக் கேட்பது 'கேள்வி' என்றும் முறை செய்து, இரண்டாலும் வளர்வது 'அறிவு' என்றனர். 'கண்ணிலும் செவியினும் நுண்ணிதின் உணரும் உணர்வு' என்பர் தொல்காப்பியர் (தொல்.மெய்.27) கல்வி, கேள்வி என்ற இரண்டாலும் வளர்வது அறிவு என்பது கொண்டே கல்வி என்று தனித்துக் கூறாமல் அறிவும் அருமையும் பெண்பாலன' என அவர் கூறினார் (தொல். பொருளியல்.15) என்று நடராசன் பண்டைய கல்வி குறித்து விளக்குகிறார்.[34]

மேலும் அவரே சங்கப் பெண் புலவர் கல்வி குறித்து "கையாற்றொழும் மரபினையுடைய கடவுட்டன்மை நிரம்பிய செய்வினை'' என்று கல்விப் பெருமையைக் கூறி ஓதல் வினையிடத்துச் சென்ற நம் தலைவர் விரைந்து வருவர்' எனத் தோழி தலைமகளை ஆற்றும் திறத்தைப் பரணர் பாடியுள்ளார் (அகம்.125). கடவுள் தன்மையைக் கல்விக்களிக்கும் தோழியின் மனம் எண்ணுதற்குரியது. காக்கைப் பாடினியார் அகத்தியர் மாணாக்கருள் ஒருவர். கபிலர்பால் பாரிமகளிர் தமிழ் கற்றனர் என்னும் செவிவழிச் செய்தியும் நாம் அறிவோம். கபிலர் பாரிமாட்டு அவைப் புலவராக அமர்ந்திருந்தது போல அதியன்பால் ஔவையார் வீற்றிருந்ததும், குறமகள் குறியெயினி அவைக்களப் புலவராக ஏறைக்கோனைப் போற்றிச் சிறப்பிப்பதும், மடல் பாடிய மாதங்கீரனார், பாலை பாடிய பெருங்கடுங்கோ மருதனிள நாகனார் போல ஒரு துறைப் புலமையில் ஓங்கிய புகழ் பெற்றவராக வெறிபாடிய காமக்கண்ணியார் விளங்குவதும், போரிட்ட வேந்தர்க்கிடையில் பூசல் தவிர்த்த புல்லாற்றூர் எயிற்றியனார், ஆலத்தூர் கிழார் முதலாய புலவர்களைப் போல ஔவைப் பெருமாட்டியாரும் தூது சென்று அறிவுரை கூறுவதும், வெண்ணிக்குயத்தியார் வேந்தன் முன் கூறிய அங்கதப் பாட்டும்

காக்கைப் பாடினியாரின் அஞ்சாமையும், முதின்முல்லைத் துறையைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்ட மகளிர் தனி மாண்பையும் நோக்குங்கால் ஆடவர்க்கும் மகளிர்க்கும் வேறுபாடு கண்டு வியக்கும் நெறி பாட்டுலகிலோ, பாட்டுலகில் பயின்ற திணை துறைகளிலோ, அரசர் அவைக்களங்களிலோ ஆடு களங்களிலோ யாண்டும் இல்லை. இவ்வுரிமைப் பெருமிதம் தமிழ் மகளின் தகுதியைப் பறை சாற்றும்''[35] என்று பல்வகையாகத் தொகுத்துத் தந்துள்ளார்.

க. திலகவதி அவர்கள் தம் 'சங்க கால மகளிர் வாழ்வியல்' என்னும் நூலில் சங்கப் பெண்புலவர் தம் கல்விசார் செய்திகளைப் புலவர் வாரியாகத் தொகுத்துத் தந்துள்ளார்.[36] அவர் தம் முடிவாகக் கீழ்க்காணும் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். அவை,

“அக்காலத் தமிழகத்தில் கல்வியின் சிறப்பு நன்கு உணரப்பட்டுச் சமுதாயத்தின் அனைத்து நிலையிலும் நன்க பரவித் திகழ்ந்து உள்ளது. வாழ்க்கையின் பிற துறைகளைப் போலவே கல்வியிலும் ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் கற்கும் நிலை இருந்துள்ளது. மகளிர் கல்வியில் சிறந்து விளங்கியுள்ளதைப் பெண்பாற் புலவர்கள் பாடிச்சென்றுள்ள சங்கப் பாடல்களின் கல்வித்திறத்தால் நன்குணரலாம். இன்று கிடைத்துள்ள சங்கப் பாடல்களைப் பாடிய கவிஞர்களுள் சற்றேறத்தாழ நாற்பது புலவர்கள் பெண்களாக இருப்பதனை நோக்குங்கால் அக்காலம் பெண்கல்வி நிலையை நன்குணரலாம். எம் மொழியிலும் கற்றவர் அனைவரும் கவிபாடும் திறமை சான்ற கவிஞர்களாதல் என்பது இயலாது. அது கட்டாயமுமன்று. பாடல்கள் கிடைத்த கவிஞர்கள் நாற்பதின்மர் என்றால் பாடல் கிடைக்காமையால் விடுபட்ட பெண் புலவர்களும், கவிதை இயற்றாது புலமை சான்று விளங்கிய பெண் புலவர்களும் பெரும் எண்ணிக்கையில் அக்காலத்தில் இருந்திருத்தல் வேண்டும். சங்ககால எல்லையில் உலகின் பிற பகுதிகளுள் சிறந்து விளங்கிய சமுதாயங்களில்

வழங்கிய எந்த மொழியிலும், தமிழ் மொழியில் உள்ள பெண்பால் புலவர்களின் எண்ணிக்கையளவு பெண்புலவர்கள் இருந்துள்ளனர் என்பதற்குச் சான்றுகளில்லை.

உடலமைப்புக் கூறுகள், அவை சார்பான இயற்கைக் கடமைகள் ஆகியவற்றிலன்றிப் பிற எவ்வகையிலும் பழந்தமிழ்ப் புலவர்களிடையே ஆடவர்–பெண்டிர் எனும் வேறுபாடு இடம்பெறவே இல்லை. பெண்புலவர்களும் ஆடவர்களைப் போலவே அரசவைக் கவிஞராய், அரசியல் தூது செல்லும் தகுதி சான்றவராய், அறமுரைக்கும் சீலர்களாய் விளங்கியுள்ளனர். ஈன்று புறந்தருதலோடு அமையாமல் தம் புதல்வர்களை வீரம் சான்றவர்களாய்க் காண்பதிலும் பெண்கள் வீறு கொண்டு விளங்கினர் என்பதனை, அவர்கள் பாடிய பாடல்களால் நன்குணர முடிகிறது. தாம் பெற்றிருந்த கல்விச் சிறப்பால் சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்டிர் சிறந்த வாழ்க்கைத் துணையாக, தாயாக, சான்றோராக வாழும் நிலையில் விளங்கியுள்ளனர். காலப் போக்கில் தமிழகத்தில் கால்கொண்ட வேற்று நாகரிகம் – சமயம் போன்றவற்றின் தாக்குதலினால் இடைக்காலத்தே கல்வியிலும், பிற வாழ்க்கைத் துறைகளிலும் மகளிர் தாழ்நிலை எய்தலாயினர். 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம்' என்னும் இக்கால மகளிர் சமுதாய எழுச்சி முழக்கம், இடைக்கால மகளிரின் இழிந்த நிலையை நினைந்து எழுந்ததேயன்றிச் சங்க கால மகளிரின் நிலை குறித்து எழுந்ததன்று. சங்க காலப் பெண்டிர் பெற்றிருந்த கல்விநிலை அவர்களுடைய மாட்சிக்குக் காரணமாக அமைந்தது.[37]

மேற்கண்ட செய்திகளிலிருந்து பெண்புலவர்களின் கல்வி குறித்த செய்திகளை அறிய முடியும்.

### 3.4.3 கலைகள்

சங்கப் பெண்புலவர் பாடல்களில் வெளிப்படும் கலைகள் பற்றிய செய்திகளை அறிவதன் மூலம், அக்காலப் பெண்கள் அறிந்து கொண்டிருக்கும்

கலைகள் பற்றியும் அக்காலச் சமுதாயத்தில் விளங்கிய கலைகளையும் அறிந்து கொள்ள முடியும்.

கலை என்பது மனிதனின் மிகப்பெரிய ஒரு கண்டுபிடிப்பாகும். மனித நாகரிகம் வளர்ந்தபோதே கவின்கலைகளும் அதனோடு சேர்ந்தே வளர்ந்தன. கலை என்பது நாகரிகம், பண்பாடு முதலியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகும்.

கலையுணர்ச்சி மகளிர்க்கு இயல்பாய் அமைந்த தனி உணர்ச்சியாகும். எதனையும் அழகுபடச் செய்வதும் அழகுறக் காட்டுவதும் பெண்களுக்கே அமைந்த திறமாகும்.

போர்க்களத்தின்கண் விழுப்புண் பட்ட தன் கணவனது நோயினை இசை பாடி மகளிர் தணிய வைத்த செய்தியை புறநானூற்றுச் செய்யுள் (281) கூறுகிறது. உள்ளக் குறிப்பை உடம்பில் தோற்றிக் காட்டும் மெய்ப்பாடுகளால், வெளிப்படுத்தி விறல்பட நடிக்கும் விறலியரைப் பற்றிய குறிப்புகள் பலவுண்டு. நாட்டிய நன்னூலை நன்கு கடைப்பிடித்து அழகிலும் ஆடலிலும் பாடலிலும் வல்ல பெண்கள் ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது முடிய ஏழாண்டுகள் கற்றனர். ஆடலுடன் யாழும் குழலும் பயின்றிருந்தனர். ஊர்ப்பொதுமன்றங்களில் குரவைக் கூத்தும் நடைபெறும். ஆடவரும் பெண்டிரும் சேர எழுவர். ஒன்பதின்மர் கூடிக் கைகோத்து வளைந்து நின்று பாடியாடுவதும் உண்டு. குரவைக் கூத்து நிகழுமிடங்களில் தலை மக்கள் வருவதும் ஆடற்குத் தலைக்கை தருதலும் இயல்பு. விழாக் காலத்தே மகளிர் துணங்கை ஆடுதல் வழக்கம். இமனை 'மகளிர் தழீஇய துணங்கை'[38] என்னும் பாடலில் ஆதிமந்தியார் குறிப்பிடுகிறார். இதனோடு ஒத்த கருத்தொன்றை 'மகளிர் தம்முள் தழுவிக் கொண்டாடுதல்' இக்கூத்து என ஔவையார் குறிப்பிடுகிறார்.[39]

உணவு சமைக்கும் கலை, உடம்பில் பூசும் நறுமணப் பொடியமைத்தல், ஓவியம் வரைதல், மாலை தொடுத்தல், கணக்கு வகை அறிதல், பிறர் உள்ளக் கருத்தைக் குறிப்பினால் அறிதல், இனிமையாகப் பேசுதல் முதலியன மகளிர் சிறப்பாகக் கற்றக் கலைத் துறைகளாகும். கைவல்லான் புனைந்த ஓவியம் போலத் தாம் வாழும் இல்லக் காட்சி தருவதாக ஒரு பெண் புலவர் பாடுகிறார். சித்திரத்தில் பழகிப் பழகித் தோய்ந்து தோய்ந்து களித்த கலையுள்ளந்தானே இப்படிப் பாடமுடியும்.

“மோர், நெய் விற்றல், பண்ட மாற்று செய்தல், பூ, வெற்றிலை விற்றல், இன்சுவைப் பண்ணியம் விற்றல், உப்பு வாணிகம் செய்தல் முதலிய பல்வினையாற்றும் மகளிரும் வாழ்ந்தனர். மனைக்கண் வாழ்ந்த மகளிர் இல்லறக் கடமைகளில் ஓய்வு காணும் பொழுது ஓவியம் வரைதல், தடுக்குப் பின்னுதல், முதலிய நுண்கலைகளிலும் வல்லவராயிருந்தனர். ஆடையினைத் தூய்மையாகப் பொருத்திக் கஞ்சி தோய்த்துக் கொடுக்கும் வண்ணாராகப் பெண்டிர் ‘புலைத்தியர்’ எனச் சிறப்பாகப் போற்றப் பெற்றனர். பொருளுடைமையாலும் இன்மையாலும் வாழும் குடிப்பிறந்தார் ஆகிய (ஆடவர் –பெண்டிர்) இரு திறத்தாரும், அறிவு முதலியவற்றில் சிறந்தோரும் மெய்ம்முயற்சி வகையால் வருந்தி வாழ்வோருமாக இருவகைப் படுவர். கூடவே, உயர்நிலை வாழ்நிலை என இரு வேறுபட்டு இயங்கும் நிலை பண்டும் நிலவியதைக் காணலாம்’’[40] என ஔவை நடராசன் தொகுத்துரைக்கிறார்.

பெண்கள் எல்லாக் காலங்களிலும் இசைக்கலை வல்லவராக விளங்கியமை அறியமுடிகிறது. சங்க இலக்கியம் காட்டும் பெண்களும் இசைக்கலையில் வல்லவராக இருந்துள்ளனர். “யாழ் , குழல் போன்ற கருவிகளை வாசித்தல், இசையொடு பாடுதல், பிறர் உள்ளக் கருத்தைக் குறிப்பால் அறிதல், எண்ணிய கருத்துக்களை நயம்படக் கூறும் சொல்லாற்றல் பெற்றிருத்தல், கண்கவரும் ஓவியம் வரைதல் முதலிய கலைகளில் பெண்கள் வல்லவராய் விளங்கினர்.

வாழ்க்கையில் மகிழ்ச்சி விளைக்கும் கலைகள் பலவற்றையும் தமிழ் மகளிர் ஐந்தாம் வயது நிரம்பிப் பன்னிரண்டாம் வயது முடியவுள்ள ஏழாண்டுகளிலும் நன்றாகக் கற்றுணர்ந்தனர்''[41] என்று வெள்ளைவாரணர் குறிப்பிடுகிறார்.

அஞ்சியத்தை மகள் நாகையார் என்னும் புலவர், சங்க கால மகளிர் இசையில் நுண்ணிய அறிவுடையவராய்த் திகழ்ந்தனர் என்பதை,

**தொல்இசை நிறீஇய உரைசால் பாண்மகன்**
**எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும்**
**புதுவது புனைந்த திறத்தினும்**
**வதுவை நாளினும் இனியனால் எமக்கே[42]**

என்னும் அகநானூற்றுப் பாடல் மூலம் விளக்குகிறார்.

சங்க காலத்தில் அகவன் மகளிர் பாடல், ஆடல் மகளிர் பாடல், உழிஞைப் பாடல், தழிஞ்சிப் பாடல், விறற்களப் பாடல் முதலிய பாடல் வகைகளும் குறிஞ்சிப் பண், மருதப் பண், பாலைப் பண், காஞ்சிப் பண், செவ்வழிப் பண், பஞ்சுரப்பண், விளரிப்பண் முதலிய பண் வகைகளும் வழங்கியுள்ளமை காணமுடிகிறது.

'கூத்து' என்னும் நிகழ்த்து கலையிலும் பெண்கள் சிறந்து விளங்கியுள்ளனர். கூத்துக்கலை வல்லவர்களுள் ஆடவர் கூத்தர் என்றும், மகளிர் கூத்தியர் என்றும் அழைக்கப்படுவர். உள்ளக் குறிப்புப் புறத்தார்க்குப் புலப்படுமாறு திறமையோடு ஆடும் மகளிர் விறலியர் எனப்பட்டனர். பாணர், பொருநர், கூத்தர் ஆகிய ஆண் கலைஞர்களைப் போலவே விறலியராகிய பெண்கலைஞரும் சங்க காலத்தில் ஒத்த சிறப்பெய்தி விளங்கி உள்ளனர் என்பதனை, 'விறலியாற்றுப்படை' என்னும் பெயரில் அமைந்த துறை கொண்டும் அறியலாம்.

### 3.4.4 போர்ச் செய்திகள்

வாழ்வியல் நிகழ்வுகளில் சங்க இலக்கியத்தைப் பொறுத்த வரையில் போர்ச்செய்திகளும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. காதல் வாழ்வில் களித்தது போலவே நாட்டு வாழ்விலும் விருப்பம் கொண்டனர். போர் மற்றும் போருடன் தொடர்புடைய செய்திகள் பெண்புலவர் பாடல்களில் பதிவாகியுள்ளமையினை இங்குக் காணலாம்.

#### 3.4.4.1 ஔவையார்

புறம் சார்ந்தும், போர் சார்ந்தும் அதிகம் பாடிய பெண்பால் புலவர் ஔவையார் ஆவார். அவர் பாடிய புற வாழ்வியல் செய்திகளைக் காணலாம்.

##### 3.4.4.1.1 ஔவையாரும் அதியமானும்

அதியமான் நெடுமான் அஞ்சியைப் பல பாடல்களில் ஔவையார் பாடியுள்ளார். சுமார் 16 பாடல்கள் இவ்வகையில் கிடைக்கின்றன.[43]

**வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்**
**களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை**
**ஆர்கலி நறவின் அதியர் கோமான்**
**போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி**
**பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி**
**நீலமணி மிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெரும நீயே தொலைநிலைப்**
**பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே (புறம் 91)**

என்னும் இப்பாடல் நெல்லிக்கனி ஈந்த அதியமானைப் பாடியதாகும்.

அதியமான் போர்க்களத்தில் போர் செய்து புண்பட்டு நின்ற காட்சியை வேறொரு பாடலில் பதிந்துள்ளார்.

**வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ**
**வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து**
**அண்ணல் யானை யடுகளத்து ஒழிய**
**அருஞ்சமம் ததைய நூறிநீ**
**பெருந்தகை விழுப்புண் பட்டமாறே (புறம் 93)**

என்பது அப்பாடலாகும். இப்பாடலில் சங்க காலத்தில் நடைபெற்ற போர்க்களக் காட்சியை விவரித்துள்ளார்.

சங்க காலத்தில் புலவர்களை அரசர்கள் ஆதரித்தனர். வரிசையறிந்து பொருள் கொடுத்து வாழ்வித்தனர். ஔவையார் அதியமானால் போற்றிப் புரக்கப்பட்டவர். ஒரு சமயம், பொருள் கொடுத்தால் ஔவையார் பிரிந்து சென்று விடுவார் என்று, அவரை விரைந்து பிரிய மாட்டாமையால், பரிசில் கொடுக்கத் தாமதம் செய்தான். அதனையும் ஔவையார் பாடியுள்ளார்.

**கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி**
**தன்அறி யலன்கொல் என்அறி யலன்கொல்**
**அறிவும் புகழும் உடையோர் மாய்ந்துஎன**
**வருந்தலை உலகமும் அன்றே யதனாற்**
**காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை**
**மரம்கொல் தச்சன் கைவல் சிறாஅர்**
**மழுவுடைக் காட்டகத்து அற்றே**
**எத்திசைச் செலினும் அத்திசை சோறே (புறம் 206)**

என்பது அப்பாடல் ஆகும். இப்பாடலின் மூலம் சங்க காலப்பெண் புலவர் ஒருவரின் மன உறுதியையும் தன் மானத்தையும் அறிய முடிகிறது.

அதியமான் கோவலூரைப் போரில் வெற்றி கொண்டபோது, அதனையும் ஔவையார் பாடியுள்ளார்.

**பூஆர் காவின் புனிற்றுப் புலால் நெடுவேல்**
**எழுபொறி நாட்டத்து எழாஅத் தாயம்**
**வழுஇன்று எய்தியும் அமையாய் செருவேட்டு**
**இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்**
**சென்று அமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய**
**அன்றும் பாடுநர்க்கு அரியை இன்றும்**
**பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ**
**முரண்மிகு கோவலூர் நூறிநின்**
**அரண் அடு திகிரி ஏந்திய தோளே (புறம் 99)**

பண்டைய தமிழரின் வரலாற்றை எழுதுவதற்கு, வேறு தரவுகள் இல்லாத நிலையில் ஔவையாரின் இப்பதிவுகள் மிகப்பெரும் அளவில் வரலாறு எழுதுவதற்கு உதவியுள்ளன.

இருவேந்தர் இருவரிடையே போர்ச் சூழல் ஏற்பட்டபோது போரைத் தடுத்துச் சந்து செய்விக்கும் பணியைப் பெண்புலவரான ஔவையாரும் செய்துள்ளார். அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் ஏற்பட்ட பகையைப் போக்கும் நோக்கில், தொண்டைமானைச் சந்தித்து இவர் பாடிய பாடல் ஒன்றால் மிகப்பெரும் அழிவைச் செய்யும் போரைத் தடுத்த செய்தி புலனாகிறது.

**இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து**

**கடியுடை வியல் நகரவ்வே, அவ்வே**
**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**
**கொல்துறைக் குற்றில மாதோ என்றும்**
**உண்டாயின் பதங்கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல் எம்கோமான் வைந்நுதி வேலே (புறம் 95)**

என்னும் பாடல், பண்டைக் காலப் போர்த் தூதுவர் ஒருவரின் செயலைப் பெண் புலவர் ஒருவர் செய்ததைக் குறிப்பிடுகிறது. ஒரு பெண்ணுக்கு, அக்காலத்தில் இருந்த மரியாதையைக் காணலாம்.

### 3.4.4.1.2 பொருட்டெழினி

அதியமானைப் பாடிய ஔவை அவன் மகன் பொருட்டெழினியையும் பாடியுள்ளார்.

**அலர்பூந் தும்பை அம்பகட்டு மார்பின்**
**திரண்டு நீடு தடக்கை என்னை இளையோற்கு**
**இரண்டு எழுந்தனவால் பகையே ஒன்றே**
**பூப்போல் உண்கண் பசந்துதோள் நுணுகி.**
**நோக்கிய மகளிர்ப் பிணித்தன்று ஒன்றே**
**விழவின்று ஆயினும் படுபதம் பிழையாது**
**மைஊன் மொசித்த ஒக்கலொடு துறைநீர்க்**
**கைமான் கொள்ளு மோஎன**
**உறையுள் முனியும் அவன் செல்லும் ஊரே (புறம்96)**

என்னும் பாடலிலும்,

எருதே யிளைய நுகம் உணராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
அவல்இழியினும் மிசை ஏறினும்
அவனது அறியுநர் யார்என உமணர்
கீழ்மரத்து யாத்த சேமஅச்சு அன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோர் திங்கள்
நாள்நிறை மதியத்து அனையை இருள்
யாவண தோறின் நிழல் வாழ் வோர்க்கே (புறம் 102)

என்னும் பாடலிலும் பொருட்டெழினி பற்றிய குறிப்புகளை ஔவையார் குறித்துள்ளார்.

### 3.4.4.1.3 நாஞ்சில் வள்ளுவன்

தமிழகத்தின் தென்பகுதியில் உள்ளது நாஞ்சில் நாடு. இப்பகுதியை ஆட்சி செய்த நாஞ்சில் வள்ளுவன் என்னும் குறுநில மன்னனையும் ஔவையார் பாடியுள்ளார். இப்பாடலின் மூலம் ஔவையார் நாஞ்சில் நாட்டிலும் பயணம் செய்துள்ளமை தெரிய வருகிறது.

தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டினே மாகத் தான்பிறர்
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத்து அன்னதுஓர்
பெருங்களிறு நல்கியோனே அன்னது ஓர்
தேற்றா ஈகையும் உளது கொல்
போற்றார் அம்ம பெரியோர்தங் கடனே (புறம் 140)

என்பது அப்பாடலாகும்.

### 3.4.4.1.4 வேறு சில மன்னர்கள்

சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் சேர்ந்து இருந்த போது பாடிய பாடல் ஒன்றும் ஔவையாரால் பாடப்பட்டுள்ளது.

**நாகத்து அன்ன பாகார் மண்டிலம்**
**தமவே ஆயினும் தம்மொடு செல்லா**
**வேற்றோர் ஆயினு நோற்றோர்க்கு ஒழியும்**
**ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்**
**பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து**
**பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**நார்அரி தேறல் மாந்தி மகிழ் சிறந்து**
**இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி**
**வாழ்தல் வேண்டும் இவண் வரைந்து வைகல்**
**வாழச் செய்த நல்வினை அல்லது**
**ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை**
**ஒன்றுபுரிந்து அடங்கிய இருபிறப்பாளர்**
**முத்தீப் புரையக் காண்தக இருந்த**
**கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்**
**யான்அறி அளவையோ விதுவே வானத்து**
**வயங்கித் தோன்றும் மீனினும் இம்மெனப்**
**பரந்து இயங்கு மாமழை உறையினும்**
**உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக நும் நாளே (புறம். 367)**

என்பது அப்பாடலாகும்

இவர்கள் தவிர புறநானூற்றில் பாடப் பெற்றோர் பெயர் குறியாது, பொது நோக்கில் அமைந்த பாடல்கள் சிலவற்றையும் ஔவையார் எழுதியுள்ளார்.[44]

ஔவையார் புறப்பாடல்களை ஆராய்ந்த தாயம்மாள் அறவாணன் அவர்கள் சில முடிவுகளை முன் வைக்கிறார். அவை

1. ஔவையார் போரை விரும்பாமை
2. சமாதானமே நல்வழி என உணர்தல்
3. பகையரசனிடம் / பகையரச மக்களிடம் செய்தி சொல்லுதல்
4. தன் அரசனின் பெருமையைப் பகைவனிடம் கூறுதல்
5. தன் அரசனை மட்டுமல்லாது, தன் நாட்டு வீர இளைஞனின் வீரத்தையும் புகழ்தலால் , பகை அரசர் போர் புரியாமல் பயப்பட வைத்தல்
6. மக்கள் நல்லவராக வேண்டும் என்ற அவா இருத்தல்
7. தன் மன்னனிடத்து மதிப்பும், நன்றியும் உடைமை
8. அறிவு மேம்பாடு, அரசியல் ஞானம், வீர உணர்வு செறிந்த தன்மை
9. தன் உயிரைப் பெரிதென எண்ணாத அஞ்சாமை

என்பனவாகும்[45]. இவற்றின் மூலம் ஔவையாரின் பன்முகத்தன்மையை அறிய முடிகிறது.

**3.4.4.2 காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்**

புறநானூற்றில் இவர் பாடியதாக ஒரு பாடல் மட்டுமே காணப் படுகின்றது. ஒரே பாடலாயினும், உரையாசிரியரால் எடுத்துக்காட்டப்படுவதாகவும், பலராலும் சிறப்பாகப் போற்றப்படுவதாகவும் அப்பாடல் விளங்குகிறது.

**நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்**
**முளரி மருங்கின் முதியோர் சிறுவன்**
**படை அழிந்து மாறினன் என்று பலர் கூற**

**மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்**
**முலைஅறுத் திடுவென் யான்எனச் சினைஇக்**
**கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்**
**செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய**
**படுமகன் கிடக்கை காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே (புறம். 278)**

என்பது அப்பாடலாகும்.

"நரம்பு தோன்றி வற்றிய நிரம்பாத மெல்லிய தோள்களையும் தாமரை இதழ்களைப் போன்ற அடிவயிற்றினையும் உடைய கிழவி ஒருத்தி, 'நின் மகன் பகைவர், படையைப் பார்த்து அஞ்சி முதுகுகாட்டிப் புண்பட்டு இறந்தான்' என்று பலர் கூறுவதைக் கேட்டு அதிர்ந்தாள். என்மகன் புறங்காட்டி இறந்தது உண்மையானால், அவன் வாய் வைத்து உண்ட என் முலையை அறுத்து எறிவேன் என்று வஞ்சினம் மொழிந்தாள். சொன்னதை நிறைவேற்றும் பொருட்டுக் கையில் வாள் எடுத்துக் கொண்டு மகன் பங்கேற்ற போர்க்களம் நோக்கிச் சென்றாள். அங்கே பலர் இறந்து கிடந்தனர். பிணக் குவியலில் தன் மகன் பகைவனை எதிர்த்துப் போராடி மார்பில் விழுப்புண் பட்டு இறந்து கிடந்த காட்சியைப் பார்த்தாள். பெரும் மகிழ்வு கொண்டாள். அவனைத் தான் பெற்ற நாளை விடப் பெரிதும் மகிழ்ந்தாள்'' என்று தாயம்மாள் அறவாணன் விளக்கம் கூறுகிறார்.[46]

இப்பாடலின் மூலம், சங்ககாலப் போர்ச் சமுதாயத்தின் ஆணி வேராகப் பெண்கள் இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. மார்பில் புண்பட்டு இறப்பதைப் பெண்கள் விரும்புவதை பெருமையாக நினைப்பதை இப்பாடல் பதிவு செய்கிறது.

### 3.4.4.3 வெறிபாடிய காமக்கண்ணியார்

இவர் பாடியனவாக இரண்டு பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன (புறம் 271, 302) அவை , போர் பற்றிய செய்திகளைப் பேசுகின்றன.

**ஒறுவாய்ப் பட்ட தெரியல் ஊன்செத்துப்**
**பருந்துகொண்டு உகப்ப யாங் கண்டனம்**
**மறம்புகல் மைந்தன் மலைந்த மாறே (புறம். 271: 6–8)**

என்னும்,

**கருங்குரல் நொச்சிக் கண்ணார் குரூஉத்தழை**
**மெல்லிழை மகளிர் ஐதகல் அல்குல்**
**தொடலை யாகவும் கண்டனம் இனியே (புறம்: 271 2–4)**

என்றும் பெண்கள் இடை மறைய நொச்சித் தழையை அணிந்திருந்த காட்சியை வருணிக்கிறார். மேலும், வீரர்கள் நொச்சித் தழையை அணிந்து போர் புரிந்தமையும் இரத்தக் கறைபட்ட நொச்சித் தழையைப் பருந்துகள் இறைச்சி என எடுத்துச் செல்லும் காட்சியும் விளக்கப்பட்டுள்ளது.

இப்பாடல் மூலம் காமக்கண்ணியார் போர்க்களக் காட்சியை நேரில் கண்டவர் அல்லது போர்க்களத்தோடு நெருங்கிய தொடர்புடையவர் என்றும் முடிவுக்கு வரலாம்.

**வேலின் அட்ட களிறு பெயர்த்தென்னின்**
**விண்ணிவர் விசும்பின் மீனும்**
**தண்பெயல் உறையும் உறை ஆற்றாவே (புறம் 302 9–11)**

என்னும் பாடலில், குதிரையில் ஏறி வீரர்கள் வெற்றிப் போர் புரிந்தமையும் போரின் வெற்றியை உணர்த்தும் முகமாக அன்பளிப்புகள் வழங்கப்பட்டமையும், பொற்பூக்கள்

விறலியர் கூந்தலை அணி செய்தமையும், மாலைகள் யாழ் ஏந்திய பாணர்களுக்கு வழங்கப்பட்டமையும், போரில் பங்கேற்றுக் குதிரையில் அமர்ந்து அவன் வென்ற யானைகளை எண்ணிப் பார்க்குமிடத்து விண்ணில் மின்னும் மீன்களையும் வான மழைத்துளிகளையும் எண்ணிப் பார்ப்பதனைப் போன்றும் உள்ளமையும் பதிவாகியுள்ளன.

### 3.4.4.4 நக்கண்ணையார்

இவர் புறநானூற்றில் மூன்று பாடல்கள் பாடியுள்ளார் (புறம்: 83, 84, 85) சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளியைப் பாடுவனவாக இப்பாடல்கள் உள்ளன.

### 3.4.4.5 பொன்முடியார்

இவர் பாடியதாகப் புறநானூற்றில் மூன்று பாடல்கள் காணப்படுகின்றன (புறம்: 299, 310, 312) 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' (புறம் 312) என்னும் பாடல் உள்ளது. இப்பாடல் சங்க காலச் சமுதாயத்தைக் கண் முன் நிறுத்துகிறது. சமுதாய அங்கத்தினர்களின் கடமைகளை விளக்குவதாக இப்பாடல் உள்ளது.

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ் சமம் முடுக்கிக்**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் 312)**

என்பது அப்பாடல் ஆகும்.

## தொகுப்புரை

"சமுதாய நோக்கு'' என்பது சங்கப் பெண் புலவர் பாடல்கள் பற்றிய ஆய்வின் மூன்றாம் இயலாக அமைகிறது. இவ்வியலில் பெண்கள் பாடல்களில் வெளிப்படும் சமுதாயக் கூறுகள் ஆராயப்பட்டுள்ளன.

- ❖ சமுதாயம் என்பதற்கு விளக்கமும் அதன் வகைகளும் முதலில் கொடுக்கப்பட்டுள்ளன.
- ❖ தனி நிலைச் சமூகம், பொதுச் சமூகம் என்னும் நிலைகளில் இப்பகுதி அமைகிறது.
- ❖ சமூகப் பிரிவுகள் (1) நிலம் சார்ந்த பிரிவுகள் (2) தொழில் சார்ந்த பிரிவுகள் (3) சாதி சார்ந்த பிரிவுகள் என்று மூன்று பிரிவுகளில் ஆராயப்பட்டுள்ளன.
- ❖ சங்க காலச் சமுதாயம் அகநிலைச் சமுதாயம், புறநிலைச் சமுதாயம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. அகநிலையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, குறியிடம், பகற்குறி, இரவுக்குறி மற்றும் பிரிவுகள் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.
- ❖ அகவாழ்க்கை என்னும் நிலையில் சங்க காலத்தில் அக வாழ்வில் நடந்த நிகழ்வுகள் ஆராயப்பட்டுள்ளன.
- ❖ புறநிலைச் சமுதாயம் என்னும் பகுதியில் பெண்கள் மற்றும் பெண் புலவரின் சமூக மதிப்பு , கல்வி, கலைகள், போர்ச் செய்திகள் முதலியன பற்றியும், பெண் புலவர்களில் புறச் செய்திகள் அதிகம் பயன்படுத்திப் பாடல் எழுதிய ஔவையார் பற்றியும் சிறப்பு நிலையில் ஆராயப்பட்டுள்ளன. வேறு புறம் பாடிய புலவர்களும் ஆராயப்பட்டுள்ளனர்.

## மேற்கோள்கள்


1. கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, ப.– 479

2. The New Encyclopaedia Britanica Micropaedia Vol IX . P/315. Society

3. The Oxford English Dictionary. Vol. IX P.360

4. புறநானூறு, பா.எ – 189

5. அகநானூறு, பா.எ – 262 : 2–13

6. புறநானூறு, பா.எ – 186

7. தொல்காப்பியம் , பொருளதிகாரம், அகத்திணையியல், நூ.எ– 20

8. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப–.67

9. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப–.65

10. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப–.108

11. நற்றிணை, பா.எ – 5

12. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப–.169

13. தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், நூ.எ– 51

14. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம், ப–156

15. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம், ப–156

16. தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், நூ.எ– 30

17. ச.பாலசுந்தரம், தொல்காப்பியம், பொருளதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, ப.107–108

18. தொல்காப்பியம் , பொருளதிகாரம், களவியல், நூ.எ– 41

19. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம், ப–244

20. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம், ப–.255

21. அகநானூறு,பா.எ.–22:16;102:12.–13;248:14;272:11;22:16;102:12–13;248:14; 272:11

22. அகநானூறு, பா.எ.– 162 : 9

23. அகநானூறு, பா.எ.– 158:7

24. அகநானூறு, பா.எ.– 58 :13– 14; 290:3; 360:19

25. நற்றிணை, பா.எ.– 90

26. குறுந்தொகை, பா.எ.– 30

27. குறுந்தொகை, பா.எ.– 67 : 1–4

28. அகநானூறு, பா.எ.– 384

29. தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, ப.– 137

30. தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, ப.– 262

31. ஔவை நடராசன் , புலமைச் செல்வியர், ப.– 20. 21

32. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூ.எ–28, 23; கற்பியல், நூ.எ– 47 (இளம்பூரணர்)

33. புறநானூறு , பா.எ.– 206

34. ஔவை நடராசன் , புலமைச் செல்வியர், ப.–22, 23

35. ஔவை நடராசன் , புலமைச் செல்வியர், ப.–23, 24

36. க. திலகவதி, சங்க கால மகளிர் வாழ்வியல், ப– 195– 214

37. க. திலகவதி, சங்க கால மகளிர் வாழ்வியல், ப– 213, 214

38. குறுந்தொகை பா.எ.–, 31

39. குறுந்தொகை, பா.எ.– 364

40. ஔவை நடராசன் , புலமைச் செல்வியர், ப.–28

41. க. வெள்ளைவாரணன், சங்ககாலத் தமிழ்மக்கள், ப.91

42. அகநானூறு, பா.எ.– 352


43. புறநானூறு, பா.எ.– 87–90, 92, 94, 97, 98, 101, 103, 104, 231, 232, 235, 315, 390

44. புறநானூறு, பா.எ.– 187, 269, 286, 290, 295, 311

45. தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, ப.– 36,37

46. தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, ப.– 96, 97

# இயல் 4



# அறக்கருத்துக்கள்

மனித இனம் பழங்குடி வாழ்க்கை நிலையிலிருந்து 'இனக்குழு வாழ்க்கை' நிலையை அடைந்த ஒரு காலகட்டத்தினைப் பிரதிபலிப்பதே சங்க இலக்கியங்கள் ஆகும். காடுகளிலும், மலைகளிலும் வாழ்ந்து கொண்டு தேன், மாமிசம், தினையரிசி முதலியவற்றை, நாளை வேண்டும் என்று சேர்த்து வைக்காது அன்றன்றைய தேவைக்கு மட்டும் உணவு சேகரித்து உண்டு வாழ்ந்த மனிதன், தன் பாதுகாப்புக்காகவும், நாளைக்கு வேண்டிய பொருளை வேளாண்மை செய்தோ, மாமிசத்திற்காக ஆடு, மாடுகளை வளர்க்கவோ, செய்தவற்றைப் பாதுகாக்கவும் இனக்குழுவாகச் சேர்ந்து வாழ ஆரம்பித்தான். அதுவரை, பொதுவுடைமையாக இருந்த பூமி, மனிதன் குழுவாக ஒன்றிணையத் தொடங்கியபோது, தனியுடைமையாக மாறத் தொடங்கியது. இதனால், மனித இனக் குழுக்களிடையே போட்டியும் பொறாமையும் ஏற்பட்டன. அதனால் போர்கள் நடைபெற்றன. ஆரம்பகால இனக்குழுப் போர்கள் அசையும் சொத்துக்களான ஆடுமாடுகளைக் கவர்வதற்காகவே நடைபெற்றன.

தனியாளாக இருந்த மனிதன், தனக்கு இணையாகப் பெண்ணை வைத்துக் கொண்டான். அவருக்குப் பாதுகாப்பாக வீடு அமைத்துக் கொண்டான். குழந்தைகள் பிறந்தன. குழந்தைகள் விளையாடவும், பால் அருந்தவும் செல்லப் பிராணிகளும், ஆடு மாடுகளும் வேளாண் நிலங்களும் அவனுக்குச் சொந்தமாயின. இவற்றைப் பேணிப் பராமரிக்கும் பணியை அவன் ஏற்றுக் கொண்டான். குடும்பம் என்கிற சமூக அமைப்பு உருக் கொண்டது இவ்வாறுதான். இதிலிருந்து 'அரசு' உருவாக்கம் பெற்றது.

தனியுடைமை நிலை பரவியபோது, 'வலிமையுள்ளவன் வாழ்வான்' என்னும் போக்கு நிலவியது. தன் வலிமையால் தனக்குரியதைப் பெறும் ஒருவனிடமிருந்து, தன் செல்வத்தைக் காத்துக் கொள்ள விரும்பும் வலிமையற்ற ஒருவன்

நேர்மையில்லாத வழிமுறைகளைக் கையாளுவான். இங்ஙனம் 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்பர். இதனால், குடும்பச் சட்டங்கள், போர்ச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அக வாழ்க்கையை விடப் புற வாழ்க்கைக்கு, அதிக சட்டங்கள் உருவாயின.

## 4.1 அறிவுரை அறவுரை கூற வேண்டிய தேவை எழுந்த சூழல்

தனி மனிதனாக மனிதன் வாழ்ந்தபோது அறிவுரை கூற வேண்டிய தேவை எழவில்லை. ஆனால், இனக்குழு வாழ்க்கையில் மனிதன் நிரந்தரமானபோது, சட்டங்கள் உருவாயின. அச்சட்டங்களை மனிதன் மதிக்கத் தவறியபோது அறிவுரையோ, அறவுரையோ கூற வேண்டிய தேவை எழுகிறது.

தமிழகத்தில் இனக்குழு வாழ்வை மனிதன் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அறிவுரையோ, அறவுரையோ நிகழ்த்தும் அளவிற்கு 'மதம்' என்ற ஒன்று நிறுவனப் படுத்தப்பட்டிருக்கவில்லை. சங்க இலக்கியம் நிறுவனப்படுத்தப்படாத இனக்குழு வாழ்வையும் நிறுவனப்படுத்தப்பட்டதனால் உண்டாகிய 'அரசுகள்' பேரரசுகள் முதலியவற்றையும் காட்டுகின்றன. சங்க இலக்கியம் முழுமையையும் நோக்கும்போது இந்தப் படிநிலை வளர்ச்சியைக் காணமுடியும். அறக் கோட்பாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்ந்து கொண்டிருந்தபோது, நன்கு நிறுவனப் படுத்தப்பட்ட புறங்சமயங்களான சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டிற்குள் நுழைகின்றன.

அவை, இங்கே இருக்கின்ற வாழ்க்கை முறைகளைக் கேள்விக்குட்படுத்தின. மது, மாது, மாமிசம் முதலியவற்றால் வரும் கேடுகளையும் போர்களினால் வரும் உயிரினச் சேதத்தையும் மக்களுக்கு உணர்த்த ஆரம்பித்தன. இங்கு தான் அறவுரையும் அறிவுரையும் எழ வேண்டிய சூழல் உண்டாகியது.

“சமணம் – பௌத்தம் இந்தியாவில் தோன்றியவை. ஆனால் இந்து சமயத்தின் புறச் சமயங்கள் எனினும் இந்து சமய மூல நூல்களான வேதத்தில் கண்ட வாழ்வியல் அறங்கள் இம்மதங்களிலும் விதந்தோதப்பட்டன. சமண, பௌத்தம் வாழ்க்கையின் துயரங்கட்கான காரணங்களைக் கண்டு அவற்றை அறவே களையக் கருதினால் துறவே உரிய வழி என ஓதின. இந்து சமயமோ, வாழ்க்கையில் ஒரு பிரிவு துறவறம் என்று பேசியது. கொலை, களவு, கள், காமம், பொய் பேசுதல், ஒறுத்தல், துன்புறுத்தல் ஆகிய செயல்கள் குற்றமானவை, கடிய வேண்டியவை எனச் சமண– பௌத்த மதங்கள் வற்புறுத்தின. உலக மதங்கள் யாவும் வலியுறுத்தும் அறங்கள் புறச் சமயங்கட்கு மட்டும் சொந்தமானவை அல்ல. தமிழ் இலக்கியங்கள் இவ்வறங்களை மிக எடுத்துப் பேசுதல் காணலாம். இவை, மேற் கூறிய சமண–பௌத்த மதங்கட்கே உரிய அறங்கள் என்று கூறுதல், நிழலை மெய்யுரு என்று கூறுதலோடு ஒக்கும். மாந்தருக்குத் தேவையான அடிப்படை அறங்களைத் திருக்குறள் மிக வலியுறுத்திப் பேசுகிறது. பலவாகவும் பேசுகிறது. அதனை ஒப்பப் பல அறங்களை ஆசாரக் கோவையிலும் காணலாம்.

**பிறர்மனை கள் களவு சூது கொலையோடு**
**அறன் அறிந்தார் இவ்வைந்தும் நோக்கார் (ஆசா.கோ.37)**

என்றும்,

**பொய் குறளை வெளவல் அழுக்காறு நான்கும்**
**ஐயம்தீர் காட்சியார் சிந்தியார் (ஆசா.கோ.38)**

என்றும் கூறுதல் கொண்டு, இவை சமண அறம் எனலாமா? மற்றவர் யாரும் கைக்கொள்ள வில்லையா? நீர் நிலைகளில் உள்ள நீர் எந்த இடத்துக்கும் பொது. நில இயல்பிற்கு ஏற்ப நிறம் – சுவை பொருந்துதல் போல், சில அறங்களைச் சில மதங்கள் மிக எடுத்தும் வலியுறுத்தியும் பேசியிருக்கும் இவ்வுண்மைகளைத் தேருதல் அறிஞர் கடனாம்’’[1] என்னும் அறிஞர் ஒருவர் கூற்றில் அவர்

வைதீகத்திற்கு ஆதரவாகப் பேசினாலும், இலக்கியப் பதிவாக நமக்குக் கிடைப்பவை சமண பௌத்த அறங்களே ஆகும்.

### 4.1.1 சமயப் பின்புலம்

சமணம் – பௌத்தம் முதலியவை அறம் சார்ந்த கருத்துக்களைப் பரப்பியவை என்பதைக் கண்டோம். இங்குச் சமண, பௌத்த அறங்களுக்குப் பின்புலமாக விளங்கும் 'சமயம்' பற்றிக் காணலாம்.

“இவ்வுலகில் பல்வேறு உடம்புடன் பிறந்து வாழும் உயிரினங்களுள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறி உணர்வுகளுடன் ஆறாவதாகிய மனவுணர்வினையும் ஒருங்குப் பெற்றுக் கல்வியறிவு ஒழுக்கங்களால் மேலும் மேலும் வாழ்க்கையில் முன்னேறுதற்குரிய தகுதி மக்கட் குலத்தார்க்கேயுரிய சிறப்பியல்பாகும். இவ்வாறு ஒழுக்கத்தால் மேன் மேலும் உயர்தற்குரிய கல்விப் பயிற்சியும் அதன் பயனாகிய நல்லறிவும் அவ்வறிவின் திறத்தால் சிறந்தன செய்தற்குரிய ஆற்றலும் மக்களினத்தார்க்கே உரியவாதல் பற்றி, ஒழுக்க உணர்வு வாய்க்கப் பெறாமையால் அஃறிணையெனப்பட்ட ஏனைய உயிர்த்தொகுதிகளிலும் ஒழுக்கத்தால் உயரும் தன்மையினையுடையார் மக்களினத்தாரே என்ற கருத்தில் உயர்திணையெனச் சிறப்பிக்கப் பெற்றனர்.

உயர்திணையெனச் சிறப்பிக்கப்பெறும் மக்கட் குலத்தார் அறத்தின் வழிநிலை பெற்றுப் பொருளையீட்டித் தாமும் பிறரும் இன்பமுடன் இனிது வாழ்தல் வேண்டித் தமது வாழ்க்கையில் தவறாது கடைபிடித்தற்கு அமைத்துக் கொண்ட ஒழுக்க நெறிகளே சமயம் என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றன. சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கட் குலத்தார், தமது நிறைவுடைய அறிவினை மட்டுமே துணையாகக் கொண்டு அமைத்துக் கொள்ளும் உலகியல் வாழ்க்கை நெறிமுறைகளை விட நாடு, மொழி இனம் என்னும் வேற்றுமைக்கு இடந்தராது, எல்லா உலகிற்கும் உரிய தனிமுதற் பொருளாய் எல்லாவுயிர்கட்கும்

உயிர்க்குயிராய் உள் நின்று உலகங்களை இயக்கியருளும் தெய்வம் ஒன்று உண்டு என்னுந் தெளிவுடையராய்த், தெய்வத்தின் திருவருள் வழியடங்கி நின்று எல்லா உயிர்களும் வையத்து வாழ்வாங்கு வாழும் வண்ணம் அமைத்துக் கொள்ளும் மெய்ம்மையான ஒழுக்க நெறியே யாவராலும் சமயம் என மேற்கொள்ளத் தகும் சிறப்புடையதாகும். இத்தகைய தெய்வக் கொள்கையின் வழியமைந்த சமயத்தையே 'பொய்தீர் ஒழுக்க நெறி' எனப் போற்றுவர் தெய்வப் புலவர் என்பார் வெள்ளைவாரணன்[2].

சமண சமயத்தின் உயிர் நாடியான கருத்து 'எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாதிருத்தல்' என்பதாகும். எவ்வுயிர்க்கும் எனும்போது எவையெல்லாம் உயிர் எனும் கேள்வி எழுகிறது. அந்த அறிவாராய்ச்சியின் பயனாகத்தான் தொல்காப்பிய மரபியல் கோட்பாடு உருவாயிற்று. உயிரினப் பாகுபாடு உலகிற்குக் கிடைத்தது. சமணத் தத்துவங்கள் அறிவாய்வியல் சிந்தனையின் வழி வந்தவையாகும்.

எனவே, சங்க இலக்கியத்தின் அறவுரை அறிவுரை பற்றிச் சிந்திக்கும் இடத்தில் சமண பௌத்தச் சமயங்களையும் சிந்திக்க வேண்டும் என்பது புலனாகிறது.

### 4.2 அறக் கோட்பாடுகள்

பெரும்பாலும் புறப்பாடல்களிலேயே அறக் கருத்துக்கள் நிறைந்து காணப்படும் என்னும் எண்ணம் இருக்கலாம். ஆனால் அகப் பாடல்களிலும் அறக்கருத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. அறக்கருத்துகளை அகத்திணையில் சில உத்திகளைப் பயன்படுத்திக் கூறுவதும் உண்டு. அவற்றுள் ஒன்று, விலங்கினங்களையோ, பறவைகளையோ அழைத்து விளித்துச் சொல்வதைப் போன்று அமையும்.

**நோயும் இன்பமும் இருவகை நிலையிற்**

**காமங் கண்ணிய மரபிடை தெரிய**

**சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇக்**

**செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்**

**ஒன்றிடத் திருவாக்கும் உரியபாற் கிளவி[3] (தொல்.பொருளியல் 2)**

பாலைத்திணையில், பட்ட பின்றை வரையாது தலைவன் நெட்டிடைக் கழிந்து பொருள் வயிற் பிரிய ஆற்றாளாகிய தலைமகள் தும்பிக்குச் சொல்லியதாகத் தும்பிசேர் கீரனார் பாடிய பாடல்[4]

'துன்புற்றார்க்கு நெஞ்சம் இரங்காத கொடுமையையுடைய தும்பியே, வாழி நீ'! யான் நின்னை நம்பி என் துன்ப நிலையை நினக்கு உரைத்ததனால் என் பிரிவுத் துயரென்னும் நோய் நீங்காமல் துன்புறுகின்றேன். உன் உடல், கருமையானதைப் போலவே உன் அறிவும் கரிதோ? அறனில்லாத தும்பியே!' என் மனையுறக் காக்கும் மாண் பெருங்கிடக்கை முள் மரத்தாலான வேலியில் தாதொரு பூத்துளை காய்க் குலைகளோடு கூடிய பீர்க்கின் பூக்களிலே ஊதித் தேனைப் பருகின நீ நாற்றமின்மையின் தேன் கிடைக்காதென அறிந்து என் மேனியிற் படர்ந்துள்ள பசலையிடத்து ஊதவில்லை! நின் சிறு குறும் பேட்டினுக்கு விரைவுடன் ஓடி நெஞ்சு நெகிழ் செய்து ஊடலைத் தீர்த்ததன் பயன்தானோ இது? அன்பில்லாத என் காதலர் என்னைப் பிரிவினால் வருந்த விட்டு வெம்மலை அருஞ்சுரம் சென்றுள்ளார்.

அங்கு சென்று, அவர் இங்கு வர என் துயர நிலையை அவர்க்கு உரையாய் என்கிறாள் தலைவி.

**அறிவும் கரிதோ அறனிலோய் நினக்கே (நற். 277)**

என்னும் அடியில் வரும் 'அறனிலோய்' என்னும் சொல்லாட்சி கவனத்திற்குரியது.

அடுத்து, குறிஞ்சித் திணையில், தோழி கிளி மேல் வைத்துச் சிறைப்புறமாகச் செறிப்பு (இற்செறிப்பு) அறிவுறீஇய துறையில் கபிலர் நற்றிணையில் பாடிய பாடல்[5]

'முறம் போலும் செவிகளையுடைய யானையினது 'தடக்கைகளைப் போல் வளைந்து தலைசாய்த்துள்ள திணைக் கதிர்களை, வரையாது வழங்கும் வள்ளலின் கொடை போலக் கருதி கிளையோடு உண்ணுகின்ற கிளிக் கூட்டமே'!.

தலைவன் நம்மொடு களவின்பத்தைத் துய்த்துச் சென்றதன் பின்னர், அறநெறியில் நில்லாத அன்னையானவள் எம்மை வருத்திக் காவலின்றி அழிகின்ற திணைப் புனத்தைக் காப்பதற்கும் விடாமல் இருக்கின்றாள். என்பதைக் கிளிகளே, நீவிர் அறிவீரல்லவோ ?. முல்லை, குவளை முதலிய மலர்களாலான மாலையணிந்து வில்லையேந்தி எம்பொருட்டாக வரும் தலைவனைக் காண்பீரானால் சிறிதளவேனும் அவனுக்கு நன்கு புரியுமாறு எம்முடைய துயர நிலையை உரைப்பீராக என்கிறாள் தோழி.

இப்பாடலில் வரும் இறுதியடியில் 'அறனிலயாயே' என்னும் சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது.

அடுத்து, வரைவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைவி பிரிவாற்ற இல்லாது நாணுவரை இறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்துழி அவன் வந்து சாரத் தெளிந்தமை.

கண்டார் கூறிற்றென்று கூறியதாக வரும் நெய்தற் கலிப் பாடல்[6] நீ யுற்ற வருத்தம் என்ன ? வருத்தம் செய்தவர் யார் ? உற்ற வருத்தத்தை எங்கட்கு உரையென்று சொல்லிக் கேட்கின்றவர்களே ! வருத்தம் வந்த வழியைக் கேளுங்கள்.

ஒருவன் என்னுற்ற எவ்வம் நினக்கு யான் உரைக்குமளவும் என்னுயிர் தங்கிற்று என்று கூறி மருவினான். மருவு வழிப்பட்டது என் நெஞ்சு அதனால், அவனைத் தேடித் தெரிந்து' என் நெஞ்சினைக் கூட்டிக் கொள்வேன் என்றாள். அவ்வாறு தன்னால் தேடுதல் அறிதென்று கருதித் திங்களுள் தோன்றியிருந்த முயல் தேடித் தருமெனக் கருதி, அம்முயலை நோக்கிக் கூறுவாள்.

'குறுமுயலே'! அறிவு வேறுபட்ட என் நெஞ்சைக் கூட்டிக் கொள்ளக் கருதின வருத்தத்தைத் தீராயாயின் எம் தலைவன் இருக்கின்ற இடத்தைக் காட்டுவாய். அவ்வாறு காட்டாயாயின் நின்னிடத்தே கதநாய் கொளுத்துவேன், வேட்டுவர் உள்வழிச் செப்புவேன், அலைத்து மதியொடு பாம்பு மடுப்பேன், என்று அவள் உரைக்கவும் முயல் வெண் மேகத்தே மறைந்ததனைக் கண்டு மேலும் தொடருவாள்.

தாழை நிறைந்த துவர் மணற் கனலுள், தலைவனைத் தேடி ஓடுவேன், ஓடி ஒளிப்பேன், ஒளிந்திருந்து தேடுவேன், நீயும் ஒளிந்திருந்து தேடுவாய் என்று கூறிப் பின் தலைவனோடு உறவு கொண்ட இடங்களைக் காட்டுகின்றாள்.

ஆய் பூ அரும்பின் அலர் கொண்டு என் கோதையைப் புனைந்த இடம் இதுதான், காய்ப் பாவையையும், மலர்களையும் காட்டிப் பின் விளையாடிய இடம் இது தான், தொய்யில் எழுதிப் புனைந்த இடம் இதுதான். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த அறனில்லாதவன் என்னை பிரியேன் எனத் தோற்றி மெல்ல முயங்கிய இடம் இதுதான் என்று கூறினாள்.

இப்பாடலில் 'அறனில்லான் பைய முயங்கிய யுழி' என்னும் சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது.

**இனி, அறிவும் கரிதோ அறனி லோய் நினக்கே**

**அறனில் யாயே**

**அறனில்லான் (தலைவன்)**

ஆகிய மூன்று அடிகளிலும், முறையே அறனில்லாத தும்பி என்றும், அறனில்லாத தாய் (அன்னை) என்றும் அறனில்லாத தலைவன் என்றும் குறிக்கப்படுவதனைக் காண்கின்றோம்.

தலைவியினுடைய பிரிவுத் தன்மையைத் தலைவனுக்குச் சென்று கூறாததால், தும்பி அறனில்லாத தும்பி எனப்படுகின்றது (தும்பியிடம்). தாய் தினைப்புனம் காவல் காக்கத் தலைவியை அனுப்பாததன் மூலம் தலைவி, தலைவனைச் சந்திக்க இயலாமல் (இற்செறிப்பதால்) தாய், அறனில்லாத தாய் எனப்படுகிறாள்(கிளியிடம்).

'தையால் தேறு' எனத் தேற்றிப் பைய முயங்கிய தலைவன் தலைவிக்கு மருவி ஊட்டித் தலைவியின் உண்மை நலனுண்டு ஒளித்ததால் தலைவன் அறனில்லாத தலைவன் எனப்படுகின்றான் (முயலிடம்).

'அறம் என்னும் சொல்லிற்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் என்ற வகையான பொருட்கள் பெருவழக்காக வழங்கப்பட்டு வருகின்றன.

'தனி மனிதனுடைய உரிமைகளும் கடமைகளும் சமூகப் பிணைப்பும் குடும்ப இணைப்பும் பழக்க வழக்கங்களும் விருப்பு வெறுப்பு என்னும் இயல்புகளுமாகிய அனைத்தும் அறத்தின் கோட்பாட்டினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன[7] என்றும் கூறப்படும் இலக்கண நெறிக்கு ஏற்ப, 'கன்னியர் காதல் கொண்டு களவு இன்பத்தில் ஈடுபட்டு இல்லற வாழ்க்கை அமைப்பது அறம் என்றும், அந்தக் களவு வாழ்க்கைக்கு உதவி செய்யாத மாறுபாடான செயல்களெல்லாம் அறத்திற்கு மாறினவை அறனில்லாதவை என்றும் கொள்ளும் அறக்கோட்பாடு சங்க காலத்தில் நிலவியது எனக் கொள்ளத் தோன்றுகிறது.

'களவிற் சிறந்த தலைமகனை வழிபட்டுத் தலைமகள் செல்வது அறந்தலைப் பிரியாவாறு' என்பதும்

**இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்**
**சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்**
**அறந்தலைப் பிரியா ஆறுமற்ற துவே**[8]

'களவில் உயிருதவி புரிந்த தலைமகனுக்குத் தலைமகளைக் கொடுக்க நினையாது நொது மலர்க்குக் கொடுக்க நினைந்தால் இயற்கையுந் தன் செவ்வி கெட்டுப் பயன் தராது' என்பதும்,

**வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன் தொடா**
**கொல்லை குரல்வாங்கி ஈனா – மலை வாழ்நர்**
**அல்ல புரிந் தொழுக லான்**[9]

ஈதல் என்பது பிறருக்குப் பொருள் கொடுத்து உதவுவதே. பழந்தமிழர்களிடையே ஈதல் என்பது தலையாய பண்புகளில் மிக முக்கியமான பண்பாகக் கருதப்படுகிறது. அகம் சார்ந்த நிலையிலும் தலைவன், தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்லுதல் என்பது ஈட்டிய செல்வத்தைப் பிறருக்கு ஈதல் என்ற பண்பின் அடிப்படையிலேயே அமைவதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. குவிந்திருந்தப் பொருள்களெல்லாம் இல்லையென்று வருபவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்துப் போய் விட்டதே, இனிமேல் வருபவர்களுக்குப் பொருளைக் கொடுக்காமல் இல்லையென்று கூறினால் என் வாழ்க்கைக்கே இழிவாகும் என்பதைக் கலித்தொகைப் பாடல் ஒன்றில் காண முடிகிறது.

**தொலைவு ஆகி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என**
**இல் …. என இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு**[10]

இப்பாடலின் மூலம் தமிழர்களின் தலையாயப் பண்புகளில் ஒன்றான ஈதல் சிறப்பை அறிய முடிகிறது.

அடுத்து, செய்ந்நன்றி மறவாமை என்பது மனிதர்களிடம் இருக்க வேண்டிய மிக முக்கியமான பண்புகளில் ஒன்றாகும். இத்தகைய பண்பு உள்ளோரை சான்றோராகப் போற்றுகின்றார்,வள்ளுவர். ஒருவர் செய்த உதவி சிறிதானாலும் அவ்வுதவிக்குக் கை மாறாகத் தக்க சமயத்தில் உதவி செய்வதே செய்ந்நன்றி ஆகும். இவ்வாறு ஒருவர் செய்யும் உதவிக்கு மாறாகத் திருப்பி காலம் கருதி உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தை தன் வாழ்வியலாகக் கொண்டு வாழ்ந்தனர் நம் முன்னோர்கள். அதோடு வருங்காலச் சந்ததியினரும் இத்தகைய அறப்பண்பைப் பின்பற்றி வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் (அற இலக்கியங்களான திருக்குறள், நாலடியார், நாண்மணிக்கடிகை) தமது இலக்கியங்களில் இத்தகைய உயரிய கருத்தை விதைத்துச் சென்றுள்ளார். அந்த வகையில் அகம் சார்ந்த நிலையில் தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் செய்ந்நன்றி பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

தலைவனின் பிரிவால் வனப்பு நீங்கப் பெற்ற தலைவி பெறும் ஒப்பனைகளால் தன் உடம்பு நலிவுறுவதைச் சரி செய்ய முயலுவதாகக் கூறுமிடத்து,

**முன் ஒன்று , தமக்கு ஆற்றி முயன்றவர் இறுதிக்கண் பின் ஒன்று**
**பெயர்த்து ஆற்றும் பீடுடையாளர் போல்**[11]

இங்குச் செய்நன்றி பற்றிய செய்தி கூறப்படுகிறது. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் போது தண்ணீரை உறிஞ்சிச் செழுமையுற்ற மரங்கள் ஆற்றில் நீர் வற்றிச் சிறு ஓடை போல ஓடிக் கொண்டிருக்கும் போது, முன்பு ஆற்றினால் வளமை பெற்ற மரங்கள், ஆற்றின் பெருமை குறையாமல் இருக்க தன் பூக்களை உதிர்த்துச் சிறப்புச் செய்து, தன் நன்றிக் கடனைத் திருப்பிச்

செலுத்துவதாக அமைகிறது. இவ்வாறு தலைவனின் பிரிவுத் துயரைக் கூறும்போது கூட மக்கள் மனதில் அறப்பண்பை வளர்க்க வேண்டும் என்ற கருத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளமை கலித்தொகைப் பாடலின் வாயிலாக அறிய முடிகின்றது. நம் முன்னோர்கள் இயற்கை நிகழ்வுகளில் கூட செய்நன்றி என்னும் அறப்பண்பைக் கண்டு மகிழ்ந்தன்மையைக் கலித்தொகைப் பாடலின் வாயிலாக அறிய முடிகின்றது.

மேலும், பொய்ச் சான்று பகர்தல் பற்றிய குறிப்பும் உள்ளது. இது அறம் அல்லாத ஒன்றைக் குறிப்பது ஆகும்.

பொய்ச்சான்று பகர்தல் என்பது, உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பிறருக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் பதவி ஆசை, பொருள்களை அபகரித்தல் இவை போன்ற சூழ்நிலைகளில் மனிதனின் மனம் மாறி தவறுதலாகக் கூறுதல் எனலாம். இலக்கியம் தோன்றாக் காலத்திற்கு முன்பிருந்தே இவ்வகையான செயல்கள் சமுதாயத்தில் நிலவி வருவதைச் சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூறும் (பாடல்– 256) சிலப்பதிகாரம் (இந்திர விழா ஊரெடுத்த காதையில் இடம் பெறும். ஐவகை மன்றங்களில் பூதசதுக்க மன்றம்) போன்றவை பொய் சாட்சி கூறுபவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. பிறர் குற்றம் கூறுதல் போலவே பொய்ச் சான்று கூறுதலும், ஒரு தீய செயல். தம் நெஞ்சறியச் செய்த கொடிய செயலைப் பிறர் அறிய வில்லை என மறைத்தலும் உண்டு. ஆனால், ஒருவனுடைய நெஞ்சமே அவனுக்குரிய நெருங்கிய சான்று என்பதைக் கலித்தொகையில்,

**நெஞ்சு அறிந்த கொடியவை மறைப்பினும் அறிபவர்**
**நெஞ்சத்துக் குறுகிய கரி இல்லை**[12]

எனவும், பொய் சாட்சிக் கூறியவன் தன் நிழலின் கீழ் இருந்ததை, அறிந்த மரம் அழகிழந்து வாடியதாக,

**கரி பொய்த்தான் கீழ் இருந்த மரம் போலக் கவின் காடி**[13]

என்பதன் மூலம் பொய்ச்சான்றின் விளைவுகளைக் கலித்தொகை பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது. அற இலக்கியங்களிலும் பொய்ச் சான்று பகர்தல் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மனிதர்களிடத்தும் பிற உயிர்களிடத்தும் உடலளவிலும் மனதளவிலும் தீங்கு விளைவிக்காத நல்ல செயல்களையோ அல்லது சொற்களையோ பயன்படுத்துவது இன்னா செய்யாமை என்று கூறலாம். தன்னுடைய சுய தேவைகளை நிறைவு செய்யப் பிறரைத் துன்புறுத்துதல் கூடாது என்பதை அற இலக்கியங்கள் அனைத்துமே இன்னா செய்தலினால் ஏற்படும் விளைவுகளை நுட்பமாகக் கூறி அத்தீய செயலினைச் செய்யக் கூடாது என்ற கருத்தை மக்களிடையே வலியுறுத்துகின்றன. எடுத்துக் காட்டாகத் திருவள்ளுவர்,

**எனைத் தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
**மாணா செய்யாமை தலை**[14]

என்ற குறளுக்கேற்ப மனவருத்தம் தருகின்ற எந்தச் செயலானாலும் பிறரிடம் தவிர்ப்பதே மனிதன் தன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய சிறந்த கொள்கையாக இருப்பதை உணர முடிகிறது. மேலும் நன்மை அடையும் பொருட்டாகப் பிறருக்குத் தீங்கு செய்தலும் வெறுக்கத் தக்க செயல்களாகும்.

**தமக்கு இனிது என்று, வலிதின் பிறர்க்கு இன்னா**
**செய்வது நன்று ஆகுமோ**[15]

என்ற வரிகளில், புணர்ச்சிக்கு உடன்படாத தலைவியை தன் இன்பம் அடைய வேண்டும் என்பதற்காகத் தலைவன், தலைவியைத் துன்புறுத்துவதை அறச்

செயல்கள் ஆகாது என்பதைத் தலைவி கூறுவதாகக் கலித்தொகைப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

### 4.2.1 களவு ஒழுக்கத்தில் அறச் செய்திகள்

சங்க காலத்தில் தனியே அறநூல் இருந்ததாகப் புலப்படவில்லை. ஆனால் தனித் தனியே பாடப்பட்ட சங்கப் பாடல்களில் அறச் செய்திகள் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்றன. வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் பொருள்கள் அறம், பொருள், இன்பம் வீடு என நான்கென்பர். வீடு நீங்கிய ஏனைய மூன்றையும் தொல்காப்பியம் சங்க இலக்கியமும் குறிப்பிடுகின்றன.

**அந்நிலை மருங்கின் அறமுத லாகிய**
**மும் முதற் பொருட் கும் உரிய என்ப**[16]

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை**[17]

**சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்**
**அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல**[18]

**அறம்பொருள் இன்பமென்றம் மூன்றின்**[19]

அம்மூன்றனுள், இன்பத்தை அகப்பாடல்களும் ஏனைய இரண்டனைப் புறப்பாடல்களும் விரித்துக் கூறும்.

சங்க காலத்தில் வீரமும் கொடையும் இரு கண்ணெனப் பெரிதும் சிறப்பிக்கப்பட்டன. புகழுக்குரிய வாயில்களாக அவையே அமைந்தன. வண்புகழ், 'மறப்புகழ்' எனக் கொடையும் வீரமும் பலவிடத்துப் புகழொடு இயைத்துப்

போற்றப்படும். அகம், புறம் எனப் பகுக்கப்பட்டுள்ள சங்கப் பாடல்களின் தொகை 2381. அவற்றுள் 1862 அகம் தழுவியன. 519 புறம் பற்றியன. 40 அகப் பாடல்களிலும் 75 புறப்பாடல்களிலும் அறச் செய்திகள் வருகின்றன. தோழி, தலைவி, தலைவன், பாணன், பரத்தை, பாங்கன் முதலியோர் கூற்றில் அறச் செய்திகள் காணப்படும். களவுக் காலத்தே தலைவனிடத்தில் திருமணத்தை வலியுறுத்தி முடித்தல் தோழியின் பெரும் பொறுப்பாக இருத்தலினாலும், கற்புக் காலத்தில் பிரிவிடை வருந்தும் தலைவியைத் தேற்றுதல் அவள் கடனாதலினாலும், அவள் கூற்றில் தான் பெரும்பாலும் அறங்கள் பேசப்படுகின்றன. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் பொழுது, அரிய நீதியைப் புறலப்படுத்துகின்றாள். முத்தினாலும் மணியினாலும், பொன்னினாலும் செய்யப்படும் அணிகலன்கள் சிதைந்தால் அவற்றைச் செம்மையுடையவதாகத் திருத்தி அமைத்துக் கொள்ளலாம். ஆனால், பண்பு நலன்களில் ஏதேனும் சிறிது குறைவு ஏற்பட்டாலும் அதனை எக்காரணங் கொண்டும் நிறைவு செய்ய முடியாது. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படல் வேண்டும் என்ற செய்தியை வலியுறுத்திக் களவு ஒழுக்கத்தினைத் திருமணம் முடித்துக் கற்பொழுக்கமாக மாற்றுகின்றாள்.

தலைவன், திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் களவிலேயே தொடர்ந்து இன்பம் காண விழைகின்றான். விரைந்து திருமணம் முடிக்கக் கருதிய தோழி, அலர், வேற்றுவரைவு முதலியவற்றால் வரும் தலைவியின் துன்பத்தை எடுத்துக் கூறுகிறாள். அப்பொழுது ‘பழகியவர் மனம் நோகாமல் நடந்து கொள்வது தானே நாகரிகம்’ என்னும் சீரிய அறக்கருத்தைத் தோழி தலைவனுக்கு எடுத்துக் கூறுகிறாள். நெடுநாள் பழகியவர்கள் நஞ்சினைக் கொடுத்து உண்ணெனக் கூறினும், உண்ணாவிடின் கொடுத்த நண்பரின் உள்ளம் வருந்துமே எனக் கருதி முக மலமர்ச்சியுடன் அதனை உண்பது பண்புடையாரின் செயல்.

முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்[20]

அப்படி இருக்க, அன்பொடு பழகிய தலைவியின் உளம் நோகச் செய்யலாமா? எனத் தோழி தலைவனை வினவுகிறாள்.

தலைவன் தன்பாற் கொண்டுள்ள அன்பு நாளடைவில் குறைந்து வருவது கண்டு தலைவி கலங்குகின்றாள். அப்பொழுது, தோழி ஒருவரிடம் தொடர்பு கொள்வதற்கு முன்பே அவர்களின் குணம், குற்றங்களை நாடி இருக்க வேண்டும். தொடர்பு கொண்டு பின் குறை கண்டால் தக்கதன்று என்னும் நீதியை எடுத்துக் கூறி அமைதிப் படுத்துகின்றாள்.

> .............பெரியோர்
> நாடி நட்பின் அல்லது
> நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே[21]

தலைவன் விரைவில் மணவாது களவை நீட்டிக்கின்றான். அதனால் ஊரில் பலரும் அலர் கூறி எள்ளி நகையாடுகின்றனர்.

அதனைக் கேட்டுத் தலைவி இம்மையில் நன்மை செய்தார்க்குத் தீமை வராது, நன்மையே வரும் என்று கூறுவார்களே! அந்தப் பழமொழி என்னைப் பொறுத்தவரையில் பொய்யாகி விட்டதே என்று தோழியிடம் கூறி வருந்துகின்றாள்.

> ....... ..........இம்மை
> நன்று செய் மருங்கில் தீதில் என்னும்
> தொன்று படு பழமொழி இன்று பொய்த் தன்று கொல்[22]

இதனால், நன்மை செய்வார்க்குத் தீமை வராது என்ற கருத்து பண்டைக் காலத்தில் பழமொழி போல் வழங்கி வந்தது என அறிகிறோம்.

தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு உடன்போக்குச் செல்கின்றான். பாலைவன வழிகளைக் கடந்து செல்லும் பொழுது பல தொல்லைகளைக் கடக்க நேரிடுகின்றது. பின் ஓரிடத்தில் தங்கி இனித் துன்பம் இல்லை. இன்பமே என்று கூறுகின்றான். அப்போது தன் மகிழ்ச்சிக்கு, இடையறாது முயலும் ஆள்வினை உடையார் வழிபடு தெய்வத்தைக் கண் எதிரே கண்டு மகிழ்வதை உரிமை காட்டுகின்றான். ( நற். 9)

**குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான் முந்துறும்** [23]

என்னும் குறட் செய்தி, தலைவன் கூற்றில் அறமாக மிளிர்கின்றது. இரவுக் குறியில் தலைவியைக் காண முடியாமல் சோர்ந்த உள்ளத்தோடு மீள்கின்றான். அப்பொழுது நெஞ்சைப் பார்த்து, நீ இனி அவளைன் அடைய முடியாது வறியவன் இன்பத்தை விரும்புவது போல நீ அவளை விரும்புகின்றாய்.

**இல்லோன் இன்பங் காமுற் றாங்கு** [24]

எனக் கூறுகின்றான். பொருளில்லான் எவ்வகை இன்பத்தையும் எய்த முடியாது என்ற கருத்தினைத் தலைவன் உவமையால் புலப்படுத்துகின்றான். இவ்வாறு களவுப் பாடல்களில் அறச் செய்திகள் பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 4.2.2 கற்பு ஒழுக்கத்தில் அறச் செய்திகள்

தலைவன் பரத்தையிற் பிரிந்தமையால் தலைவி ஊடல் கொள்கின்றாள். தலைவியின் ஊடலைத் தணிக்கத் தலைவன் தோழியை வாயில் வேண்டுகின்றான். தலைவியின் ஊடலைத் தணிப்பதற்காகத் தோழி, தலைவனிடம் சிறிது கடுமையாகப் பேசுகின்றாள். ஒருவன் பட்டங்களையும் பாராட்டுக்களையும்

பெறுவதும், யானை, குதிரை, முதலிய ஊர்திகளில் செல்வதும் செல்வம் எனப்படா. இவை முன் செய்த நல்வினைப் பயனால் வருவன. சான்றோர்கள் செல்வம் என இவற்றை மதியார் அவர்கள், தம்மை அடைந்தாரை எக்காரணங் கொண்டும் துன்புறுத்துவது, அவருக்கு ஏற்படும் துன்பம் கண்டு அஞ்சி, அருள் செய்வதையே செல்வமாக மதிப்பர். உன்னிடம் அந்த அருட்செல்வம் இல்லையே எனக் குறிப்பிடுகின்றாள்.

**நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்**
**செல்வ மன்று தன் செய்வினைப் பயனே**
**சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென் கட் செல்வம் செல்வமென் பதுவே**[25]

அருட்செல்வம் தான் செல்வத்துட் செல்வம் என்னும் கருத்துத் தோழியால் வலியுறுத்தப் படுகிறது.

ஒரு தலைவன் தலைவவியை வலிதின் முயல்கிறான். அவள் வெகுண்டுரைத்தாள். எனக்குப் புல்லுதல் இன்பமாக இருக்கிறது. அதனால் புல்லினேன் என்றான். அதற்கு மறுமொழி கூறிய தலைவியின் சொல் அறமாக மிளிர்கின்றது. தனக்கு இன்பம் என்று பிறர்க்குத் துன்பம் தரலாமா ?

**தமக்கினி தென்று வலிதிற் பிறர்க் கின்னா**
**செய்வது நன்றாமோ மற்று**[26]

இவ்வாறு பல வகையான அறக் கருத்துக்களும் அகத்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன.

தலைவன் பிரியப் போகின்றான் என்பதனைக் குறிப்பிலுணர்ந்து தோழி தலைவிக்குணர்த்துகின்றாள். அதற்கு, அவர் பிரியமாட்டார். அவர் சொன்ன சொல் தவறாதவர், அவர் நட்பு மிக இனியது. தாமரைப் பூவில் தேனை யெடுத்துச் சென்று மலை மேலுள்ள சந்தன மரத்தில் கூடு கட்டும்படியான தேனின் இயல்பு போலச் சிறந்தோர் நட்பு இன்பம் தரும் என்கிறாள் நன்றிணைத் தலைவி. ஆனால், குறுந்தொகைத் தலைவியோ தலைவன் நட்பு நிலத்தினும் பெரிது, கடலினும் ஆழமானது, வானத்திலும் உயர்ந்தது என நட்பின் ஆழம் உயரம் பற்றிப பேசுகிறாள். இவ்வாறு தலைவியர் வாயிலாக நட்பிலக்கணம் சுட்டப் பெறுகிறது.

பிரிவில் மெலிந்த தலைவியைத் தோழி அறிவுரை கூறி ஆற்றுகின்றாள். அதற்குத் தலைவி கூறும் மறுமொழியில் பலவகையான அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. பிரிவாற்றாது தலைவி இறந்து போனால் பிரிந்து சென்று ஈட்டிய பொருளினால் யாது பயன்? இக்கருத்தை வற்புறுத்த மூன்று செய்திகளை அடுக்கிக் கூறுகிறாள் தலைவி.

மருத்துவர்கள் மரம் அழியும்படியாக மருந்திற்கெனப் பட்டையையோ, வேரையோ, இலையையோ கொள்ள மாட்டார்கள். உடல் வலிமை கெடும்படித் துறவிகள் தவம் செய்ய மாட்டார்கள். குடி மக்கள் வறுமையுறுமாறு மன்னர்கள் வரி வாங்க மாட்டார்கள். இத்தலைவியின் உரையால் மருத்துவர், தவ முனிவர், அரசர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் எனக் கூறப்படுதல் காணலாம்.

சங்கப் பாடல்களில் அகத்திணையாயினும், புறத்திணையாயினும் தலைவன், தலைவி, தோழி, பரத்தை முதலிய எவர் கூற்றாயினும் கொடையறம் அழுத்தமாகக் கூறப்படுகின்றது. தொல்காப்பியர் 'மாணலந்தா' எனத் தலைவனைக் கேட்டலைக் கற்பியலில்[27] தோழி கூற்றில் ஒரு துறையாக வகுத்துள்ளார். இதனை அழகுறச் சித்தரித்துக் காட்டுகிறார் சாத்தனார். பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனிடம்

சென்று நம்மிடம் துய்த்த இன்பத்தைத் திருப்பித் தா' எனக் கேட்போம் வா' எனத் தோழி தலைவியை அழைக்கின்றாள். அதற்கு அவள் தரும் விடை, துன்பக் காலத்து ஒருவர் வேண்டி இரந்து பெற்ற ஒன்றைப் பின் திருப்பித் தா என்று அவரைக் கேட்டல் நாம் உயிர் துறந்து சாதல் துன்பந் தருவதாகுமா? என்கிறாள்.

**இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய**
**கொடுத்தவை தாவென சொல்லினும்**
**இன்னா தோறும் இன்னுயிர் இழப்பே**[28]

'இடும்பையால் இன்மை உரைத்தார்க்கு அது நிறைக்கலாற்றாக்கால் தன் மெய் துறப்பான் மலை' எனும் கலித்தொகையும்[29], 'சாதலின் இன்னாத தில்லை இனித தூஉம் ஈதலியையாக் கானட' எனும் குறளும்[30] ஒப்பு நோக்கத் தகும்.

தலைவன் பிரிந்து பொருளீட்டச் செல்வது 'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கில்லை' என்பதனைக் கருதியே தான் 'ஈத்துவக்கும் இன்பம்' மிகச் சிறந்தது என்பது சங்ககாலத்துக் கருத்து. வள்ளுவரும் மகளிர் இன்பத்துக்குத் 'தம்மில் இருந்து தமது பாத்துண்டலை[31] ஒப்புமை காட்டுவர். மருதனிள நாகனார் வள்ளுவரை விட ஒரு படி மேலேறி, தலைவியின் இன்பத்தை விட ஈதல் இன்பம் சிறந்தது' என்று தலைவன் கூற்றில் வைத்துத் தம் கருத்தைப் புலப்படுத்துகின்றார்.

**சுரும்புண விரிந்த பெருந்தண் கோதை**
**இவளினும் சிறந்தன்று ஈதல்**[32]

ஈதல் அறம் சிறப்பிக்க வந்த அடிகளில் தலைவி சூடிய பூமாலையும் வண்டுகளுக்கு விருந்து படைக்கின்றது எனும் கருத்தில் 'சுரும்புண விரிந்த பெருந்தண் கோதை' எனக் கூறியிருப்பது காணலாம்.

### 4.2.3 புறப் பாடல்களில் அறக்கருத்துக்கள்

புறத்திணைப் பாடல்களில் பொருள்மொழிக் காஞ்சி, செவியறிவுறூஉ, முதுமொழிக் காஞ்சி, என்னும் துறைகளில் வரும் பாடல்கள் அறக் கூறுகளைப் புலப்படுத்துகின்றன, புலவர்கள் குறுநில மன்னர்கள் முதலியோர்களைப் பாராட்டும் பாடல்களிலும் அவர்கள் இறந்த நிலையில் பாடும் கையறு நிலைப் பாடல்களிலும் வேந்தர்கள் கூறும் வஞ்சினப் பாடல்களிலும், புலவர்கள் தம் வாழ்க்கை வரலாறு உணர்த்தும் பகுதிகளிலும் சில சமயங்களில் இயற்கைப் புனைவுகளிலும் அறச் செய்திகள் காணப்படுகின்றன. நெடுஞ்செழியனின் மறச் சிறப்பை வியந்து பாராட்டும் இடைக்குன்றூர்கிழார் அவன் வீர இயல்புகளைக் குறிப்பிடுகின்றார்.

**உடன்றுமேல் வந்த வம்ப மன்னரை**
**வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை**
**அழுந்தப் பற்றி அகல் விசும்பு ஆர்ப்பெழக்**
**கவிழ்ந்து நிலஞ்சேர அட்டதை**
**மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே**[33]

இவ்வடிகள் நெடுஞ்செழியனின் பெருமிதச் சான்றாண்மையைக் காட்டும்.

**பெரியோரை வியத்தலும் இலமே,**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே** (புறம்.192)

என்ற கணியன் பூங்குன்றனாரின் கருத்தினை நெடுஞ்செழியன் வீரர்களிடம் நடந்து கொண்ட நிலையில் காண்கிறோம். புறநானூற்றில் ஈதற் சிறப்புக் காணப்படுவதோடு ஈகின்ற முறையும் விரிவாகச் சுட்டப்படுகிறது. இரவலரின் அவலக் குறிப்பை முகத்தான் உணர்ந்து வறுமையைப் போக்க வேண்டும் (புறம் 3) கொடை செய்யும் போது பிறர்பால் சென்று மீண்டும் இரக்காதவாறு மிகுதியாகக் கொடுக்க வேண்டும்(புறம் 68) விருந்தினர்கள் ஒரு நாள் இரு நாள் அன்றிச் பல

நாள் பலரோடு வந்தாலும் தலை நாள் போன்று அகனமர்ந்து முக மலர்ச்சியுடன் விருந்தோம்ப வேண்டும் (புறம் 101) எல்லோரையும் சமனாகப் பொது நோக்குச் கொள்கையால் வரிசையறிந்து சிறப்பு நோக்கி நல்க வேண்டும்(புறம் : 121) ஏற்போருடைய தகுதி பாராது கொடுப்போர் தம் தகுதி உயர்வை அறிந்து வழங்க வேண்டும். இம்மையில் நல்வினை செய்தால் மறுமைப் பயன் கிடைக்கும் என்ற வணிக நோக்கில் கொடை செய்தல் ஆகாது(புறம் : 134) எனக் கொடை பற்றிய செய்திகள் பலவாறாகப் பேசப்படுகின்றன. இம்மையில் நல்வினை செய்தால் அதனை மறுமையில் துய்க்கலாம் என்ற கொள்கை காணப்படினும் அது பிற்காலத்து நீதி நூல்கள் பலவாறு விரித்துப் பேசப்படவில்லை. மறுமை இன்பம் கருதிக் கொடை செய்தல் அறவிலை வணிகம் என முடமோசியாரால் இழித்துக் கூறப்படுகின்றது. அவர் ஆய் அண்டிரனைப் புகழும் போது,

**இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
**அறவிலை வணிகன் ஆயலன்**[34]

என அவர் குறிப்பிடுவார்.

மூவேந்தர் கூறிய வஞ்சினப் பாடல்கள் அறம் நிறைந்தவை. ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் தன் வஞ்சினத்தில்,

**அறனிலை திரியா அன்பின் அவையத்துத்**
**திறனில் ஒருவரை நாட்டி முறைதிரிந்து**
**மெலிகோல் செய்தே னாகுக**[35]

என்றும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

**என் நிழல் வாழ்நர்' செல் நிழல் காணாது**
**கொடியன் எம்இறை எனக் கண்ணீர் பரப்பிக்**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;**

**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவன் ஆக,**
**உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைக என் நிலவரை**
**புரப்போர் புன்கண் கூர**
**இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே**[36]

என்றும், சோழன் நலங்கிள்ளி,

**……. பொருந்திய**
**தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்**
**பல்லிருங் கூந்தல் மகளிர்**
**ஒல்லா முயக்கிடைக் குழைக என் தாரே**[37]

என்று வஞ்சினம் கூறுகின்றனர். இவ்வஞ்சினங்களில் செங்கோற் சிறப்பு, குடியோம்பல், பெரியோரைப் போற்றல், ஈகை, கற்பு முதலிய அறக்கூறுகள் வலியுறுத்தப்படுகின்றன.

கையறு நிலைப் பாடல்களிலும் அறச் செய்திகள் இடம் பெறுகின்றன. மாவண் பாரி மாய்ந்த பின் கலங்கிக் கையற்ற கபிலர்,

**மைம்மீன் புகையினும் தூமகேது தோன்றினும்**
**தென் திசை நோக்கி வெள்ளி ஓடினும்** (புறம். 117)

'ஈன்ற பசுக்கள் வயிறாரப் புல் மேயும், ஊரில் சான்றோர் பலராக இருப்பர். இவற்றுக்கெல்லாம் காரணம் பாரியின் ஆட்சிச் செம்மையே! அத்தகு மேலோன் பொன்றினனே' எனக் கூறி இரங்குவர் (புறம்:117). அரிசில் கிழாரும் அதிகமானின் கோல் செம்மையால் தான் "ஆனிரைகள் எவ்வகை இடர்ப்பாடும்

இன்றி இனிது மேய்கின்றன. வழிப் போக்கர்களும் ஆறலைக் கள்வர்களால் ஏதமின்றித் தாம் வேண்டிய இடத்தில் தங்குகின்றனர். களத்தில் நெற்பொலிகளும் காவலின்றிக் கிடக்கின்றன. எவ்வுயிர்க்கும் கொடிய விலங்குகளினாலும் அல்லல் இல்லை'' என்று தம் கையறு நிலைப் பாடலில் (புறம்230) இயம்புவர். இச்செய்திகளால், அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல் (543) காவலன் காவான் எனின் ஆபயன் குன்றும் (50) என்னும் குறட் கருத்துக்கள் தெளிவாகின்றன.

இயற்கைப் புனைவுகளைப் புனையும் நேரத்திலும் அறக் கருத்துக்களை இயைத்துப் புலவர் பாடல் பாடியுள்ளனர். நிலையாமையைக் காட்டி ஈகையை வற்புறுத்தக் கருதிய உறையூர் முதுகண்ணன் சாத்தனார் திங்களைத் துணைக் கொள்கிறார். திங்கள் மறைகிறது: பின் தோன்றுகிறது; வளர்கிறது: பின் தேய்கிறது . இது போல் உலக மக்கள் இறப்பும் பிறப்பும் தான் வளமும் வறுமையும் என்று திங்களின் இயற்கைப் புனைவு கொண்டு உணர்த்துகிறார்.

**தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்**
**மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்**
**அறியா தோரையும் அறியக் காட்டி**
**திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து**[38]

பாலை நில மரத்தின் பகுதிகளைப் புனைந்தே பல செய்திகளைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ அறிவுறுத்துகிறார்.

**வறியவன் இளமை போல் வாடிய சினையவாய்ச்**
**சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி**
**யார்கண்ணும் இகந்துசெய்து இசை கெட்டான் இறுதி போல**
**வேரொடு மரம் வெம்ப விரிகதிர் தெறுதலின்**

**அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள் வெஃகிக்**
**கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழல்**
**உலகுபோல் உலறிய உயர் மர வெஞ்சுரம்**[39]

கதிரவன் மறையும் காட்சியைக் கொண்டே நல்லந்துவனார் ஓர் அரிய கருத்தைப் புலப்படுத்துவர். புகழ்பெற்ற மன்னவன் நல்லொழுக்கத்தின் நின்று நாட்டினை வறிஞன் ஓம்புமோர் செய்யெனக் காத்துப் பின் தான் செய்த நல்வினைப் பயனைத் துய்க்கத் துறக்கமாகிய வானுலகத்திற்குச் செல்வது போலக் கதிரவன் பகற் பொழுதெல்லாம் தன் கதிர்களால் ஒளியைப் பரப்பி மாலையில் மலையைச் சென்று சேர்கிறான்.

**வெல்புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தால்**
**நல்லாற்றின் உயிர்காத்து நடுக்கறத் தான் செய்த**
**தொல்வினைப் பயன் துய்ப்பத் துறக்கம் வேட்டு எழுந்தாற்போல்**
**பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலை சேர**[40]

இவ்வாறு சில சங்கப் பாடல்கள் நமக்கு இயற்கைப் புனைவு வழியாக அறமுணர்த்துகின்றன.

புறநானூற்றில் 182 – 195 வரையுள்ள பாடல்கள் முழுமையும் அறச் செய்திகள் கொண்டவை. இவற்றை ஒரு சேரக் கண்டவர்களுக்குப் பிற்காலத்தே அறச் செய்திகளைத் தொகுத்துத் தனி நூல் இயற்றலாம் என்னும் எண்ணம் எழுந்திருக்கலாம். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனும் கணியன் பூங்குன்றனாரின் பாடலும் (192). உண்டாலம்ம இவ்வுலகம் (182) எனத் தொடங்கும், கடலுண் மாய்ந்த இளம்பெரு வழுதியின் பாடலும் உலகம் உள்ள அளவும் நின்று அறம் கூறும் பெற்றியன.

பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந் திரியும்[41]

மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்[42]

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே[43]

மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழும் நாளே[44]

ஈயென இரத்தல் இழிந்தன்று[45]

இன்னாதம்ம இவ்வுலகம் இனிய காண்கிதன் இயல்புணர்ந்தோரே[46]

வினையே ஆடவர்க் குயிரே[47]

பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்[48]

வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடையோர்க்கே[49]

முதலியன சங்க இலக்கியத்தில் காணலாகும் அரிய அறச் செய்திகள் ஆகும்.

**4.4 சங்கப் பெண் புலவர் பாடல்களில் அறவுரை**

பெண் புலவர்கள் அறக் கருத்துக்களை எங்ஙனம் பயன்படுத்தி உள்ளனர், என்பது இங்கு ஆராயப்படுகிறது. ‘‘நல்லின்பம் தோற்றுவிப்பது இலக்கியத்தின் பயனாகும். நல்லின்பம் நல்லுணர்வால் பிறப்பது. புலவனுடைய வெற்றியையும் புகழையும் விளக்குவனவாக இன்பத்துறைகளை இயம்புவனவாக மகளிர்

பாடல்கள் இருப்பனவெனினும் ஒழுக்க நீதிகளும் உண்மை அறங்களும் இடையிடையே உணர்த்தப் பட்டுள்ளன என்பார் ஔவை நடராசன் அவர்கள்.[50] பெண்கள் நெஞ்சில் கவித்துவம் மட்டுமல்லாமல், அறிவுரையும் அறவுரையும் கூறும் நெஞ்சமும் உடையவராவர்.

பெண் கவிஞர்களில் அதிகமாக அறம் குறித்துப் பாடியவரும் ஔவையாரே ஆவார். அவர் பாடல்கள் வழி அறியலாகும் அறச் சிந்தனைகள் குறித்து இங்குக் காணலாம்.

அறம் ஒன்றே நல்லின்பம் தரும். அறம் பிறழ்ந்தோர் அறத்தால் தண்டித்துத் திருந்தப் பெறுவர். ஆதலால், அறமும் நீதியுமே உலகினை ஆள வேண்டும் என்பர். தமிழ் உலகின் கலங்கரை விளக்காக இலங்கும் திருவள்ளுவரின் வழி வந்த ஔவையாரும் அறத்தின் மாட்சியையும் சமூக நீதிச் சிந்தனைகளையும் போற்றிக் கூறுவார்.

**வாழச் செய்த நல்வினை அல்லது**
**ஆழுங்காலை புணை பிறிதில்லை**[51]

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே**[52]

என வரும் அடிகள் நல்வினை ஒன்றே பேரின்ப வாழ்வின் புணை என்றும் செயலாற்றல் மிக்க ஆடவர் நல்லோராயின் எம்மண்ணும் நன் மண்ணாம் என்றும் உணர்த்துகின்றார். சங்க வாழ்வில் ஆடவர்கள் பலர் கழி காமத்திலும் போதையிலும் வீழ் நிலையில் இருந்தனர். எனவே, மண்ணின் மானம்

ஆள்வினை மிக்க ஆடவர் அறத்தில் உள்ளது என்று உரைக்கின்றார் ஔவையார்.

மேலும் அவர், " ஏற்ற பார்ப்பார்க்கு நிறை பொன் சொரிந்து "இரவலர்க்கு வீசி'' (புறம் 367) "தந்தையர்க்கு அருள் வந்தவாற் புதல்வர்தம் மழலை'' போல ஈவோர்க்கு அருள் சுரத்தலைப் பாராட்டுவார்.

அறவை நெஞ்சத்துத் தாயர் வளரும்
அறவை நெஞ்சத்துத் தாய்[53]

போலக் காக்க, 'என்றும், "அறம் புரி வேங்கை'' (புறம் 93) உடையராய் வாழ்க என்றும் அறச் சிந்தையோடு வாழ்த்துவது காணலாம்.

ஆடவர் நெஞ்சம் வீரத்தால் வன்மை பெற்றது எனவே, "நம் மனத்தன்ன மென்மை இன்மையின் நம்முடைய உள்ளம் உள்ளார் கொல்லோ ? (அகம் 273) என்று பெண்ணுள்ளம் ஐயப்படும் போது அறமும் நீதியும் போற்றா ஆடவர் செயலால் "நல்லுரை இகழ்ந்து புல்லுரை தாஅய்ப் "போன சொற்கள் 'பசுங்கலம்'' நீரோடு அழிவது போல தம் உள்ளம் அழிவதை உணர்த்துகின்றார். எனவே, தலை மக்கள் வாய்மை போற்றும் பண்பில் " வாய்மொழி முடியன'' போல (குறுந் 29) ஒழுக வேண்டும் என்பதால் அகத்திலும் அறமே துணை என்பதனை உணர்த்துவர்.

'உலகம் தமக்கே உரிமையாயிருந்தாலும்' கூட உடலைத் துறந்து உயிர் நீங்கும் போது உடன் வரப்போவதில்லை. தமக்குப் பின்னால் தவம் உடையவனாயின் தம்முடைய பகைவனுக்கே கூட நம் நாடு போய்ச் சேரலாம். ஆதலால் அந்தணர்க்கு ஈந்தும், இன்பம் துய்த்தும் இரவலர்க்கு அள்ளி வீசியும் இவ்வுலகில் தமக்கென வரைந்த வாழ் நாள் வரையில் புகழொடு பொலிதல் வேண்டும் 'அப்படி வாழ்வதால் விளையும் நற்பேறே நிலைத்து நிற்பது. இதனை,

நன்றாக மனத்தில் இருத்தி விண்மீன்களைப் போலவும் மழைத்துளிகளைப் போலவும் நெடிது வாழ்க' என்று ஔவையார் மூவேந்தர்களைப் பார்த்து அறவுரையாகவும் அறிவுரையாகவும் பாடிய பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

**"நாகத் தன்ன பாகார் மண்டிலம்**
**தமவே யாயினும் தம்மொடு செல்லா**
**வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்**
**ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறைய**
**... .... ....**
**பரந்து இயங்கு மாமழை உறையினும்**
**உயர்ந்து சமந்தோன்றிப் பொலிக நும்நாளே''[54]**

என்பது அப்பாடல் ஆகும்.

நச்செள்ளையார் என்னும் பெண்பால் புலவர் பதிற்றுப் பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பற்றிப் குறிப்பிடும் போது ' எங்கள் மன்னன் சேரலாதன் கை இரப்போர்க்கு கொடுப்பதற்காகக் கீழ் நோக்கிக் கவிழுமேயின்றி, பூக்கொய்தற்குக் கூட கவிழாது என்கிறார். மலர் கொய்தல் பெண்டிர் தொழிலாததால் அதனை எங்கள் வீர மன்னன் ஒரு போதும் செய்யான் என்று கூறுகிறார்.

**நல்லமர் கடந்த நின் செல்லுறழ் தடக்கை**
**இரப்போர்க்குக் கவிதல் அல்லதை யிரைஇய**
**மலர்பறியா எனக் கேட்டு இகும்[55]**

மேலும், 'செய்வினை முடித்த செம்மல் உள்ளம்' (குறுந். 275) அறநெறி நீங்காமல் இருக்க வேண்டுமானால் பொருளில் வளமாக இருத்தல் வேண்டும்,

உறவினர் தம் துன்பங்களைக் களைந்து அவர்களைத் தூக்கி நிறுத்த வேண்டும். என்றும் பொருள் தரும் முள்ளிப் பூதியார் (அகம் 173) பாடலும், சொர்க்கத்தை உயர்ந்தோர் உலகம் எனும் பொருள்படும்படியான பாடலைப் பாடிய மாறோக்கத்து நப்பசலையார் (புறம் 174) பாடலும் அழிவும் புகழும் உடையோர் மாய்ந்தென வறுந்தலை உலகமும் அன்று'' என அறமுரைக்கும் ஔவையார் பாடலும் (புறம் 206)

**சான்றோர் புகழு முன்னர் நாணுப**
**பழியாங் கொல்பவோ காணுங்காலே** (குறுந். 252)

என்னும் குறுந்தொகைப் பாடலும்,

**திறவோர் செய்வினை அறவதாகும்** ((குறுந். 243)

என்னும் குறுந்தொகைப் பாடலும்,

**இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு**
**அரிது வேட்டனையால் நெஞ்சே காதலி**
**நல்லள் ஆகுதல் அறிந்தா ங்கு**
**அரியன் ஆகுதல் அறியாதோயே** (குறுந். 120)

என்னும் குறுந்தொகைப் பாடலும்,

**உள்ளது சிதைப்போர் ஊர் எனப் படாஅர்**
**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு** ((குறுந். 283)

என்னும் குறுந்தொகைப் பாடலும்,

**வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்** ((குறுந். 135)

என்னும் குறுந்தொகைப் பாடலும்,

**நில்லாமையே நிலையிற்று** (குறுந். 143)

என்னும் குறுந்தொகைப் பாடல் அடியும்,

**அரிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை** (குறுந். 184)

**நன்மொழிக்கு அச்சம் இல்லை** (குறுந். 392)

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகளும் அறவுரை பகரும், சங்க இலக்கியப் பெண் பாற் புலவர் பாடல் வரிகளாகும்.

**4.5 சங்கப் பெண் புலவர் கவிதைகளில் அறிவுரை**

அறவுரை போலவே அறிவுரை கூறுவதிலும் ஔவையாரே முன்னிற்கிறார். புறப் பாடல்களில் அறிவுரை என்பது மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. போர்ச் சமுதாயமாகவும் நிலவுடமைச் சமுதாயமாகவும் சங்க இலக்கியச் சமுதாயம் விளங்கியதால் மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். ஔவையார் அரசர்களோடு கொண்டிருந்த நட்பின் காரணமாக உரிமையோடு அறிவுரை கூறும் நிலைமையிலிருந்தார். அதியமான் நெடுமான் அஞ்சியோடு அவர் கொண்டிருந்த நட்பினால் நிகழ்ந்த அறிவுரைகள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

அதியமானோடு போர் செய்யக் கருதிய தொண்டைமானிடம் அதியமானின் சிறப்பைக் கூறி, அவனோடு போர் செய்ய வேண்டாம் என்று அறிவுரை கூறுவதாக ஒரு பாடல் அமைகிறது.

**இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டி**
**கண் திரள் நோன் காழ் திருத்திநெய் அணிந்து**
**கடியுடை வியன்நகரவ்வே அவ்வே**

**பகைவர்க் குத்திக்—கோடுநுதி சிதைந்து**
**கொல்துறைக் கொற்றில மாதோ**[56]

மூவேந்தரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று வாழ்த்தி அறிவுரை கூறிய பாடலொன்று புறநானூற்றில் காணப்படுகின்றது.

'உலகம் தமக்கே உரிமையாயிருந்தாலும் கூட உடலைத் துறந்து உயிர் நீங்கும் போது உடன் வரப்போவதில்லை. தமக்குப் பின்னால், தவம் உடையவனாயின் தம்முடைய பகைவனுக்கே கூட நம்மோடு போய்ச் சேரலாம். ஆதலால் அந்தணர்க்கு ஈந்தும், இன்பம் துய்த்தும், இரவலர்க்கு அள்ளி வீசியும் இவ்வுலகில் தமக்கென வரைந்த வாழ் நாள் வரையில் புகழோடு பொலிதல் வேண்டும். அப்படி வாழ்வதால் விளையும் நற்பேறே நிலைத்து நிற்பது, இதனை நன்றாக மனத்தில் இருத்தி விண்மீன்களைப் போலவும் மழைத்துளிகளைப் போலவும் நெடிது வாழ்க' என்னும் பொருளில் அப்பாடல் அமைந்துள்ளது.

**நாகத் தன்ன பாகார் மண்டிலம்**
**தமவே யாயினும் நோற்றோர்க்கு ஒழியும்**

என்னும் இரண்டடிகளில் அறவுரையும்,

**இயங்கும் மாமழை உறையினும்**
**உயர்ந்து சமந்தோன்றிப் பொலிக நும் நாளே** (புறம் 367)

என்னும் அடிகளில் அறிவுரையும் உள்ளன.

அதியமான் நெடுமான் அஞ்சியோடு மனக் கசப்பு கொண்டு,

**எத்திசை செலினும் அத்திசைச் சோறே** (புறம் 206)

என்னும் பாடல் அடி மூலம் அறிவுரை கூறுகிறார்.

**வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை** (புறம் 206)

என்னும் அடியும் அதே பாடலைச் சேர்ந்ததாகும். நாஞ்சில் வள்ளுவனோடு தொடர்புடைய பாடல் ஒன்றில்

**போற்றார் அம்ம பெரியோர் தம் கடனே** (புறம் 140)

என்னும் பாடல் அடிகளில் அறிவுரை கூறுகிறார் ஔவையார்.

மாரிப் பித்தியார் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் சொல்வலை வேட்டுவன் என்கிறார் (புறம். 252).பொன்முடியார் வீட்டிலுள்ளோரின் கடன் பற்றிப் பாடல் எழுதியுள்ளார்.

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே**[57]

என்பது அப்பாடலாகும்.

குறமகள் இளவெயினி என்னும் புலவர்

**தமர்தன் தப்பின் அது நோன்றல்லும்**
**பிறர் கையளவு தான் நாணுதலும் பாடைப் பழி**
**தாரா மைந்தின னாகலும் வேந்துடைய**
**வையத்து ஓங்குபு நடத்தலும்**[58]

என்னும் பாடல் மூலம் அறிவுரை கூறுகிறார்.

முனைவர் ஔவை நடராசன் அவர்கள் தமது புலமைச் செல்வியர்[59] என்னும் நூலில் சங்க இலக்கியத்தில் பெண் கவிஞர் பாடல்களில் வரும் அறிவுரைகள், பழமொழிகள் மரபுத் தொடர்கள் முதலியவற்றைத் தொகுத்துக் கொடுத்துள்ளார். அவை,

குடி நன்கு உடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடு நாடுமொழியலன் அன்பினன் (அகம். 352)

வதுவை நாளினும் இனியனால் எமக்கே (அகம். 352)

பொழுதிடை தெரியின் பொய்யே காமம் (குறுந். 32)

மருந்து பிறிதில்லை அவர் மணந்த மார்பே (குறுந். 68)

புலவி அஃது எவனோ அன்பிலன் கடையே (குறுந். 93)

விருந்து எதிர் பெறுகதில் யானே என்னையும்
வேந்தனொடு நாடுதரு விழுப்பகை எய்துக (புறம். 306)

வான் வழங்கு இயற்கை வளி பூட்டினையோ
மான் உருவாக நின் மனம் பூட்டினையோ (அகம். 384)
இளமை பாரார் வளன் நகைஇச் சென்றார்
நகுமே தோழி நறுந்தண் காரே (குறுந். 126)

செய்வினை முடித்த செம்மல் உள்ளம் (குறுந். 275)
கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே (புறம். 279)

நம் மனத்து அன்ன மென்மை இன்மையின்
நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ (அகம். 233)

அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே (குறுந். 43)

ஓவாது ஈவும் மாரி வண்கை (குறுந். 91)

காதலர் ஒருநாள் கழியினும் உயிர் வேறுபடூஉம் (நற். 329)

நடுங்கல் ஆவா நெஞ்சமொடு இடும்பை
யாங்ஙனம் தாங்குவென் மற்றே (நற். 381)

புனை இழை நெகிழ்த்த புலம்பு கொள் அவலமோடு
கனையிருங் கங்குலும் கண்படை இலனே (நற். 348)

என்னோடு பொருங்கொல் இவ்வுலகம்
உலகமொடு பொருங்கொல் என் அவலமுறு நெஞ்சே (நற். 348)

பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற ஆரும் இல்லதுவே (குறுந். 174)

அறந்தலைப் பிரியா தொழுகலும் சிறந்த
கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்
வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல் (அகம். 173)

சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழி
பிறர்கலம் செல்கலாது அனையேம் (புறம். 126)

புணரின் புணருமார் எழிலே பிரியின்
அணிநலம் சிதைக்கு மார்பசலை (நற். 304)

இன்பமும் துன்பமும் உடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே (நற். 304)

சொல்வலை வேட்டுவன் (புறம். 252)

ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே (புறம். 312)

நசையாரும் பண்பின் ஒருசொல் இசையாது
கொல்லோ காதலர் தமக்கே ((குறுந். 48)

நுமக்கு அரியமாகிய காலைப் பெரிய
நோன்றனர் நோகோ யானே ((குறுந்.178)

எயிறு தீப்பிறப் பத்திருகி நடுங்குதும் (அகம். 217)

எப்பொருள் பெறினும் பிரியன் மினோ! ( அகம். 217 )

சென்றோர் உள்ளிச் சிறுவளை நெகிழ
பெருநசை உள்ளமொடு வருதிசை நோக்கி (அகம். 163)

அடுதோள் முயங்கல் அவை நாணுவல் (புறம். 83)

தமர்தன் தப்பின் அது நோன்றலும்
பிறர் கையறவு தான் நாணுதலும், படைப்பழி
தாரா மைந்தின னாகலும் வேந்துடைய
வையத்து ஓங்குபு நடத்தலும் (புறம்.157)

ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே (புறம். 86)

ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே (புறம். 278)

தேட் கடுப்பன்ன நாட்படு தேறல்
கோண்மீன் அன்ன பொருங்கலத் தளைஇ
ஊண் முறை யீத்த லன்றியும் கோன்முறை
விருந்திறை நல்கி யோனே (புறம். 392)

ஆர்வலர் குறுகின் அல்லது காவலர் கனவிலும்
குறுகாக் கடியுடை வியனகர் (புறம் 390)

வாழ்தல் வேண்டும் இவன் வரைந்த வைகல் (புறம். 363)

வாழச் செய்த நல்வினையல்லது ஆழுங்
காலைப்புணை பிறிதில்லை'' (புறம். 367 )

வயங்கித் தோன்று வானத்து மீனினும்
இம்மென இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்து மேந் தோன்றிப் பொலிக நுந்நாளே (புறம். 367)

பலர்குறை செய்த மலர்தார் அண்ணற்கு
ஒருவரு மில்லை மாதோ (புறம். 311)

சிறப்புடைச் செங்கண் புகைய வோர்தோல்
கொண்டு மறைக்குஞ் சால்புடை யோனே (புறம். 311)

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்று (புறம். 206)

எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே (புறம். 206)

வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை (புறம். 206 )

எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி
நல்லை வாழிய நிலனே (புறம். 187)

போற்றார் அம்ம பெரியோர் தம் கடனே (புறம். 140)

அலத்தற் காலை யாயினும் புரத்தல்
வல்லன் வாழ்க அவன் தாளே (புறம். 103)

## தொகுப்புரை

பெண் புலவர் பாடல்களில் வெளிப்படும் அறவுரை, அறிவுரை தொடர்பான செய்திகள் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

- முதலில் அறவுரை, அறிவுரை கூறுவதற்கான சூழல் தமிழ் நாட்டில் ஏற்பட்டதற்கான காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன.
- அறவுரை, அறிவுரை கூறுவதில் பின்னூட்டமாக நிற்கும் சமயப் பின்னணி ஆராயப்பட்டுள்ளது.
- அகப்புற வாழ்க்கை நிலைகளில் வெளிப்படும் அறக்கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன.
- பொதுநிலையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் அறக்கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன.
- சிறப்பாகப் பெண்கள் பாடல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.
- ஔவையார் அறிவுரை கூறுவதில் முன் நிற்கிறார். பெண்கள் பாடல்களில் அறவுரை, அறிவுரை குறித்த செய்திகள் மிகக் குறைவாகவும், அதிக செறிவில்லாமலும் உள்ளன.

# மேற்கோள்கள்


1. வெ.சு. அழகப்பன், இ.ப.த. 21வது ஆய்வுக் கோவை, தொகுதி 1, ப– 23
2. க. வெள்ளை வாரணன்,சங்ககாலத் தமிழ் மக்கள், ப–156
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், நூ.எ–2
4. நற்றிணை, பா.எ.– 277
5. நற்றிணை, பா.எ.– 376
6. கலித்தொகை, பா.எ.– 14.9,36
7. க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப– 49
8. கலித்தொகை, பா.எ.– 9: 23–24
9. கலித்தொகை, பா.எ.– 39: 11–14
10. கலித்தொகை, பா.எ.– 2–10
11. கலித்தொகை, பா.எ.– 34: 4-5
12. கலித்தொகை, பா.எ.– 123 : 13–24
13. கலித்தொகை, பா.எ.– 34 : 10
14. திருக்குறள், கு.எ –
15. கலித்தொகை, பா.எ.– 62: 7–8
16. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூ.எ–102
17. தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், நூ.எ–1
18. புறநானூறு, பா.எ.– 31
19. கலித்தொகை, பா.எ.– 141:3
20. நற்றிணை, பா.எ.– 355
21. நற்றிணை, பா.எ.– 32
22. அகநானூறு, பா.எ.–101
23. திருக்குறள், கு.எ – 1023
24. குறுந்தொகை, பா.எ.– 120

25. நற்றிணை, பா.எ.– 210

26. கலித்தொகை, பா.எ.– 62

27. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், நூ.எ–9

28. குறுந்தொகை, பா.எ.– 349

29. கலித்தொகை, பா.எ.– 43

30. திருக்குறள், கு.எ – 230

31. திருக்குறள், கு.எ – 1107

32. அகநானூறு, பா.எ.– 131

33. புறநானூறு, பா.எ.– 77

34. புறநானூறு, பா.எ.– 134

35. புறநானூறு, பா.எ.– 71

36. புறநானூறு, பா.எ.– 72

37. புறநானூறு, பா.எ.– 71

38. புறநானூறு, பா.எ.– 27

39. கலித்தொகை, பா.எ.– 10

40. கலித்தொகை, பா.எ.– 118

41. புறநானூறு, பா.எ.– 183

42. புறநானூறு, பா.எ.– 186

43. புறநானூறு. , பா.எ.– 187

44. புறநானூறு. , பா.எ.– 188

45. புறநானூறு, பா.எ.– 204

46. புறநானூறு. , பா.எ.–194

47. குறுந்தொகை, பா.எ.–135

48. கலித்தொகை, பா.எ.– 133

49. பதிற்றுப்பத்து, பா.எ.– 74

50. ஔவை நடராசன் , புலமைச் செல்வியர், ப.–199

51. புறநானூறு, பா.எ.– 367

52. புறநானூறு, பா.எ.–187

53. புறநானூறு, பா.எ.– 390

54. புறநானூறு, பா.எ.– 367

55. பதிற்றுப்பத்து, பா.எ.– 52

56. புறநானூறு, பா.எ.– . 95

57. புறநானூறு, பா.எ.– . 312

58. புறநானூறு, பா.எ.– . 157

59. ஔவை நடராசன் , புலமைச் செல்வியர், ப.–201

# இயல் 5



# பாடுநெறி

மொழி என்பது தகவல் தொடர்பிற்காக ஏற்பட்டது. தனது தேவைக்காக மனிதன் பேச்சு என்பதை வளர்த்துக் கொண்டான். அதன் மூலம் தனக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டான். பேச்சு என்பதில் அழகியல் (Aesthetics) உட்புகுந்து 'சுவையான பேச்சு' என்னும் நிலைக்கு மாற்றியது. சுவைப்பேச்சின் ஒரு வளர்ந்த நிலையாக நாம் மொழியையும் அதிலிருந்து அம்மொழி சார்ந்த இலக்கியங்களையும் எண்ணலாம். மொழி என்பது தகவல் தொடர்பிற்கான ஒரு கருவி. அதில் அழகியல் சேரும்போது அது இலக்கியத் தன்மை பெற்றுவிடுகிறது. எனவே, எல்லா இலக்கியங்களுமே ஒரு கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்தோடேயே படைக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ் இலக்கிய வரலாற்றை நாம் நுணுகிப் பார்த்தால் இலக்கியக் காலகட்டங்களுக்குப் பின்னால் சமயங்கள் உள்நின்று வழி நடத்துவதைக் காணலாம்.

அற இலக்கியங்களுக்குப் பின்னால் சமண சமயமும், காப்பியங்களுக்குப் பின்னால் சமண பௌத்த சமயங்களும், பக்தி இலக்கியங்களுக்குப் பின்னால், சைவ வைணவ சமயங்களும் நிற்பதைக் காணலாம். இவ்விலக்கியங்களுக்குப் பின்னால் , மதம் பரப்பும் நோக்கம் ( தகவல் தொடர்பு) நிறைந்திருப்பதை நாம் உய்த்துணர முடியும். ஆனால் சங்க இலக்கியத்திற்குப் பின்னால் இத்தகைய சமய நோக்கம் இல்லை. எனினும் நாகரிகத்தின் படிகளில் ஏறிவந்த ஒரு சமூகத்தின் வளர்நிலை அவ்விலக்கியப் பதிவுகளின் இயல்பாகப் பின்னிற்பதைக் காணமுடியும். எனவே , ஒவ்வொரு இலக்கியப் பதிவிற்கும் பின் ஒரு கருத்துப் புலப்பாடு இருப்பதையும் அறியலாம். இக்கருத்துப் புலப்பாடு புலவருக்குப் புலவர் வேறுபடும். தான் கூற விரும்பும் கருத்தைப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு புலவர்கள் கருத்துப் புலப்பாட்டினை நிகழ்த்துவர்.

நன்னூல் பொதுப் பாயிரத்தில் குறிப்பிடும் நூல் பற்றிய செய்திகள் கருத்தியியல் சார்ந்தவை. அவர் குறிப்பிடும் முப்பத்தி இரண்டு உத்திகள்

கருத்துப் புலப்பாடு அல்லது வெளியீடு தொடர்புடையவை. வெளியீட்டு நிலை கால கட்டம் தோறும், புலவர் தோறும் மாறுபடுவதை நாம் உணர முடியும்.

புலவர்களுக்கிடையிலான இவ்வெளியீட்டு வேறுபாட்டை அப் புலவர்களுக்கான நடை எனலாம். ஒரு கருத்தினை ஒரு அனுபவத்தை ஒரு உணர்ச்சியை அல்லது ஒரு செய்தியை மொழி வழியே வெளிப்படுத்தும் பாங்கினை ஒட்டியே நடை அமையும். இலக்கியத்தில் நடை என்பது கருத்து, உணர்ச்சி, கற்பனை அனுபவம் ஆகியவற்றை வெளியிடும் வாயில் ஆகும். நடை என்பது சொற்களின் செப்பம், வனப்பு, இசைநலம், அழகு ஆகிய சுவைநலஞ்சார்ந்த ஆக்கக் கூறுகளால் இன்புறுத்தும் பான்மையினதாக அமைவுறும். உவமை, சொல்வன்மை, மறைமுகக்குறிப்பு, பொருட்செறிவு, உருவகம் ஆகியனவும் நடையின் சிறப்பிற்கு அடிப்படையாக அமைவன. கருத்தினை ஒட்டி நடை அமைதலும் நடையின் வழியே கருத்தினைப் புலப்படுத்தலும் நல்ல நடையின் நோக்கமாகும்.

நடை என்பதை நாம் கருத்துப் புலப்பாட்டு நெறி அல்லது பாடுநெறி என விளக்கலாம். எத்தகைய ஒரு கருத்தும் சிறந்த பாடுநெறியாலேயே சிறப்படைந்து, பாடும் நோக்கை மக்களிடம் எடுத்துச் சென்று பயனை விளைவிக்க முடியும். சங்க இலக்கியச் செய்யுட்கள் எல்லாம் சிறந்த பாடுநெறியை அடிப்படையாக உடையன.

### 5.1 அகப்பாட்டு இலக்கணமும் பாடுநெறியும்

தொல்காப்பியம் செய்யுளியல் முதல் நூற்பா செய்யுட்குரிய உறுப்புகள் இத்தனை என்பதைக் கூறுகிறது.

**மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ**
**யாத்த சீரே அடியாப் பெனாஅ**
**மரபே தூக்கே தொடைவகை எனாஅ**
**நோக்கே பாவே அளவிய லெனாஅத்**

**திணையே கைகோள் கூற்றுவகை யெனாஅக்**

**கேட்போர் களனே காலவகை யெனாஅப்**

**பயனே மெய்ப்பா டெச்சவகை யெனாஅ**

**முன்னம் பொருளே துறைவகை யெனாஅ**

**மாட்டே வண்ணமோடு யாப்பியல் வகையின்**

**ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்**

**அம்மை அழகு தொன்மை தோலே**

**விருந்தே யியைபே புலனே யிழைபெனாஅப்**

**பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ**

**நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென**

**வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே**[1]

செய்யுட்குரிய முப்பத்தி நான்கு உறுப்புகள் இந்நூற்பாவில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

தற்கால கவிதைக்கான கூறுகளாகத் திறனாய்வாளர்கள் கூறும் கற்பனை, உணர்ச்சி, கருத்து, பொருள், நடை, ஒலி நயம் முதலியவை அனைத்தும் தொல்காப்பியர் கூறும் உறுப்புகளுக்குள் அடங்குவதைக் காணலாம். தொல்காப்பியர் கூறும் உறுப்புகளுள் திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடன், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை, துறை என்னும் பன்னிரண்டு உறுப்புகளும் அகப்பாட்டுக்கே சிறப்பான உறுப்புகள் என்று அகப்பொருள் விளக்க ஆசிரியர் கூறுகிறார்.

**திணையே கைகோள் கூற்றே கேட்போர்**

**இடனே காலம் பயனே முன்னம்**

**மெய்ப்பாடு எச்சம் பொருள்வகை துறையென்று**

**அப்பால் ஆறிரண்டு அகப்பாட்டு உறுப்பே**[2]

என்பது அகநூற்பா ஆகும்.

இப்பன்னிரண்டு அகப்பாட்டு உறுப்புகளுள் கூற்று என்னும் உறுப்பு மிக முக்கியமானதாகும். சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரையில் எல்லாப் பாடல்களுமே கூற்றால் ஆனவை. எனவே கூற்று எனும் வெளியீட்டு உத்தியைப் பயன்படுத்தி சங்கப் பாடல்கள் அமைந்துள்ளன. மற்ற பதினோரு உறுப்புகளும் கூற்றை அடிப்படையாகக் கொண்டே விளங்குவதைக் காணலாம்.

திணை என்பது கூற்று நிகழும் திணையாகவும், கைகோள் என்பது கூற்று நிகழ்த்தத் தேவையான கைகோளையும் (களவு, கற்பு) , கேட்போர் என்போர் கூற்றினைக் கேட்போராகவும் இடன் கூற்று நிகழ்த்தும் இடனாகவும் , காலம் கூற்று நிகழ்த்தும் காலமாகவும், பயன் கூற்றின் பயனாகவும், முன்னம் கூற்றின் முன்னமாகவும், மெய்ப்பாடு கூற்று நிகழ்த்துவோரின் மெய்ப்பாடாகவும், எச்சம் கூற்றின் எச்சமாகவும், பொருள்வகை என்பது கூற்றினைப் பொருள் கொள்ளும் பொருள்கோளாகவும் துறை என்பது கூற்று நிகழும் துறையாகவும் அமைகிறது.

கூற்று என்பது பாடுவோரின் மனக்கருத்தை வெளியிடும் முதன்மை உத்தியாகவும், மற்றவை துணை உத்திகளாகவும் பயன்படுகின்றமையை அறிய முடிகிறது.

**5.2 சங்கப் பெண் புலவர்களின் பாடுநெறி**

சங்கப் பாடல்கள் அனைத்துமே கூற்றினால் ஆனவை என முன்பே கண்டோம். பெண் புலவர் பாடல்களும் இதற்கு விதிவிலக்கல்ல. பெண் புலவர் பாடு நெறியை நாம் மூன்று நிலைகளில் காணலாம். அவை,

1. உள்ளுறை, இறைச்சி முதலிய குறிப்புப் பொருள்களின் மூலம் உணர்த்துதல்.
2. உவமை வாயிலாக உணர்த்துதல்.
3. வெளிப்படையாக உணர்த்துதல்.

என்பவை ஆகும்.

### 5.2.1 உள்ளுறை, இறைச்சி ஆகிய குறிப்புப் பொருள்களின் மூலம் உணர்த்துதல்

#### 5.2.1.1 உள்ளுறை

ஒரு செய்யுளில் வெளிப்படையாக அமைந்த பொருளோடு புலவன் தான் குறிப்பாக உணர்த்த விரும்பும் செய்தியைக் கருப்பொருளின் மேல் ஏற்றிக் கூறுதல் உள்ளுறை எனப்படும். இதனைத் தொல்காப்பியர் உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்(தொல்.998:2) என்கிறார்.

**உள்ளுறை உவமம் உய்த்துணர் வகைத்தாய்ப்**
**புள்ளொடும் விளங்கொடும் பிறவொடும் புலப்படும்**[3]

என்று நாற்கவிராசநம்பி கூறுகிறார். 'உள்ளுறை உவமமாவது ஆராய்ந்து அறியும் பகுதியினையுடைத்தாய்ப் புள்ளொடும் விளங்கொடும் பிறவொடும் தோன்றும்' என்பது இந்நூற்பாவின் விளக்கமாகும்.

பண்டைய இலக்கண நூலார் உள்ளுறை, இறைச்சி என்று கூறியவற்றை தற்காலக் கவிதை உத்திகளுள் ஒன்றான குறியீட்டுடன் ஒப்புமைப் படுத்தி நோக்கலாம். உள்ளுறையும் இறைச்சியும் குறியீட்டுப் பொருண்மை உடையவை ஆகும்.

'உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக் கொள்ளுமாறு விட்டுவிட்டு உவமையை மட்டும் கூறுவது உள்ளுறை உவமத்தின் அடிப்படை இலக்கணமாம். தொல்காப்பியம் இதற்கு மேலும் சில வறையறைகளை வகுத்துள்ளது புலப்படுமாறு. கூறும் உவமையும், புலப்படுத்த விரும்பும் பொருளும் பலவகையிலும் ஒத்திருக்க வேண்டும். புலப்படுத்த விரும்பும் பொருளைக் கேட்போருக்கு உணர்த்தும் வகையில் சில சொற்களும் உள்ளுறை உவமம் பெற்றிருக்க வேண்டும்' என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்.[4] அகத்திணை மாந்தருள் யார்? யார்? என்னென்ன பொருட்களை உவமமாகக் கையாள வேண்டும்

என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.[5] இவ்வரையறைகள் உளவியல் நுட்பத்தோடு அமைந்துள்ளன. மாந்தர் தாம் மறைத்துக் கூறக் கருதுவதற்குத் தம் சூழலில் தாம் அறிந்த பொருட்களையே குறியீடாக்குவர் என்பது உளவியல் உண்மையாகும். மேலும் கருப்பொருட்கள் வெவ்வேறு சூழலில் வெவ்வேறு சேர்க்கையில் வெவ்றேு பொருளுணர்த்தும் வாய்ப்புள்ளதால் அவை பன்முகப் பொருளாற்றலுடைய குறியீடுகளாகின்றன. இலக்கிய நோக்கில் உள்ளுறை உவமத்தில் மற்றொரு பயனையும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. உள்ளுறை உவமமாக வரும் கருப்பொருட்கள் பாடலின் திணையை உணர்த்த உதவுவன. மற்றொரு பணியையும் கருப்பொருட்கள் செய்கின்றன. அகப்பொருள் இலக்கியம் நாடகப் பாங்கானது, உரிப்பொருளாகிய நிகழ்ச்சிக்கு முதற்பொருள் நிகழிடமும், பொழுதுமாக அமைய, கருப்பொருள் சூழலமைப்பை ஏற்படுத்தும். மனப்படிமம் உருவாக்க இவ்வகையில் கருப்பொருள் உதவுவதைத் தொல்காப்பியம் கூறவில்லை. எனினும், அது திணையை உணர்த்தும் என்ற கருத்திலிருந்தே இதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு கருப்பொருள் உவமமாக நின்று குறிப்புப் பொருளுணர்த்துவது, திணை உணர்த்துவது, சூழலைக் காட்டுவது என்ற முச்செயல் புரியும் செறிந்த குறியீடாக அமைகிறது.

தொல்காப்பியம் உவம வகைகளுள் ஒன்றாகக் கூறும் உவமப் போலியைப் பேராசிரியர் உள்ளுறை உவமமாகக் கொள்கிறார். இதனால் உள்ளுறை உவமம் பற்றி மேலும் சில கருத்துக்களை அறியமுடிகிறது. உள்ளுறை உவமம் மரபுப்படி கூறப்படவேண்டும். குறிப்புப் பொருள் எல்லோருக்கும் புலனாகாது. நல்லுணர்வுடையோரே அதை உணர்ந்து கொள்வர்; அவர்க்கும் புலனாகாதவாறு கூறக்கூடாது என்ற பேராசிரியர் விளக்கத்தால் யாருக்கும் புரியாதவாறு 'இருண்மை' நிரம்பியதாகக் குறிப்புப்பொருள் இருத்தலாகாது என்ற தமிழ் நூலார் கருத்தை அறிய முடிகிறது. ஏனையுவமம் பிறக்கும் நான்கு

நிலங்களோடு, பிறப்பு என்ற அடிப்படையிலும் உள்ளுறை உவமம் தோன்றும் என்றும் அது செய்யுளில் பயின்று வரும் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.[6]

ஏனையுவமத்திற்கும் உள்ளுறை உவமத்திற்கும் உள்ள ஒரு வேறுபாட்டைப் பேராசிரியர் காட்டுகிறார். ஏனையுவமத்துள் ஒரு சாதியோடு ஒரு சாதியை உவமித்தல் வழக்கன்றாயினும், உள்ளுறை உவமத்தில் அவ்வாறு செய்யலாம் என்பது அவர் கருத்து. ஆனால் உள்ளுறை உவமத்தில் பொருளுக்குப் பொருளாக உவமம் செயற்படுவதில்லை. கருப்பொருளால் நிகழும் நிகழ்ச்சியே உவமமாகிறது என்பது கருதத்தக்கது. மேலும், ஏனையுவமத்தினும் உள்ளுறை உவமமே செய்யுட்கும் பொருளிலக்கணத்திற்கும் சிறந்தது என்ற கருத்தையும் பேராசிரியர் கூறுகிறார்.[7]

அகத்திணை மாந்தர்தம் கருத்தை மறைத்துக் கூறுதற்குரிய ஐந்து வகை உள்ளுறையைத் தொல்காப்பியர் பொருளியலில் தொகுத்துக் கூறுகிறார். அவை உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்பன.[8] இவை ஐந்தையும் பொதுவாகக் குறிப்புப் பொருள் தரும் உத்திகளாக இளம்பூரணர் கருதுகிறார். ஒன்றைச் சொல்ல அதனால் பிறிதொரு பொருள் விளங்குவது 'உடனுறை' என்பது இளம்பூரணர் கருத்து. நச்சினார்க்கினியர் இதனை இறைச்சியாகக் கொள்கிறார். உவமத்தை உள்ளுறை உவமமாக இளம்பூரணர் கொள்ள நச்சினார்க்கினியர் ஏனை உவமத்தையும் சேர்த்துக் கொள்கிறார். சுட்டு, நகை என்பன இளம்பூரணர் கருத்துப்படி வெறும் சைகைக் குறியீடுகள் வாளாது ஒன்று நினைந்து ஒன்று சொல்வனவும், பிரிவாற்றாத காலத்துத் தோழி கருப்பொருள்களுள் தலைவன் அன்பு செய்தற்குத் தருவனவற்றைக் கருதிக் கூறலும் சுட்டு என்பது நச்சினார்க்கினியர் கருத்து. நகையாடி ஒன்று நினைத்து ஒன்று கூறுதல் நகை என்று நச்சினார்க்கினியர் கொள்கிறார். சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இஃது என்று கூறுவதனால் பிறிதோர் பொருள்கொளக் கிடப்பது என்பது இளம்பூரணர் கூறும் பொருள். வெளிப்படை உவமம் பின்னால் நின்று

உள்ளுறை உவமத்திற்குச் சிறப்பைத் தருவது சிறப்பு என்பது நச்சினார்க்கினியர் கருத்து. தொல்காப்பியர் இவற்றை விளக்காத நிலையில் இருவரில் யார் கருதுவது சரியெனத் தெரிய இடமில்லை.

சங்க அகப்பாடல்களில் காணப்படும் உவமைப் போலியை வினை உவமைப் போலி, உடன் உறை உள்ளுறை , சிறப்பு முறை, உறுப்பு உவமைப் போலி, உரு உவமைப்போலி அல்லது பண்பு உவமைப் போலி, பிறப்புவமைப் போலி வினை உவமம், உரு உவமம், சுட்டு உவமம் என வகைப்படுத்தி வீ. சேதுராமலிங்கம் ஆராய்ந்துள்ளார்.[9]

**5.2.1.1.1 பெண் புலவர்களும் உள்ளுறையும்**

**ஒரு நாள் வாரலன் இருநாள் வாரலன்**
**பல் நாள் வந்து பணிமொழி பயிற்றினென்**
**நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை**
**வரைமுதிர் தேனின் போகி யோனே**
**ஆசுஆகு எந்தை யாண்டு உளன் கொல்லோ**
**வேறு புலன் நல்நாட்டுப் பெய்த**
**ஏறுடை மழையின் கலுழும் என் நெஞ்சே**

என்னும் வருமுலையாரித்தியின் பாடலில்[10] உள்ளுறை உவமை பயின்று வருதலைக் காணலாம். 'ஒரு நாள் மட்டும் வந்தானும் அல்லன்; இரு நாள்கள் வந்தானும் அல்லன்; பல நாள்கள் வந்து பணிவைப் புலப்படுத்தும் மொழிகளைப் பலகாற் சொல்லி என் நன்மையை எண்ணும் நெஞ்சத்தை இரங்கச் செய்த பின்னர் மலையிடத்தில் முதிர்ந்து விழும் தேனடையைப் போலச் சென்றவனும் நமக்குப் பற்றுக் கோடாகிய எந்தையும் ஆகிய தலைவன் இப்பொழுது எங்கே இருக்கின்றானோ ? வேற்றுப் புலங்களையுடைய நல்ல நாட்டிடத்தே பெய்த இடியேற்றை யுடைய மழைநீர் கலங்கி வருதலைப்போல என் நெஞ்சும் கலங்கும்

என்பது இப்பாடலின் பொருள் ஆகும். மலைத் தேனடையைக் கொள்வார் இலாமையால் வீணே வீழ்ந்து அழிந்தது. அங்ஙனமே தன் மொழியை யாரும் ஏற்காமையால் தலைவனும் நொந்து போயினான் என்பது உள்ளுறை உவமம் ஆகும்.

**அயிரை பரந்த அம்தண் பழனத்து**
**ஏந்து எழில்மலர தூம்புடைத் திரள்கால்**
**ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கு இவள்**
**இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர்**
**தொழுதுகாண் பிறையின் தோன்றி யாம்நுமக்கு**
**அரியம் ஆகிய காலைப்**
**பெரிய நோன்றனிர் நோகோ யானே**[11]

எனும் நெடும்பல்லியத்தை பாடலில் உள்ளுறை பயின்று வருவதைக் காணலாம்.

“ஐய! அயிறை மீன்கள் பரவியுள்ள அழகிய குளிர்ச்சி பொருந்திய பொய்கையினிடத்தில் அழகைத் தாங்கிய மலர்களைக் கொண்ட உள்ளே துளையை உடையதான தண்டைக் கொண்டுள்ள ஆம்பலைப் பறிப்போர் தண்ணீர் அருந்த விரும்பியதை ஒப்ப, இத்தலைவியின் மார்பினிடையே தூங்கும் நிலைபெற்றும் நடுங்குதலை உடையவராயினீர். யாம் தொழுது காணும் மூன்றாம் பிறை போல வெளிப்பட்டு நுமக்குக் காண்பதற்கு அரியேமாயிருந்த களவுக் காலத்தில் பெரிய வருத்தங்களைப் பொறுத்திருந்தீர். யான் அதனை எண்ணி வருந்துவேன்’’ என்பது இப்பாடலின் பொருளாகும். நீர் நிறைந்த குளத்தில் பூப்பறிப்போர் நீர்த் தாகத்தால் வருந்துவது போல, களவுக் காலத்தில் தலைவன் தலைவி அருகில் இருந்தாலும் புணர்ச்சி விருப்பத்தால் அவள் அறியாதவளாய் இருந்ததனால் வருந்துவானாயினான் என்பது உள்ளுறை உவமம் ஆகும்.

அம்ம வாழி தோழி காதலர்
இன்னே கண்டும் துறக்குவர் கொல்லோ
முந்நாள் திங்கள் நிறைபொறுத்து அசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும் புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர் போல நீர்கொண்டு
விசும்பு இவர் கல்லாது தங்குபு புணரிச்
செழும்பல் குன்றம் நோக்கிப்
பெருங்கலி வானம் ஏர்தரும் பொழுதே[12]

என்னும் கச்சில்பேட்டு நன்னாகையார் பாடலிலும் உள்ளுறை உவமம் அமைவதைக் காணலாம். இது தோழி கூற்றுப் பாடலாகும். தோழிக்கே உரிய குறிப்புப் பொருண்மை விளங்குவதைக் காணலாம். தோழி! கேட்பாயாக, மூன்றாம் நாள் பிறை போல வெண்ணிறம் மிகுந்து பரந்து உலாவியவாயும், நடக்க மாட்டாது பச்சைப் புளியின் சுவையை விரும்பும் முதற் சூலையுடையை மகளிரைப் போல, நீரை முகந்து கொண்டு வாயும் வானத்தில் ஏற மாட்டாமல் அந்நீரைத் தாங்கியவாய் ஒன்றோடொன்று சேர்ந்து வளப்பமான பல மலைகளை நோக்கிப் பெரிய முழக்கத்தையுடைய மேகங்கள் எழுகின்ற கார்ப்பருவத்தை இப்பொழுதே பார்த்த பின்பும் நம் தலைவர் நம்மைப் பிரிந்து இருப்பாரோ ?

இப்பாடலில் கார் காலம் வருகின்ற சூழ்நிலையை வருணித்துவிட்டு தலைவர் இதனைப் பார்த்ததும் வருவார் என்னும் குறிப்புப்பட அமைகிறது. மழைநீர் பொழிந்து பூமி செழிப்பது உறுதி. அதுபோல தலைவன் வந்து நீ மகிழ்வது உறுதி என்பதாக உள்ளுறை உவமமாக இப்பாடல் அமைகிறது.

### 5.2.1.2 இறைச்சி

தொல்காப்பியம் காட்டும் மற்றொரு நுட்பமான குறிப்புப் பொருள் உத்தி இறைச்சியாகும். உள்ளுறை உவமமும், இறைச்சியும் ஒன்றா ? வெவ்வேறா ? என்பது பற்றித் தமிழ் அறிஞர்களிடையே நெடுங்காலமாகக் கருத்து வேறுபாடு

இருந்து வருகிறது. தொல்காப்பியர் இறைச்சி பற்றி மிகச் சுருக்கமாகவே கூறியிருப்பதும், உரையாசிரியர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு விளக்கம் தருவதும் இக்கருத்து வேறுபாட்டிற்குக் காரணமாம். இறைச்சி பற்றி அறிவதற்குத் தொல்காப்பியர் சொற்களை மட்டுமே அவை மிகக் குறைவாக இருப்பினும் ஆதாரங்களாகக் கொள்வது நலமெனப்படுகிறது.

அவை,

1. இறைச்சிதானே பொருட்புறத்ததுவே
2. இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே
   திறத்தியன் மருங்கில் தெரியு மோர்க்கே[13]

என்னும் நூற்பாக்களில் தொல்காப்பியர் இறைச்சி பற்றிக் கூறுகிறார். பாட்டில் கூறப்பட்ட பொருளுக்குப் புறத்தே தொனிக்கும் குறிப்புப் பொருள் இறைச்சி என்பதும் கருப்பொருளில் மற்றொரு குறிப்புப் பொருளும் தோன்றும் என்பதும் ஆனால், அப்பொருள் ஆராய்ந்துணரும் நல்லறிவுடையோர்க்கே புலப்படும் என்பதும் இந்நூற்பாக்களின் பொருளாம். இறைச்சிக்கு இளம்பூரணர் காட்டும் மேற்கோளிலிருந்து அவர் இறைச்சிக்கும் உள்ளுறை உவமத்திற்கும் வேறுபாடு காண்பவராகத் தெரியவில்லை. நச்சினார்க்கினியர் இரண்டிற்கும் இடையே ஓரளவு வேறுபாடு காட்டினாலும் இறைச்சிக்கும் உவமத்தன்மை உண்டு எனக் கொள்கிறார். இவ்வாறு கொள்ளத் தொல்காப்பிய நூற்பாக்கள் இடம் தரவில்லை. உள்ளுறை உவமம் போன்றே இறைச்சியும் உவமத் தன்மை உடையதாயின் இவற்றை வெவ்வேறு பெயரால் தனியாகக் கூறுவானேன் என்ற வினா எழும். இதனை உணர்ந்த நச்சினார்க்கினியர் இரண்டின் உவமத் தன்மைக்கும் வேறுபாடு காட்ட முயலுகிறார். பாடற்பொருளோடு இயையாது வேறோர் பொருள் தோற்றுவித்து 'நின்றால் அது இறைச்சி' என்றும், 'இயைந்து நின்றால் உள்ளுறை உவமம்'

என்றும் நச்சினார்க்கினியர் கருதுகிறார். ஆனால் தொல்காப்பிய நூற்பாக்களில் இவ்விளக்கங்களுக்கு ஆதாரமில்லை.

உள்ளுறை உவமம் என்ற பெயரும், 'ஒத்துப் பொருள் முடிகென உள்ளுறுத்து உரைப்பது' என்ற நூற்பாவும் உள்ளுறை உவமத்தின் உவமத் தன்மையைத் தெளிவாக வற்புறுத்துகின்றன. உள்ளுறை உவமமும் இறைச்சியும் கருப்பொருட்களையே பயன்படுத்தினாலும் உள்ளுறை உவமம் அவற்றை உவமங்களாகப் பயன்படுத்துகிறது. இறைச்சி அவ்வாறு பயன்படுத்துவதில்லை. உள்ளுறை உவமத்தில் கூறக் கருதிய பொருள் வெளிப்படக் கூறப்பட்டிராது. உவமேயமாக ஊகித்துக் கொள்ளுமாறு உவமையால் குறிப்பாக உணர்த்தப்படும். இறைச்சியில் கூறக் கருதிய பொருள் வெளிப்படக் கூறப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு கூறப்பட்ட பொருளுக்குப் புறத்தே மற்றொரு பொருள் 'தொனி'க்குமாறு கூறப்படும். இவ்வாறு புறத்தே தோன்றும் குறிப்புப்பொருள் உவமேயமாகப் பெறப்பட்டதன்று. இறைச்சியை விளக்க நச்சினார்க்கினியர் தரும் எடுத்துக்காட்டே இவ்வுண்மைகளை விளக்குவதாயுள்ளது.

**இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்து**
**வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற**
**சூள்பேணான் பொய்த்தான் மலை** (கலி.41)

இதில் கூறக் கருதிய சூளைப் பொய்த்தான் என்ற கருத்து வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. உள்ளுறை உவமம் போன்று குறிப்பாக உணர்த்தப்படவில்லை. இவ்வாறு சூள் பொய்த்தவன் மலையில் நீர் இருப்பானேன் என்ற குறிப்புப் பொருள் உள்ளுறை உவமம் போன்று அருவி உவமமாக நிற்க உவமேயமாகப் பெறப்பட்டதன்று. இக்குறிப்புப் பொருள் கூறப்பட்ட பொருளின் புறத்தே , அப்பொருள் கூறப்படும் சூழலாலும், பொருளின் புறத்தே அப்பொருள் கூறப்படும் முறையாலும் தோன்றுகிறது. இவ்வாறு

கொள்வது தொல்காப்பிய நூற்பாக்களுக்குப் பொருத்தமாக இருப்பதோடு உள்ளுறை உவமத்தையும் இறைச்சியையும் தெளிவாக வேறுபடுத்திக் காணவும் உதவும். கவிதைப் பொருளுக்கும் புறத்தே தோன்றும், மற்றொரு பொருள் என்ற வகையில் இரண்டும் ஒக்கும் எனினும் அகத்திணைக்கே உரியது. கருப்பொருளில் தோன்றுவது என்ற இறைச்சிக்குரிய வரையறை தொனிக்கு இல்லை, ஒலியழுத்தம் போன்றவற்றாலும் தொனி தோன்றும் என்ற நிலை இறைச்சிக்கு இல்லை என்பது கருதத்தக்கது. உள்ளுறை உவமத்தில் கருப்பொருட்கள் ஒப்புறவுக் குறியீடுகளாகச் செயற்படுகின்றன. இறைச்சியிலோ முழுக்கவிதையே குறியீடாக நிற்கிறது எனக் குறியீட்டுப் பார்வையில் இவ்விரண்டையும் வேறுபடுத்தலாம்.

**……………………………..சாரல்**
**ஈன்றுநாள் உலந்த மென்னடை மடப்பிடி**
**கன்றுபசி களைஇய பைங்கண் யானை**
**முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்**
**வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை**
**நன்னாட் பூத்த நாகிள வேங்கை**
**நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை**
**நனைப்பசுங் குருந்தின் நாறுசினை யிருந்து**
**துணைப்பயிர்ந் தகவுந் துணைதரு தண்கார்[14]**

பாலைத் தலைவன் பிரிந்த சூழலில், வேறுபட்ட தலைவியைத் தோழி வற்புறுத்துமிடத்து எழுந்த இப்பாடலின் உரையாசிரியர் இக்காட்சியை இறைச்சியாகப் புரிந்துகொள்ள இடனமைக்கின்றார். பிடி யானைக்கும் அதன் கன்றிற்கும் களிற்றுயானை, பிடிக்கு ஈன்று வயிறும் கன்றிற்குக் குழவி வயிறும் உண்மையின் முற்றாத முளை கொணர்தல் வேண்டிற்று. நம் பெருமான் இக்காட்சியைக் காணுங்கால் நின்னை நினைவர். ஆதலில் காலம் நீட்டித்திரார்

என இறைச்சிப்பொருள் தோன்றிற்று. மேலே மயில் பெடையை அழைக்கும் கார்ப்பருவம் என்றதும் இங்ஙனமே அன்புறு தகுந இறைச்சியில் சுட்டியபடியாம்.[15]

சங்ககால இலக்கியத்தில் இறைச்சிப் பகுதிகளை ஆய்ந்து பார்க்கும்பொழுது ஒருசில சிறப்புச் செய்திகள் பெறப்படுகின்றன. உள்ளுறையும் இறைச்சியும் அமைய இடனாக நிற்கும் கருப்பொருட்கள் பொழுதும் இடமும் ஆகிய தற்பொருளுக்கு அடையாக நின்று சிறப்பிக்கின்றன. உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றுள் உள்ளுறைப் பகுதிகளே உரையாசிரியர்களால் மிகுதியாகக் காட்டப்பட்டுள்ளன. அகநானூற்றில் இறைச்சி என்பது சுட்டப்படவே இல்லை. நற்றிணையிலும், கலித்தொகையிலும் இறைச்சி ஆங்காங்குச் சுட்டப்படுகின்றது. பத்துப்பாட்டுள் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டில் மட்டும் உள்ளுறை வருமிடங்கள் இரண்டு என்று தெரிகிறது. இறைச்சி சுட்டப்படவே இல்லை. ஐங்குறுநூற்றில் பெரும்பாலும் உள்ளுறைகளே காட்டப்படுகின்றன. இரண்டு இடங்களில் மட்டும் உள்ளுறை என்பதும் இறைச்சி என்பதும் வெளிப்படையாகக் கூறப்படுகின்றன.[16]

பொருட்புறத்தனவாக அமையும் இறைச்சிக்கும் உவமை வழி அமையும் இறைச்சிக்கும் வேறுபாடு உள்ளது. முன்னதில் உவமையே அமைவதில்லை. பின்னதில் உவமை அடிப்படையாக நிற்கும்.

**பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு (நற் . 102/5)**

என்ற பாடலில் என்னைக் கைவிட்ட கொடுமையை உடையவர் சாரலாய் இருந்தும், அச்சாரலின் கண் உள்ள பல மரங்கள் பிறர்க்குப் பயன்படுமாறு காய்க்கின்றனவே என்ன வியப்போ எனப் பொருட்புறத்தனவாக இறைச்சி தோன்றுகிறது.

பொருட்புறத்தனவாக அமையும் இறைச்சிப் பொருள்களில் வியப்புணர்ச்சியோ, இறக்க உணர்ச்சியோ தலை சிறந்து விளங்குகிறது என்பது உரையாசிரியர்கள் காட்டும் உரை விளக்கத்தால் தெரிய வருகிறது.

**மணியின் தோன்றும் அம்மலை கிழவோன் (நற். 173 – 5–7)**

இதற்குத் தரும் இறைச்சிப் பொருளாவது 'ஒன்றினேம்யாம் என்று புகல்புக்க எம்மைக் கைவிட்ட அன்னோன் மலையாயிருந்தும் நீலமணி போலத் தோன்றி விளங்கா நிற்கும். இது என்ன வியப்போ' எனப் பொருளின் புறத்தே தோன்றியதாம். இதில் வியப்புணர்ச்சி வற்புறுத்தப் படுகிறது.

**செந்நெல் அஞ்செறுவில் அன்னம் துஞ்சும்**
**பூக்கெழு படப்பைக் காட்டன்ன (நற். 73 89–9)**

என்னும் பாடலில் செறுவில் அன்னம் துஞ்சும் என்றது யானும் சேக்கையின் கண்ணே அவர் மாா்பில் துஞ்சியிருந்தேன். இப்போது அது இல்லை போலும் என்று இரக்க உணர்ச்சி வற்புறுத்தப்படுகிறது.

உவமை வழியில் இறைச்சி வரும் நிலையினையும் காணமுடிகிறது.

**சிறுகுடிப் பரதவர்**
**கங்குல் மாட்டிய கனைகதிர் ஒண்சுடர்**
**முதிரா ஞாயிற்று எதிரொளி கடுக்கும்**
**கானலம் பெருந்துறை சேர்ப்பன் (நற். 219, 4–7)**

என்னும் இப்பாடலின் இறைச்சிப் பொருளாவது, பரதவர் கங்குல் மாட்டிய விளக்கு இளங்கதிரின் ஒளிபோல விளங்கும் என்றது தலைவன் என்னைக் கலந்து நின்னிற் பிரியேன் என்று சொல்லி விடுத்த வாய்மை என்நெஞ்சில் இலங்கா நின்றது என்றாள் என்பதாகும்.

பெருங்கடல்
இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென உரவுத்திரை
எறிவன போல வரூஉம்
உயர்மணல் படப்பை (நற். 375, 6–9)

என்ற நற்றிணைப் பாடலுக்கு ஆசிரியர் கூறும் உரைவிளக்கம், ஆரவாரிக்கு மென்றது. நீ வரைவொடு வருதல் கண்டு எமர் எதிர் கொண்டு மகிழ்ந்து ஆரவாரிப்பரென்றதாம்.

உள்ளுறையும் இறைச்சியும் உவமைகளைக் கொள்ளுவதைப் பற்றிப் பேசும்போது உரையாசிரியர்கள் இரண்டு வகை நெறிகளைக் கையாளுகின்றனர். அவை,

1.மொத்தமாகத் தொகைப் பொருளாக உவமைகளாகக் கொள்ளுதல்

2. ஒவ்வொன்றனோடு தனித்து இயைத்துப் பொருள் கொள்ளுதல்

'பிடிபுலம்புமாறு புலியானது களிறைத் தாக்கிக் கொல்லா நிற்கும் நாடன் இரவு இந்நெறியின்கண் வரின் யாம் புலம்புமாறு என்னை ஏதும் செய்யா நிற்பர்' என்று கூறும் நற்றிணை 36வது பாடலில் உள்ளுறை தொகைப் பொருளாக வருகிறது.

'கோங்கம் பூ மலர்ந்து காடு அழகு கொண்டது என்றது நீயிர் தலைவிபால் முகமலர்ந்து உரைதலால் இல்லறம் அழகாக நடைபெறுகின்றது' என்பதில் இறைச்சி தொகைப்பொருளாக அமைந்துள்ளது (நற். 48 ,3–5).

"கனி தலைவியாகவும், தும்பி தோழியாகவும், அலவன் தன்மேல் தவறிழைக்கும் தமராகவும், இறைதேர் நாரை தலைவனாகவும் கொண்டு, கனியைத் தும்பி மொய்த்தலும், அலவன் கைப்பற்றிக் கொள்ள நாரை வரக்கண்டு விட்டது போலத் தலைவியைத் தோழி சார்ந்திருப்பவும், தமர் முதலாயினர் இற்செறிப்பத் தலைவன் வரலும் அவர் மகட்கொடை நேர்ந்து

இற்செறிப்பொழிந்தார் என்றதாம் என்பதில் உள்ளுறை விரித்துக் கூறப்பட்டுள்ளது. (நற். 35, 2–7). ‘குறுமாக்கள் தலைவியாகவும் எருமையின் பால் மிகுதியாகக் கறக்க விரும்புதல் நோன்பின் பயனை மிக விளம்புதலாகவும், அவற்றை ஊர்ந்து செல்லுதல் தைத்திங்கள் விடியல் நீராடச் செல்லுதலாகவும் அதற்கேற்றவாறும் கொள்க’ என்று நற்றிணை 80வது பாடலின் உரை விளக்கத்தால் இறைச்சி விரித்துக் கூறப்பட்டுள்ளது தெளிவாகிறது. உள்ளுறை உவமத்தில் குறிப்புப் பொருள் தலைசிறந்து விளங்குமானால் அது இறைச்சியாகக் கொள்ளப்பட்டது. ‘சிறைப்புறம்’ என்றதால் அவனறியும் ஆற்றலே கூறினாள் ஆதலின் இவ்வாறு உள்ளுறையும் இறைச்சியும் கொள்ளலாயிற்று.

கூற்றுகளுள் தோழியின் கூற்றிலேயே உள்ளுறை இறைச்சிகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. அடுத்த நிலையில் தலைவி இடம் பெறுகின்றாள். தலைவன் மூன்றாவதாக அமைகின்றான். ஏனையோர் கூற்றில் இவை அருகி அமைந்துள்ளன.

### 5.2.2 உவமை வாயிலாக உணர்த்துதல்

அகப்பாடல்களில் மிக இன்றியமையாத உத்திகளாகப் பயின்றவை உள்ளுறை, இறைச்சி என்னும் வெளியீட்டு உத்திகளாகும். இவை குறியீட்டுத்திறன் கொண்ட உத்திகளாகும். எனவே, இவற்றைத் தற்கால புதுக்கவிதை உத்திகளுள் ஒன்றான குறியீடு என்றும் உத்தியோடு வைத்து நோக்க முடியும். உள்ளுறை என்பதோ, இறைச்சி என்பதோ அல்லது குறியீடு என்பதோ இவை யாவுமே தற்கால இலக்கிய உத்தியான கற்பனையோடு தொடர்புடையவை. கற்பனையால்தான் உவமை பிறக்கும். உவமையே உள்ளுறை உவமமாகிறது.

புலவன் அகவாழ்விலும் புற வாழ்விலும் உற்றுணர்ந்தவற்றைப் பிறர்க்கு உணர்த்திட வேண்டும் என்ற உந்துதல் காரணமாகவே இலக்கியம் பிறக்கின்றது.

புலவன் தான் அறிந்ததை அறிந்தவாறும் உணர்ந்ததை உணர்ந்தவாறும் கூறாமல் கற்போனை ஈர்த்திடும் வகையிலும் இன்புறுத்திடும், வகையிலும் சுவை கூட்டி உரைத்தல் வழக்கு. புலவன் அவ்வாறு தன் படைப்பிற்கு எவற்றைக் கொண்டு எம்முறையில் சுவை கூட்டுகின்றான் ?. இவ்வினாவில் 'எவற்றை' என்பதற்கு விடையாக அமைவனவற்றுள் முதன்மையிடம் பெறுவது கற்பனை. உண்மையே கற்பனையெனும் உடைபோர்த்தி இலக்கியத்தில் இடம்பெறுகிறது. எனவே கற்பனை என்பது மெய்மையின் வேறு வடிவமே ஆகும்.

ஆங்கிலத்தில் Imaginary, Imagine, Imaginative, Imagination என்று பயின்ற சொற்களுக்கு முறையே கற்பனையான, கற்பனை செய், கற்பனைத் திறத்திற்குரிய, கற்பனை செய்தல் என்று அகராதி பொருள் கூறுகின்றது.

கற்பனை என்ற பொருளில் வழங்கிய புனைந்துரை குறித்துத் தொல்காப்பியர்,

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**[17]

என்னும் நூற்பாவிற்கு 'நாடகமாகிய புனைந்துரை வகையாலும் உண்மையாக நிகழும். உலகியல் வழக்காலும் புலவராற்பாடுதற்கு அமைந்த அகத்திணை ஒழுகலாறு விளங்குவது புலனெறி வழக்கம்' என உரை வரைந்துள்ளார் நச்சினார்க்கினியார். களவியல் உரையாசிரியர் புனைந்துரைக்கப்படுவன இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் 'ஒழுக்கமாகும்' என்று கூறுவதும் கான்கற்பாலது. புனைந்துரைத்தல் இலக்கியத் திறனாகவே விளங்கியமை இவற்றால் புலப்படும்.

அணியிலக்கணங்களாகிய தற்குறிப்பேற்ற அணி, உயர்வு நவிற்சி அணி, பலபட புனை வணி முதலியன கற்பனையின் கலப்பினைக் கொண்டவையே என்பது அவற்றின் விளக்கத்தின் வழியே விளங்கப்பெறும் உண்மையாகும்.

"இயற்கையின் பல்வேறு வடிவங்களையும் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளையும் உணர்ச்சியின் ஆற்றல்களையும் கற்போனுக்கு வெளிப்படுத்திட புலவன் கற்பனையைக் கையாள்கின்றான்'' என்று டாக்டர் ஜான்சன் என்ற ஆங்கிலக் கவிஞர் கூறியுள்ளார்.

இலக்கியத்தின் அடிப்படைக் கோட்பாடு மாந்தரின் மனநிலையை – இன்ப துன்பங்களை – வெளிப்படுத்திக் காட்டுதலே! துன்பியலை வெளிப்படுத்துவதில் கற்பனையே தக்கதொரு கருவியாகக் காணப்படுகிறது.

### 5.2.2.1 உவமையும் கற்பனையும்

கற்பனை என்பது உவமையின் வழியே பிறந்து இலக்கியத்தின் சுவையை மிகுவித்து அமைவதாகும். இலக்கியத்தின் உள்ளீட்டுப் பொருளை எளிதாக உணர்ந்தறிய உறுதுணையாவது அதன் வெளியீட்டு முறையேயாகும். இலக்கிய வெளியீட்டு முறையில் சிறப்பிடம் பெறுவது கற்பனையே! கற்பனையின் பிறப்பும் சிறப்பும் உவமையில் தோன்றிக் காண்பனவாகும்.

தொல்காப்பியத்தில் கற்பனை என்னும் சொல் பயின்றுவரவில்லை. எனினும் உவமவியலைக் கற்பனைக்கு வகுக்கப்பட்ட இலக்கணமாகவே கொள்ளலாம். தொல்காப்பியத்தில் உவமையியலில் அமைந்துள்ள 37 நூற்பாக்களில் உவமையின் இயல்பு பற்றியும், உவமை தோன்றுவதற்குக் காரணமான பொதுப்பண்புகள் பற்றியும், உவமை வடிவம் அமைவது எப்படி, எவ்வெவ்வாறு அமையலாம் என்பது குறித்தும் கூறப்பட்டுள்ளது. அடுத்து, 'அன்ன' முதலாகப் 'புரைய' ஈறாக அமைந்த 36 உவம உருபுகளைக் கூறித் தொடர்ந்து வினை,

பயன், மெய், உரு ஆகிய நால்வகை உவமைகளுக்கு எவ்வெவ் உருபு பயின்று வருதல் வேண்டும் என்பது பற்றியும் உவமை யார்? யார்? எந்த அளவிற்குக் கூறுதற்கு உரியர் என்பன குறித்தும் கூறப்பட்டுள்ளன.

**வினை பயன் மெய்உரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமத் தோற்றம்**[18]

என்ற நூற்பாவில் வினை உவமம், பயன்உவமம், மெய் (வடிவம்) உவமம் , உரு (வண்ணம்) உவமம் என நால்வகையினவாகக் காட்டப்பட்டுள்ளன.

உவமையானது உவம உருபுகள் இன்றி வழங்கப்பெற்ற நிலையில் உவமைத் தொகையாக அமையும். உவமையையே உருவகமாக மாற்றிக் கூறுகையில் சொற்சுருக்கம் மட்டும் அமையவில்லை. பொருள் நயமும் சிறக்கின்றது. உணர்ச்சியின் வேகமும் மிக்கு அமைகின்றது.

கற்பனையின் தோற்றத்திற்குக் காரணமாகக் காணப்படும் உருவகம் என்பதை உவமையின் மாற்று வடிவமாகவே வகுத்துள்ளார் தொல்காப்பியர் என்பதைப் பின்வரும் நூற்பா மூலம் அறியலாம்.

**பொருளே உவமம் செய்தனர் மொழியினும்**
**மருளறு சிறப்பின் அஃது உவமமாகும்**[19]

பொருளையே உவமையாக்கிக் காட்டிடும் உருவகமும் கற்பனையின் திறத்தை உணர்த்தி அமைவதாகும். உவமையால் விளையும் கற்பனையினும் உருவகத்தால் தோன்றும் கற்பனை உணர்வுடையது எனலாம்.

**5.2.2.1.1 பெண் புலவர் பாடல்களில் காணலாகும் உவமைகளும் பாடுநெறியும்**

சங்கப் பெண் புலவர்கள் பல உவமைகளைப் பயன்படுத்தி உள்ளனர். டாக்டர் தாயம்மாள் அறவாணன் அவர்கள் பெண் புலவர் பயன்படுத்தும் உவமைகளைச் சில வகைப்பாட்டிற்குள் அடக்க முயன்றுள்ளார்.[20] அவை,

1. உருவ உவமைகள்
2. கருத்து உவமைகள்
3. கடமை உவமைகள்
4. பதிபக்தி உவமைகள்
5. காதல் தொடர்பான உவமைகள்
6. நிற உவமைகள்
7. அரிய உவமைகள்
    1. பண்பு உவமைகள்
    2. வினை உவமைகள்
    3. உரு உவமைகள் என்பனவாகும்.

சங்க இலக்கியத்தில் பெண் புலவர்கள் உவமையினை இயற்கைப் பொருட்களோடும் பண்பாட்டோடும், பழமொழியோடும், நடைமுறைப் பழக்க வழக்கங்களோடும் ஒப்புமைப் படுத்திக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர். உவமையணியே எல்லா அணிகளுக்கும் தாய் போன்றது. இதிலிருந்துதான் பிற அணிகள் உருவாக்கப்பட்டன எனலாம். சங்க இலக்கியங்களில் உவமைகள் வெறும் சொல்லலங்காரமாக இல்லாமல் கருத்திற்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளன.

**1. இயற்கைப் பொருட்கள்**

**களிறு தன்**

**கோட்டிடை வைத்த கவளம் போல[21]**

என்ற பாடலில் ஔவையார் அதியமானைச் சந்திக்க எப்பொழுது சென்றாலும் வேண்டிய பரிசுப் பொருள் கொடுத்து அனுப்புவான் என்பதை விளக்க இவ்வுவமை அவரால் எடுத்தாளப்பட்டுள்ளது.

**வெடிவேய் கொள்வது போல ஓடித்**

**தாவுபு உகளும் மா[22]**

என்றும்,

**மான் உளை அன்ன குடுமி[23]**

எனவும் உவமை காட்டப்படுகிறது. புரவி தாவிச் செல்லும் வேகம் வெடிவேய் என்ற சொற்றொடருக்கும் குடுமி மானின் உளைக்கும் உவமிக்கப்படுகிறது.

**பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல**

**உள்ளம் தாங்கா[24]**

தலைவனைப் பிரிந்த தலைவியின் உள்ளம் பசுங்கலம்போல் உள்ளது என்று உவமிக்கப்படுகிறது.

**கன்றும் உண்ணாது கலத்தினும் படாது**

**நல்ஆன் தீம்பால் நிலத்து உக்காங்கு**

**எனக்கும் உதவாது என்னைக்கும் உதவாது[25]**

**நல்அராக் கதுவியாங்கு என்**

**அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே[26]**

என்னும் உவமைகள் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயர நிலையினைப் படம் பிடித்துக் காட்டுவதற்கு எடுத்தாளப்பட்டுள்ளன.

**சினைப் பசும்பாம்பின் சூல்முதிர்ப் பன்ன**
**கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ[27]**

என்றும்,

**உயர்கோட்டு மகவுடை மந்தி போல[28]**

எனவும் இயற்கைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்**
**புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப்**
**பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்[29]**

கிளி மஞ்சள் நிற வேப்பம் பழத்தை வாயில் பற்றிக் கொண்டிருக்கும் காட்சி தங்கக் காசைப் புது நூலில் மாற்றும் பெண்ணின் கைக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

காதலரைப் பிரிந்த கையறு மகளிர் அழுது நீர் வடிக்கும் கண்போலக் கரு விளைப்பூ மழைத்துளி ஏற்று நீரை வடிக்கின்றது. கரிய நிறத்தை உடையவளின் முன் கையில் அணியப்பட்ட அழகிய வளையலை ஒத்ததும், ஒன்றோடு ஒன்று நெருங்கின இருப்பினை உடையதும், திண்ணிய பிணிப்பை உடையதும் என்று பொருநராற்றுப் படையில் கூறப்பட்டுள்ளது.[30]

**2. பண்பாட்டினைப் புலப்படுத்தும் உவமை**

சங்க காலத்தில் பூப்பெய்திய நாட்களில், குழந்தைப் பேறு நாட்களில் கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவதில்லை. அவர்களைக் கலந்தொடா

மகளிர் என்று கூறுவர். மேலும், கணவனை இழந்த மகளிர் நல்ல உணவு உட்கொள்வதில்லை. புல்லரிசியையே தங்கள் உணவாகக் கொள்வர். இக்கருத்தினை உவமையாகக் கையாள்கின்றனர் பெண்பாற் புலவர்கள்.

**சிறவெள் ஆம்பல் அல்லி உண்ணும்**
**கழிகல மகளிர் போல**[31]

**அணங்குடை முருகன் கோட்டத்து**
**கலந்தொடா மகளிரின் இகந்து நின் றவ்வே**[32]

என்னும் பாடலில் இனக்குழுத் தலைவனின் புரவிப்படையானது தாருடை வேந்தனின் புரவிப் படையுடன் பொருதும்போது , தாருடை வேந்தனின் புரவிப் படை கலந்தொடா மகளிர் போல ஒதுங்கி நின்றன என உவமிக்கிறார் பொன்முடியார்.

**3. போர்த்திறம்**

போர் வீரனின் போர்த்திறத்தையும் அவனின் ஆற்றலையும் புலப்படுத்தும்போது உவமை கையாளப்படுகிறது.

**இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போல**
**தோன்றாதிருக்கவும் வல்லன் மற்றதன்**
**கான்றுபடு கனைஎரி போல**
**தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே**[33]

ஞெலிகோல் எவ்வாறு தீயைத் தன்னுள் மறைத்து அடக்கி இருக்கின்றதோ, அதுபோல அதியமானும் கோபத்தைத் தன் மனத்திற்குள் மறைத்து வைத்துள்ளான். ஞெலிகோலைக் கடையும்போது தீப்பிடித்துக் கொள்வதுபோல அதியமானும்

கனை எரிபோலத் தன் கோபத்தைப் பகைவரிடம் காட்டுவான் என ஔவையார் அதியமானை ஞெலிகோலுக்கு உவமிக்கிறார்.

**மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்**

**உறைப்புழி ஓலை போல,**

**மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே[34]**

என்ற உவமையானது மழையிலிருந்து நம்மைக் காக்கும் பனையோலைக் குடையைப் போல இப்போர் வீரன் பகைவர்கள் வீசுகின்ற வேற்படையைத் தடுத்துக் காப்பவன் என்று போர்வீரனின் ஆற்றலை உறைப்புழி ஓலை என்று உவமிக்கிறார் ஔவையார்.

**புலிசேர்ந்து போகிய கல்அளை போல**

**ஈன்ற வயிரோ இதுவே[35]**

என்ற பாடல் ஒரு வீரனைப் பெற்றெடுத்த தாயின் வயிறு புலி சேர்ந்து போகிய கல் அளை என்ற உவமையின் வாயிலாக வீரனின் ஆற்றலைப் பாராட்டுகிறது எனலாம்.

**4. பழமொழியினை உவமையாகக் கையாளுதல்**

தலைவியைக் காணாது தவிக்கும் தலைவனைப் பார்த்துப் பாங்கன் அறிவுரை கூறுகிறான். அதற்குத் தலைவன் பதிலுரைப்பது போல் இவ்வுவமை கையாளப்படுகிறது.

**ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்**

**கையில் ஊமன் கண்ணின் காக்கும்**

**வெண்ணெய் உணங்கல் போல**

**பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே[36]**

என்று காதலின் பிரிவுத் துயரை உவமைப்படுத்தி யுள்ளார் வெள்ளி வீதியார்.

**5. ஒப்புமை**

இனக்குழுத் தலைவனின் குதிரைப் படையினையும் பெருவேந்தனின் குதிரைப் படையையும் ஒப்புமைப்படுத்தி, வேந்தனின் புரவிப்படையினைவிட இனக்குழுத் தலைவனின் குதிரைப்படை மிகச் சிறந்தது என்று பாராட்டுகின்றார் பொன்முடியார்.

**பருத்தி வேலிச் சீறூர் மன்னன்**
**உழுத்ததர் உண்ட ஓய்நடைப் புரவி**
**கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ**
**நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல் எருத்தின்**
**தண்ணடை மன்னர் தாருடைப் புரவி**[37]

என இருபெரும் வீரர்களின் தலைமையிலுள்ள புரவிப்படையின் ஆற்றலையும் தீரத்தையும் விளக்குகிறார் பொன்முடியார்.

அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் அதியமானின் வீரத்தையும் போர் ஆற்றலையும் உவமை வாயிலாகவும் ஒப்புமைப்படுத்தி விளக்குகிறார்.

**இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து**
**கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே**
**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**
**கொல்துறைக் குற்றில மாதோ**[38]

தொண்டைமானின் படைக்கலன்கள் புத்தம் புதியனவாக யுத்தக்களம் காணப்படாமல் இருக்கின்றன. ஆனால், அதியமானின் படைக்கலன்கள் பகைவர்களைக் குத்தி நுனி முறிந்து, அவற்றைச் செப்பம் செய்வதற்காகக்

கொல்லன் பட்டறையில் உள்ளன என்று அவன் போர் ஆற்றலை வெளிப்படுத்திப் போரிட்டால் தொண்டைமான் வீழ்ச்சியடைவது திண்ணம் என்பதை மறைமுகமாகக் கூறுகிறார் ஔவையார்.

### 6. உருவகம்

உவமிக்கப்படும் பொருள் உவமையாகவும், உவமையாக வருவது பொருளாகவும் வருவதே உருவகம் எனலாம்.

**முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை**
**அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி**
**ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை**
**ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்**
**புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்**
**நிலவரை எல்லாம் நிழற்றி**
**அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே**[39]

என்ற பாடல் காதல் நோய் எவ்வாறு வளர்ச்சியடைந்து துன்பப்படுத்துகிறது என விளக்குகிறது. காதல் என்ற நோய் நெஞ்சாகிய நிலத்தில் செடியாக முளைத்துக் கிளையாகப் பரவித் தளிராகவும் பெரு மரமாகவும் வளர்ந்து அலர் எனும் மலராக எல்லோர் பார்வையிலும் விளங்குகிறது என்று உருவகப்படுத்துகிறார்.

### 7. வருணனை

மனிதன் இயற்கையை வெல்ல முடியாது அதற்கு உட்பட்டே வாழ்கிறான். இயற்கை மனிதனின் அறிவியல் வாழ்விற்கு மட்டுமின்றிக் கலை வாழ்விற்கும் காரணமானது. எல்லா உயிரையும் உடன் பிறந்தனவாகக் கொள்ளுதல் இயற்கையில் இறைமையைக் காணுதல் என மனிதனின் ஆன்மீக வாழ்விற்கும் அஃது அடிப்படையாகின்றது. இலக்கியத்தில் இயற்கையைத் தரும் நிலைகள் பல உள்ளன. அவை இயற்கையை அவ்வாறே காட்டுதல், இயற்கையைச்

செயற்கையுடன் கலந்து தருதல், இயற்கையை அழகுறப் புனைதல், இயற்கையில் பல கூறுகளை இணைத்து விளக்குதல் என்பனவாகும். இயற்கையினைக் கூறும் முறையிலும் வேறுபாடுகளுண்டு. சிறு தொடராகத் தருதல் அல்லது நீண்ட பகுதியாக அமைத்தல், எளிய குறிப்பாக அமைத்தல் அல்லது விரிவாக வருணித்தல், நுட்பமாகக் காட்சிப்படுத்துதல் அல்லது மேற்கோளாகத் தருதல், செயற்பாடு இல்லாது ஓவியம் போலத் தருதல் அல்லது இயக்கங்கள் புலப்பட அமைத்தல் என இயற்கையை எடுத்துச் சொல்லும் முறையில் வேறுபாடுண்டு. இயற்கையை எடுத்து மொழிதல் அல்லது முன்னிலைப்படுத்தி அதனுடன் நேரடியாக அழைத்துப் பேசுதல் அல்லது இயற்கைப் பொருளே தன்னைப் பற்றிக் கூறுவதாக அமைத்தல் எனவும் வகைப்படுத்தலாம். இன்னும் கவிஞன் இயற்கையைப் படைக்கும் பாங்கில் ஐம்புலன் உணர்வுக்கும் முதன்மை கொடுத்துப் படைத்தல், புலனுக்கு முக்கியத்துவம் அளித்தல், புலனுணர்வுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்காமை எனப் பல நிலைகளில் அமையலாம்.

இலக்கியத்தின் இயல்பு, தகுதி, தேவை போன்றவற்றிற்கு ஏற்ப இயற்கையைப் பயன்படுத்துவதில் வேறுபாடு ஏற்படலாம். பின்புல வருணனை, அறிவுறுத்துதல், உள்ளுறை, இறைச்சி, குறியீடு ஆகிய பல்வேறு உத்திகளில் இயற்கை கையாளப்படுகிறது.

**பல்பூங் கானல் முள்இலைத் தாழை**
**சோறு சொரி குடையில் கூம்புமுகை அவிழ**[40]

எனவும்,

**கானே பூமலர் கஞலிய பொழில் அகந்தோறும்**
**தாம் அமர் துணை யொடு வண்டு இமிரும்மே**[41]

எனவும், நெய்தல் நிலத்தைக் குறிப்பிடும்போது தாழை மடலின் தன்மை, பூ, மொட்டு, கானல், பொழில், வண்டுகள் ஆகியவற்றை விவரித்தும் விளக்கப்படுகிறது.

**……………………முல்லை**
**அரும்புவாய் அவிழும் பெரும்புன் மாலை**[42]

என்றும்,

**கொல்லை புனத்த முல்லை மென்கொடி**
**எயிறு என முகையும் நாடற்கு**[43]

எனவும்,

**இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை**
**வெருகு சிரித்தன்ன பசுவீ மென்பிணிக்**
**குறுமுகை அவிழ்ந்த நறுமலர்**[44]

என்றும் வரும் பாடல்கள் முல்லை நிலத்தில் மலரும் முல்லைப் பூ அதன் நிறம், அது மலரும் நேரம், முல்லை நிலத்தலைவனே தன் காதலன் என்பதை விளக்கிக் காட்டுகின்றன.

**நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்**
**கருவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்**
**காலொடு வந்தகமஞ் சூல்மா மழை**[45]

எனவும்,

**இடம்படுபு அறியா வலம்படு வேட்டத்து**
**வாள்வலி நடுங்க புகல்வந்து ஆளி**

**உயர்நுதல் யானைப் புகர்முகத்து ஒற்றி**

**வெண்கோடு புய்க்கும் தண்கமழ் சோலைப்**

**பெருவரை அடுக்கத்து ஒருவேல் ஏந்தி**

**தனியன் வருதல் அவனும் அஞ்சான்[46]**

எனக் குறிஞ்சி நிலத்தை வருணிக்கும் பொழுது அந்நிலத்திலுள்ள விலங்குகள், பெய்யும் மழை, இடி, மின்னல் போன்ற இயற்கை செயற்பாடுகளை இப்பாடல்கள் விளக்குகின்றன.

**அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்**

**வாளை நாள்இரை பெறூஉம் ஊரன்[47]**

**குக்கூ என்றது கோழி அதன்எதிர்**

**துட்கென்றன்று என்தூஉய நெஞ்சம்[48]**

என்ற பாடல்கள் உள்ளுறையாகத் தலைவன் பரத்தமை மேற்கொள்கிறான் என மருத நிலத்தை வருணிக்கும் போது அமைகின்றன.

### 5.2.2.1.2 பெண் புலவர்களின் உவமை வழி கருத்து வெளிப்பாடு

கருத்து வெளிப்பாட்டிற்கு மொழி முதன்மையான கருவி எனலாம். ஒருவர் எழுதியுள்ள கருத்துக்களைப் படிப்போர் உணர்ந்து கொள்ள முடிகிறது. அதாவது கருத்தும் மொழியும் தொடர்புபடுத்தப்படுகிறது. இத்தொடர்பினால் பொருண்மை வெளிப்படுகிறது. பொருண்மை வெளிப்பாடு கேட்போருக்கும் படிப்போருக்கும் தெளிவாகப் புரியும் நிலையில் கருத்துப் புலப்பாடு செம்மையாக அமைகிறது. மையப் பொருண்மை தெளிவாக வெளிப்படும் நிலையில், கருத்துப் புலப்பாட்டுத் திறன் அதிகரிக்கும். இதன்வழி கருத்துக்கள் யாருக்காக வெளிப்படுத்தப்

படுகின்றனவோ அவர்களுக்கு உரிய முறையில் சென்று சேரும். அதாவது மொழிப்பயன்பாடு என்பது நிறைவாகவும் ஆற்றல் மிக்க வகையிலும் அமையும். ஒரே புலவர் தம் கருத்தினை வெளிப்படுத்தும்போது எடுத்துக் கொள்ளும் மையப் பொருண்மைக்கு ஏற்ப மொழிப் பயன்பாடும், சொல் தேர்வும் வேறுபடுத்திக் காட்டுவார்.

இதனை,

**முட்டுவேன் கொல் தாக்கு வேன்கொல்**
**ஓரேன் யானும் ஓர்பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒல்எனக் கூவுவேன் கொல்**
**அலமரல் அசைவளி அலைப்ப என்**
**உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே**[49]

என்ற பாடலில் காதலனைப் பிரிந்த தலைவியின் துயரம் வெளிப்படுகிறது. பிரிவுத் துயரினால் தவிக்கும் தலைவி ஆவேசப்படுபவள் போல் காணப்படுகின்றாள். அதனால் முட்டுவேன்கொல், தாக்குவேன்கொல், ஓரேன்,ஆஅ, ஒல் என்ற சொற்களின் வாயிலாக அவளது உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார் ஔவையார்.

**செல்வார் அல்லர் எனயான் இகழ்ந்தனனே**
**ஒல்வாள் அல்லல் என்று அவர் இகழ்ந்தனரே**
**ஆயிடை இருபேர் ஆண்மை செய்த பூசல்**
**நல்அராக் கதுவியாங்கு என்**
**அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே**[50]

என்ற பாடலில் காதலனைப் பிரிந்த தலைவியின் துயரம் விளக்கப்படுகிறது. இப்பாடலில் உவமையின் வாயிலாகக் கருத்து விளக்கப்படுகிறது. புலவர் ஒரே கருத்தை விளக்கும்போது உணர்ச்சிக்கு ஏற்ப சொல்லாட்சித் திறனைக் கையாள்வதை அறிய முடிகிறது. முதல் பாடலில் தலைவியின் துயரைக்

கவனியாது உறங்கும் ஊர் மக்களை ஏசும் பாங்கினைக் காண்கிறோம். இரண்டாம் பாடல் தலைவியிடம் சொல்லாமல் சென்ற தலைவனின் பிரிவு நல்அரவு தீண்டியதுபோல் உள்ளது என்று தன் உணர்வைத் தலைவி புலப்படுத்துவது போல் அமைக்கப்பட்டுள்ளது.

**குக்கூ என்றது கோழி அதன்எதிர்**
**துட்கென்றன்று என்தூஉய நெஞ்சம்**
**தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்**
**வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே**[51]

என்ற பாடலில் பூப்புக் காலத்தில் தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து போய் விடுவான் என்ற அச்சத்தின் காரணமாக வைகறை வருதல் கூடாது என்று தலைவி கூறுவதாக அள்ளூர் நன்முல்லையார் விளக்குகிறார்.

**நோம் என்நெஞ்சே நோம்என் நெஞ்சே**
**புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்**
**கட்குஇன் புதுமலர் முட்பயந் தாஅங்கு**
**இனிய செய்த நம் காதலர்**
**இன்னா செய்தல் நோமென் நெஞ்சே**[52]

என்ற பாடலில் தலைவன் தலைவியை விட்டுப் பரத்தையர் மாட்டுப் பிரிந்து சென்றான். மீண்டும் தலைவியிடம் வந்து சேருவதற்காகத் தோழியைத் தூதாக அனுப்புகிறான். தோழி தலைவியிடம் வாயில் வேண்டத் தலைவி மறுத்துரைப்பதாகக் கூறப்பட்டுள்ளது. முதல் பாடலில் தலைவியின் பூப்பு நிகழ்ச்சி மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. இந் நிகழ்ச்சியால் தன்னைப் பிரிந்து விடுவான் எனத் துயரப்படும் தலைவியின் கூற்றாகப் பாடல் அமைக்கப்பட்டுள்ளது. நெருஞ்சி முதலில் பூக்களாக மலர்ந்திருந்த போது

கண்ணுக்கு இனிமையாக இருந்தன. அது போலத் திருமணம் முடிந்த சில காலங்கள் தலைவனின் நடத்தையும் மலராக இருந்தது.

நெருஞ்சி முள்ளாக மாறி நடந்து வரும் பாதையில் துன்பத்தைத் தருவது போலத் தலைவனும் தன்னை விட்டுப் பிரிந்து பரத்தையர் மாட்டு ஒழுகி மீண்டு வருகிறான். இதனால் தலைவனின் நடத்தை முள்ளாக என் நெஞ்சைக் குத்துகிறது என்று ஊடல் கொள்கிறாள் தலைவி. இந்த இரு பாடல்களின் கருத்திற்கும் உணர்வுக்கும் ஏற்ப சொற்கள் கையாளப்பட்டுள்ளன என்பது இதன் வாயிலாகப் புலப்படுகின்றது. ஆகவே எந்தவொரு படைப்பாளியும் தான் எடுத்துக்கொண்ட கருத்திற்கும் உணர்விற்கும் ஏற்பவே சொல்லாட்சித் திறனை ஆற்றல் வாய்ந்தவையாகப் பயன்படுத்துவர் என்பது இதன் வழிப் புலனாகிறது.

### 5.3 வெளிப்படையாகக் கூறி உணர்த்துதல்

#### 5.3.1. கழார்க்கீரன் எயிற்றியார்

இவர் ஓர் ஆண்பால் புலவர் என்று வேங்கடராமன் (நற்றிணை மூலமும் உரையும், உ.வே.சா நூல் நிலைய வெளியீடு) என்பவரும், பாட்டும் தொகையும் பதிப்புக் குழுவினரும் காட்டியுள்ளனர். (தாயம்மாள் அறவாணன், 2004, பக்70). கழார்க்கீரன் எயிற்றியனார் என்ற ஆண்பாற் புலவர் பெயர் பயில்வதால், இப்பெயர் பெண்பாற்கண் வந்தது. 'கீரன் என்பவருக்கு உறவினர் போலும்' என்று டாக்டர் உ.வே.சா. கூறுவார். கீரன் என்பவர்க்கு மனைவியாதலால், இவரைக் கீரன் எயிற்றியார் எனச் சான்றோர் குறித்தனர் என்பர். 'இவர் கழார்க்கீரன் எயிற்றியனாருக்கு உடன் பிறந்தவரோ' எனத் திரு இரா. இராகவ அய்யங்கார் ஊகிப்பர்.[53]

கழார்க்கீரன் எயிற்றியார் பாடினவாக சங்க இலக்கியத்தில் ஒன்பது பாடல்கள் கிடைத்துள்ளன.[54] இவ் ஒன்பது பாடல்களும் குறிஞ்சி (2), முல்லை(1), மருதம் (2), பாலை(4) என்னும் திணைக்குள் வருகின்றன. எட்டுப் பாடல்கள்

தலைவி கூற்றிலும், ஒரு பாடல் தலைவன் கூற்றிலும் உள்ளன. தலைவி கூற கேட்போராகத் தோழி உள்ளாள். தலைவன் தன் நெஞ்சிடம் கூறுவதாகத் தலைவன் கூற்றுப் பாடல் அமைகிறது.

ஒன்பது பாடல்களுமே பிரிவை முன்னிறுத்தியே அமைகின்றன. பிரிவு என்னும் உரிப்பொருள் பாலைக்குரியது. எனினும் பொருள்வயின் பிரிதல் முல்லைக்குரியது. அச்சமயம் தலைவி ஆற்றியிருப்பாள். அங்ஙனம் அவள் ஆற்றாது உரைக்கும் போது அது பாலையின்பாற்படும்.

குறிஞ்சித் திணையில் இரண்டு பாடல்கள் உள்ளன. ஒன்று தலைவன் கூற்றில் அமைந்த நற்றிணைப் பாடல்[55], புணர்தல் குறிஞ்சியின் உரிப்பொருளாயினும், பொருள்வயின் பிரியக் கருதிய தன் நெஞ்சினிடம் ‘தலைவி ஆற்றாள்’ எனத் தலைவனே கூறி, தன்னைத் தானே செலவு அழுங்குவித்தலாக அமைகிறது. மற்றொரு குறிஞ்சித் திணைப் பாடல் [56] ‘இரவுக் குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது’ என்னும் துறையில் அமைந்து காணப்படுகிறது. இப்பாடலும், பிரியக் கருதிய தலைவனைச் செலவு அழுங்குவிக்கும் நோக்கத்துடனேயே பாடப்பட்டுள்ளது.

இப்பாடல்கள், திருமணத்திற்கு முன்பு தலைவன் பிரிந்தமையினையோ அல்லது பிரியக் கருதினமையையோ வெளிப்படுத்துவன. இப்பிரிவு தலைவன் தலைவியரிடையேயான அன்பை முழுமையாக வெளிப்படுத்த உதவுவதாகும்.

கழார்க்கீரன் எயிற்றியார், தலைவனைப் பிரிந்த தலைவியின் உணர்வுகளை மிக மென்மையாகவும், மிக நுட்பமான பின்னணியுடனும் விளக்குகிறார். இப்பாடல்களின் நிலப் பின்னணியாக அமைவது, மழை பெய்து ஓய்ந்த பின் வாடைக் காற்று வீசுகிற காலம் அமைந்த நிலமாகும். மழை பெய்ததினால், மரம், செடி, கொடிகள், பூக்கள் மிகவும் தூய்மையாக விளங்குவது பின்னணிப்

படுத்தப்பட்டுள்ளது. அந்நிலையில் வாடைக் காற்று வருகிறது. அதனால், நிலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், தலைவியிடம் ஏற்பட்ட மாற்றம், அதனால் தலைவன் மேல் ஏற்பட்ட கோபம் முதலியவை முறையே கழார்க்கீரன் எயிற்றியாரின் பாடலாக்க முறையாக அமைந்துள்ளமை காணத்தக்கது.

### 5.3.2 கழார்க்கீரன் எயிற்றியார் பாடல்கள் கட்டமைப்பு

எயிற்றியாரின் பாடல்களைக் கீழ்க்கண்டவாறு பகுப்பாய்வு செய்து கட்டமைக்கலாம்.

1. மழை வரவும் பெய்து தீர்த்தலும்
2. மழையினால் நிலத்தில் ஏற்பட்ட நிலை மாற்றம்
3. வாடைக்காற்று வருதல்
4. பூ வகைகள் பூத்துக் குலுங்குதல்
5. உயிரினங்களுக்கு வாடையினால் ஏற்பட்ட துன்பம்
    - ❖ காக்கை
    - ❖ தாமரை கரிந்து போதல்
    - ❖ நண்டு வாடையைப் பொறுக்காமல் வளைக்குள் செல்லல்
    - ❖ எருமை நீர்நிலை விட்டு வெளியேறுதல்;
      இரவில் 'ஐ' எனக் கரைதல்
6. தனிமையில் தலைவியின் துன்ப நிலை
7. தலைவன் மீது கூறிய சுடு சொற்கள்
8. தலைவன் மனநிலை

#### 5.3.2.1 மழை பெய்து தணிதல்

'கார் காலத்தில் வருவேன்' என்று கூறி, தலைவன் பொருள்வயிற் பிரிந்தோ, போர்வயிற் பிரிந்தோ சென்றான். தலைவி ஆற்றியிருந்தாள். கார்காலம் வந்தது; தலைவன் வரவில்லை. அவள் ஆற்றாது தவித்தாள். மழை பெய்தது; தணிந்தது. இச்செய்தி பல பாடல்களில் பதிவாகியுள்ளது.

பலவகைப் பட்ட பட்ட மலர்களும் குழைய வானத்தில் முழங்கி குளிர்ந்த மேகம் பெய்த மழை தணிந்த கூதிர் காலத்தின் இறுதி நாள்[57] , கரிய மேகம், பயனை அளிக்கும் நிலங்கள் நெகிழும் படியாகப் பெய்து, பின்னர் பெய்வதை வெறுத்து மலையைச் சேர்ந்தது . அது இரவில் வந்து பொங்கித் துளிர்த்தது.[58] (அகம்.235) மிகவும் இருண்ட மேகமானது வானத்தில், அதிர்ந்து முழங்கி மழை பெய்து கழிந்தது. பின்பு, புகை போலப் புள்ளியாய் நுண்ணிய பல பனித்துளிகள் பூக்களின் உள்ளே நிறைந்தன[59] கடலில் முகந்து வந்த நீரையெல்லாம் பெய்து திசைகளையெல்லாம் வெளியாக்கிய வெண்மேகம் கடையப்படும் பஞ்சின் துளிகள் பரந்து தோன்றியதைப் போன்று, சிறிய துளியையும் பெய்யாது ஒழிந்தது[60] சிறுசிறு துளிகளாகத் தொடங்கிப் பெருமழையாக மாறும்[61] என்றவாறு மழைபெய்த செய்திகள் கூறப்பட்டுள்ளன.

அகநானூறு இச்செய்தியை விரிவாகப் பதிவு செய்துள்ளது. பாடல் அடிகளின் எண்ணிக்கையே இதனைத் தீர்மானிக்கிறது.

### 5.3.2.2 மழையினால் நிலத்தில் ஏற்பட்ட நிலை மாற்றம்

‘மழை பெய்ததினால் நீர் பெருக்கெடுத்து ஓடியது, நீர் ஓடும் வாய்க்காலிடத்து மணலான மேடு கரைந்து போனது’[62] , ‘அகன்ற வயலிடத்தே நீண்ட நெற்கதிர்கள் இனிமையாய்த் தலைவளைந்திட்டன’[63] என்னும் பாடல் வரிகளில் நிலத்தில் ஏற்பட்ட மாற்றம் பதிவாகியுள்ளன.

### 5.3.2.3 வாடைக்காற்று வருதல்

மழை நின்று போன பிறகு வாடைக்காற்று வந்தது. கூதிர் கால வருணனையை நெடுநல்வாடை மிக விரிவாகப் பதிவு செய்துள்ளது. சிறு சிறு துளிகளாகத் தொடங்கி பெருமழையாக மாறி வருவதாகிய, குளிர்நிறை வாடைக் காற்று[64] , இரவு பகல் என்று அறிய முடியாதபடி மயங்கியிருக்கும் கூதிர்காலம்[65] , யானையானது நீரைக் குடித்துப் பெருமூச்சு விட்டதைப் போன்று கண்பார்வையை

மறைக்கின்ற பனித்துளிகளால் தாமரை மலர்கள் கரிந்தழியும் பனிப்பருவத்தின் நள்ளிரவில் மலைகளையும் நடுங்கச் செய்வது போன்ற குளிரையுடைய வாடைக்காற்று[66], கண் பார்வையை மறைக்கின்ற பனித்துளிகளை உடையது[67], தம் தலைவரைப் பிரிந்த மகளிர் அழகிழந்து நடுங்கப் பனிப்பருவம் வந்தது[68], வாடைக்காற்றோடு வீசும் பனிக்காலம்[69] என்னும் பாடல் செய்திகள் வாடைக்காற்று வருதலை உயிரோட்டத்துடன் விவரிக்கும்.

### 5.3.2.4 பூவகைகள் பூத்துக் குலுங்குதல்

வாடைக் காற்றினால் இயற்கை புத்துணர்ச்சி பெற்றது. வாடைக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மிகச் சிறப்புடன் விவரித்துள்ளார் எயிற்றியார். கொக்கைப் பார்வையாக்கி வேட்டுவன் அதன் கால் கட்டை அவிழ்த்து விட்டான்[70], கிளைகளில் மலரைச் சுற்றி வண்டுகள் மொய்க்கும்[71], அகலமான வயலில் கிளைத்து விரிந்த கரும்பினது திரண்ட காம்பையுடைய பெரிய பூ மழையில் நனைந்த நாரையைப் போல ஈரம் உடையதாய் வளைந்திருந்தது,[72] அகன்ற வயலில் உள்ள நீண்ட தண்டையுடைய கரும்பின் பெரிய பூக்கள் கோடைக் காலத்துப் பூளைப் பூப்போன்று வாடைக் காற்றால் அசைந்தது[73], திரண்ட கரும்பின் குவிந்த அரும்பு மலரும்படி வாடைக்காற்று வந்தது[74], உயர்ந்த அழகிய இதழையுடைய காந்தள் அரும்புகள் சுடரையுடைய அகல் விளக்கு போல் சுருங்கி விரிந்தன[75], சுரிந்த அரும்பையுடைய முசுண்டையின் கட்டவிழ்ந்த வெள்ளிய பூ, வானை அழகுபடுத்தும் விண்மீன்களைப் போல் பசுமையான புதர்களை அழகுபடுத்தியது[76], பஞ்சு போன்ற துய்யை (தலையை) உடைய பூவையுடையதும், புதர்களில் படர்வதுமான ஈங்கைக் கொடியினது, நெய்யில் தோய்த்தாற் போன்ற நனைந்த அழகிய தளிர்கள் இரு பிளவான ஈரலைப் போல் ஈரம் உடையவாய் அசைந்தன[77], தம் காதலரைப் பிரிந்துள்ள செயலற்ற மகளிரது நீர் ஒழுகும் கண்களைப் போன்று காக்கணச் செடியில் பூக்கள் மலர்ந்தன.[78] மருதோன்றியின் ஒள்ளிய பூக்கள் கட்டவிழ்ந்தன[79], குளிர்ந்த புதரிலுள்ள

ஈங்கையின் அழகிய தளிர் விளங்கின்[80] அவரைக் கொடியில் அழகிய பூக்கள் எங்கும் மலர்ந்தன[81], கொழுத்த இலையையுடைய அவரைக் கொடியின் அரும்புகள் விரிந்தன[82], பசிய இலை அடர்ந்த, புதர் தோறும் பகன்றை நீலம் ஊட்டப் பட்ட தோலின் நிறம் மறையுமாறு கிடுகின் மேல் பதித்த வட்டக் கண்ணாடியைப் போல் வெண்மையாய் மலர்ந்தன[83] என்றவாறு வாடைக்காற்றுப் பொழுதில் அலர்ந்த மலர்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன

### 5.3.2.5 உயிரினங்களுக்கு ஏற்பட்ட துன்பம்

வாடைக்காற்றினால் மலர்கள் மலர்ந்தாலும், விலங்குகள் மிகுந்த துன்பத்தை அடைந்தன. பூக்கள் கூட தாமரை மலர் பனியினால் கசிந்து போன செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது[84], புலங்கள் தோறும் நாரைகளின் கூட்டம் கல்லென்று ஒலித்தது[85], குளிர்ந்த, புதரிலுள்ள ஈங்கையின் அழகிய தளிர் தடவித் தன்னுடைய சிறகுகளைக் குவித்திருந்த வருத்தமிக்க வெண்மையான கொக்கு[86], வெற்றியடையும் போரைச் செய்யும் சோழருடைய 'கழார்' என்னும் ஊரில், மாசற்ற மரத்திலுள்ள காற்று மோதும் நெடிய கிளையில் காக்கை அமர்ந்து, மழைத் துளியில் அசைந்து கொண்டிருக்கும் [87], காக்கையானது கொள்ளத் தகுந்த நல்ல வகையான மிகுந்த பலிக்கொடையோடு போடப்படும் அடங்காத சோற்றுத் திரள்களோடு அழகிய புது வருவாய் போன்ற இறைச்சியுடைய பெருஞ்சோற்றுத் திரள்களையும் நினைத்துக் கொண்டு (கழார் நகரில்) உட்கார்ந்திருக்கும்[88], கருவுற்ற பச்சைப் பாம்பின் சூல் முதிர்ச்சி போல கரும்புப் பூ விளங்கும்[89] , நண்டானது தனது வளைக்குள் போய்ச் சேர்ந்தது[90], சேற்றில் நிற்பதை விரும்பாது, சிவந்த கண்களையுடைய எருமை வெளியேறியது[91] , அந்த எருமையானது குளிர் தாங்காது நள்ளிரவில் 'ஐ' என ஒலி எழுப்பும்.[92]

இத்தகைய கார்கால இறுதி நாட்களில் 'பழைய மழை பெய்த உள்ளீடற்ற காய்களைக் கொண்ட என் பயிர்கள் நின்றன[93] , மிகக் கொடிய சினத்தினால் அச்சத்தை ஏற்படுத்திய பனி தாங்கிய வாடைக் காற்றானது, மயக்கமுடைய

மாலைப் பொழுதுடன் கூடி இறக்கம் இன்றி வருத்தியது[94] என்று உயிரினங்களுக்கு ஏற்பட்ட துன்பம் விளக்கப்படுகிறது,

**5.3.2.6 தனிமையில் தலைவியின் துன்ப நிலை**

தலைவனை எதிர்பார்த்துத் தலைவி காத்திருந்தாள். தலைவன் வரவில்லை. வாடைதான் வந்தது. இடைவிடாமல் வீசும் வாடைக் காற்றினால் தலைவி தன் தனிமையைப் பொறுக்காதவள் ஆனாள்[95], இரவுக் காவலர், நொடிப் பொழுதையும் கணக்கிட்டு ஆராயும் தன்மை போல் தலைவியும் இரவைக் (தலைவனை நினைத்து) கணக்கிட்டு வருந்தி நெஞ்சம் புன்பட்டாள்[96], தலைவன் பிரியும் போது உடன்பட்ட கண்கள், இப்போது பிரிவாற்றாமல் அழுவதைக் கண்டபோது அவை நாணமில்லாதவை' என்றாள் தலைவி[97], அச்சமூட்டும் பனிக்கால இரவிலும் தலைவியின் கண்கள் உறங்காவாயின[98], தலைவனைப் பிரிவதால், கோடையிலும் நடுங்குபவள் தலைவி[99], தலைவி, தன்னை வருத்தும் வாடையை 'வாடையே! நீ கொடியவரான தலைவன் சென்ற திக்கில் அயராமல் செல்வாயாக! அவ்வாறு சென்றால் பொருளை ஈட்டும் வேட்கை கொண்ட தலைவர் என்னை நினைத்து வருதலும் உண்டு' என்றாள்.[100] மழை பொழிந்த மயக்கமான இருளையுடைய நடு நிசியில் காதலர் பக்கத்தில் இருக்கவும் தலைவி கடும் குளிரால் மிகப் பெரிதும் புன்புற்று உறங்காமல் இருந்தாள்[101] வாடையினை நோக்கி, ' வாடைக் காற்றே நீ என்னையே வருத்த வந்தது போல் உள்ளாய். நீர் ஒடும் வாய்க்காலிடத்து மணலான மேடு கரைவது போல் நெஞ்சம் நெகிழ்ந்து இளகிடும்' என்று கூறுகிறாள்[102] , 'கூதிர் காலத்தின் இறுதி நாளில் பிரிவுத் துன்பம் நெஞ்சத்தில் மிகுந்திட நான் தனித்திருக்குமாறு என்னை (தலைவி) விட்டுச் சென்ற தலைவரை நினைத்துச் சில வளைகள் கழன்று விழப் பெரிதும் ஆர்வம் கொண்ட உள்ளத்துடன் மீண்டும் அவர் வரும் திசையை நோக்கி வருந்தியிருந்தேன். இறப்பதற்குக் காரணமான துன்பத்துடன் கூடி இருக்கின்றேன்' என்று தலைவி தன் துன்பத்தின் உச்ச நிலையைக் கூறுகிறாள்.[103] வாடையினால் அயலவரால் அறியப்படுமாறு, நெற்றியில் உண்டான பசலையுடன் பழைய மேனி

அழகுகெட மெலிந்து இவள் என்ன நிலையினள் ஆயினளோ[104] எமக்கு அருள் செய்யாத காதலர் பிரிந்து செல்வாராயின் அவர் எம் அழகை நுகர்ந்து கை விட்ட பாழ் மேனியைக் கண்டு அக் காமநோய் மேலும் வருத்துவதால், வலிமையற்று உடையும் நெஞ்சத்துடன், அவருடன் புணர்தலை விரும்பிக் கடும்பனியால் வருந்திப் பற்களைத் தீயுண்டாகக் கடித்து நடுக்கம் கொள்வோம்[105] என்றவாறு தலைவியின் துன்பநிலை பாடப்பட்டுள்ளது.

### 5.3.2.8 தலைவன் மீது கோபத்தினால் கூறிய சுடுசொற்கள்

தலைவி தன் துன்ப நிலையைத் தீர்க்க வராத தலைவன் மீது கோபம் கொள்கிறாள். இதனால் சில சுடு சொற்களை அவன் மீது வீசுகிறாள். 'கொடியவரான தலைவர் வாடைக் காற்றினால் மனம் மாறித் தலைவியை நோக்கி வருதலும் உண்டு[106] எமக்கு அருள் செய்யாத காதலர்[107], இந்தப் பருவம் பொருள் வயின் பிரிவார்க்கு ஏற்ற ஒன்று என நினைத்து எத்தகைய சிறந்த பொருளைப் பெறுவதாய் இருந்தாலும் பிரியாதீர் என்று எமக்குத் துணையாய் உள்ள உமக்குக் கூறுவேன் என்று நீ (தோழி) தலைவருக்குக் கூறவும்[108], காதலர் பொருள் தேடுதலையே விரும்பித் தலைவியை நினைக்க வில்லை. செய்யும் செயலின் மிகுதியால் அதனையே நினைத்துத் தலைவியை மறந்து விட்டார்[109], முன்பனிக்கால நள்ளிரவில் சினம் மிக்க மன்னனின் பாசறையில் நீண்ட காலம் தங்கித் தம் துன்பத்தை அறியாத அறம் இல்லாத தலைவர்[110] என்று பலவாறு தலைவி தலைவன் மீது கோபம் கொண்டு பேசுகிறாள். அக் கோபத்தில் அவள் தலைவன் மீது கொண்ட அன்பே வெளிப்படுகின்றது.

### 5.3.2.9 தலைவன் மனநிலை

எல்லாப் பாடல்களையும் தலைவி கூற்றாலேயே அமைத்த எயிற்றியார் நற்றிணை 312 ஆம் பாடலை தலைவன் கூற்றாக அமைக்கிறார். இதில் தலைவன் தலைவி மீது கொண்ட அன்பை விவரிக்கிறார். 'பொருள் விரும்பி

என்னை நொந்து கொள்ளும் மனமே'[111] என்ற பாடலின் தன் மனத்திடம் கூறுவதாகக் கூறி, தலைவி மீது தனக்குள்ள அன்பைப் புலப்படுத்துகிறான்.

'கார்காலத்திலும் பகல் இரவு என்று அறிய முடியாதபடி மயங்கியிருக்கும் கூதிர்காலத்திலும் வாடைக் காற்றோடு கலந்து வீசும் பனிக் காலத்திலும் தனியாக இருந்து தலைவி என்ன பாடுபடுவாளோ?[112] என்று மனத்திடம் கேட்கிறான். "படர்ந்த தேமலையும் இளைய முலைகளையுமுடைய தலைவனைப் பிரிவதால் கோடையிலும் நடுங்குபவள். எனவே மனமே செலவினைத் தவிர்"[113] என்பதாக அப்பாடல் அமைகிறது.

இப்பாடல் ஆண் மொழியாகவே உள்ளமையினை முலைகள் பற்றிக் குறிப்பிடுவதால் அறியலாம். ஏனெனில் பிற எட்டுப் பாடல்களில் ஓரிடத்தில் கூட இது போன்று பெண் உடல் குறித்த சொற்கள் இடம்பெறவில்லை.

### 5.3.3 பெண் புலவரின் பெண்மொழி

கழார்க்கீரன் எயிற்றியார் இயற்றியதாகக் கருதப்படும் ஒன்பது பாடல்களையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி ஆராயும் போது, ஒன்பது பாடல்களுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக உள்ளமையினை அறியமுடிகிறது. எல்லாப் பாடல்களிலும் 'பிரிவு' என்னும் பொருள் அடிப்படையாக உள்ளது. எல்லாப் பாடல்களுமே கார்காலப் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, ஒன்பது பாடல்களும் ஒருவராலேயே இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

தொல்காப்பியர் உவமவியல் 26 ஆம் நூற்பாவில் தலைவி கூற்று நிகழ்த்தும் போது, அவள் அறிந்த பொருட்களையே உவமையாகக் கூற வேண்டும் என்கிறார். தலைவிக்கோ, தோழிக்கோ கூறும் இவ்வரையறை சங்ககாலப் பெண் புலவர்களுக்கும் பொருந்தும், ஒரு சிலரைத் தவிர (ஔவையார்). இதனை ஒரு கருதுகோளாகக் கொண்டு எயிற்றியார் பாடல்களை நோக்கினால் நாளிகைக் கணக்கர்[114], பச்சைப் பாம்பு[115], யானை[116] பலியுண்ட காக்கை[117] முதலிய

சில முக்கியமான கருப்பொருட்கள் இவர் பாடல்களில் பதிவாகி உள்ளன. இவற்றைக் கொண்டு, பெண்களுக்கு இவை பரிச்சயம் இல்லாதவை. எனவே , ஆண் கவிஞராகவே இருப்பார் என்ற முடிவுக்கும் வர முடியாது.

பொருள்வயிற் பிரிவும், போர்வயிற் பிரிவும் சிறப்பாக முல்லைக் குரியவை. அதுவே, இங்கு மிகுதியாகப் பேசப்படுகின்றது. முல்லைத்திணையில் ஒரு பாடல் மட்டுமே[118] இடம் பெற்றாலும், பிற பாடல்களில் பின்னணியாக இம் முல்லை நிலமே இடம் பெறுகிறது. வயல் ஒரு பாடலில் வருகிறது.[119] எனவே, எயிற்றியார் காட்டும் கருப்பொருட்கள் முல்லைநிலப் பெண்கள் எல்லோருமே அறிந்தவைகளாகவே இருக்க வேண்டும்.

எயிற்றியார் பாடல்களில் பிரிவும், அதன் மூலம் தலைவன் தலைவியரிடையேயான மெல்லிய காதல் உணர்வுமே பேசப்படுகின்றன. 'மலரினும் மெல்லியது காமம்' என்பாரே வள்ளுவர். அது போல, கார் காலப் பின்னணியில் படிப்படியாக மழையைக் காட்டி நிலத்தைக் காட்டி, மலரைக் காட்டி விலங்குகளைக் காட்டி அவையெல்லாம் குளிரால் நடுங்கத், தானும் நடுங்கத், தன் நடுக்கம் தீர்க்கத் தலைவன் வரவில்லையே என்ற ஏக்கமும் அதனால் விளைந்த கோபமும், அந்தக் கோபத்தினால் வெளிப்படும் சுடு சொற்களும் பதிவாகியுள்ளன.

## தொகுப்புரை

'பாடுநெறி' என்னும் ஐந்தாம் இயல் பெண் புலவர்களின் கவிதை வெளியீட்டு நிலை பற்றி ஆராய்வதாக அமைகிறது.

- மூன்று பிரிவுகளாக இப்பகுதி அமைகிறது. அவை

1. உள்ளுறை இறைச்சி முதலிய குறிப்புப் பொருள்களின் மூலம் உணர்த்துதல்

2. உவமை வாயிலாக உணர்த்துதல்

3.வெளிப்படையாக உணர்த்துதல்

என்பனவாகும்.

- பெண்கள் உள்ளுறை இறைச்சி முதலிய குறிப்புப் பொருள்களில் அதிகக் கவனம் செலுத்தாமை ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

- உவமை கூறுவதிலும் அத்துணைச் சிறப்பின்றி உள்ளமை ஆராயப்பட்டுள்ளது.

- வெளிப்படையாகக் கூறுதல் பெண்களிடம் அதிகம் காணப்படும் உத்தி என்பது விளக்கப்பட்டுள்ளது.

- கழார்க்கீரன் எயிற்றியாரின் வெளியீட்டு முறைகள் இங்கு விரிவாக விளக்கி ஆராய்ந்து முடிவு கூறப்பட்டுள்ளன.

## மேற்கோள்கள்


1. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூ.எ– 1
2. நம்பியகப்பொருள், நூ.எ– 2
3. நம்பியகப்பொருள், நூ.எ– 29
4. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூ.எ–48, நச்சினார்க்கினியர் உரை
5. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், நூ.எ–26–31
6. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், நூ.எ–23,24, பேராசிரியர் உரை
7. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், நூ.எ–37,24 பேராசிரியர் உரை
8. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், 'இறைச்சிப் பொருள்' கரந்தைச் சங்க வெள்ளி விழா மலர், ப. 190–91
9. வீ. சேதுராமலிங்கம், இருபத்தொன்றாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை , தொகுதி– 1, ப. 510– 515
10. குறுந்தொகை, பா.எ– 176
11. குறுந்தொகை, பா.எ– 178
12. குறுந்தொகை, பா.எ– 287
13. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், நூ.எ–35,36 நச்சினார்க்கினியர் உரை
14. அகநானூறு, பா.எ– 85
15. அகநானூறு, பா.எ– 85, பெருமழைப்புலவர் திரு.பெ. வே. சோமசுந்தரனார் உரை, கழகம், ப– 314
16. இறைச்சி, ஐங்குறுநூறு, பா.எ– 177/23, உள்ளுரை , ஐங்குறுநூறு, பா.எ– 151/ 1–4

17. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூ.எ– 56

18. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், நூ.எ– 1

19. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், நூ.எ– 9

20. டாக்டர் தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, ப–. 372

21. புறநானூறு, பா.எ– 101

22. புறநானூறு, பா.எ– 302

23. புறநானூறு, பா.எ– 310

24. குறுந்தொகை, பா.எ– 29

25. குறுந்தொகை, பா.எ– 27

26. குறுந்தொகை, பா.எ– 43

27. குறுந்தொகை, பா.எ– 35

28. குறுந்தொகை, பா.எ– 29

29. குறுந்தொகை, பா.எ– 67

30. பொருநராற்றுப்படை, பா.எ– 14–15

31. புறநானூறு, பா.எ– 280

32. புறநானூறு, பா.எ– 299

33. புறநானூறு, பா.எ– 315

34. புறநானூறு, பா.எ– 290

35. புறநானூறு, பா.எ– 86

36. குறுந்தொகை, பா.எ– 58

37. புறநானூறு, பா.எ– 299

38. புறநானூறு, பா.எ– 95

39. அகநானூறு, பா.எ– 273.

40. நற்றிணை, பா.எ– 335

41. நற்றிணை, பா.எ– 348

42. நற்றிணை, பா.எ– 369

43. குறுந்தொகை, பா.எ– 186

44. குறுந்தொகை, பா.எ– 220

45. குறுந்தொகை, பா.எ– 158

46. அகநானூறு, பா.எ– 252

47. குறுந்தொகை, பா.எ– 364

48. குறுந்தொகை, பா.எ– 157

49. குறுந்தொகை, பா.எ– 28

50. குறுந்தொகை, பா.எ– 43

51. குறுந்தொகை, பா.எ– 157

52. குறுந்தொகை, பா.எ– 202

53. ஔவை நடராசன் , புலமைச் செல்வியர், ப.–65

54. குறுந்தொகை, பா.எ– 35,261,330

55. நற்றிணை, பா.எ– 312

56. குறுந்தொகை, பா.எ– 261

57. அகநானூறு, பா.எ– 163

58. அகநானூறு, பா.எ– 235

59. அகநானூறு, பா.எ– 294

60. அகநானூறு, பா.எ– 217

61. குறுந்தொகை, பா.எ– 35

62. அகநானூறு, பா.எ– 163

63. அகநானூறு, பா.எ– 294

64. குறுந்தொகை, பா.எ– 35

65. நற்றிணை, பா.எ– 312

66. அகநானூறு, பா.எ– 163

67. அகநானூறு, பா.எ– 163

68. அகநானூறு, பா.எ– 217

69. நற்றிணை, பா.எ– 312

70. நற்றிணை, பா.எ– 312

71. அகநானூறு, பா.எ– 294

72. அகநானூறு, பா.எ– 235

73. அகநானூறு, பா.எ– 217

74. குறுந்தொகை, பா.எ– 35

75. அகநானூறு, பா.எ– 235

76. அகநானூறு, பா.எ– 235

77. அகநானூறு, பா.எ– 294

78. அகநானூறு, பா.எ– 294

79. அகநானூறு, பா.எ– 214

80. நற்றிணை, பா.எ– 312

81. அகநானூறு, பா.எ– 294

82. அகநானூறு, பா.எ– 217

83. அகநானூறு, பா.எ– 217

84. அகநானூறு, பா.எ– 163

85. அகநானூறு, பா.எ– 217

86. நற்றிணை, பா.எ– 312

87. நற்றிணை, பா.எ– 281

88. நற்றிணை, பா.எ– 281

89. குறுந்தொகை, பா.எ– 35

90. அகநானூறு, பா.எ– 235

91. குறுந்தொகை, பா.எ– 261

92. குறுந்தொகை, பா.எ– 261

93. குறுந்தொகை, பா.எ– 261

94. அகநானூறு, பா.எ– 235

95. அகநானூறு, பா.எ– 294

96. குறுந்தொகை, பா.எ– 261

97. குறுந்தொகை, பா.எ– 35

98. குறுந்தொகை, பா.எ– 261

99. நற்றிணை, பா.எ– 312

100. அகநானூறு, பா.எ– 163

101. நற்றிணை, பா.எ– 281

102. அகநானூறு, பா.எ– 163

103. அகநானூறு, பா.எ– 163

104. அகநானூறு , பா.எ– 235

105. அகநானூறு, பா.எ– 217

106. அகநானூறு, பா.எ– 163

107. அகநானூறு, பா.எ– 217

108. அகநானூறு, பா.எ– 217

109. அகநானூறு, பா.எ– 235

110. அகநானூறு, பா.எ– 107

111. நற்றிணை, பா.எ– 312

112. நற்றிணை, பா.எ– 312

113. நற்றிணை, பா.எ– 312

114. குறுந்தொகை, பா.எ– 261

115. குறுந்தொகை, பா.எ– 35


116. அகநானூறு, பா.எ– 163

117. நற்றிணை, பா.எ– 281

118. அகநானூறு, பா.எ– 294

119. அகநானூறு, பா.எ– 294

# இயல் 6



# ஒப்பீடு

ஒப்பிடுதல் என்பது ஒரு பொருளைப் பிற பொருளிலிருந்து வேறுபடுத்தி அதன் தனித்தன்மைகளை அறிய உதவும் வழியாகும். சங்கப் பெண் புலவர் பற்றிய இவ் ஆய்வில் பெண் புலவர் பற்றிய பல்வேறு செய்திகளும் ஆராயப்பட்டன. எனினும் அவை ஒப்பீட்டு நிலையில் அமையவில்லை. இப்பகுதியில் சங்க இலக்கிய ஆண் கவிஞர்களோடு மேற் கூறப்பட்ட செய்திகள் ஒப்பிடப்பட உள்ளன. இதன்மூலம் பெண்புலவர் பாடல்களை நாம் ஆண் புலவர்களிடமிருந்து வேறுபடுத்துவதற்கான வழிமுறைகளை அறிந்துகொள்ள முடியும். பெண்புலவர் பாடல்கள் இதுவரை பொருண்மை, வகைப்பாடு, அறவுரை, அறிவுரை, அறநோக்கு, வெளிப்பாடு எனும் நிலைகளில் ஆராயப்பட்டுள்ளன. மேற்காணும் இப்பொருண்மைகளில் ஆண் புலவர்களின் நிலைப்பாடு குறித்து ஆய்ந்து அவை பெண் புலவர்களின் பாடல்களோடு ஒப்பிடப்பட உள்ளன.

### 6.1 பொருண்மை ஒப்பீடு

பெண்புலவர் பாடல்களில் பொருண்மை எனும் முதல் இயலில் சமூகம் சார்ந்த பொருண்மைகளான வாழ்க்கை, மக்கள் பற்றிய செய்திகள், உணவு பற்றிய செய்திகள், உடை பற்றிய செய்திகள், நம்பிக்கைகளான தெய்வ நம்பிக்கை, பேய் நம்பிக்கை, நிமித்தங்கள், வெறியாடல் பற்றிய குறிப்புகள், இசையும் இசைக்கருவிகளும், தொழிற் கருவிகள், அணிகலன்கள், கூத்து பற்றிய செய்திகள், பாடினி பற்றிய வருணனைகள் முதலியன ஆராயப்பட்டுள்ளன.

பெண்புலவர் பாடல்களால் அறியப்படும் பொருண்மைகளைச் சுருக்கமாக இங்குக் காணலாம். அணிகலன்கள், ஆட்டம், பாடினி வருணனை, யாழ் வருணனை, கூத்து, உடை, உணவு, கள், மீன், ஊர்ப்பெயர்கள் (அஞ்சில், அள்ளூர், கழார், குடநாடு, கொற்கை, தொண்டி, நாலூர், மூதூர், வெண்ணி)

கருவி(தோற்கருவி, பறை, மயிர்குறை கருவி, தட்டை, கலம்) காதல், காமம், தொழிலாளர், தேர், நாடு, பசி, பண்ட மாற்று, நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், வெறியாட்டு, பரத்தையர், பறவைகள் (காக்கை, கிள்ளை, குக்கூ, குயில், குருகு, கொக்கு, பார்வைக்கொக்கு, தோகை, கோழி, காட்டுக்கோழி, மனைக்கோழி, கிச்சிலிப் பறவை, நாரை, புள், புறா, பூழ்ப்பறவை, மயில், வண்டு, வௌவால்) பெண் – கடுஞ்சூல் மகளிர், பெண்ணின் பருவ வளர்ச்சி, பொய்வல் முதுவாய்ப் பெண்டிர், பொழுது, போர், மக்கள், முதியோர், மரம் ,செடி, கொடி, பூ (அகில், அடப்பங்கொடி, அரும்பு, அவரை, அரும்பு, அலரி, இன்டின் குழை, ஆத்தி, ஆம்பல், ஆலம், ஈங்கை மலர், உழிஞ்சில், உழுந்து, ஏனல், கஞ்சசங்குல்லை, கடப்ப மலர், கண்ணி, கரும்பு, கள்ளி, கனி, காஞ்சி, காந்தள், காயாமலர், குல்லை, குவளை, கொக்கு, (மாமரம்) கொன்றை, சந்தனம், சிதகுக்காய், ஊமைக்காய், ஞாழல், தழிஞ்சி, தாமரை, தினை, தெங்கு, தேற்றா, தோன்றிப்பூ, தோன்றி, நறைக்கொடி, நரந்தம், நெய்தல், நெருஞ்சி, நெல் (சாலி, வெண்நெல்) நொச்சி, பசன்றை, பலா, பிடா, பனை, பாகல்பழம், புன்கு, புன்னை, பூளைப் பூ, போந்தை, மாமரம், மரல், மதமரம், மலர், முசுண்டை, முல்லை, முளரி, மூங்கில் முத்தம், மூங்கிலரிசி, யாமரம், வரகு, வள்ளை, வாழை, வேங்கை, வீ, வேப்பம் பழம், வேய், மலை) முகில், கார்ப்பருவ மேகம், வரலாற்றுச் செய்திகள் (அஞ்சி, அன்னி, அன்னி மிஞிலிக்குத் தந்தை, ஆட்டனத்தி, ஆதிமந்தி, சேரமாதேவி, உழிஞையன், உறந்தை, இளஞ்சேட்சென்னி, எழினி, கரிகாலன், கிள்ளி, குடக்கோ நெடுஞ்சேரலாதன், குடவர்கோ, குரிசில், கோசர், நாலூர்க்கோசர், கோமான், திதியன், நன்னி, நன்னன், மூவேந்தர் பற்றிய செய்தி, வேந்தன், சேர சோழ பாண்டியன், வானவரம்பன், வெள்ளி வீதி) விலங்குகள் (அயிரை மீன், அலவன், ஆடு, வரையாடு, ஆமை, சூல் ஆமை, கள்வன், ஆன், கடு, கயிலை, இரலை, உழுவை, உழையினம், எருமை, ஓந்தி, களிறு, காட்டுப் பூனை, குஞ்சு, குதிரை, ஞெண்டு, தேரை, நீர்நாய், பகடு, பறழ், பாம்பு, அரவு, பிடி, யுக்தி, புலி) தாய்ப்பாசம், தோல் பொம்மை ஆட்டம், நிலையாமை(3) புலி உருமுதல்(3)

முதலியவை பெண் புலவர்களின் பொருண்மைகளில் இடம்பெறும் பொருட்களாக உள்ளன.

சங்கப் புலவர் பாடல்களில் காணப்படும் பொருள்களில் இத்தொகை மிகக் குறைந்த அளவாகும். சான்றாக வரலாற்றுச் செய்திகளில் வெளிப்படும் வரலாற்று மாந்தர்கள் சுமார் 350 பேர்[1] காணப்படுகின்றனர். ஆனால் பெண்புலவர் பாடல்களில் சுமார் 25 பேர் மட்டுமே காணப்படுகின்றனர். அதிலும் பெரும்பாலும் ஔவையார் பாடலில் மட்டுமே அதிகம் காணப்படுகின்றன. எனவே, வரலாற்று மாந்தரைக் கொண்டு பாடல் எழுதும் போக்கும் பெண் புலவர்களிடம் அருகி இருந்தமை புலனாகிறது. இசைபற்றிய செய்திகள் அகம், பதிற்றுப்பத்து, குறுந்தொகை, பொருநராற்றுப்படை என்னும் நூல்களில் மட்டும் காணப்படுகின்றன. அவையும் சிறு சிறு குறிப்புகளாகவே உள்ளன. யாழ் வருணனை மூன்று பாடல்களில் மட்டுமே உள்ளன. கூத்து பற்றிய செய்திகளும் பாடினி வருணனை பற்றிய செய்திகள் கூற்று மிகுதியாகவும் உள்ளன. இப்பாடல்களைப் பாடியோர் கூத்தர், பாணர்குடிப் பெண்களாக இருக்கலாம். சங்க இலக்கியத்தில் கொல்லர்கள் பற்றிய செய்திகள் பல பாடல்களில் காணப்பட(புறம், 170; 15–16); பெரும்பாணாற்றுப்படை 22–23; பெரும்பாணாற்றப்படை, 436–437; புறநானூறு 180 : 12– 13 அகநானூறு 1–5 குறுந்தொகை 172 : 5–6 புறம் 180 : 10–13 புறம், 312)[2] ஆனால் பெண் புலவர் பாடல்களில் ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது. (குறுந்தொகை 172:5–6) அணிகலன்கள் பற்றிச் சுமார் 50 பாடல்கள் பெண் புலவர் பாடல்களில் உள்ளன. தலைவன் பற்றிய பாடல்களிலும் தலைவி பற்றி 10 பாடல்களும் உள்ளன.

‘சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்‘ என்னும் நூலில் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்கள் சமூக அமைப்புகள் குறித்தும் சமூக நிறுவனங்கள் குறித்தும் மிக விரிவாக ஆராய்ந்து விளக்கியுள்ளார். இந்நூலில் சிற்றரசு, பேரரசு, சிற்றூர், நகர வாழ்க்கை, அரசு, சங்க காலச் சமூகப் பண்புகள்,

சங்ககாலச் சமூகப் பிரிவுகள், சாதிப் பிரிவுகள், மன்னனும் வேந்தனும், சமூக மதிப்புகள், சமூகத் தகவுகள், சமூதாய மதிப்பு மாற்றங்கள், சமயங்கள் , வாணிகம், அயல்நாட்டுத் தொடர்பு முதலிய பல அம்சங்களை விரிவாக ஆராய்ந்து கூறியுள்ளார். பெண் புலவர் பொருண்மைகளை நோக்கும்போது கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்களுக்குத் தரவு திரட்டலுக்குப் பெண் புலவர் பாடல்கள் 'உதவியிருக்காது' என்றே எண்ண வேண்டியுள்ளது. ஏனெனில் கு.,வெ. பா. நூலில் பெண் கவிஞர் பாடல்கள் அதிகம் பயன்படுத்தப்படவில்லை. தரவும் அதிகம் இல்லை என்பதை உணர முடிகிறது.[3]

இது போன்றே, சங்ககால மகளிர் வாழ்வியல் என்னும் நூலை முனைவர் க.திலகவதி எழுதியுள்ளார். சங்க இலக்கியம் காட்டும் மகளிர் வாழ்வியல் செய்திகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. இந்நூலில் சங்ககால மகளிர் வாழ்ந்த சமுதாயச் சூழலும், இல்லறத்தில் மகளிர் பங்கு, கல்வி, கலை, விளையாட்டு, தொழிற் பகுப்புகள், வாழ்க்கை மரபுகள், ஆடை அணிகலன்கள் ஒப்பனைக் கலைத்திறன் முதலிய பல செய்திகள் ஆராயப்பட்டுள்ளன.[4] இவரும் பெண் புலவர் பாடல்கள் அடிப்படையில் தரவுகளைத் திரட்டாது ஆண் புலவர் பாடல்களே அதிகமாகத் தரவுத் திரட்டலுக்கு எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, பொருண்மை அடிப்படையில் நோக்கும் போது பெண்கள் பயன்படுத்தும் பொருள்களின் எண்ணிக்கையும் பயன்பாடும் மிகக் குறைவாக உள்ளமையினை அறிய முடிகிறது.

## 6.2 வகைப்பாடு ஒப்பீடு

ஆய்வுப்பகுதியில் ஆசிரியர் அடிப்படையில் பெண்புலவர் பாடல்கள் வகைப்படுத்தி ஆராயப்பட்டுள்ளன.

அவை,

1. அகம் மட்டும் பாடியோர் பாடல்கள்

2. புறம் மட்டும் பாடியோர் பாடல்கள்

3. அகம், புறம் இரண்டும் பாடியோர் பாடல்கள்

அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை எனும் மூன்று நூல்களில் மட்டுமே பெண் புலவர்கள் பாடியுள்ளனர். மேற்கண்ட வகைப்பாடு பின் கூற்று அடிப்படையில் பிரித்து ஆராயப்பட்டுள்ளது. அதாவது, அகம் மட்டும் பாடியோர் பயன்படுத்தும் கூற்றுகள், புறம் மட்டும் பாடியோர் பயன்படுத்தும் கூற்றுகள், அகம், புறம் இரண்டும் பாடியோர் பயன்படுத்தும் கூற்றுகள் எனும் நிலைகளில் ஆய்வு தொடர்கிறது. அகப்பாடல்களில் வெளிப்படும் கூற்றுகள் பெரும்பாலும் பெண்மையின் மென்மையை வெளிப்படுத்தும் தலைவனைப் பிரிந்து பரிதவிக்கும் தலைவி தொடர்பான அல்லது பிரிவு சார்ந்த துறைகளே மிகுதியாக உள்ளன.

புறம் மட்டும் பாடியோர் பாடல்களில் புறத்துறைகளான ஏறாண் முல்லை, இயன்மொழி, தாபத நிலை, கையறு நிலை, ஆனந்த பையுள், பரிசில் கடாநிலை, அரச வாகை முதலிய ஏழு துறைகளே இடம் பெற்றுள்ளன. இவையும் பெண்மையை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

இங்குக் கூறியவை அகம், புறம் இரண்டும் பாடிய புலவர்களுக்கும் பொருந்தும்.

புறநானூற்றில் இடம் பெறும் துறைகளாக 65ஐ ந.சஞ்சீவி குறித்துள்ளார்[5]. ஆனால், பெண் புலவர்கள் ஏழு துறைகளை மட்டுமே பயன்படுத்தி உள்ளனர்.

பெண்பாற் புலவர்கள் பாடிய அகப்பொருள் பாடல்கள் 87

பெண்பாற் புலவர்கள் பாடிய புறப்பொருள் பாடல்கள் 67

பெண் பாற் புலவர்கள் அகப்பொருள் பாடலைக் காட்டிலும் புறப்பொருள் பாடலைக் குறைவாகவே எழுதியுள்ளனர். ஔவையார் மட்டும் இதற்கு விதி விலக்கு.

புறப்பொருள் மட்டும் பாடிய புலவர்களில் பெரும்பாலும் பாடாண் திணையிலேயே அதிகமாகப் பாடியுள்ளனர் (139). ஆனால் பெண் கவிஞர்கள் பாடாண் திணையில் பாடவில்லை. அடுத்து வாகையிலும், காஞ்சியிலும் உள்ளன. அவை பெண்புலவர் பாடல்களில் இல்லை.

பெண் புலவர் பாடல்களில் பெண்கள் கூற்றுப் பாடல்களே மிகுதியாக உள்ளன. தலைவி கூற்று அதிகமாகவும் தோழி கூற்று அடுத்த நிலையிலும் உள்ளன.

எனவே, கூற்று, துறை, அடிப்படையில் வகைப்படுத்திப் பார்க்கும்போது பெண்கள் சில குறிப்பிட்ட கூற்றுகளையோ துறைகளையோ பயன்படுத்தி உள்ளனர் என்பது தெளிவாகிறது. இது அவர்களின் அடையாளமாக விளங்குகிறது.

### 6.4 அறக்கருத்துக்கள் ஒப்பீடு

அறக்கருத்துகள் பகுதியில் 'அறவுரை' கூற வேண்டிய தேவை எழுந்த சூழல், சமயப் பின்புலம் அறக் கோட்பாடுகள், களவு ஒழுக்கத்தில் அறச் செய்திகள், கற்பு ஒழுக்கத்தில் அறச்செய்திகள், புறப்பாடல்களில் அறச்செய்திகள் பதிவாகியுள்ளமை ஆராயப்பட்டுள்ளன.

சங்க இலக்கியம் காட்டும் அறக்கருத்துகள் தொடர்பாக கு.வெ.பாலசுப்பிரமணியன் குறிப்பிடுவனவற்றை நாம் காணலாம்.

"சங்க காலச் சமூக மதிப்புகளில் உயர்ந்த வாழ்க்கைக் கோட்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, மானம், பெருமை, குடிமை, ஈகை, விருந்தோம்பல் ஆகிய எல்லாவற்றையும் குறிக்கலாம். இம்மதிப்புகளைப்

புலப்படுத்தும் அமைப்புகளாகக் குடும்பம், அரசு, சான்றோர், கூட்டம் ஆகியன இருந்தன. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றிலும் அறமே தலைமை சான்ற உயர் மதிப்பாக அமைந்தது. அறம், அறக் கடவுள், அறவோர், அறனில்லாதவர் என்னும் தலைப்புகளில் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் சங்க இலக்கியங்களில் அறம் குறித்த செய்திகளைத் தொகுத்துள்ளது. 133 இடங்களில் அறம் பற்றிய குறிப்புகள் கிடைப்பினும் இவற்றில் பெரும்பான்மையானவை அரசத் தொடர்பானவை[6] என கு.வெ. பா. அரசரோடு தொடர்புடைய அறம் குறித்த சிந்தனைகளைச் சுட்டியுள்ளார்.

அரசோடு தொடர்பில்லாத ஏனையவற்றில் குறிப்பிடத்தக்கவற்றை கு.வெ.பா. வரிசைப்படுத்திக் கொடுத்துள்ளமையினைக் காண்போம்[7].

1. மெய் வருத்தம் ஊக்கமில்லாதவர்க்கு அறம் தலைப்பிரியாது ஒழுகுதலும் சுற்றத்தைத் தாங்குதலும் இல்லை.
2. தலைமகளை மணம் கொள்ள அவளுடைய தந்தையோடு சென்று உப்பளங்களிலும் கடலிலும் வருந்தி உழைத்தால் அவளை மணம் செய்து கொடுப்பது அறமெனத் தெளிவான்.
3. சான்றோர் சொல்வினை அறத்தொடு பொருந்தியது
4. தலைமகளின் உறுப்பழகு கண்டு எய்தும் இன்ப நிறைவு அறத்தின்கண் நிலைபெற்றோர் அடையும் இன்பத்தை ஒத்தது.
5. இன்பம் துறந்து பொருள் வயிற் பிரிதல் அறம் இல்லை.
6. அந்தணர் அறம் புரி அருமறை நவின்ற நாவினர்
7. மக்கள் தமக்கு இன்னாதன நேரின் அறத்தைப் பழிப்பர்.
8. இல்லறமே அறங்களில் தலையாயது.
9. தேவர் கள்ளுண்ணாதவர், அசுரர் கள்ளுண்பவர். இவர்களுக்குத் தக வியாழனும் வெள்ளியும் அறநூல்கள் செய்தனர்.

10. முற்பிறப்பில் அறஞ்சாராதவர், இப்பிறப்பில் உழலும் தொழில்களுள் மடலேறுதலும் ஒன்றாகும்.

11. கள்ளும் நறவும் உள்ள பாரிடத்தில் அறனில்லை.

12. அறத்தினைச் சாராதவர் இறைவன் திருவடி அடையார்.

13. அறம் புரிந்தோர் தேவருலகு செல்வர்

14. அறத்தொடு வேதம் கூறும் தவமுடையவர் அந்தணர்.

15. குடும்ப வறுமையில் தலைமகள் அறத்தைப் பழி தூற்றுவாள்.

16. இயற்கையை ஒறுப்பதற்கு அறம் துணை செய்யும்.

17. தீவினைகள் இவை என அறநூல் கூறும்; அவற்றுக்குரிய கழுவாய்களையும் கழுவாய் இன்மையையும் கூறும்.

18. புறத்துறைச் செயல்களை நான்மறை குறிக்க வில்லை. ஒழுக்க விதிகளைக் கூறும் அறநூல் போர்ச்செயல்களைக் கூறவில்லை.

19. காமக்கிழத்தியரை மணந்து கொள்ள அறநூல் உடன்படுகின்றது.

20. கற்பு நெறியில் வழாது ஒழுகும் மகளிர் அறத்தினைக் காவல் செய்வோராவார்.

21. சொன்ன சொல் வழாமை அறமெனப்படும்.

22. பரத்தமை அறத்திற்கு மாறானதாகும்.

23. இம்மையிற் செய்தது மறுமைக்கு ஆகும் எனினும் அவ்வாறு நினைந்து செய்வது அறமின்று.

24. மருத்துவன், கூற்றுவன், தருமபுத்திரன் ஆகியோர் எனப்பட்டனர்.

25. அறம் கடவுள் எனப்பட்டது.

26. பெண்களை வலிதிற் பற்றிக் கூடுதல் ஒருவகை மணம் என அறநூல் கூறும்.

27. அறம், பொருள், இன்பம் மூன்றையும் செய்வதற்கு உதவுவது செல்வம்.

28. உயிர் கவரும் கூற்றுவன், இற்செறிக்கும் தாய், சொற்காவாத தலைவன், உடன் போக்கிற்கு ஊக்கிய ஊழ், அம்பல் மொழியும் அயலார் ஆகியோர் அறனிலார் எனப் பழிக்கப்பட்டனர்.

29. பிறர் துன்பத்தைத் தம் துன்பமெனக் கருதுதல் அறன்

30. அறம் திருமாலிடத்துத் தோன்றியது. அறம் திருமாலின் குடைக்காம்பு.

31. வேதம் அறமெனப்பட்டது.

32. அறமின்மை செய்தோரை அறங்கூறவையம் ஒறுத்தது.

33. அஞ்சத் தகுவனவற்றிற்கு அஞ்சுதல் அறம்.

34. மன்னர் அறத்தின் வழா முறை ஒழுக வேண்டும்

சங்க இலக்கியம் காட்டும் அறச்செய்திகள் இவை என கு.வெ. பா. வரிசைப்படுத்திக் கூறுகிறார். இந்த எடுத்துக் காட்டுகளிலிருந்து அவர் அறமென்பதை மூன்றாக வகைப்படுத்துகிறார். அவை.

1. ஒழுக்க விதிகள், 2. இரக்கம், ஒப்புரவு, ஈகை முதலிய மனிதப் பண்புகள் 3. குடும்பம், சமூகம், அரசு ஆகிய நிறுவனங்கள் கட்டுப்பாடு குலையாதிருப்பதற்குரிய பழக்க வழக்கங்கள் என்பனவாகும்.[8]

**செய்குவம் கொல்லோ நல்வினை எனவே**
**ஐயம் அறாஅர் கசடு ஈண்டு காட்சி**
**நீங்கா நெஞ்சத் துணிவில் லோரே**
**யானை வேட்டுவன் யானையும் பெருமே**
**குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே**
**அதனால் உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்**
**செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனில்**
**தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்**
**மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்**

**மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்**
**கோடு உயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்**
**தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே**[9]

என்னும் சோழ மன்னன் பாடல் பண்டைத் தமிழர் அறநோக்கை வெளியிடுவதாகும்.

**உண்டும் தின்றும் இரப்போர்க் கீந்தும்**
**மகிழ்தும் வம்மோ மறப்போ ரோயே**[10]

இப்பாடலில் கூகைக் கோழியார் 'பொதுவாக வாழ்க்கையின் குறிக்கோள் பொருளைத் தமக்கென நீண்ட காலம் பாதுகாவாது யாவர்க்கும் பயன்படும் வகையில் செலவு செய்தல்' என்று கூறுகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலே வீடுபேறு நல்குமென சங்கச் சான்றோர் கருதினர். தமது கடமையைத் தள்ளிப் போடாது செய்பவர்க்கு தொய்யா நல்லிசைத் துறக்கம் வந்தெய்தும் என்னும் கருத்தியல் அக்காலத்து நிலவியது. பேரெயின் முறுவலார் நம்பி நெடுஞ்செழியன் இறந்தபோது "அவன் செய்ய எல்லாம் செய்தனன் ஆதலின் அவனை வாளான் அடுக அல்லது சுடுக யாது வேண்டுமாயினும் செய்க'' எனப் பொருள்படும்படிப் புகழ்வார்[11]. இப்பிறவிவியல் செய்தவை நல்ல செயல்களே. ஆதலால் மறுபிறவியைக் குறித்து அஞ்சாத நெஞ்சினாராக சங்கப் பெரியோர் விளங்கினர். எனவே வீடுபேறு பற்றிய பல்வேறு தன்மைகளை விளக்கும் கருத்தியல் சான்ற நூல்களையும் பனுவல்களையும் அவர்கள் செய்யவில்லை. செயல் விளைவு குறித்த கவலை இல்லாத மனநிலையைப் புறப்பாடல்களில் காண்கிறோம். வாழ்க்கையில் நிலையாமையை இற்றெனக் காட்டி வாழும் போதே பயனுற அறம் பொருள்

இன்பமெனும் உயர் தகவுகள் அமைய வாழ்தல் வேண்டுமென்பதை பொருண்மொழிக் காஞ்சிப் பாடல்கள் கூறுகின்றன.

**உடம்பொடு நின்ற உயிரு மில்லை**
**மடங்க லுண்மை மாயமோ வன்றே**
**கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு**
**வெள்ளி போகிய வியலு ளாங்கண்**
**உப்பிலாஅ வவிப் புழுக்கல்**
**கைக்கொண்டு பிறக்கு நோக்காது**
**இழிபிறப் பினோன் ஈயப்பெற்று**
**நிலங்கல னாக விலங்குபலி மிசையும்**
**இன்னா வைகல் வாரா முன்னே**
**செய்ந்நீ முன்னிய வினையே**
**முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே**[12]

என்னும் ஐயாதிச் சிறுவெண்டேரையார் பாட்டில், சாதல் இன்னாதது எனினும் அது நிகழும் இவ்வுடம்பு கொண்டு ஆற்றத்தகும் அரும் பணிகள் பற்பல உள என்றும் மடியுமுன் நிலைத்த பணி செயலே மாந்தர் கடனென்றும் கருத்து பதிவாகியுள்ளது.

சங்கப் புலவர்கள் அறக்கருத்துக்களை நேரே வாய்ப்பாடு போல் எடுத்துக் கூறாமல் பாடல்களைக் கற்று அதன் கற்பனையில் திளைத்து உணர்ச்சி வசப்பட்டு ஈடுபடுவோரின் உள்ளத்தில் அந்த அறக்கருத்துகள் தாமே பதியுமாறு அமைத்துள்ளார்கள் என்னும் கருத்திற்கேற்ப பறவைகளையும் விலங்குகளையும் அமைத்து விளித்துச் சொல்வதைப் போல் உள்ள அகப்பாடல்கள் களவொழுக்கத்தில் ஈடுபடுவது அறம் என்றும், அந்தக் களவுக்கு உதவி செய்யாததும் மாறானதும் அறமில்லாதன என்றும் கொள்ளும்

அறக்கோட்பாட்டினைச் சுட்டுகின்றன என்பதை அறிகிறோம் என்று நா.ஆறுமுகம் கூறும் செய்தி எண்ணத்தக்கது[13]

பெண்புலவர் பாடல்களை ஆண் புலவர் பாடல்களோடு ஒப்பிடும்போது அறவுரை அறிவுரை சார்ந்த கருத்துக்களில் ஒரு பரந்து பட்ட அனுபவம் இல்லாமையைப் பெண்கள் பாடல்களில் காணமுடிகிறது.

### 6.3 சமுதாய நோக்கு ஒப்பீடு

இப்பகுதி மூன்றாம் இயலில் அகநிலைச் சமுதாயம் புறநிலைச் சமுதாயம் என இரண்டாகப் பகுத்து ஆராயப்பட்டுள்ளது.

சங்கப் பாடல்கள் மூலம் அக்காலத்து வழங்கிய ஆள் பெயர்கள், இடப்பெயர்கள், மரம், செடி, கொடி, விலங்கு, பறவை முதலியவற்றின் பெயர்கள், கலை, பண்பாடு, குறித்த சொற்கள் முதலியவற்றை வெளிப்படையாக அறிந்து கொள்கிறோம். தொல்காப்பியம், பொருளதிகாரம் காட்டும் செய்திகள் அனைத்து அகநிலைச் சமுதாயத்தோடு இயைந்த செய்திகளாகும். சமூக வாழ்வு இலக்கியப் படுத்தப்படுவதற்கான சாத்தியப் பாடுகளைத் தொல்காப்பியம் முன்வைக்கிறது.

“சங்க இலக்கியத்தில் கொல்லர்களின் நிலை’’ என்னும் கட்டுரை[14] கொல்லர்களின் சமுதாய நிலை, கொல்லர் சமூகத்தில் புலவர்கள், அவரின் கடமைகள், கொல்லுப் பட்டறைகள் முதலிய செய்திகளை விளக்குகிறது. ஏழு ஊர்களுக்கு ஒரு கொல்லுலையே விளங்கிய செய்தியை அது வெளிப்படுத்துகிறது. ஆண்பால் புலவர் பாடல்களிலேயே இச்செய்திகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

சங்கப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. பெண் புலவரில் ஔவையார் அதிகமான வரலாற்றுச்

செய்திகளைப் பதிவு செய்துள்ளார். புறப்பாடல்களில் மட்டுமன்றி அகப்பாடல்களிலும் வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

“அகப் பாடல்களில் தலைவியின் நலம், ஊரலர், தலைவியின் இற்செறிப்பு, பொருள் வயிற் பிரிந்த தலைவன் செல்லும் பாலைநில வழி ஆகிய செய்திகளை விரித்துரைக்குமிடங்களில் வரலாற்றுச் செய்திகள் இடம் பெறுகின்றன. குறிப்பாகத் தமிழ் மன்னர், அவர் தம் நாடு நகரம், பற்றிய சிறப்புகள் துறைமுகங்கள் நகரங்கள் பற்றிய குறிப்புகள்; அவர்கள் நிகழ்த்திய போர் பற்றிய செய்திகள் ஆகியன இடம்பெறுகின்றன. வரலாற்றுச் செய்திகள் தனித்திடம் பெறாது முதற்கருப்பொருள்களாகிய இயற்கைப் பொருள்களைப் புலப்படுத்துதலின் வழியாக இயற்கை வருணனைக்குள் அடங்கிய நிலையிலேயே அமைகின்றன.[15] ஆண் புலவர்களே தலைவி குறித்த வருணனைகளை அதிகமாகப் பாடியுள்ளனர். பெண் புலவர்கள் உடல்சார் வருணனைகளைப் பயன்படுத்தவில்லை. தலைவன் கூற்றிலேயே அதிகமாக இச்செய்திகள் காணப்படுகின்றன. பெண்புலவர்கள் பெண்கள் கூற்றுகளையே அதிகம் பாடியுள்ளனர். தலைவன் கூற்றாக எழுதப்பட்ட ஒன்றிரண்டு பாடல்களிலும் இவ்வருணனைகள் இல்லை.

‘அறத்தொடு நிற்றல்’ பற்றிய கட்டுரை ஒன்று சங்க இலக்கியங்களில் அறக்கருத்தாக விளங்குவதை முன்வைக்கிறது. பெண்களோடு தொடர்புடைய இத்துறையில் பெண்கள் அதிகம் பாடவில்லை. ஔவையார் மட்டுமே இரண்டு பாடல்கள் பாடியுள்ளார்.((குறுந்தொகை (15,23) தோழி கூற்றிலேயே அதிகமாக (74%) அமைந்துள்ள இத்துறையை ஆண்களே அதிகம் பாடியுள்ளனர்.[16]

சங்க இலக்கியத்தில் குழந்தைகள் பற்றிய செய்திகள் என்னும் கட்டுரை[17] குழந்தைகளின் இன்றியமையாமை, மழலை மொழி, குழந்தையைப் பாராட்டிப் பேசுதல், நாட்டிற்குக் குழந்தை ஒப்புமை, குழந்தைக்கு உணவூட்டுதல், குழந்தை தொட்ட சோறு, குழந்தைக்கு நிலவைக் காட்டுதல், சிறுவர்கட்குப் புலிப்பல் தாலி,

குழந்தையின் நடை, குழந்தை வளர்ப்பு, குழந்தைக்கு விளையாட்டு, குழந்தைகள் விளையாட்டு என்னும் நிலைகளில் அமைகிறது. சங்கப் பெண்புலவர் பாடல்களில் குழந்தைகள் பற்றிய செய்திகள் இடம்பெறவே இல்லை. ஆண் புலவர்களே குழந்தைகளைத் தம் பாட்டில் பேணி உள்ளனர்.

வெறியாட்டு, வரைவு கடாதல் என்னும் துறைகளையும், ஆண் புலவர்களே பாடியுள்ளனர். பெண்புலவர்கள் பாடவில்லை. கையறுநிலைப் பாடல் ஔவையார் தவிர பிறர் பாடவில்லை.

எனவே, சமுதாய நோக்கில் பார்க்கும் போதும், பெண்களை விட ஆண் புலவர்கள் அதிகமான செய்திகளைப் பாடியுள்ளனர்.

## 6.5 வெளிப்பாடு – ஒப்பீடு

வெளிப்பாடு என்னும் ஐந்தாம் இயலில் பெண் புலவர் தம் பாடல்களை வெளிப்படுத்தியுள்ள விதம் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இப்பகுதி மூன்று வகைகளாக அமைக்கப்பட்டுள்ளது.

சங்கப் பாடல்களில் காணப்படும் உவமைகளை மட்டும் எடுத்துக் கொண்டு ஆண் புலவர்களுக்கும் பெண் புலவர்களுக்குமான ஒப்பீடு இங்கு நிகழ்த்தப்படுகிறது.

உவமைகள் பெரும்பாலும் ஐந்து நிலைகளில் நிகழும் ஒழுக்கத்திற்குச் சான்றாகவும், பெருமைக்காகவும், வீரத்திற்காகவும் கூறப்படுவன ஆகும். சங்க காலப் பாடல்களில் அதிகமாக உவமைகள் பயின்று வந்துள்ளன. ஒரே பாடலில் ஓர் உவமையோ அல்லது இரண்டோ அதற்கு மேலுமோ வந்துள்ளன. ஒரு சில பாடல்களில் உவமைகளே இல்லாமல் அழகுணர்வும் எளிமையும் உணர்ச்சியும் சொற்சுவை மட்டுமே அழகு செய்வனவாக இருக்கும்.

இங்குப் பெண் புலவர் எங்ஙனம் தமது பாடல்களில் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும், எத்தகைய கூற்றுகளையும் துறைகளையும் பயன்படுத்தினர் என்றும், அவர்களது பாடல்களின் எளிமையும் அழகுணர்வும், ஆண் புலவர்கள் பாடல்களில் வரும் உவமைகள், அவர்கள் எத்தகைய கூற்றுகளையும் துறைகளையும் பயன்படுத்தி உள்ளனர் என்றும், ஆண் பெண் கவிஞர்களுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராயும் நோக்குடன் இப்பகுதி அமைகிறது. குறிப்பிட்ட சில பாடல்களை ஆண் பெண் புலவர்கள் எங்ஙனம் கையாண்டுள்ளனர் என்பதனை இங்குக் காணலாம்.

### 6.5.1 பெண் புலவர் பாடல்களில் உவமைப் பயன்பாடு

பெண் புலவர்கள் தங்கள் பாடல்களில் சிறந்த உவமைகளைப் பயன்படுத்தியும் எளிய முறையில் சிறப்புற்று அமையும் படியும் பாடியுள்ளனர்.

#### 6.5.1.1 பெண் புலவர் பாடல்களில் தலைவி கூற்றுப் பாடல்களில் உவமைவெளிப்பாடு

வரைவிடைவைத்து ஆற்றாள் எனத் துன்பமுற்ற தோழிக்குத் தலைமகள் கூறியதாகக் கச்சிப் பேட்டு நன்னாகையார் நெய்தல் திணையில் ஒரு பாடல் பாடியுள்ளார்.

**உலைவாங்கு மிதி தோல் போல** (குறுந் 172)

எனும் இப்பாடலில் தலைவியின் நெஞ்சிற்குத் தீயில் இடப்பட்ட துருத்தி உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

வெளவால், பழுமரம் முதலியன கருப்பொருட்கள் ஆகும். இதே துறையில் பூங்கணுத்திரையார்

**மீன்வலை மாப்பட்டா அங்கு**
**இதுமற்று எவனோ நொதுமலர் தலையே** (குறுந் 171)

என்னும் பாடலை மருதத்திணையின்கண் பாடியுள்ளார். இவர் மீன், நீர் நாய் முதலிய கருப்பொருட்களைப் பயன்படுத்தி உள்ளார். அயலார்க்கு நீர் நாயை உவமையாகவும் தலைவனுக்கு மீனை உவமையாகவும் கூறியுள்ளார்.

இத்துறையை ஔவையார்,

**முட்டுவேன் கொல்தாக்கு வேன்கொல் (குறுந் 28)**

என்று ஒரு உவமையும் கூறாது உணர்ச்சி மட்டுமே மேலோங்கிடப் பாடியுள்ளார்.

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது என்றும் துறையினடிப்படையில் நன்னாகையார்,

**புள்ளும் மாவும் புலம்பொடு வதிய**
**நள்ளென வந்த நகரில் மாலை (குறுந் 118)**

என்னும் பாடலைப் பாடியுள்ளார். இப்பாடலில் உவமை ஒன்றும் பயிலவில்லை. பறவைகள், விலங்குகள் என கருப்பொருட்கள் பொதுவாகக் கூறப்பட்டுள்ளன. மாலைப்பொழுது கூறப்பட்டுள்ளமையால் இஃது பொழுது மயக்கம் ஆகும்.

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியவாறாய் ஒக்கூர் மாசாத்தியார் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை இலங்கெயி றாக (குறுந். 126)**

இப்பாடலில் தலைவனின் சொற்களுக்கு முல்லைப் பூக்கள் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

ஔவையார் பிரிவிடை மெலிந்து தலைவி கூறியதாக,

**நல்லராக் கதுவி யாங்கென்**
**அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே** (குறுந். 43)

எனும் பாடலைப் பாடியுள்ளார். இங்கு நல்ல பாம்பு கருப்பொருளாகவும் அதுவே தலைவியது நெஞ்சத்தை வருந்தச் செய்த ஆண்மைக்கு உவமையாக உவமிக்கப்பட்டுள்ளது.

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்ததாக ஔவையார் நெய்தல் திணையில் பாடல் ஒன்றினைப் பாடியுள்ளார்.

**உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது .....** (குறுந் 102)

இப்பாடலில் உவமைகளோ, கருப்பொருட்களோ, திணையோ ஒன்றும் பயன்படுத்தப்படவில்லை. வெறும் உணர்ச்சி மட்டுமே மேலோங்கியுள்ளது.

வெண்மணிப்பூதியார் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைவி உரைத்தது என்னும் துறையின்பாற் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**இதுமற் றெவனோ தோழி முதுநீர்** (குறுந். 299)

இப்பாடலில் உவமை ஒன்றேனும் வரவில்லை.

கடற்பறவைகள், புன்னை மரங்கள், மலர்கள், மணல் முதலிய கருப்பொருட்கள் வந்துள்ளமையால் இது நெய்தல் பாடலாகும்.

பிரிவிடை ஆற்றாள் ‘எனக் கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்தது’ என்னுந் துறையில்,

**கன்றும் உண்ணாது கலத்தினும் படா அது**
**நல்லான் தீம்பால் நிலத்துக் கா அங்கு**
**எனக்கும் அகாது என்னைக்கும் உதவாது**
**பசலை உண்இயர் வேண்டு**
**திதலை அல்குல் என் மாஎமக் கவினே**[18]

இது வெள்ளி வீதியார் பாடலாகும். இங்கு தலைவியது அழகு, நல்ல பசுவினது பால், அதன் கன்றும் உண்ணாது, பாத்திரத்திலும் சேராது, வீணாகத் தரையிலே சிந்தியது போல தனதழகு தலைவனுக்கும் பயன்படாமல், தலைவி யிடத்தும் தங்காமல் வீணாகப் பசலை உண்டு என்று தலைவி கூறியுள்ளாள்.

இப்பாடலில் கன்று, தீம்பால், என்று முல்லைத் திணைக்குரிய கருப்பொருட்கள் கூறப்பட்டுள்ளன.

இதே துறையில் நன்னாகையார் குறுந்தொகையில்,

**கருங்கால் வெண்குருகு மேயும்**
**பெருங்குள மாயிற்றென் இடைமுலை நிறைந்தே** (குறுந். 325)

பெருங்குளம், தலைவியினது கண்ணீருக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. வெண் குருகு கருப்பொருளாகும். இப்பாடல் நெய்தற் திணையில் பாடப்பட்டதாகும்.

'வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது என்னும் துறையின் கண் வெண் பூதியார் கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**யானே ஈண்டை யேனே என்நலனே**
**ஆனா நோயோடு கானல் அஃதே** (குறுந். 97)

இக்குறுந்தொகைப் பாடலில் ஒரு உவமையில் இல்லை. கருப்பொருளொன்றும் கிடையாது. வெறும் உணர்ச்சியை மட்டுமே கொண்டு நெய்தல் திணையில் பாடப்பட்டது ஆகும்.

'பருவம் கண்டு ஆற்றாள் எனக் கவலையுற்ற தோழிக்குத் தலைவி உரைத்தது' என்னும் துறைக்கண் ஒக்கூர் மாசாத்தியார்

**எயிறென முகைக்கு நாடற்கு** (குறுந். 186)

என்னும் முல்லைத்திணைப் பாடலைப் பாடியுள்ளார். இதில் முல்லைக்குரிய பெரும்பொழுதாகக் கார்ப்பருவமும் முல்லைப் பூக்களும் சுட்டப்பட்டுள்ளன. இங்கு பற்களுக்கு முல்லை அரும்பு உவமையாகக் கூறப்பட்டுள்ளது

இதே துறையில் ஒக்கூர் மாசாத்தியார், ஒரு பாடலைப் பாடியுள்ளார். அக் குறுந்தொகைப் பாடலில் முல்லைக்கு உரிய சிறு பொழுதான மாலைக்காலமும் கருப்பொருளாக முல்லை மலர்கள், ஆண் மான், வண்டுகள் ஆகியன சுட்டப்பட்டுள்ளன. உவமைகள் இக்குறுந்தொகை இருநூற்று இருபத்தோராம் பாடலில் பயின்று வரவில்லை.

### 6.5.1. 2. பெண்புலவர் பாடல்களில், தோழி கூற்றுப் பாடல்களில் பயின்று வந்துள்ள உவமைப் பயன்பாடு

'பிரிவிடைஆழிந்த தலைவியைத் தோழி வற்புறுத்திக் கூறியது' என்னும் துறையில் கச்சிப்பேட்டு நன்னாகையார் கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**பழூஉப் பல்அல்ல படுஉகிர்ப்பாவடி**
**அறைமடி கரும்பின் கண்ணிடை அன்ன**[19]

இப்பாடலில் யானை, கரும்பு, மூங்கில் முதலிய கருப்பொருள்கள் முல்லைத்திணைக்கு அப்பாற்பட்டு வந்துள்ளமையால் இஃது திணைமயக்கப் பாடலாகும். தலைவனுக்கு யானை, கரும்பின் இடைக்கண் ஆகியன உவமையாக உவமிக்கப்பட்டுள்ளன.

தலைமகன் தனது சுற்றத்தாருடன் வந்து தலைவியை மணம் கேட்கும் போது தலைவியின் உறவினர்கள் மறுப்பாரோ எனக் கலங்கிய தலைவிக்குத் தோழி நன்று உறைத்தது என்னும் துறையில்,

**அம்மவாழி தோழி நம்மூர்ப்**
**பிரிந்தோர் புணர்ந்தோர் இருந்தனர்கொல்லோ**
**தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்**
**நன்று நன்றென்னும் மாக்களொடு**
**இன்று பெரிதென்றும் ஆங்கனது அவையே**[20]

என்று வெள்ளி வீதியார் பாடியுள்ளார். இப்பாடலில் ஒரு உவமையேனும் கருப்பொருளேனும் பயின்று வரவில்லை. ஆயினும், சொற்களைக் கையாண்டுள்ள சிறப்பும் உணர்ச்சியுமே இப்பாடலை வாழ வைத்துள்ளது.

**6.5.1.3 பெண்புலவர் பாடல்களில், தலைவன் கூற்றுப்பாடல்களில் பயின்று வந்துள்ள உவமைப் பயன்பாடு**

தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை உணர்ந்த தலைமகன் , சுரத்து வெம்மையும் தலைமகள் மென்மையும் குறித்து செல்வழுங்கலுறுவானைத் தோழி அழுங்காமல் கூறியது என்னும் துறையில் ஔவையார் பாடியதைக் காணலாம்.

**கவணை யன்ன பூட்டுப் பொருது அசாஅ**
**- - - - - - - - - - - - - - - - - - - - -**
**முளிசினை பிளக்கு முன்பின்மையின்** (குறுந். 389)

என்னும் பாடலில் பாலைத்திணைக்குரிய சுரமும், குறிஞ்சிக்குரிய கருப்பொருளான யானையும், நெய்தற் திணைக்குரிய உப்பும் முல்லைத் திணைக்குரிய எருதும் வந்துள்ளமையால் இஃது திணை மயக்கப் பாடலாகும். இப்பாடலில் குவளை மலர் தலைவிக்கு உவமையாக உவமிக்கப்பட்டுள்ளது.

**6.5.1.4 ஆண் புலவர் பாடல்களில் தலைவி கூற்றுப் பாடல்களில் உவமைப்பயன்பாடு**

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைவி கூறியது என்னும் துறையில் கருவூர்க்கிழார் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.

**கயம்நாடு யானை கவள மாந்தும்** (குறுந். 170)

இப்பாடலில் தலைவனுடைய நட்புக்கு யானை உவமிக்கப்பட்டுள்ளது. யானை இங்குக் கருப்பொருளாக வந்துள்ளது. நாடன் என்று வருவதினாலும் இஃது குறிஞ்சித்திணைப்பாடலாகும்.

பரணர் வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது என்னும் துறையில் கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**ஊருண்கேணி உண்துறைத் தொக்க** (குறுந். 399)

இப்பாடலில் பாசிநீர் பசலைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இஃது மருதத்திணைப் பாடலாகும். வாயிலான் தேவன் என்பவர் 'பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது' என்னும் துறையில்

**கவிரிதழ் அன்ன தூவிச்செவ்வாய்**
**தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்** (குறுந் 103)

என்னும் நெய்தல் திணைப் பாடலைப் பாடியுள்ளார். வாடைக்காற்று, முருக்கன் பூ, நாரை ஆகியன உவமைகளாகப் பயின்று வந்துள்ளன.

பிரிவிடைத்தலைவி மெலிந்து கூறியது என்னும் துறையில் நன்முல்லையார்,

**பூழ்க்காலன்ன செங்கால் உழுந்தின்**
**அரும்பனி அற்சிரம் தீர்க்கும்** (குறுந். 68)

என்னும் பாடலைப் பாடியுள்ளார். இதில் தலைவியின் மெலிவு குறும்பூழ்ப் பறவையினது காலை ஒத்துள்ளது என உவமை கூறப்பட்டுள்ளது. தலைவன் தலைவியது இணைவிற்கு யானையாகிய ஆணும் பெண்ணும் உவமை கூறப்பட்டன. இதில் யானை, குறும்பூழ்ப்பறவை இரண்டும் கருப்பொருட்களாகும். இஃது குறிஞ்சிக் குரிய உயிரினங்களாகும். இப்பாடலில் இரண்டு உவமைகள் வெளிப்பட்டு உள்ளன.

'ஆற்றாள் என வருந்திய தோழிக்குத் தலைவி சொல்லியது' எனும் துறையில் வெண்கொற்றனார் கீழ்க்கண்ட பாடலைக் குறிஞ்சித் திணையின்கண் பாடியுள்ளார்.

**சிறைபனி உடைந்த சேயிர்மழைக்கண்** (குறுந். 86)

இக்குறுந்தொகைப் பாடலில் கண்ணீருக்கு நீர் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிக்கே உரிய கூதிர்காலம் வெளிப்பட்டுள்ளது. கருப்பொருட்கள் காணப்படவில்லை.

இதே துறையை ஓதலாந்தையார்,

**எறும்பி அளையின் குறும்பல் சுனைய** (குறுந். 27)

என்னும் பாடலில் வேடர்களுக்கு எறும்பினது புற்றை உவமையாகக் கூறியுள்ளார். இக்குறிப்புப் பாலைத் திணைக்கு உரியதாகும்.

கபிலர் சிறைப்புறக் கூற்றுப் பாடலை,

**களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கி**
**பின்னுவிடு கதுப்பின் மின்னிலை மகளிர்**
**இளையரும் மடவமும் உளரே** (குறுந். 246 )

நெய்தற் திணையின்கண் பாடிச் சிறப்பித்து உள்ளார். தலைவனது தேருக்கு யானையது காதும் நெய்தலின் இலையும் உவமையாகவும் தலைவியது கூந்தலுக்கு மின்னலும் உவமை கூறப்பட்டுள்ளன. யானை கருப்பொருளாக வந்துள்ளமையால் இதனைக் கபிலர் பாடியுள்ளமையால் இஃது குறிஞ்சித்திணையாகலாம்.

பிரிவிடை ஆற்றாள் எனக்கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது என்ற துறையின்கண் நரிவெரூஉத்தலையார் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**பல்இதழ் உண்கண் பாடு ஒல்லாவே** (குறுந். 5)

இப்பாடலில் கண்களுக்குப் புன்னை மலர்கள் உவமை கூறப்பட்டுள்ளன. புன்னை மரம், நெய்தல் நிலக் குருகு ஆகிய கருப்பொருட்கள் பயின்று வந்துள்ளன. இஃது நெய்தல் திணையாகும்.

வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது என்னும் துறையில் நக்கீரர் குறிஞ்சித்திணைப் பாடலொன்றைப் பாடியுள்ளார்.

**புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்**
.................................................
**வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்** (குறுந். 105)

இப்பாடலில் தலைமகளுக்குப் பொன்னும் நாடானது நட்புக்கும் தலைவியின் வனப்பிற்கும் கண்ணீர் உவமிக்கப்பட்டுள்ளது. நாடன், வெறியாட்டு, புனம், கதிர்கள் ஆகியன பயின்று வந்துள்ளமையால் இஃது குறிஞ்சித் திணையாகும்.

பரணர் பாலைத் திணையில், பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைக்கும் பாடலைப் பாடியுள்ளார்.

**எழுகளிறு மிதித்த ஒருபழம் போல (குறுந் 29)**

இப்பாடலில் அயலார்க்கு யானை மிதித்த அத்திப்பழம் உவமையாக்கப்பட்டுள்ளது. பாலைக்கு உரிய பெரும்பொழுதான பின்பனிக்காலம் வெளித்தோன்றியுள்ளது. வேப்பமலர், களிறு, அத்தி, பின்பனி முதலியன கருப்பொருட்களாகும்.

### 6.5.1.5 ஆண் புலவர்கள் பாடல்களில் தோழி கூற்றுப் பாடல்களில் பயின்றுள்ள உவமைகள்

மோசிகீரன் என்ற புலவர், பிரிவிடை அழிந்த தலைவியைத் தோழி வற்புறுத்தியது என்னும் துறைக்கண் கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**பொதிந்த குளவி நாறு நறுநுதல் (குறுந். 59)**

இப்பாடலில் தலைவியினது நெற்றிக்குக் குவளை மலர்களும் காட்டு மல்லிகைகளும் உவமிக்கப்பட்டுள்ளன. குவளை மலர்கள் காட்டு மல்லிகை, சுரங்கள் முதலிய கருப்பொருட்கள் பயின்று வந்துள்ளமையால் இது திணை மயக்கமாகும்.

அம்மூவனார், தலைமகன் தமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றவழி வரைவு மறுப்பவோ எனத் துன்புற்ற தலைவிக்குத் தோழி உரைத்தது என்னும் துறையில் கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

**உருமிசைப் புணரி உடைதரும் துறைவற்கு (குறுந். 254)**

இப்பாடலில் தலைவனுக்கு இடி உவமையாகச் சுட்டப்பட்டுள்ளது. நண்டு , மணல், அலைகள், கடற்கரைத் துறைவன் ஆகிய சொற்கள் நெய்தல் திணைக்கே பொதுவானவையாகும்.

### 6.5.1.6 ஆண் புலவர் பாடல்களில் தலைவன் கூற்றுப் பாடல்களில் உவமைப் பயன்பாடுகள்

தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை உணர்ந்த தலைமகள் சுரத்து வெம்மையும் தலைமகள் மென்மையும் குறித்துச் சொல்லியது எனும் துறையில் பாலைத்திணைப் பாடலில் பாடியுள்ளார்.

**வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்**
**குளவி மொய்த்த அழுகல் சின்னீர் (குறுந். 56)**

என்னும் பாடலில் மான், பன்றி, முயல், நாய்கள், மல்லிகை,முதலிய கருப்பொருட்கள் வந்துள்ளன. உவமைகள் புலப்படவில்லை. பின்புலமாகவும் பொழுதுகள் காணப்படவில்லை.

### 6.5.2 ஆண் பெண்புலவர்கள் உவமையைப் பயன்படுத்தியதில் உள்ள ஒற்றுமை வேற்றுமை

வரைவிடை ஆற்றாள் எனக்கவன்ற தோழிக்குத் தலைவி கூறியது என்னும் துறைக்கண்

**உலைவாங்கு மிதிதோல் போல (குறுந். 17 2)**

என்னும் பாடலை கச்சிப்பேட்டு நன்னாகையார் பாடியுள்ளார். இதில் தலைவியின் நெஞ்சிற்குத் தீயில் இடப்பட்ட துருத்தி உவமிக்கப்பட்டுள்ளது. இதே துறையில்

கருவூர்க்கிழார் தலைவனது நட்பிற்கு யானையை உவமையாக்கியுள்ளார். இவை ஆண், பெண் ஆகிய இருபால் புலவர்களின் வெளியுலக அனுபவ வாழ்க்கை அறிவினைப் புலப்படுத்துகிறது.

இத்துறையில் ஔவையார் ஒரு உவமையும் கூறாது வெறும் உணர்ச்சியை மட்டுமே கொண்டு பாடல் பாடியுள்ளார். இது அவரது அனுபவ அறிவைக் காட்டாது பெண் மனதின் உணர்ச்சி மேலீட்டைக் காட்டுகிறது.

வரைவு நீட்டித்தவழி தலைமகள் தோழிக்குச் சொல்லியவாறாய் நன்னாகையார் குறுந்தொகைப் பாடலில் ஓர் உவமையையும் கூறவில்லை. ஆனால் ஆண் கவிஞரான பரணர்,

**ஊருண்கேணி உண்துறை தொக்க** (குறுந். 899)

என்னும் பாடலில் தலைவியின் பசலைக்கு, நல்ல நீருண்ணும் கிணற்றில் பாசியை அகற்றிய நன்னீரை உவமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆலத்தூர்கிழார், இத்துறைக் குறுந்தொகைப் பாடலில் தலைவியினது அழகு நலன், நாண், களிறு முறித்து எறிந்த ஓகிய மரத்திற்கு ஒப்பானது என உவமித்துள்ளார்.

இஃது ஓர் ஆண் புலவனின் பன்முகப் பார்வையை அனுபவ வெளிப்பாட்டைத் தெளிவிக்கிறது.

பருவங்கண்டு அழிந்த தலைவி தோழிக்குச் சொல்லியதாய் மாசாத்தியார் தலைவனது வெண்மையான சொற்களுக்கு முல்லைப் பூவைப் பயன்படுத்தி உள்ளார்.

ஆனால், ஆண் கவிஞரான வாயிலான் தேவன் என்பார், தலைவியின் வருத்தத்திற்கு முருக்கின் பூவிதழையும், வாடைக்காலத்துக்கு தூவுகின்ற திவலையையும் உவமை கொண்டுள்ளார். இவர் இரு உவமைகளிலும் புனல் நீர், மழை நீர், முருக்கின் பூ, நாரை முதலிய கருப்பொருட்களைப் பயன்படுத்தி உள்ளார்.

பிரிவிடை மெலிந்த கிழத்தி உரைத்த செய்திகளாக ஔவையார், தலைவியது நெஞ்சத்தை வருந்தச் செய்த ஆண்மைக்கு, நல்ல பாம்புக் கவ்வுதலை உவமையாக்கி உள்ளார். பாம்பு மட்டுமே கருப்பொருளாக உள்ளது.

இதே துறையில் அள்ளூர் நன்முல்லையார்,

**பூழ்க்கா லன்ன செங்கால் உழுந்தின்**
**அரும்பனி அற்சிரம் தீர்க்கும்** (குறுந். 68)

தலைவியது மெலிவிற்குப் பறவையினது சிறிய காலினையும் தனிமைக்கு மருந்தாகத் தலைவனது மார்பையும் உவமை ஆக்குகிறார். இவர் குறும்பூழிப் பறவை, யானைகள், குறிஞ்சிக்கே உரிய முன்பனி முதலிய கருப்பொருள்களை பயன்படுத்தியுள்ளார். இவை புலவரது அறிவு விரிவை காட்டுகின்றன.

'ஆற்றாள் எனக்கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்தது' என்னும் நெய்தல் திணையில் ஔவையார் , குறுந்தொகை பாடலில் உவமையே கூறாது கருப்பொருட்களும் கூறாது வெறும் உணர்ச்சியைக் கொண்டு மட்டுமே பாடியுள்ளார்.

இதே துறையில் வெண் கொற்றனார்,

**சிறைபனி உடைந்த சேயரி மழைக்கண்** (குறுந். 86)

என்னும் பாடலில் தலைவியினது கண்ணீருக்கு அனை நீரை உவமை செய்துள்ளார். குறிஞ்சிக்குரிய பெரும் பொழுதாக கூதிர்காலம் வெளிப்படையாகவும் கருப்பொருளாகவும் பயின்று வந்துள்ளது.

இந்தத் துறைக்குப் பூதலாந்தையார் (குறுந். 12) வேடர்களுக்கு எறும்புப் புற்றினை உவமையாகப் பயன்படுத்திப் பாலைத் திணையை ஆண்டுள்ளார்.

சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைவி உரைத்ததாக வெண்மணிப் பூதியார் என்னும் பெண் பாலார் ஒரு உவமையும் கூறாது நெய்தல் திணைக்கே உரிய கடற்பறவைகள், புன்னை மரங்கள், புன்னை மலர்கள், மணல் போன்ற கருப்பொருட்களை மட்டுமே பயன்படுத்தியுள்ளார். ஆண் கவிஞரான கபிலர் இத்துறைக்கு,

**களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கிப்**

**- - - - - - - - - - - - - - - - - - - - - -**

**பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்** (குறுந். 246)

தலைவியினது கூந்தலுக்கு மின்னல் கொடியினையும், தலைவனது தேர்க்கு யானைக்காதினையும் நெய்தல் இலையினையும் உவமைப்படுத்தியுள்ளார். இவர் நெய்தல் இலை, யானை போன்ற கருப்பொருட்களையும் மகளிரை வருணனை செய்தும் பாடியுள்ளார். இவர் இரண்டு உவமைகளை வெளிப்படுத்தியமை உணரத்தக்கது.

தலைவன் பிரிந்து சென்ற நிலையை 'அற்றாள்' எனத் துன்புற்ற தோழிக்குத் தலைவி செப்பியதாகக் கூறிய குறுந்தொகைப் (27) பாடலில் தலைவியின் அழகுக்கு ஆவினதுபால் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. கன்று, ஆ முதலியன பயின்று வந்துள்ளமையினால் இது பாலைத்திணை அன்று திணை மயக்கமாகலாம்.

இத்துறையில் நன்னாகையார் நெய்தல் திணையில் (குறுந். 325) தலைவியினது கண்ணீருக்குப் பெருங்குளத்தை உவமையாக்கியுள்ளார். இவர் பெண்பாற்புலவராவார். ஆண் கவிஞரான நரிவெரூஉத்தலையார்,

பல்லிதழ் உண்கண் பாடு ஒல்லாவே (குறுந் 5)

என்னும் பாடலில் கண்களுக்குப் புன்னை மலர்களை உவமைப்படுத்திக் காண்பித்துள்ளார். மருத நிலத்தை உறுதி செய்யப் புலம்பன், மீன்கள், புன்னை மரங்கள் முதலியன பயிலப் பட்டு வந்துள்ளன.

வரைவு நீட்டித்த வழித் தோழிக்குத் தலைமகள் (குறு.97) உரைத்ததாக வரும் வெண் பூதியார் பாடலில் உவமையோ, கருப்பொருளோ பயின்று வரவில்லை. வெறும் உணர்ச்சி மட்டுமே பாடலை உருப்பெற வைத்துள்ளது.

இத்துறையில் நக்கீரர் பாடிய குறிஞ்சித் திணைப் பாடலில்

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை
வெறியுறு வனப்பின வெய்துற்று நடுங்கும் (குறுந். 105)

இப்பாடலில் தலைவிக்குப் பொன் உவமையாகவும், நாடனுடைய நட்பிற்கு அச்சத்தையும் உவமையாகக் கூறியுள்ளார். புனம், மயில் நாடன் என்னும் பொருட்களைச் சுட்டியுள்ளார்.

பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைத்ததாக ஒக்கூர் மாசாத்தியார் (குறுந். 186) முல்லைக்குரிய கார்ப்பருவத்திணையும் முல்லைப் பூக்கள் கார்ப்பருவம் போன்ற கருப்பொருள்களையும் கூறியுள்ளார். இவரது பாடலில் உவமை பயிலவில்லை. இவரே இதே துறையில் (குறுந். 220) வேறொரு பாடலில் ஆண் மான், முல்லை மலர், மாலைக்காலம் முதலிய கருப்பொருட்களைப்

பயன்படுத்தி, உவமை கூறாது உணர்வுகளை வெளிப்படையாக வெளிக்காட்டியுள்ளார். ஆனால் இத்துறையில் ஆண் கவிஞரான பரணர்,

**எழு களிறு மிதித்த ஒண்பழம் போல (குறுந். 24)**

அயலவர்க்கு யானை மிதித்த அத்திப்பழத்தை உவமையாகவும், யானை, வேம்பு, அத்திப்பழம் முதலிய கருப்பொருட்களையும் பயன்படுத்தியுள்ளார்.

**6.5.3 ஆண் பெண்புலவர்கள் இடையே தோழி கூற்றுப் பாடல்களில் உவமைப் பயன்பாட்டில் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்**

பிரிவிடை அழிந்த தலைவியைத் தோழி வற்புறுத்தியாதாக ஊண்பித்தையெனும் பெண் பாலர்,

**மரற்புகா அருந்திய மாவெடுத்து இரவை (குறுந். 232)**

என்னும் பாடலில் உணவிற்குக் கற்றாழையை உவமையாகவும், மான், யானை, மாலை முதலிய கருப்பொருட்களையும் கொண்டுள்ளார்.

இத்துறையில் மோசிகீரன் எனும் ஆண் கவிஞர் (குறுந். 59) தலைவியினது நெற்றிக்குக் குவளை மலர், காட்டு மல்லிகை முதலியவற்றை உவமித்துள்ளார்.

குன்றம், சுனை, குவளை மலர்கள், காட்டு மல்லிகை, சுரம் ஆகிய கருப்பொருட்களைப் பயன்படுத்தி உள்ளதால் இப்பாடல் திணை மயக்கப் பாடலாக இருக்கலாம்.

தலைமகன் தமர் வரைவொடு தலைவியை மணம் கேட்ட இடத்துத் தனது சுற்றத்தார் வரைவு மறுப்பார்களோ என வருந்திய தலைவிக்குத் தோழி

கூறியதாக வெள்ளி வீதியார் ஒரு உவமையையும் பயன்படுத்தாது (குறுந்.146) வெறும் உணர்வுச் சொற்களை மட்டுமே பயன்படுத்தியுள்ளார். ஆனால் ஆண் கவிஞரான அம்மூவனார்,

**உருமிசைப்புணர் உடைதரும் துறைவர்க்கு (குறுந். 41)**

என தலைவனது ஆற்றலுக்கு இடியினை உவமையாகவும், நண்டு, மணல், கடல், புன்னை மரங்கள், புலால் முதலிய கருப்பொருட்களையும் பயன்படுத்தி உள்ளார்.

### 6.5.4 ஆண் பெண் புலவர்கள் தலைவன் கூற்றுப் பாடல்களில் உவமைப் பயன்பாட்டில் உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்

தலைமகள் உடன் போக்கு நேர்ந்தமை உணர்ந்த தலைமகள் சுரத்து வெம்மையும் தலைமகள் மென்மையும் குறித்துச் செல்வழுங்குலுறுவானைத் தோழி அழுங்காமல் கூறியது என்னும் துறையில் ஔவையார், குவளை மலர்க்குத் தக, தலைவியினது மென்மை உள்ளதெனவும், தலைவனது ஆற்றலுக்கு யானையையும் எருதுகளையும் உவமையாகக் கூறியுள்ளார். இஃது ஔவையாரின் வெளியுலக அறிவையும் பன்முகப் பார்வையையும் காட்டுவன.

இதே துறையில் ஆண் கவிஞரான சிறைக்குடி ஆந்தையார் (குறுந் 56) பாடலில் உவமை ஒன்றும் பயின்று வரவில்லை. மான், பன்றி, முயல், நாய், காட்டு மல்லிகை முதலிய கருப்பொருட்கள் மட்டுமே காணப்படுகின்றன.

## தொகுப்புரை

இவ் ஆய்வேட்டின் முதல் ஐந்து இயல்களான பொருண்மை, வகைப்பாடு, சமுதாய நோக்கு, அறக்கருத்துக்கள், வெளிப்பாடு என்னும் இயல்களில் ஆராய்ந்து

கூறப்பட்ட செய்திகள் ஆண்புலவர் பாடல்களோடு ஒப்பிட்டு ஆயும் நோக்குடன் இவ்வியல் அமைகிறது.

'பொருண்மை' என்னும் முதல் இயலை ஒப்பிடும்போது பெண்கள் பயன்படுத்தும் கருப்பொருள்கள் ஆண்கள் பயன்படுத்தும் எண்ணிக்கையுடன் மிகச் சிறிதளவே ஒத்துள்ளன. பெரும்பாலனவை இடம்பெறவில்லை.

'வகைப்பாடு ஒப்பீடு' என்னும் பகுதியில் பெண்கள் பயன்படுத்தும் திணை, துறை, கூற்று முதலியவை சங்க இலக்கிய மொத்தத் திணை, துறை, கூற்றுகளோடு ஒப்பிடும் போது குறிப்பிட்ட சில திணை, துறை, கூற்றுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

'சமுதாய நோக்கு' ஒப்பீடு என்னும் பகுதியில், பெண்கள் காட்டும் சமுதாயம், ஆராயப்பட்டுள்ளது. சமூக நிறுவனங்களான குடும்பம், சமயம், அரசு முதலியவை ஆண் புலவர்களோடு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் காட்டும் வரலாற்றுச் செய்திகள் பெண்கள் பாடல்களில் மிகக் குறைவாகவே பதிவாகியுள்ளமை கூறப்பட்டுள்ளது.

'அறக்கருத்துக்கள் ஒப்பீடு' என்னும் பகுதியில் சங்க இலக்கியம் வெளியிடும் அறக்கருத்துகளில் பெண்கள் பாடல்களில் பங்களிப்பு ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

'வெளியீடு ஒப்பீடு' என்னும் பகுதியில் உவமை, உள்ளுறை, இறைச்சி என்னும் செய்யுள் உத்திகளைப் பயன்படுத்துவதில் பெண்களின் சிறப்பும், விடுபாடும், தனித்தன்மையும் ஆராயப்பட்டுள்ளன.

இவையே ஒப்பீட்டு இயல் மூலம் நாம் அறியும் செய்திகள் ஆகும்.

# மேற்கோள்கள்


1. பாட்டும் தொகையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், – ப. 23
2. வே.சா.அருள்ராஜ், சங்க இலக்கியங்களில் கொல்லர்களின் நிலை, 21வது ஆய்வுக் கோவை தொகுதி 1, ப– 23
3. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்
4. க.திலகவதி, சங்க கால மகளிர் வாழ்வியல்,
5. ந. சஞ்சிவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை, ப– 317
6. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப– 111
7. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப– 111
8. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப– 114
9. புறநானூறு , பா.எ– 214
10. புறநானூறு , பா.எ– 364, 7 –8
11. புறநானூறு , பா.எ– 239
12. புறநானூறு , பா.எண் 363 3–12
13. நா.ஆறுமுகம், அறக் கோட்பாடு – ஒரு பார்வை, 21வது ஆய்வுக் கோவை , தொகுதி –1, ப– 96.97
14. வே.ச. அருள்ராஜ், சங்க இலக்கியங்களில் கொல்லர்களின் நிலை 21வது ஆய்வுக் கோவை, தொகுதி 1, ப– 23
15. சுப. அழகர் நாதன், சங்க அகப்பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் இடம் பெறும் முறை. ஒரு கண்ணோட்டம், 21வது ஆய்வுக் கோவை தொகுதி 1, ப– 41.


16. வி.ஆனிலெட்பாமி, சங்க அகப்பாடல்களில் அறத்தொடு நிற்றல், அடிக்கருத்து, 21வது ஆய்வுக் கோவை, தொகுதி –1 , ப – 95

17. செ.இலக்குமி நாராயணன், சங்க இலக்கியத்தில் குழந்தைகள் பற்றிய செய்திகள், 21வது ஆய்வுக் கோவை, தொகுதி 1 , ப– 164

18. குறுந்தொகை, பா.எ– 27

19. குறுந்தொகை, பா.எ– 89

20. குறுந்தொகை, பா.எ– 248



# துணைநூற்பட்டியல்

## துணைநூற்பட்டியல்


1. அகத்தியலிங்கம்.ச. **இலக்கிய உருவாக்கம்**
புலமை, பகுதி 2,
சென்னை.

2. அகத்தியலிங்கம்.ச. **சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே.**
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு,சிதம்பரம்–608 001
முதல் பதிப்பு 2000

3. அகத்தியலிங்கம்.ச. **கவிதை உருவாக்கம்**
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்.
முதல் பதிப்பு 2000

4. அண்ணாமலை.வே. **சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம்**
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்.
முதல் பதிப்பு 2000

5. அப்துல் ரகுமான் **புதுக்கவிதையில் குறியீடு**
அன்னம்
மனை எண்1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர்–613 007
முதல் பதிப்பு 2006

6. அம்மன் கிளி முருகதாஸ் **சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும்**
குமரன் பதிப்பகம்
சென்னை.
2002

7. அறவாணன்.க.ப. — **அற்றை நாள் காதலும் வீரமும்**
மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை 108
முதல் பதிப்பு 2006

8. அன்னி தாமசு (ப.ஆ) — **சங்க காலப் பெண்மை**
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு, சிதம்பரம் 1
முதல் பதிப்பு 2004

9. இராசமாணிக்கனார்.மா — **பத்துப்பாட்டு ஆராய்ச்சி**
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை
1970

10. இராமகிருட்டினன்.ஆ.டாக்டர் — **அகத்திணை மாந்தர்–ஓர் ஆய்வு**
சர்வோதய இலக்கியப் பண்ணை
32/1 மேல வெளி வீதி
மதுரை 625 001
முதல் பதிப்பு 1982

11. கடிகாசலம்.ந. சிவகாமி.ச. (ப.ஆ.) — **சங்க இலக்கியம்**
கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை
சி.ஐ.டி, வளாகம், தரமணி
சென்னை 600 113 ,
1998

12. குளோறியா சுந்தரமதி.இலா. — **இலக்கியக் கல்வியும் பகுப்பாய்வும்**
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு,சிதம்பரம்–608 001,முதல்
பதிப்பு டிசம்பர் 2001

13. குளோறியா சுந்தரமதி.இலா. சங்க இலக்கியம் மருதம்
தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம்,
திருவனந்தபுரம்
1973

14. குளோறியா சுந்தரமதி.இலா. பகுப்பாய்வு நெறியில் சங்க இலக்கியம்
உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்
33, திருமலைநகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை 600 096
முதற்பதிப்பு 1987

15. சச்சிதானந்தன்.வை. மேலை இலக்கியத் திறனாய்வு வரலாறு
பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ,
மதுரை 625 021,
1999

16. சஞ்சீவி.ந. டாக்டர் சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை
சென்னைப் பல்கலைகக்கழகம், சென்னை
1974

17. சண்முகம் பிள்ளை .மு. குறுந்தொகை மூலமும் உரையும்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
1985

18. சண்முகம் பிள்ளை .மு. சங்கத்தமிழர் வாழ்வியல்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை
சி.ஐ.டி, வளாகம், தரமணி
சென்னை 600 113 ,
1997

19. சாமிநாதையர் உ.வே. ஐங்குறுநூறும் பழைய உரையும்
வைஜெயந்தி அச்சுக் கூடம்,
சென்னை
1903

20. சாமிநாதையர் உ.வே. பத்துப்பாட்டு மூலமும் மதுரை ஆசியர்
பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும்
கமர்ஷியல் அச்சுக் கூடம்,
சென்னை
1918

21. சாமிநாதையர் உ.வே. புறப்பொருள் வெண்பாமாலை
எட்டாம் பதிப்பு,கபீர் அச்சுக் கூடம்,
சென்னை
1953

22. சாமிநாதையர்.உ.வே. புறநானூறு
ஜோதி அச்சுக் கூடம்
சென்னை , 1950

23. சாமிநாதையர் .உ.வே. குறுந்தொகை
உ.வே.சா நூல் நிலையம்
சென்னை , 1962.

24. சாரங்கபாணி.இரா. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்,
முதற்பதிப்பு 1986

25. சாரங்கபாணி.இரா. சங்கத் தமிழ் வளம்
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்.1
முதல்பதிப்பு, டிசம்பர் 2003

26. சிவகாமி.ச. காலச்சூழலில் பெண்
மாதவி பதிப்பகம்
சென்னை
1996

27. சிவப்பிரகாசம்.கு.டாக்டர் புறநானூற்றில் வாழ்வியல் விழுமியங்கள்
திருக்குறள் பதிப்பகம்
66, பெரியார் தெரு,
எம்.ஜி.ஆர் நகர், சென்னை 600 078
முதல் பதிப்பு டிசம்பர் 2007

28. சிவலிங்கனார்.ஆ. **தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும் இறைச்சியும்**
உலகத் தமிழ்க்கல்வி இயக்கம்
சென்னை
1985

29. சுப்பிரமணியம் .சவே. **சங்க இலக்கியம் மூலம் முழுவதும்**
மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை 108
முதல் பதிப்பு 2006

30. சுப்பிரமணியம் .சவே. **தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும்**
மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை 108
முதல் பதிப்பு 2006

31. சுப்புரெட்டியார்.ந. **அகத்திணைக் கொள்கைகள்**
பாரிநிலையம்,
சென்னை
1981

32. திருமாவளவன் .வே.ச. அகநானூறும் காதா சப்த சதியும் ஓர் ஒப்பாய்வு
நோக்கு
4, 1083, நேரு நகர்
2வது முதன்மை சாலை
கொட்டிவாக்கம்
சென்னை 600 096
முதற்பதிப்பு நவம்பர் 2008

33. திலகவதி.க.முனைவர் **சங்க கால மகளிர் வாழ்வியல்**
இறையருள் பதிப்பகம்
4/371 முதல் தெரு,
சக்தி நகர், காட்டூர்,
திருச்சிராப்பள்ளி 620 019
முதல்பதிப்பு அக் 2001

| | | |
|---|---|---|
| **34.** | **துரைசாமிப் பிள்ளை ஔவை.சு.** | **ஐங்குறுநூறு**<br>அண்ணாமலைப்பல்கலைக்கழகம்<br>சிதம்பரம்<br>1957 |
| **35.** | **தேவநேயப் பாவாணர்,ஞா.** | **பழந்தமிழாட்சி**<br>திருநெல்வேலி,<br>தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,<br>522, டி.டி.கே, சாலை,<br>சென்னை 18 ,<br>2004 |
| **36.** | **தொல்காப்பியர்** | **தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, பகுதி 3**<br>திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,<br>522, டி.டி.கே, சாலை,<br>சென்னை 18<br>2001 |
| **37.** | **நாராயணவேலுப்பிள்ளை .எம்.** | **அகப்பொருளும் புறப்பொருளும்**<br>வள்ளுவர் பிரசுரம்,<br>சென்னை<br>1981 |
| **38.** | **நாற்கவிராசநம்பி** | **நம்பியகப்பொருள்**<br>கா.ர.கோவிந்தராச முதலியார் (குறிப்புரை)<br>கழகம்<br>சென்னை,<br>மறுபதிப்பு , 1973 |
| **39.** | **நீதிவாணன் .ஜெ.** | **நடையியல்**<br>மணிவாசகர் பதிப்பகம்<br>சிதம்பரம்<br>முதல்பதிப்பு , அக்.1983 |

40. பதிப்புக்குழு அகநானூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட், சென்னை 600 098,
இரண்டாம் பதிப்பு 1981

41. பதிப்பாசிரியர் குழு பாட்டும் தொகையும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை –98 ,
இரண்டாம் பதிப்பு 1981

42. பாலசுப்பிரமணியன்.கு.வெ. சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், முதற்பதிப்பு 1994

43. பாலசுப்பிரமணியன்.கு.வெ. சங்க இலக்கியத்தில் புறப்பொருள்
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு,
சிதம்பரம் 608 001

44. பாஸ்கரதாஸ், ஈ.கோ. அகப்பொருள் பாடல்களில் தோழி
திருமனை கோவை,
1979

45. புலியூர்கேசிகன் (ப.ஆ) திருக்குறள் பரிமேலழகர் உரை
பூம்புகார் பதிப்பகம்,
127, (ப.எ.ண 63) பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை 600 108
மறுபதிப்பு 2009

46. மணிவேல் .மு. கைக்கிளைக் காதல்
பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைகக்கழகம்
மதுரை
முதற்பதிப்பு 1992

47. மறைமலை, இ. இலக்கியக் கொள்கைகள்
நீலமலர் வெளியீட்டகம்
சென்னை
1976

48. மாணிக்கம்,.வ.சுப. தமிழ்க்காதல்
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு,
சிதம்பரம்.1
மறுபதிப்பு, டிசம்பர் 2007

49. முருகேசன் .ந. புதுக்கவிதைகளில் படிமங்கள்
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம், முதற்பதிப்பு 1986

50. முருகேசபாண்டியன்.ந. அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்
காலச்சுவடு
நாகர்கோவில்.
2009

51. வசந்தாள் .த. தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் ஒரு வரலாற்றுப் பார்வை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை
முதற் பதிப்பு 1990

52. வரதராசன், மு. தமிழ் இலக்கிய வரலாறு
சாகித்திய அகாதெமி
புது தில்லி
மூன்றாம் பதிப்பு, 1978

53. வீரப்பன்.பா.முனைவர் நடையியல் நோக்கில் இலக்கியங்கள்
வனிதா பதிப்பகம்
9A மேக்மில்லன் காலனி
நங்கைநல்லூர் , சென்னை 600 061, முதல் பதிப்பு 2000

54. வேங்கடசாமி நாட்டார்,.ந.மு. அகநானூறு (நித்திலக் கோவை)
கழகம்,
சென்னை
1944

| | | |
|---|---|---|
| 55. | வேங்கடசாமி நாட்டார்,. ந.மு. | அகநானூறு (மணிமிடைப்பவளம்)<br>கழகம்,<br>சென்னை<br>1944 |
| 56. | வேங்கடசாமி நாட்டார்., ந.மு. | அகநானூறு (களிற்றுயானை நிரை)<br>கழகம்,<br>சென்னை<br>1944 |
| 57 | வையாபுரிப் பிள்ளை. எஸ். | சங்க இலக்கியம் முழுவதும் (பாட்டும் தொகையும்)இரண்டு தொகுதிகள்<br>முல்லை நிலையம்,<br>9, பாரதி நகர் முதல் தெரு, தி நகர்<br>சென்னை 600 017.<br>முதற் பதிப்பு 2005 |
| 58 | ராஜ்கௌதமன் | பாட்டும் தொகையும், தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்<br>தமிழினி<br>67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை,<br>சென்னை 14<br>முதல் பதிப்பு நவம்பர் 2006 |
| 59 | ஜெயா .வ. முனைவர் | சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>சி.ஐ.டி, வளாகம், தரமணி<br>சென்னை 600 113 ,<br>முதல் பதிப்பு 2003 |

60 அம்மன் கிளி முருகதாஸ் 'எடுத்துரைப்பு முறைகள்'
சங்க இலக்கியம்
கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை
சி.ஐ.டி, வளாகம், தரமணி
சென்னை 600 113 ,
1998

61 அருணாசலம்.மு இளம்பூரணர்
சொர்ணம்மாள் நினைவுச்சொற்பொழிவுகள்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சிதம்பரம்.
முதல்பதிப்பு 1981

62 அறவாணன் .க.ப. உடன்போக்கு,
ஆ.கோ 9–1
மதுரை பல்கலைக்கழகச் சார்பு வெளியீடு,
1977,

63 குளோறியா சுந்தரமதி.இலா. சங்க அகப்பாடல்களில் பொருந்தும் சில வெளியீட்டு மரபுகள்
ஆ.கோ. 7–1,
இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்
1975

64 குளோறியா சுந்தரமதி.இலா. சங்க இலக்கியக் கட்டுரைகள்–
கருத்தரங்கம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்
ஏப்ரல் 1984

65 சுசீலா.எம்.ஏ மடல் இலக்கியத்தில் மாற்றம்
ஆ.கோ.12–1,ப– 304–309
1988

68 சுசீலா, எம்.ஏ. சங்க அக இலக்கியத்தில் வெறியாட்டு
ஆ.கோ.10.1
பக் 298–302
1978

69 பதிப்புக்குழு **இருபத்தொன்றாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை–தொகுதி 1**
இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்
அண்ணாமலை நகர்
1989

70 பதிப்புக்குழு **சங்க இலக்கியக் கட்டுரைகள்– கருத்தரங்கம்**
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்
ஏப்ரல் 1984

71 பதிப்புக்குழு **சங்க இலக்கிய ஆய்வுகள், செய்தனவும் செய்ய வேண்டுவனவும்**
தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக் கழகம்,
காரிய வட்டம் 695 581
திருவனந்தபுரம்
2004

72 பதிப்புக்குழு **சுவடுகளைத் தேடி(சங்கச் சுவடுகள்)**
பிஜிபி கலை அறிவியல் கல்லூரி
நாமக்கல்,
சனவரி 2006

73 பதிப்புக்குழு **பதினைந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை– தொகுதி 1**
இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
அண்ணாமலை நகர்
1983

74 மீனாட்சி சோமசுந்தரம் (ப.ஆ) **சங்க இலக்கியக் கட்டுரைகள் தொகுதி 1**
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு,
சிதம்பரம் 608 001
டிசம்பர் 2007

## களஞ்சியங்கள், அகராதிகள்


75 அமிர்தலிங்கம்.சு. **சங்க இலக்கியக் களஞ்சியம்**
மெய்யப்பன் தமிழாய்வகம்
80, புதுத்தெரு,
சிதம்பரம் –01,
முதற்பதிப்பு 2000

76 சிங்காரவேலு முதலியார் **அபிதான சிந்தாமணி**
சீதை பதிப்பகம்
6/16 , தோப்பு தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை 5
முதல் பதிப்பு டிசம்பர் 2004

77 ஜெயதேவன்.வ., பா.வெ. நாகராஜன் **தொல்காப்பிய அகராதி**
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை
2004


## ஆய்வேடு


78 அமிர்தகௌரி.ஆ. **சங்க இலக்கியத்தில் உரையாடல்**
பி.எச்.டி ஆய்வேடு
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை
1986

## ஆங்கில நூல்கள்


79 **Balasubramanian.c.** **A critical study of Kuruntokai**
Narumalarp pathippakam
Madras 600 029
First Edi. 1991

80 **Hudson.W.H** **An Introduction to the study of literature**
Kalyani Publishers.
Delhi.
7th Indian ed. 1976

81 **Kailasapathy.K** **Tamil Heroic Poetry**
Oxford. elarendon .
Press 1968

82 **Kanakasabhai.V** **The Tamils Eighteen Hundred years ago**
Kazhagam
T.T.K Salai
Chennai 18
3rd Edn 2000

83 **Manickam V.T** **Marutam An Aspect of love in Tamil Literature**
Tema Publications
Karaikkudi,
1982

84 **Purnalingam Pillai.M.S** **Tamil Literature**
Tamil University
Thanjavur
1985

85 **Sarangapani .R** **A Critical study of Paripadal**
Madurai Kamaraj University
Madurai
1984

| | | |
|---|---|---|
| 86 | **Srinivasa Iyengar.P.** | **History of the Tamils (From the earlier Times to 600 A.D)**<br>Asian Educational Services<br>New Delhi<br>1982 |
| 87 | **Srinivasa Iyengar.P.** | **Tamil Studies**<br>Asian Educational services<br>New Delhi<br>1982 |
| 88 | **Subramaniam, S.V.** | **Papers on Tamil studies**<br>I.I.T.S<br>Madras<br>1980 |
| 89 | **Thani nayagam .**<br>**Xavier.S** | **Nature in Ancient Tamil poetry**<br>Tamil literature society<br>Tuticorin<br>1953 |
| 90 | **Thani Nayagam.**<br>**Xavier S.** | **Landscape and poetrey, study of Nature in classical Tamil Poetry**<br>International Institute of Tamil studies,<br>C.I.T.campus.<br>Tharamani,<br>Chennai, 600 113<br>Reprint May 1997 |
| 91 | **Varadarajan. M.** | **The treatment of Nature in sangam Literature**<br>Kazhegam,<br>Madras<br>1963 |